# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 40
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 245 ஆடி 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 29 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

*கிளிநொச்சியில் சம்பவம்*

கிளிநொச்சி, ஜூலை 29
கிளிநொச்சி புன்னை நீராவியில் உள்ள சிறு குளத்திலிருந்து இளைஞனின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. >> 53

## கத்திவெட்டில் 5பேர் காயம்

*வரணியில் சம்பவம்*

வரணி, ஜூலை 29
கத்திவெட்டில் காயமடைந்த 5பேர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் நேற்று மாலை 5.45 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளனர். வரணியில் இடம்பெற்ற >> 53

## நாடு முழுவதும் மருத்துவர்கள் வெள்ளிக்கிழமை வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 29
சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கண்டித்தும் மருத்துவ அதிகாரிகள் மற்றும் சுகாதார சேவைப்பிரிவினர் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் கோரியும் மருத்துவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கி >> 53

## இலங்கை வாழைப்பழங்கள் சீனாவுக்கு ஏற்றுமதியாகும்

*விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 29
சீனச் சந்தைக்கு வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான உடன்பாட்டில் சீன அரசுடன் விவசாய அமைச்சு கையெழுத்திடவுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். >> 53

*இயக்கச்சி விபத்து:*

## காயமடைந்த சகோதரியும் சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 29
கிளிநொச்சி இயக்கச்சி சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் சிறுமி உயிரிழந்திருந்த நிலையில், காய >> 53

## தோற்றது திருட்டு முயற்சி வெட்டிச் சாய்க்கப்பட்டது நாய்

*தென்மராட்சியில் சம்பவம்*

தென்மராட்சி, ஜூலை 29
தென்மராட்சியில் இரு இடங்களில் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. திருடர்களைப் பார்த்து குரைத்த நாயை வெட்டிச் சாய்த்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் >> 53

## தொடருந்துடன் மோதியது உந்துருளி சம்பவ இடத்திலேயே இருவர் சாவு!

*அரியாலையில் அகோரம்*



யாழ்ப்பாணம், ஜூலை 29
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தொடருந்துடன் உந்துருளி மோதியதில் தூக்கி வீசப்பட்ட இரண்டு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். உந்துருளியில் பயணித்த மற்றைய இளைஞன் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய >> 53

# மாகாண சபைத் தேர்தல்களுக்காக கூட்டமைப்பை பலப்படுத்தவேண்டும்

## சம்பந்தன், மாவையிடம் ரெலோ கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 29**
**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட வரப் போகின்ற தேர்தல்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துப் பங்காளிக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோரிடம் நேற்று நேரில் கோரிக்கை விடுத்துள்ளது ரெலோ அமைப்பு.**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரு** >> 53

## மகிந்தவுடன் பேசியமைக்காக அவநம்பிக்கை கொள்ளார்கள்

*கூறுகிறார் சம்பந்தன்*

யாழ்ப்பாணம், ஜூலை 29
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மகிந்த ஒத்துழைக்கவேண்டும். நாட்டின் நன்மைக்காக இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிவித்தேன். இது தொடர்பில் சிந்திப்பதாக அவர் கூறினார். இந்த விவகாரங்களை மகிந்தவுடன் பேசியமைக்காக தமிழ் மக்கள் என்மீது அவநம்பிக்கை கொள்வார்கள் என்று நான் >> 53

*இந்தியா - சீனா*

## அதிகாரப் போட்டியை ஏற்படுத்துவது நோக்கமல்ல

*மக்கள் நலனே முக்கியம் என்கிறார் அமைச்சர் சுவாமிநாதன்*

கொழும்பு, ஜூலை 29
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 ஆயிரம் வீடுகளை அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்தமையானது >> 53

## உதயனுக்கு தகவல் கொடுத்தது யார்?

*இராணுவத்தினர் நேற்று துருவித்துருவி விசாரணை*

முல்லைத்தீவு, ஜூலை 29
முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில் பொது மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விவரங்களை இராணுவத்தினர் திடீரெனத் திரட்டிய செய்தி, உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் பிரசுரமாகியிருந்தது. அந்தச் செய்தியை உதயன் பத்திரிகைக்கு வழங்கியது யார் என்று இராணுவத்தினர் நேற்றுப் பரவலாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். >> 53

## போர்த்துக்கீசர் வருகைக்கு முன்பு கோட்டையில் மக்கள் வாழ்ந்தார்கள்

*ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறார் பேராசிரியர் புஸ்பரட்ணம்*

யாழ்ப்பாணம், ஜூலை 29
போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்பு யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர். இதற்குரிய ஆதாரங்கள் அகழ்வின்போது மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்லியல் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் திணைக்கள விரிவுரை மண்டபத்தில், யாழ்ப்பாணக் கோட்டையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கும் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
போர்த்துக்கீசர்கள் இங்கு வருவதற்கு முன்பே, யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. அங்கு தமிழக நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. அரேபிய, சீன >> 53


SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு,
13 மாதங்களுக்கு
13.00%
வ.தே.வ. 12.93%
05 வருடங்கள்
14.00%
வ.தே.வ. 11.20%
06 மாதங்கள்
11.00%
வ.தே.வ. 11.30%
கவர்ச்சிகரமான வட்டி
அழையுங்கள்: 0115 411 411
011 5 411 411
SDB வங்கி



வவுனியா பண்டாரிக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ரி4)

# வர்த்தக நிலையங்களுக்கு ஞாயிறுகளில் விடுமுறை

## வவு. வர்த்தகர் சங்கத்தினர் முடிவு

யாழ்ப்பாணம், ஜுலை 29

வவுனியா வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடி அனைத்து வர்த்தகர்களும் தமது ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்று வவுனியா வர்த்தகர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்தில் அனைத்து வர்த்தகர்களின் ஒத்துழைப்புடன் முடிவு செய்யப்பட்டுள்ளது.



வவுனியா வர்த்தகர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இந்த மாதம் முதலாம் திகதி இடம் பெற்றது, அதில் தலைவராக எஸ்.சுஜனும் செயலாளராக அ.அம்பிகைபாகனும் பொருளாளராக ந.சுந்தரதாசனும் உப தலைவராக எம்.கே.எம்.பாகீமும் உப செயலாளராக எம்.எச்.எம். அஸ்கரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

வர்த்தகர் சங்கமானது வர்த்தகர்களின் நலனிலேயே அக்கறையுடனும் முழு அர்ப்பணிப்புடனும் செயற்படுத்தவதற்கு உறுதி பூண்டுள்ளது. வர்த்தகர் சங்கமானது தமது முதல் நடவடிக்கையாக சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களையும் ஒன்றிணைத்து நடாத்துவதன் மூலம் வர்த்தகர்களுக்கிடையேயான ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைமேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

தங்களால் ஒரு மாதகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தகர்களின் ஆய்வறிக்கையின்படி ஓகட்ஸ் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் தமது ஊழியர்களும் தமது குடும்பத்தினருடன் இணைந்து விடுமுறையைக் கழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

நேற்று இடம்பெற்ற முதலாவது நிர்வாக சபைக்கூட்டத்தில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், தனியார் போக்குவரத்துச் சங்கம், சிகை உரிமையாளர்கள் சங்கம், உள்ளூர் விளை பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம், மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுவது என்றும் அதில் முடிவெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ரி4,21)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆறு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஜீலை 29

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கிளிநொச்சி நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டனர்.

இதில் 3 பேர் வழக்கு நடவடிக்கைகளுக்கு மன்றுக்குச் சமூகமளிக்காவர்கள் என்றும் 3 பேர் பிணை வைக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டனர்.

(ரி4,6)



# மீனவர் பயிற்சி நிலையம் மாந்தையில் திறக்கப்பட்டது

மன்னார்,ஜீலை 29

கரையோரக் கிராமத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாந்தை பள்ளமடு பிரதேசத்தில் சிறு மீனவர் பயிற்சி நிலையம் வடமாகாண ஆளுநர் ரெஜினோட் குரேவால் நேற்றுத் திறக்கப்பட்டது.

அமெரிக்க நிதி நிறுவனம் ஒன்றின் அனுசரனையுடன் சுமார் அறுபது மில்லியன் ரூபா நிதியில் இலங்கை சிறு மீனவர் சம்மேளனத்தினால் அமைக்கப்பட்ட பயிற்சி நிலையத்தில் கேட்போர் கூடம், ஆண் பெண் பயிலுனர்களுக்கான தங்குமிட விடுதி என்பன காணப்படுகின்றது.

பல வகைகளில் பயன் தரும் கண்டல் தாவரத்தை வளர்த்தல், பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளே இந்தப் பயிற்சி நிலையத்தின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இதில் மீன் ஊறுகாய் செய்தல் தொடர்பான கண்காட்சியும் விளக்கமும் இதில் அளிக்கப்பட்டன. தாவரங்களை நடுகை செய்து பாதுகாப்பவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுழற்சிமு றையில் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. (ரி4,213)

# வடக்கு கைத்தொழில் உற்பத்தியாளர் கண்காட்சி ஆரம்பம்













யாழ்ப்பாணம் ஜீலை 29

வடக்கு மாகாணக் கைத்தெறி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண தொழில்த்துறைத் திணைக்களத்தால் நடத்தப்படும் கைத்தொழில் உற்பத்திக் கண்காட்சி நேற்று யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் ஆரம்பமானது. கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, தேசிய அருங்கலைகள் பேரவை, புடவைக்கைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் கண்காட்சிக்கு உதயன் பத்திரிகை ஊடக அனுசரணை வழங்குகின்றது.

கண்காட்சியில் வடமாகாண கைப்பணியாளர்கள் மற்றும் நெசவாளர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களான கைத்தெறி நெசவு உற்பத்திகள், களிமண்உற்பத்திகள், தும்பு ஓலை புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள் . உலோகக் கைப்பணிப் பொருள்கள், ஆபரணங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகளிலான கைப்பணிப்பொருள்கள், சிரட்டையிலான கைப்பணிப்பொருட்கள், சிப்பியிலான கைப்பணிப் பொருள்கள், மர உற்பத்திபொருள்கள், தோற்பொருள்கள், கல்லாலான கைப்பணிப் பொருள்கள், பாரம்பரிய கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை பனை கித்துள் சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப்பொருள்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டதுடன் மொத்தமாக எண்பதுக்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்ட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக கொன்சியூலர் சங்கர் பாலச்சந்திரன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்தனர். கண்காட்சிக்கு முன்னராக நடத்தப்பட கைவினை பொருள்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கண்காட்சிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படபோதும் தவிர்க்கமுடியாத காரணத்தால் அவர் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கண்காட்சியைப் பார்வையிட நேற்றுப் பெரும் எண்ணிக்கையானோர் வந்திருந்தனர். இன்றும் கண்காட்சி நடைபெறும். கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் இலவசம் என்று தெரிவிக்கப்பட்டது. (ரி4,114)

# அரசு ஜனவரியில் தேர்தல் நடத்தும் என்பது சந்தேகம்

## திஸ்ஸ விதாரன எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 29
ஜனவரி மாதம் தேர்தலை நடத்த வேண்டுமானால் ஒக்ரோபர் மாதம் அனைத்து விடயங்களும் நிறைவு செய்யப்பட வேண்டும். ஆனால் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு ஒன்றுபடாத அரசு ஜனவரியில் தேர்தலை நடத்துமா என்பது சந்தேகமே.

இவ்வாறு தெரிவித்துள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

அவர் தெரிவித்தாவது;

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதா அல்லது புதிய முறையில் நடத்துவதா என்ற இழுபறி நிலை அரசில் காணப்படுகிறது. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்களுக்காகவே தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. புதிய தேர்தல் முறையில் குறைபாடுகள் பல காணப்படுகின்றன என்று எதிர்த்த போதும் அரசு சில வரையறைகளுக்குள் உட்பட்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தியது. ஆனால் பெறுபேறுகள் அரசுக்கு எதிராகவே கிடைத்தன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பெறுபேறுகள் மாகாண சபையிலும் தொடருமோ என்ற அச்சத்திலே அரசு தொடர்ந்து தேர்தலைப் பல காரணங்களைக் குறிப்பிட்டுபிற்போட்டுவருகின்றது. ஜனவரியில் தேர்தல் நடைபெறும் என்பதை நம்ப முடியாதுள் ளது. கடந்த அரசு ஜனநாயகத்தை அழித்தது என்றே தேசிய அரசு தொடர்ந்து குற்றம் சுமத்துகின்றது. காலத்துக்குக் காலம் இடம் பெற வேண்டிய தேர்தலை நடத்தாமல் சுயநல அரசியல் இருப்புக் கருதிப் பிற்போடுவதா ஜனநாயகம்? போர்க் காலத்திலும் கூட காலத்துக்கு காலம் இடம் பெற வேண்டிய தேர்தல்கள் உரிய காலத்தில் இடம் பெற்றன . அதுவே சிறந்த ஜனநாயகம்.

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிலரது சுய அரசியல் தேவைகளுக்காகவே தேர்தல்கள் தொடர்ந்து பிற்போடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை தொடருமாயின் பெரும் எதிர் விளைவுகளை அரசு சந்திக்க நேரிடும் . அரசு எந்தமுறையில் தேர்தலை நடத்தினாலும் எதிர்கொள்ளத் தயார் .ஆகவே வெற்றி பெறுவதற்கான சூழ்ச்சிகளைத் தவிர்த்து ஜனவரியில் நடத்துவதாக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (ரி4,31)

## இளைஞன் மீது தாக்குதல்

வவுனியா.ஜூலை 29
வவுனியாவில் இளைஞரொருவர் இனந்தெரியாதோரால் அழைத்துச் செல்லப்பட்டு ஒரு நாள் முழுவதும் கட்டி வைத்து தாக்கப்பட்ட பின் விடுவிக்க ப்பட்டுள்ளார் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

காயங்களுடன் மீட்கப்பட்ட நபர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

வவுனியா கொக்குவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதான அந்த இளைஞனைக் கடந்த புதன்கிழமை மதியம் சிலர் அழைத்துசென்றுள்ளனர். அவர்கள் அந்த இளைஞனைக் கட்டி வைத்து தாக்கிய பின்னர் மறுநாள் வியாழக்கிழமை மாலை கொக்குவெளி பிரதேசத்தில் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலீஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி4,21)

## கோழி திருட முற்பட்ட நபர் வசமாக மாட்டினார்

யாழ்ப்பாணம்.ஜூலை 29
யாழ்ப்பணத்தில் வீட்டில் வளர்த்த கோழிகளைத் திருட முற்பட்டவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் புதிய சோனகர் கிராமத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

வீடு ஒன்றினுள் நுழைந்த திருடன் கோழிகளைத் திருட முற்பட்டுள்ளான்.

இதனை அவதானித்த வீட்டின் உரிமையரால் திருடனை மடக்கிப் பிடித்து பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டான்.

பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட திருடன் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,8)

## குடும்பத்தலைவர் மீது தாக்குதல்

மாடு தேடிச் சென்ற குடும்பத் தலைவர் மீது செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வவுனியா, செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் வசிக்கும் குடும்பத் தலைவர் ஒருவர் மாடு ஒன்றைக் காணவில்லை என அதை தேடி மெனிக்பாம், பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள பகுதிக்கு நேற்றுமுன்தினம் காலை சென்றுள்ளார்.

பிள்ளையார் ஆலயத்தில் கட்டிட அமைப்பு வேலை செய்து கொண்டிருந்த அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மாடு தேடிச் சென்ற குடும்பத் தலைவர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதனால் காயமடைந்த குடும்பத் தலைவர் செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். மெனிக்பாம் பகுதியில் உள்ள சிவன் ஆலயம் ஒன்றின் காணி விவகாரம் தொடர்பில் இந்த இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தமையே தாக்குதலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ற-21)

## தடம்புரண்டது டிப்பர் வாகனம்



மன்னார் - யாழ்ப்பாண ஏ-32 வீதியில் பள்ளிக்குடா சந்தியில் டிப்பர் ரக வாகனம் ஒன்று தடம்புரண்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனம் வேக கட்டுபாட்டை இழந்து தடம் புரண்டது.

அதனால் வீதியின் இருமருங்கிலுல் சுமார் அரைமணி நேரத்துக்கும் மேலாகப் போக்குவரத்துத் தடைபட்டது.

ஜேசிபி வாகனத்தின் உதவியுடன் டிப்பர் ரக வாகனம் அகற்றபட்டது. (ரி4,212)

## கல்வியின் வினைத்திறனை மேம்படுத்த நடமாடும் சேவை

வவுனியா.ஜூலை 29
வடக்கின் கல்வியில் அர்பணிப்புடன் பணியாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்களின் தாபன நிர்வாக அலுவலகக் குறைகளைக் களைந்து கல்வியின் வினைத்திறனை மேம்படுத்தும் நடமாடும் சேவை வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவை இரு பிரிவுகளாக நடைபெற்றது. க. பொ. த. சாதாரண மாணவர்களின் சித்திவிகிதத்தை அதிகரிக்கும் நோக்கில் கல்வி விருத்தி தொடர்பான பகுப்பாய்வு காலை நடைபெற்றது. அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது தொடர்பான சேவை மாலை நடைபெற்றது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வை வடமாகாணக்கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுதுறை இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சர் க.சர்வேஸ்வரனின் நேரடி நெறிப்படுத்தலில் கீழ் நடைபெற்ற நிகழ்வில் கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலர் அனந்தராஜா, மாகாணக்கல்விப் பணிப்பாளர் உதயகுமார், கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரட்லி ஜெனாத் மற்றும் மாகாண திணைக்கள அதிகாரிகள், கோட்டக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் கல்வியின் சித்திவிகிதங்கள் நகரப் பாடசாலைகளிலேயே அதிகமாகக் காணப்பட்ட போதும் கடந்த ஆண்டில் சித்திவிகித அதிகரிப்புக்கு கிராமப்புற பின்தங்கிய பாடசாலைகளும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கின்றன.

கல்வியின் இலக்கை நாம் அடையவேண்டுமாக இருந்தால் அதிபர்கள் ஆசிரியர்கள் கடினமாக உழைக்கவேண்டும் என்று நிகழ்வில் உரையாற்றிய கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவைளை நிகழ்வு வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகத்திலும் நடைபெற்றது. (ரி4,110)

### மரண அறிவித்தல்

**திருமதி சந்திராதேவி (கிளி) லோகநாதன்**



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திராதேவி (கிளி) லோகநாதன் கடந்த (25.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமகளும் லோகநாதனின் (லோகப்பா) அன்பு மனைவியும் சுதாஜினி, துஷ்யந்தன் காலஞ்சென்றவர்களான விபூசனன், அபிரா மற்றும் நிஷாந்தன் ஆகியோரின் அன்புத்தாயும் சதுர்நிதியின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.





## உடனடித் தேவைகள் தீர்க்கப்படும்: சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

பருத்தித்துறை, ஜூலை 29
மந்திகை ஆதாரமருத்துவமனை நிர்வாகத்தினர் வடமாகாண சுகாதார அமைச்சரை சந்தித்து மருத்துவமனையில் காணப்படும் தேவைகள் தொடர்பாக அண்மையில் கலந்துரையாடியுள்ளனர்.

இது தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் க.குணசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த கலந்துரையாடலில் அவர்களுக்கு உடனடியாக வேண்டப்படும் தேவைகள் குறித்து எனக்கு தெரியப்படுத்தியிருந்தன. முக்கிய தேவைகளாக காணப்படும் தாதியர் தங்குவதற்கான விடுதி வசதி, பிரேத அறை குளிர்சாதனப் பெட்டிகள் போன்றவை தேவை எனக் கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டன. அவற்றுக்கு தீர்வாக அடுத்த வருடம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து அவை நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என தெரிவித்திருந்தேன்.

மேலும் சிகிச்சை பெற வருபவர்கள் அமருவதற்கு ஏற்ற வகையில் தற்போது உள்ள இடத்தை மாற்றி சற்றுபெருப்பித்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கான நடவடிக்கையும் வருகின்ற ஜனவரி மாதத்திற்குள் மேற்கொள்ளப்படும் எனவும் மருத்துவமனை நிர்வாகத்துக்கு உறுதியளித்ததாக தெரிவித்தார். (114)

## பொதுக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 29
யாழ்ப்பாணம் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் பொது மண்டபத்தில் அதிபர் கே.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உபசெயலாளர் இராசையா சாந்தரூபன் தெரிவித்துள்ளார். (159)

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில்

## மருந்துகட்ட முடியாது நோயாளர்கள் சிரமம்

வடமராட்சி, ஜூலை 29
பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் மருந்து கட்டுவதற்கு போதிய பணியாளர்கள் இன்மையால் பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் மருந்து கட்ட முடியாமல் நோயாளர்கள் திரும்பிச் செல்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சட்டப்படி 4 மணியே சேவையின் இறுதி நேரம் என்கிறார் சுகாதார அமைச்சர் குணசீலன்.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த திங்கள் முதல் வெள்ளி வரையான நாள்களில் வெளிநோயாளர் பிரிவு 4.30 மணி வரை இயங்குகிறது. வெளிநோயாளர் பிரிவில் மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதுடன் மருந்துகள் வழங்குவதற்காக மருந்தகம் மாலை 6 மணிவரை திறந்துள்ளது. ஆனால் 4 மணிக்குப் பின்னர் வெளிநோயாளர் பிரிவு மருந்து கட்டும் அறை பூட்டப்பட்டிருக்கும். இது குறித்து வெளிநோயாளர் பிரிவில் கேட்டால் சில வேளைகளில் அங்கு கடமையாற்றும் பெண் பணியாளர் ஒருவர் வந்து மருந்து கட்ட வேண்டிய நோயாளிக்கு மருந்தைக் கட்டி விடுவார். ஆண் நோயாளர்களுக்கு மருந்து கட்டமாட்டார். சில வேளைகளில் அதுவும் நடக்காமல் போகும். நீண்டகாலமாக இருந்துவரும் இந்தக் குறைபாட்டைப் போக்க மருத்துவமனை நிர்வாகம் எந்தவிதமான நடவடிக்கைகயையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். எனவே உரியவர்கள் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன் தொடர்புகொண்ட போது: பொதுவாக வடக்கு மாகாணத்தில் வெளிநோயாளர்கள் பிரிவுகள் மாலை 4மணியுடன் சேவை செய்வது நிறுத்தப்பட்டிருக்கின்றது. மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் மாத்திரமே 6மணி வரை சேவைகள் நடைபெறுகின்றன. எனினும் சட்டத்தின் அடிப்படையில் 4மணியே சேவையின் இறுதி நேரமாகும். அதை விட மருத்துவரின் மேற்பார்வை இன்றி நோயாளருக்குச் சிகிச்சை வழங்குமிடத்து ஏற்படும் சில பிரச்சினைகள் காரணமாகவே சில பணியாளர்கள் பின் வாங்குகின்றனர். எவ்வாறாயினும் எனக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்- என்றார். (21,173,114)

# கட்டுடையில் மணல் இரவிரவாக அகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 29
வலி.தென் மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய் கட்டுடை பகுதியில் பல வருடங்களாக சட்ட விரோதமாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் மணல் கொள்ளை தற்பொழுது அம்பலத்துக்கு வந்துள்ளது.

வலி.தென்மேற்கு சுற்றுச் சூழல் அமைப்பின் குழுத் தலைவர் என்.டி.சுப்பிரமணியத்துடன் குழு உறுப்பினர்களும் இணைந்து மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன் கடத்தல்காரர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பது பற்றியும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசித்து வருகின்றனர்.

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் கொலனி வீட்டுத் திட்டத்துக்கு அருகாமையிலுள்ள வயல் வெளியில் ஒரு பக்கமாக கட்டடங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய வெள்ளை மணல் மலைபோல் குவிந்துள்ளது. இது குறித்து பிரதேச சபைக்கோ, பிரதேச செயலகத்துக்கோ தெரியாமையால் மணல் கடத்தல் காரர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

கடத்தல்காரர்கள் பொலிஸாரின் கண்களில் அகப்படாத வண்ணம் எவருடைய அனுமதியுமின்றி அதிகாலை நேரங்களில் மணல் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர் என பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. (115)

## அழிந்த வீதிக்கோடுகள் விரைவில் வரையப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை 29
யாழ்ப்பாணம் குடாநாட்டின் பிரதான வீதிகளில் அழிந்து சேதப்பட்டிருக்கும் மஞ்சள் கோட்டு கடவைகள் விரைவில் மீள வரையப்படும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முதன்மை பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

மஞ்சள் கோட்டு கடவைகளை வரைவதற்குரிய இரசாயன பதார்த்தம் கொண்ட நிறக்கலவை தூள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிறக்கலவை விரைவில் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு வரையப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி ஜூலை 29
மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக் கழகத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நிலைய அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு கழகத் தலைவர் சி.மதியழகன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறை மூத்த விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், கல்விக் கழக பழைய மாணவியும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மருத்துவருமான பவித்ரா சுதர்சன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

## நடமாடும் சேவையும், அதிபர்களுக்கான செயலமர்வும் பிற்போடப்பட்டுள்ளன

வலிகாமம் கல்வி வலயத்துக்கான அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கான நிர்வாக ரீதியிலான குறைகளைத்தீர்க்கும் நடமாடும் சேவையும், அதிபர்களுக்கான செயலமர்வும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர் வரும் முதலாம் திகதி புதன்கிழமை நடைபெற இருந்த நிலையில் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெறும் என வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வடக்கு மாகாண கல்வி வலயங்கள் அனைத்தினதும் பாடசாலை அதிபர்களுக்கான செலமர்வும், நடமாடும் சேவையும் இடம்பெற்று வருகின்றன.

## மனநல மருத்துவ விடுதி அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 29
யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மனநலம் குன்றிய நோயாளர்களுக்கான மருத்துவ விடுதி அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மனநலம் குன்றியவர்களுக்கான சிகிக்சை வழங்கப்பட்டுவருகின்றன.

இவர்களுக்கான மருத்துவ விடுதிகளில் வெடிப்புக்கள் உள்ளிட்ட பல சேதங்கள் காணப்படுகின்றமையால் தற்போது சீரமைக்க வேண்டிய தேவை உள்ளமையால் கட்டடத்தை அகற்ற தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக்கற்றப்படும் போது ஏற்படும் இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு 5 மில்லியன் செலவில் நிரந்தரமான கட்டடம் அமைப்பதற்கு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றை அமைத்து தருவதற்கு தனியார் நிறுவனம் முன்வந்துள்ளது.இந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுவதன் மூலம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## மது அருந்தியவருக்கு 2 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29
பொது இடத்தில் மதுபானம் அருந்திய நபருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு கடந்த வியாழக்கிழமை நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (114)

## ஆடிப்பிறப்பு நிகழ்வு

அளவெட்டி,ஜூலை 29
வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரனையுடன் வலிமேற்கு பிரதேச செயலகம் தொல்புரம் கலாலய நாடக மன்றம்என்பனஇணைந்து ஆடிப்பிறப்பு நிகழ்வை கடந்த செவ்வாய்க்கிழமை தொல்புரம் மத்தி சனசமுக நிலையத்தில் நிலையத் தலைவர் சி.முத்துராசா. தலைமையில் கொண்டாடின.

வலிமேற்கு உதவிப்பிரதேச செயலர் திருமதி.செந்தூரன் சிறப்புரையாற்றினார் .ஆடிக்கூழ் கொழுக்கட்டை உண்டு மகிழ்தல் . என்ற தலைப்பில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (63)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். சபை அங்கத்தவர்களை தவறாது சமூகமளிக்குமாறு வை.இரகுநாதமுதலியார் தெரிவித்துள்ளார்.

## பேரணியும், கண்காட்சியும்

கொழும்புத்துறை, ஜூலை 29
இலங்கை கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் பொன்விழாக் கொண்டாட்டப் பேரணியும், கண்காட்சியும் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.




யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் முன்பாக யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்பணி பூஜின் அடிகள் தலைமையில் ஆரம்பித்த சமாதானப் பேரணி மத்தியூஸ் வீதியிலுள்ள கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தைச் சென்றடைந்தது.

கரித்தாஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய கியூடெக் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா. வேதநாயகன், யாழ்ப்பாண ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கரித்தாஸ் நிறுவன தேசிய இயக்குநர் அருட்பணி மகேந்திர குணதிலக, சர்வ மதங்களின் சகவாழ்வு அரங்க [illegible] இணைப்பாளர் க.தர்சிகா, இந்து மதக் குருக்கள் ஒன்றியத்தலைவர் மனோகரக் குருக்கள், யாழ்ப்பாணம் நாகவிகாரை தேரர் கொங்ககிரி தம்மா மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கியூடெக் நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட சமாதானக்குழுக்கள், சர்வமதக் குழுக்கள், வாழ்வாதாரக் குழுக்கள், நெபாட் ஊழியர்கள், கியூடெக் பணியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். கரித்தாஸ் அமைப்பின் கடந்தகால பணிகள் தொடர்பான கண்காட்சி கலைநிகழ்வுகளும் கியூடெக் வளாகத்தில் நடைபெற்றன.

கொழும்பைத் தலைமையாகக் கொண்டு நாடெங்குமுள்ள 13பிராந்திய நிலையங்களூடாக மக்களின் வாழ்வா[illegible] நல்லிணக்க பொருளாதார [illegible] திட்டங்கள் போன்ற பல்வேறு பணிகளில் கரித்தாஸ் நிறுவனம் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (135)

# தேசியப் பட்டியல் உறுப்பினரின் செயற்பாடுகள் பலவும் நிறுத்தம்

யாழ்ப்பாணம் ஜூலை 29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இரண்டாம் வட்டாரத்துக்குள் தேசியப் பட்டியல் உறுப்பினர் அபிவிருத்தி செய்வதற்கு முன்வந்துள்ளமை தொடர்பில் வட்டார உறுப்பினர் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து தேசியப் பட்டியல் உறுப்பினரின் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தெரியவருவதாவது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இரண்டாம் வட்டாரத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சேர்ந்த உறுப்பினர் தர்சானந்தன் தெரிவு செய்யப்பட்டு வட்டார பணிகளை மேற்கொண்டு வருகின்றார். இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தேசியப் பட்டியலில் வந்த வி.மணிவண்ணன் இரண்டாம் வட்டாரத்துக்குள் சென்று தாமும் அபிவிருத்தி செய்யப்போவதாக கூறி சில வீதிகளை அளந்துள்ளார். இதனை அறிந்த வட்டார உறுப்பினர் மாநகர முதல்வருக்கும். அதிகாரிகளுக்கும் முறைப்பாட்டை செய்துள்ளார். இதனால் தேசியப் பட்டியல் உறுப்பினரின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் தர்சானந்தனை தொடர்புகொண்டு கேட்டபோது.

எனது வட்டாரத்தில் உள்ள வீதிகளை சீரமைக்க நான் சில முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்தேன். இந்த நிலையில் நான் சமர்ப்பித்த வேலைத்திட்டத்துக்கான திட்டங்களில் சிலவற்றை மாற்றியதுடன் எனது அபிவிருத்திக்கு ஒதுக்க வேண்டிய நிதியினை குறைத்து விட்டு தேசியப் பட்டியல் ஊடாக வந்த மணிவண்ணனுக்கு எனது வட்டாரத்துக்குள் வேலைத்திட்டங்களை செய்ய அனுமதித்துள்ளனர். இதனால் நான் மாநகர முதல்வருக்கும் அதிகாரிகளுக்கும் முறையிட்டேன். எனது பகுதியில் கிராம அலுவலர் சான்றிதழ் கூட பெற முடியாதவர் எப்படி எனது வட்டாரத்துக்கு உரிமை கோரமுடியும்.

எனது வட்டாரத்துக்கும் தமிழ்த் தேசிய முன்னணி உறுப்பினர் மணிவண்ணனுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லாத நிலையில் வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட பிரதிநிதியாக நான் இருக்கும் போது எனக்கு தெரிவிக்காமல் எவ்வாறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். குறித்த உறுப்பினருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கவில்லை என தெரிவித்து நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயில்களாக அறிந்துள்ளேன். இவ்வாறான நிலையில் இவரின் இந்த செயற்பாடு பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் வி.மணிவண்ணனுக்கு தொடர்பினை ஏற்படுத்திய போதும் தொடர்புகொள்ள முடியவில்லை. (8)

## யோகா பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

யாழ்ப்பாண யோகா உலகம் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது. இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர்த் தேரடிக்கு அண்மையாக அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் நடைபெறும்.

## நடுவர் சபையின் அமர்வுகள் பிற்போடல்

அச்சுவேலி,ஜூலை 29

யாழ்ப்பாணம் கோப்பாய் நடுவர் சபையின் அமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது. எதிர்வரும் 5 ஆம் திகதி புத்தூர் சிவன் கோயில் முன்றலில் உள்ள புத்தூர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் என நடுவர் சபையின் தவிசாளர் இ. கிருஸ்ணப் பிள்ளை அறிவித்துள்ளார். (11)

## இளைஞர் தலைமைத்துவ பயிற்சி

கொடிகாமம், ஜூலை 29

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் "இளைஞர் ஒரு சமூகப் பொறுப்பு" என்ற தலைப்பில் இளைஞர் தலைமைத்துவ பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இன்றுடன் நிறைவுபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் அ.பாலமயூரனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் தவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (159)

## போதைப் பொருள் வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜூலை 29

ஹெரோஈன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வரணி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்

கொடிகாமம் நகரப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி மாலை நேரம் சந்தேகப்படும் வகையில் நடமாடிய நபரை சோதனையிட்ட போது அவரிடம் 20 மில்லிகிராம் போதைப் பொருள் இருந்ததைக் கண்டு பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (9)

## மாற்றுத்திறனாளி மீது தாக்குதல் நடத்துநர் பணிநீக்கம்

யாழ்ப்பாணம் ஜீலை 29

பேருந்தில் பொருள் ஒன்றை விற்பனை செய்வதற்கு அனுமதி கேட்ட மாற்றுத்திறனாளியின் மீது தாக்குதல் மேற்கொண்ட நடத்துனர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து குப்பிளான் நோக்கி பயணமாவதற்கு ஆயத்தமாக இருந்த 770 இலக்க பேருந்தில் மாற்றுத் திறனாளிகள் உற்பத்தி செய்யும் ஒரு வகை சலவை உற்பத்தி பொருளை விழிப்புலனற்ற மாற்றுத்திறனாளியான ஒருவர் விற்பனை செய்வதற்கு முயன்றுள்ளார்.

குறித்த நபரை அந்தப் பேருந்தின் நடத்துநர் பேருந்தில் ஏறி விற்பனையில் ஈடுபடவேண்டாம் என தடுத்துள்ளார். எனினும் அவர் தான் வழமையாக விற்பனையில் ஈடுபட்டு வருகின்றேன் பேருந்து புறப்படுவதற்கு நேரம் இருக்கின்றபடியால் சிறிது நேரம் விற்பனை நடவடிக்கை மேற்கொள்ளவிடுமாறு கேட்டிருக்கிறார். அந்த சமயம் பேருந்துக்கு அருகில் இருந்த வேறொரு நபர் குறித்த மாற்றுத்திறனாளியை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. இதனால் அந்த இடத்தில் சற்று பதற்றம் நிலவியிருந்தது. பேருந்து புறபட்ட பின்னர் நடத்துநரிடம் பேருந்தில் இருந்த வேறு ஒரு பெண் ஏன் அவ்வாறு செய்தீர்கள் என கேட்க முறையற்ற விதத்தில் பதிலளித்துள்ளார். இதனால் பேருந்தில் பயணித்த பயணிகள் மனக்கிலேசம் அடைந்திருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த சம்பவம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த நடத்துநருடனோ அல்லது பேருந்து சம்பந்தப்பட்டவருடனோ தொடர்பு இல்லாமல் அந்த தனிநபர் குறித்த மாற்றுத்திறனாளியை தாக்கியிருக்க முடியாது அத்துடன் நடத்துநர் பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு முறையற்ற விதத்தில் பதில் வழங்கியதாகவும் எமக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து நடத்துநர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என தெரிவித்தனர். (114)

## முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 29

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு சிறி துர்க்கா சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் துர்க்கா முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றலில் பிற்பகல் 1 மணிக்கு நிலையத் தலைவர் இராசரத்தினம் விஷ்ணுறஞ்சன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரும் ஓவியக்கலைஞருமாகிய செல்லத்துரை வரதராஜன், ஜே/208, 209 கிராம அலுவலர் பரநிரூபசிங்கம் பிரதீபன், புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் த.ஸ்ரீமுரளி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விழித்துக் கொண்டதால் திருட்டு முறியடிப்பு

சாவகச்சேரி, ஜூலை 29

உரிமையாளர் விழித்துக் கொண்டதால் வர்த்தக நிலையத்தில் இடம்பெறவிருந்த திருட்டு முறியடிக்கப் பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி இரவு சாவகச்சேரி டச் சாலையில் இடம்பெற்றது.

நள்ளிரவு வேளையில் வர்த்தக நிலைய்த்தை உடைக்கும். முயற்சியில் திருடர்கள் முற்பட்ட வேளையில் கடையினுள் படுத்திருந்தவர்கள் வெளிச்சத்தைப் பாய்ச்சியதால் முயற்சியைக் கைவிட்டு திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வர்த்தகர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (9)

## மின்சாரம் தாக்கியதில் குடும்பத் தலைவர் மருத்துவமனையில்

கொடிகாமம் ஜூலை 29

மின்சார வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் குடும்பத் தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிட்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

சாவகச்சேரி சங்கத்தானையை சேர்ந்த வேலுப்பிள்ளை காங்கேயன் வயது 58 என்பவரே மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார்.

சாவகச்சேரி சங்கத்தானையிலுள்ள சிந்தாமணி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழாவின் போது மின்குமிழ்கள் பொருத்துவதற்கு இணைப்பை மேற்கொண்டபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (159)

## திருச்செல்வத்தின் ஆண்டு நினைவு

யாழ்ப்பாண்ம்,ஜூலை 29

கலாநிதி நீலன். திருச்செல்வத்தின் 19 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் மாலை 5.00 மணியளவில் நடைபெறும்.

## கன்றுடன் உந்துருளி மோதி இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஜூலை 29

சாலையோரத்தில் நின்ற மாட்டுக்கன்றுடன் உந்துருளி மோதியதில் உந்துருளி பயணித்தவர் கீழே வீழந்து காயங்களுக்குள்ளானார் .

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கச்சாய் வாகையடிச் சந்தியில் இடம்பெற்றது.

கெற்பேலி மத்தியைச்சேர்ந்த யோகநாதன் அஜந்தன் (வயது- 26) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (9)

### குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை சந்தியருகே உள்ள புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2.00 மணிவரை இடம்பெறும். (21)

### கூட்டுறவு நாள் நிகழ்வு

அளவெட்டி,ஜூலை 29

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தக்கூட்டுறவுசங்கங்களின் கொத்தணியின் 96 ஆவது பன்னாட்டு கூட்டுறவு நாள் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் செ.செல்வராசா.தலைமையில் நடைபெறும். (63)

## சபை அமர்வு நாளை

வேலணை பிரதேச சபையின் அமர்வு நாளை திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என்று தவிசாளர் அறிவித்துள்ளார். கடந்த அமர்வில் ஆராயப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட விடயங்களே அமர்வில் ஆராயப்படும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மன்ற செயலாளரும் பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளரும் இலங்கை மனித உரிமை நிறுவன யாழ். மாவட்ட அமைப்பாளருமான

**கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா**

அவர்கள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிர்மாணம் செய்து பதவியேற்றுக்கொண்டார்.

அவர் மேலும் பல பதவிகள் பெற்று உடல்உள நலத்துடன் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

- வாழ்த்துவோர் -

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**


## மரண அறிவித்தல்கள்



### சின்னப்பு பரமசாமி

*(இ.போ.ச. சாரதி. கோண்டாவில்)*

சரசாலை வடக்கு. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பரமசாமி நேற்று (28.07.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் மதிவதனியின் அன்புக் கணவரும் தர்சித்திரா, கஜநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாக்கியம், சின்னப்பிள்ளை கந்தசாமி, குமாரசாமி, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
**சரசாலை வடக்கு, சாவகச்சேரி.** (C7378/15/18) **077 6571751**

திருமதி

### கனகாம்பிகை பரராஜசிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி க்னகாம்பிகை பரராஜசிங்கம் 26.07.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பரராஜ சிங்கத்தின் அன்பு மனைவியும், பிரிந்தா (ஆசிரியர் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), பிரசாந் (கணினி திருத்துநர்), சுகந் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விதுஷாவின் (கனடா) அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 406 2489**

(CS/18594)(11,17)


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமகனை / மணமகளை மிகப்பொருத்தமாக உடன்தெரிவு செய்து தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**தொடர்பு - 077 138 7596, 071 8945 692, 021 222 9306**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3062 | திகதி: 2018.07.28 | சனிக்கிழமை | பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 02 13 31 70 W
போனஸ் இலக்கம்: 46
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 34,665,175/-

Web: www.dlb.lk — 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 325
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,554,590/-

வெற்றி இலக்கங்கள்: 01 14 23 29 — ஆங்கில எழுத்து: O

Tel: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk — 0114 824 824, 0112 333 778

## உத்தியோகபூர்வ முடிவுகள்

අභිවෘද්ධි අදිෂ்டம் — සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் ▶ 164
சீட்டிழுப்பு திகதி ▶ 28.07.2018 | சிவப்பு

ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 32 43 48
விதி எண்: 05

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.32, 283, 900/=

### ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| அம்பாறை | 7654593 |
| புத்தளம் | 2234312 |
| யாழ்ப்பாணம் | 8338127 |
| காலி | 2573550 |
| கேகாலை | 9202309 |

2018.08.02 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## கட்டடங்களில் ஏற்படுகின்ற......
## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் வீடுகள், அடுக்குமாடிகட்டடங்களின் மேல் தளங்கள், வெளிப்புறச்சுவர்கள், குளியலறைகளில் மற்றும் அனைத்துக்கட்டடங்களிலும் ஏற்படுகின்ற நீர்க்கசிவுகளினை முற்றுமுழுதாக 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித்தருவதோடு மேற்படிகட்டடங்களில், பழைய கட்டடங்களில் ஏற்பட்ட வெடிப்புக்களினை, நிர்மாணத்தின்போது ஏற்பட்ட தவறுகளினை சரிசெய்வதற்கு என பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பொருள்களின் (Specialist Construction Materials) மூலம் நிவர்த்தி செய்து தருகிறோம்.
மேலும் பித்தளை பிணைச்சல்கள், பூட்டுக்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள.

**யாழ்வன் கட்டடப்பொருள்கள் வாணிபம்**
**இல.168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 8286**




# ஆண்டுநிறைவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 29
இலங்கை திருச்சபையின் பரியாக்கோபு ஆலயம் தனது 200ஆவது நிறைவு விழாவை நல்லூரில் இன்று கொண்டாடுகின்றது.
இலங்கையின் திருச்சபையின் பேராயர் அதி.வண.டிலோராஜ் கனசபை கலந்து கொள்ளவுள்ளார்.
சென் பெனடிக் தேவாலயத்திலிருந்து இன்றுகாலை7.30மணிக்குநடைபவனி ஆரம்பித்து பரியாக்கோபு ஆலயத்தில் முடிவடைந்து சிறப்பு வழிபாடு ஆரம்பிக்கும்.
வழிபாடுமுடிவடைந்ததும்புதியகுருமனை திறப்பு விழா இடம்பெறும்.
காலை11மணியளவில்எஸ்.புத்திசிகாமணி எழுதிய முழக்கம் வரலாற்று நூல்வெளியிடப்படும். (5.50)


### கார் விற்பனைக்கு

CBA xxxx இலக்கம் உடைய Toyota AQUA Hybrid 2014 Model Fist Owner கார் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 729 2199**

### காணி தேவை

நல்லூர், கல்விங்காடு, நாயன்மார் வீதி, ஈச்சமோட்டை, திருநெல்வேலி, நாவலர் றோட் ஆகிய இடங்களில் வீட்டுடன் அல்லது வெறுங்காணி தேவை.
**தொடர்பு - 077 3973 166**

### VISA

Australia, Canada, USA, UK, Russia சகல Europe நாடுகளுக்கான Student, Visit Tourist Sanagan Visa சகல விதமான Visa கள் பெற்றுத் தரப்படும். உங்கள் தேவைக்கு ஏற்றவாறு அனைத்து Visa, Document செய்து தரப்படும். (Russia கைவசம் Visa உள்ளது. (ACO/292)(11,17)
**077 545 5529, 075 929 2921**

### காசாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் சிற்றுண்டிச் சாலைக்கு காசாளர் தேவை.
(முன் அனுபவம், ஆங்கில அறிவு அவசியம்)
சம்பளம் 27000/= உடன் தொடர்பு கொள்ள
தொலைபேசி - **075 8959 976**

### கடை, வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் K.K.S றோட்டில் அமைந்துள்ள கடையும், வீடும் வாடகைக்கு விடப்படும்
**தொடர்பு - 077 5451 358, 077 6105 771**

### வாடகைத்தாய்

IVF மூலம் குழந்தை பெற்றுக் கொடுப்பதற்கு வாடகைத்தாய் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு - 076 237 1276**

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பூச நட்சத்திரம் 2 ஆம் பாதமுடைய 2 இல் சூரியன் செவ்வாயும் 41 கிரக பாவமுடைய, அபிவிருத்தி உத்தியோகத்தரான பட்டதாரி மணமகளிற்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை.
**தொடர்பு - 077 214 6513**

### பெண் வேலையாள் தேவை

வீட்டு வேலைக்கும், கடை வேலைக்கும் பெண் வேலையாள் தேவை.
வீட்டு வேலை - 6.30 am - 4.00 pm
சம்பளம் 22 000 /=
கடை வேலை - 8.30 am - 5.30 pm
சம்பளம் 18 000 /=
**தொடர்பு - 021 221 7600**

எடுக்கப்படும் தீர்மானங்களை கவனத்தில் எடுக்காவிடின்

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் எதற்காக?

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் ஆதங்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29
நிலங்கள் விடுவிப்புத் தொடர்பில் அரசதலைவர் மாளிகையில் அண்மையில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் வனவள அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலர்களால் கோரப்பட்ட நிலங்களாகத் தெரிவித்த அளவு வியப்பை ஏற்படுத்துகின்றது. அத்துடன் தொழில் நுட்பக் குழுவின் அறிக்கையே தம்மால் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்படவேயில்லை. அவ்வாறானால் மாவட்டங்களுக்கு இணைத் தலைவர்கள் எதற்கு? ஒருங்கிணைப்புக் குழுக்கள் எதற்கு?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன்.

தற்போது வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் இருந்துவரும் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்விடம் மற்றும் வாழ்வாதார நிலங்களை அதனிடம் இருந்து விடுவித்து தருமாறு கோரப்பட்டதற்கு இணங்க அரசதலைவர் மாளிகையில் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. இது தொடர்பில் கேட்டபோதே உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டச் செயலகங்களில் நிறைவேற்றும் தீர்மானங்களை உரிய திணைக்கள ங்களுக்கு அனுப்பி நடைமுறைப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் இதுவரை திறம்பட செயற்படுத்தப்படவில்லை என்பது தற்போது தெளிவாகத் தெரிகின்றது. எனவே இது தொடர்பில் மாவட்டச் செயலர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்?

மக்களுக்காக கோரிய நிலங்களில் அதிகமானவை மக்கள் ஏற்கனவே வாழ்ந்த மற்றும் வாழ்வாதார நிலங்கள். இவை தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம், தொழில் நுட்பக் குழுவின் தீர்மானம் அதன் பின்பு சூழல் தாக்கம் பற்றிய ஆய்வு அறிக்கை எனக் கூறியே 6 ஆண்டுகள் கடந்துவிட்டன. இனி மீண்டும் விவரம் சேகரித்து இத்தனை ஆய்வுகளின் பின்பு என்றால் நிச்சயமாக இது காலம் கடத்தும் செயல்பாடே அன்றி அதில் மக்களின் நிலத்தை மக்களுக்கு வழங்கும் நோக்கம் இருப்பதாக துளியளவும் தெரியவில்லை.

இதற்காக கொழும்பில் கூடினால் மாவட்டத்தில் பேசுமாறும் மாவட்டத்தில் கூடும்போது கொழும்பில் ஆராயுமாறும் காலத்தை கடத்தி தமிழ் மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தாது அரசதலைவர் நேரில் தலையிட்டு ஒரே நாளில் கொள்ளை ரீதியில் முடிவை எடுத்து இந்த நிலங்களை விடுவிப்பதன்மூலம் அந்த மக்களுக்கான நிம்மதியான வாழ்வியலையும் இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் வளர்க்க முடியும் - என்றார்.

(எ - 105)

வடக்கு மக்களின் நீண்டகால

# கோரிக்கைகளைக் கண்டுகொள்ளாது செயற்படும் வனவளத் திணைக்களம்

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவிப்பு



**முல்லைத்தீவு, ஜூலை 29**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரங்களில் முக்கிய இடம்பிடிக்கும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளுக்காக 4 இடங்களில் சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் 5 ஆண்டுகளாக கோரப்படுகின்றபோதும் வனவளத் திணைக்களம் கண்டுகொள்ளவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் இருக்கும் மக்கள் வாழ்விடம் மற்றும் வாழ்வாதார நிலங்களை மக்களுக்கே விடுவித்துத் தருமாறு வனவளத் திணைக்களத்திடம் கோரப்பட்டது தொடர்பில் அரசதலைவரின் செயலாளர் தலைமையில் அரசதலைவர் மாளிகையில் அண்மையில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் மாவட்டச் செயலாளர்கள், காணி, மீள்குடியமர்வு, வனவளம், வனஜீவராசிகள், விவசாய அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

பெறுமதிக்க இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் இவ்வாறு மக்கள் பிரதிநிதிகள் இன்றி இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலிலும் மாவட்டத்தின் முழுமையான கருத்துக்களும் பிரதிபலிக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயம்.

அங்கே ஆராயப்பட்ட தரவுகளில் வடக்கில் முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பிலேயே அதிக நிலம் கானப்பட்டாலும் சுமார் ஆயிரத்து 500 ஏக்கரே வனவளத் திணைக்களத்திடம் இருப்பது போன்ற மாயை ஏற்பட்டுள்ளது. ஆனால் முல்லைத்தீவில் மட்டும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலங்கள் இந்த நிலையில் உள்ளன.

போருக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த நிலங்கள், வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை நிலங்கள் மட்டுமன்றி கால்நடைகளின் மேய்ச்சல் தரைகள் என அனைத்தையும் கைவிட்டு எமது மக்கள் இடம்பெயர்ந்த சூழலில் அங்கே மரங்கள் சூழ அவற்றை விட்டுவைக்காத வனவளத் திணைக்களங்கள் அவற்றை எல்லையிட்டன. இதனால் தற்போது அந்த நிலங்களை திணைக்களம் சொந்தம் கொண்டாடும் நிலமை காணப்படுகின்றது. இதனால் துணுக்காய், விசுவமடு, முத்தையன்கட்டு, அலம்பில் என நான்கு மேய்ச்சல் தரைகளை விடுவித்து தரவேண்டும். இவர்களின் பிடியில் மக்களின் வாழ்வாதார வயல் நிலங்களும் உள்ளன.

எனவே இவ்வாறு காணப்படும் நிலங்கள் தொடர்பில் மீண்டும் விரைவில் குறித்த சந்திப்பை ஏற்படுத்தி அதில் முழுமையான தகவலை மாவட்டச் செயலாளர்களும் மக்கள் பிரதிநிதிகளும் முன் வைக்கும் வகையில் மாவட்ட ரீதியில் தொழில் நுட்பக்குழுக்களின் கூட்டத்தை உடன் கூட்டி அதன் விவரத்தை விரைவாக உரிய திணைக்களத்துக்கும் அமைச்சுக்கும் அனுப்பிவைக்க வேண்டும் - என்றார்.

(எ-105)

திணைக்களங்கள் சார்பாக கலந்துகொள்ளும் பிரதிநிதிகள்

# கூட்டங்களில் பேசும் விடயங்களை மறைக்காது தெரிவிக்க வேண்டும்

வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளும் வனவளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது தலைமைப் பணிமனைகளுக்குக்கூட விசுவாசமாகப் பணியாற்றுவது கிடையாது என்பது தெளிவாகத் தெரிகின்றது என்று வவுனியா மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் இருக்கும் மக்கள் வாழ்விடம் மற்றும் வாழ்வாதார நிலங்களை விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத்திடம் கோரப்பட்டதற்கு இணங்க அரசதலைவரின் செயலாளர் தலைமையில் கடந்த 26ஆம் திகதி அரசதலைவர் மாளிகையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த ஏப்ரல் மாதம் கூட்டமைப்பின் தலைவர்கள் அரசதலைவர், தலைமை அமைச்சரிடம் இது தொடர்பில் ஒரு கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமையவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அதில், "மாவட்டங்களில் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் பல வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டன அந்த பகுதிகளுக்கு மக்கள் போக முடியாதுள்ளது.

இதேபோல் பல இடங்களில் மக்களுக்கான ஒரேயொரு வாழ்விடத்தையும் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளதனால் மக்கள் உறவுகளின் காணிகளில் பெரும் நெருக்கடியுடனேயே வாழ்கின்றனர்" என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை அதேபோல் செட்டிக்குளம் என சகல பிரதேச செயலாளர் பிரிவிலும் இவ்வாறு மக்களின் நிலம் திணைக்கள அபகரிப்புக்குள் உள்ள நிலமையை சுட்டிக்காட்டி அவற்றை விடுவிக்க வேண்டும் எனவும் இனிவரும் காலத்தில் எல்லைக் கற்கள் நடுவதானால் பிரதேச செயலாளர்களின் அனுமதி இன்றி நடவே முடியாது எனவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது. அது மட்டுமன்றி மாவட்டத்தில் பல ஆயிரம் கால்நடைகளாக உள்ளபோதிலும் மேய்ச்சல் தரைகள் கிடையாது. அதற்கான நிலங்களை விடுவித்து தர வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசதலைவர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் ஆழுகையில் உள்ள நிலத்தில் 75 ஏக்கர் நிலம் மட்டுமே கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது எனில் இங்கே அரச இயந்திரம் எவ்வாறு செயல்படுகின்றது. இந்த தவறுக்கு யார் பொறுப்புக் கூறுவது? மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு மாவட்டத்தில் உள்ள வனவளத் திணைக்கள அதிகாரி ஏன் வருகின்றார்? வருகை தருபவர் ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் மேற்கொள்ளும் தீர்மானங்களை தமது தலைமை அலுவலகத்துக்குகூட தெரிவிப்பது இல்லை. இது தற்போது தெளிவாகின்றது.

இந்த நிலமையே எமது இனத்துக்கும் மாவட்டத்துக்கும் சாபக்கேடாகவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் ஒரு இடத்தில் மட்டும் ஆயிரத்து 150 ஏக்கர் நிலம் பண்ணையாக இருந்தது இதேபோல் 13 இடங்களில் அதிக நிலம் திணைக்களம் வசம் உள்ளது. எனவே இனியாவது உடனடியாக மாவட்ட செயலகம் முழுமையான தகவல்களை திணைக்களத்துக்கு வழங்கி மக்களின் நிலம் மக்களுக்கு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் - என்றார்.

(எ-105)

# சேவைப் பிரமாணக் குறிப்பை சபைகளுக்கு வழங்குங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாண குறிப்பை சகல உள்ளூராட்சிசபைகளுக்கும் உடன் வடக்கு மாகாண அமைச்சின் (உள்ளூராட்சி) செயலாளர் அனுப்பிவைக்க வேண்டும் என்று வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் உறுப்பினருமான சி.மகேந்திரன் கேட்டுள்ளார்.

வடக்கில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 18 வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் 2017.09.29ஆம் திகதியன்று வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் சேவைப் பிரமாண குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

இது தொடர்பில் சி. மகேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் 21 பேருக்கு வகுப்பு 11, வகுப்பு 1 பதவி உயர்வு வழங்கப்பட்டு அவர்களுக்கு அதற்கான நிலுவை நிதிகளும் பெற்றுள்ளனர்.

ஆனால் தாங்கள் எந்த சேவைப் பிரமாண குறிப்பில் அனுமதிக்கப்பட்டு நிலுவை வழங்கப்பட்டது என்பது பற்றிதெரியாதநிலையில் 21 உள்ளூராட்சி உதவியாளர்கள் உள்ளனர்.

எனவே வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளரான திருமதிவிஜயலக்ஸ்மிகேதீஸ்வரன் நீதி நியாயமான அடிப்படையில் வடக்கில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்குக்கடந்த 29.09.2017இல் அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாண குறிப்பினை அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் கடந்த 23.06.2016இல் நிதி அமைச்சின் கீழான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என். கொடங்கண்ட என்பவரினால் 26 உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான ஆளணிகள் அனுமதிக்கப்பட்டன. இந்த அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களும் உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்படாது தொடர்ந்து மறைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் உள்ளூராட்சி சபைகளிலும் அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாண குறிப்பு, அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரம் என்பன வகுப்பு 11, வகுப்பு 1 பதவி உயர்வுகள் வழங்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டியவை. எனவே பதவி உயர்வின்பின்னராவது அனுமதிக்கப்பட்ட விடயங்களை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அனுப்பி வைப்பதே உண்மையான நீதித்துவமாகும்.

எனவே இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், உள்ளூராட்சி ஆணையாளர் என்போரும் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவது அந்தப் பணியாளர்களின் 18 வருடத்தின் பின்னரான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவும் - என்றார்.

(எ-50)

காலமாற்றத்துக்கேற்ப மாற்றங்களை உள்வாங்கி

# தோன்றிய பல மொழிகள் அழிந்துபோக அழியாது நிற்கின்றது எமது தமிழ்மொழி

## வடக்கு மாகாண தலைமைச் செயலர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இந்த உலகத்திலே இலட்சக்கணக்கான மொழிகள் தோன்றின. தோன்றிய பல மொழிகளில் பல, காலமாற்றத்தினோடு அழிந்து போயின. ஆனால் எம்முடைய தமிழ் மொழி காலமாற்றத்துக்கு, பல்வேறு ஆட்சி மாற்றத்துக்கு ஏற்ப சவால்களை சந்தித்து இன்றும் நிமிர்ந்து நிற்கின்றது. செம்மொழிகளில் ஒன்றாக நம்முடைய மொழி இருக்கின்றது. இதன் பிரதிபலிப்பாகத்தான் நம்முடைய தமிழ் இனம் இன்றும் தலை நிமிர்ந்து நிற்கின்றது.



இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில் யாழ்ப்பாண மாவட்ட கலை கலாசாரப் பேரவையும் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய 'பண்பாட்டுப் பெருவிழா' யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவானது மிகவும் அத்தியாவசியமானது. எம்முடைய இனம் மூத்தகுடிகளிலே ஒன்றாக இருக்கின்றது. நம்முடைய வரலாறு மிக நீண்டது. அதேபோன்று பண்பாடும் மொழயும் மிகவும் தொன்மைமிக்கன. ஒரு இனத்தினுடைய இரண்டு கண்களாக அந்த இனத்தினுடைய மொழியும் பண்பாடும் கலாசாரமும் அமைகின்றன.

ஒரு இனம் அழிந்துபோகவேண்டுமாக இருந்தால் அதனுடைய பண்பாடு மற்றும் மொழி என்பன சிதைந்தாலே போதும் இனம் இலகுவில் அழியும்.

எம்முடைய மொழியும் பண்பாடும் இனமும் நிமிர்ந்து நிற்பதற்கான விழுமியங்களை எடுத்துச் செல்வதற்காகத்தான் மாவட்டச் செயலகமும் பிரதேச செயலகமும் இணைந்து இத்தகைய பண்பாட்டுப் பெருவிழாவை சிறப்புற நடத்துகின்றன. கலைஞர்களுக்கு விருதுவழங்கி அவர்களுக்கு மதிப்பளிக்கின்றன - என்றார்.

கலைகலாசாரப் பேரவையின் தலைவரும் மாவட்டச் செயலருமான நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண தலைமை செயலாளர் அ.பத்திநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். வடக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அபிராமி பாலமுரளி சிறப்பு விருந்தினராகவும் வவுனியா மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஸ்ணானந்தன் மற்றும் இணுவில் நாதஸ்வர மேதை கலாபூசணம் இராசு சுந்தரமூர்த்தி ஆகியோர் மதிப்புறு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சிறி பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வரவேற்புநடனமும் அதனைத்தொடர்ந்து கலைக்கோயில் ஆடற்கலையக மாணவி ஆரணி செல்வேந்திரகுமாரின் தனிநடனமும் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாண வாழ்வும் வளமும் மென்பொருள் அறிமுக நிகழ்வை வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதனும், அறிமுக நிகழ்வை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும் ஆரம்பித்து வைத்தனர்.

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ நாடக மன்றத்தின் 'கடவுளின் ஒட்சிசன்' நாடகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இளம் கலைஞர் விருது மற்றும் யாழ். முத்து 2018ஆம் ஆண்டுக்கான விருது என்பன வழங்கி வைக்கப்பட்டன. (எ-213)



# மக்களுக்குரிய காணிகளை ஒப்படைத்தேஆகவேண்டும்

பிரதியமைச்சர் காதர்மஸ்தான் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 29

மக்களுக்கு உரிய காணிகளை மக்களிடம் ஒப்படைத்தே ஆக வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்று பிரதியமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நடந்து முடிந்த பிரதேச சபைத்தேர்தலில் இலங்கை சுதந்திர கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் சந்தித்து கட்சியை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் மன்னாரில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதன்பின், 'முள்ளிக்குளம் மக்களுடைய காணி வீடுகளை இன்னும் கடற்படையினர் விடுவிக்கவில்லை. அவர்களின் காணி வீடுகளின் அருகில் உள்ள பற்றைக்காடுகளில் குடில்கள் அமைத்து வாழ்கின்றார்கள் மீள்குடியமர்வு பிரதியமைச்சர் என்ற வகையில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?' என்று ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கே பிரதி அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுதான் மீள்குடியமர்வு பிரதியமைச்சுப் பதவி எனக்குக் கிடைத்துள்ளது. ஆனால் இந்தப் பிரச்சனை எப்பொழுதோ தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனக்கும் கால அவகாசம் தேவை. நிறைய காணிகள் விடுவிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதே போல் முள்ளிக்குளம் மக்களின் காணிப் பிரச்சினைக்கும் தீர்வுகிடைக்கும். விரைவில் முள்ளிக்குளம் மக்களை நேரில் சென்று சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தவுள்ளேன்

முள்ளிக்குளம் பகுதி மட்டுமல்ல சிலாவத்துறைப்பகுதியிலும் மக்களின் காணிகள் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் காணிகளை விடுவிப்பதற்காக உரியவர்களுடன் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றது கட்டம் கட்டமாக அவை நடைமுறைப்படுத்தப்படும் -என்றார். (எ-213)

# பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் ஆய்வறிக்கை

## வறுமை ஆராய்ச்சி நிறுவனமும் அக்தட் நிறுவனமும் இணைந்து சமர்ப்பிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 29

முல்லைத்தீவு மக்களுக்கு பிரதேசசபைகளால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

வறுமைஆராய்ச்சிநிறுவனமும் அக்தட் நிறுவனமும் இணைந்து பொதுமக்களிடத்தில் ஆய்வு செய்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.



வறுமைஆராய்ச்சிநிறுவனத்தின்திட்டப் பணி முகாமையாளர் பாசித் ஜனாதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.லதுமீரா, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர்க.தவராசா, புதுக்குடியிருப்புபிரதேச சபை உதவி தவிசாளர் க.ஜெனமேஜனந் மற்றும் பிரதேச சபை செயலாளர், உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலக பிரதிநிதி, வலயக் கல்விப் பணிமனைபிரதிநிதி, பிரதேசசெயலகங்களின் அதிகாரிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதற்காக, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புபிரதேசங்களுக்குஉட்பட்ட இருபது கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

அவற்றில்பிரதேசசபைகளால்வழங்கப்படும் சேவைகளான குடிதண்ணீர் வழங்கல், கழிவகற்றல், வீடுகள் வழங்கல் திருத்துதல், வீதிவிளக்கு பொருத்துதல், வடிகால் அமைப்பு, விளையாட்டு மைதானம், நூலகம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் இலவசங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் அரசால் வழங்கப்படும் குறித்த இலவச சேவைகள் மக்களைச் சென்றடைவது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக 'இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை' என்ற மென்பொருள் ஒன்று பயன்படுத்தப்பட்டதாகவும் இலங்கையில் மொனராகலை மற்றும் மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் திட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட பணி முகாமையாளர் பாசித் ஜனாதீன் அறிக்கையை வெளியிட்டு வைக்க உதவி மாவட்ட செயலாளர் ஏ.லதுமீரா பெற்றுக்கொண்டார். தொடர்ந்து அங்கு வருகைதந்த அதிகாரிகளுக்கும் அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில்சிறப்பம்சமாக, முல்லைத்தீவு மாவட்டத்தில்பிரதேசசபைகளால்வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் மக்கள் குறைவானதிருப்தியினையேதெரிவித்துள்ள நிலையில் திருப்தியான சேவையினை வழங்குவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது, இதன் அடுத்த கட்ட ஆய்வு அறிக்கைசெப்டம்பர்மாதம்மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பிரதேச சபைகளால்மக்களுக்குவழங்கப்படும்சேவைகள் தொடர்பில் அதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்றும் வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்டபணி முகாமையாளர் பாசித் ஜனாதீன் தெரிவித்தார். (எ-ரி3)

கிளிநொச்சி மாவட்டத்தில்

# சிறுபோகச் செய்கையில் கிடைக்கும் நெல்தான் காலபோக விதைப்புக்கு

*விவசாயிகள் சம்மேளன செயலாளர் கூறுகிறார்*

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சியில் தற்போது சிறுபோகத்தில்மேற்கொண்டுள்ள ஆயிரத்து 800 ஏக்கர் நெற்செய்கையில் பெறப்படும் அறுவடையின் நெல்லையே கால போகத்தில் மேற்கொள்வதற்காக 60 ஆயிரம் ஏக்கர் நிலத்தின் விவசாயிகளும் காத்திருக்கின்றனர் என்று இரணைமடு விவசாயிகள் சம்மேளனச்செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தஆண்டுமேற்கொண்ட சிறுபோகத்தின் அறுவடை தற்போது இடம்பெறுகின்றது. இதில் ஏக்கருக்கு 30 மூடையை அண்மித்த அறுவடை கிடைத்திருப்பதாக விவசாயிகள்தெரிவிக்கின்றனர். தற்போது பெறப்படும் நெல்லை உடனடியாக சந்தைப்படுத்துவதன் மூலம் மூடைக்கு 2 ஆயிரத்து 600 ரூபாவைப்பெற்றுக்கொள்ள முடியும். எனினும் கால போகவிதைப்பையும்கருத்தில்கொள்ள வேண்டும்.

தற்போது ஆயிரத்து 800 ஏக்கரிலும் சுமார் 50 ஆயிரம் மூடையே பெற்றுக்கொண்டிருக்க முடியும். இதனை சீர் செய்து பராமரிக்க வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் இந்தச் சிறுபோகத்தின் நெல்லை விதைப்பதன் மூலமே 85 வீதபயிரைஎதிர்பார்க்கமுடியும். ஒரு ஏக்கர் நிலத்தை வீதைப்பதற்கு ஒரு மூடை நெல் வேண்டும் என்பதன் அடிப்படையில் தற்போது சிறுபோகத்தில் பெறப்பட்ட நெல்லை சீர் செய்து பராமரிப்பதன்மூலம்செப்ரெம்பர் மாதகாலத்தில் விதையினத்துக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யும் சந்தர்ப்பம் விவசாயிகளுக்கும் கிடைப்பதோடு மாவட்டத்தின்ஏனையவிவசாயிகளுக்கும் தட்டுப்பாடு அற்ற நம்பகமானநல்லினவிதை நெல்லை பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (105)


Unilever
உலக சனத்தொகையில்
50%
வீதமானோர் பொடுகினால்
பாதிக்கப்பட்டுள்ளனர்*
CLEAR MEN
பாவித்து பொடுகினை
அகற்றுங்கள்**
WORLD'S #1 MEN SHAMPOO
1323
CLEAR
MEN ANTI-DANDRUFF
COOL SPORT MENTHOL
*Based on Published literature
**No Visible flakes with regular use
World's No.1 selling Anti dandruff men shampoo. Unilever calculation based on Nielsen value/volume sales information for the total grocery market (12 month period ending within Dec'17)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் விட்டுத் தரமாட்டாராம்:

### கவலைப்படுகிறார் தினேஸ் எம்.பி.

கொழும்பு, ஜூலை 29

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எனக்குவழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மாத்திரம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அதேவேளை, தனக்குஎதிர்க்கட்சித்தலைவர் பதவியை வழங்க கூட்டுஎதிர்க்கட்சிக்குள்எந்தவித எதிர்ப்பும் இல்லை.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக்கட்சிக்குஅடுத்தபடியாகக் கூடுதலான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சித் தலைமைப் பதவியும்எமக்குவழங்கப்பட வேண்டும். அது குறித்துநாம்தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகிறோம்.

எனினும்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்பட்டுள்ளது. அதுஜனநாயக விரோத செயல். தற்போது எதிர்க்கட்சிகூட்டரசின்பங்காளிக் கட்சி போலவே செயற்படுகிறது. எனவே கடந்தவாரமும்சபாநாயகரைச் சந்தித்துக் கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம். அது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு அடுத்தமாதம்முதல்வாரம் வரையில் சபாநாயகர் அவகாசம் கோரியுள்ளார் -என்றார். (4,61)

# சுற்றாடல் அழிவதற்கு அரசியலே காரணம்!

## அதைத் தடுக்கவே அந்த அமைச்சு தன்னிடம் என்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 29

சுற்றாடல் அழிவுகளுக்கு அரசியல் ஆதரவு கிடைப்பதைத் தவிர்ப்பதற்கே சுற்றாடல் அமைச்சு தனக்குக்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு மைய கலாசார நிதியத்தால் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்தவாரம் இடம் பெற்றது. அதில் உரையாற்றும்போதே அரச தலைவர் மேலும் தெரிவித்ததாவது:.

தான் அரசதலைவராகத்தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் சுற்றாடல் துறையைத் தனக்குக்கீழ்கொண்டுவந்தது, சுற்றாடல் அழிவுகளுக்கு அரசியல் ஆசீர்வாதம் கிடைப்பதைத் தவிர்ப்பதற்கே.

கடந்த 50 வருட காலப்பகுதியில் இந்த நாட்டில் இடம்பெற்ற பெரும் சுற்றாடல் அழிவுகளுக்கான முக்கிய பொறுப்பு சில அரசியல் வாதிகளையே சாரும். அரசியல் அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டுஇடம்பெற்றுள்ளஅந்த அழிவுகள்தேசத்துக்குக்கெடுதலே. இன்றுநாட்டின்வனஅடர்த்திசுமார் 29வீதம்என்றகுறைந்தமட்டத்தில் உள்ளதென்றும் இவற்றில் சுமார் 1.4 வீதம் வருடாந்தம் அழிவுக்குட்படுவதாகவும் தெரியவந்துள்ளது. உரியநிகழ்ச்சித்திட்டங்கள்மற்றும் கொள்கைசார்ந்ததீர்மானங்களின் மூலம் இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு உடனடியாக அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

தொல்பொருள்மற்றும்உயிர்பல்வகைத் தன்மைபெறுமதியைக்கொண்ட இந்தத் திட்டத்தை மைய கலாசார நிலையத்துக்குப் பொறுப்பளிப்பதற்கு அதன் பொறுப்பாளர் சங்கைக்குரிய வனவாசி ராகுல தேரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில், உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, நாடாளுமன்றஉறுப்பினர்சந்திமகமகே உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், உயர் கல்வி, கலாசார பணிகள் அமைச்சின் செயலாளர்ஜே.ஜே.ரத்னசிறி, தொல்பொருள்ஆணையாளர்நாயகம்பேராசிரியர் பீ.வி. மண்டாவெல, உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (4)










# சின்னமடு மாதா

## யாத்திரைத் தலத் திருவிழா 2018

சின்னமடு மாதா ஆலயத் திருவிழா
கடந்த 27.07.2018 வெள்ளி தொடக்கம் நடைபெறுகிறது.
தினமும் மாலை 4.30 மணிக்கு வழிபாடுகள்
ஆரம்பமாகின்றன
திருவிழா திருப்பலி அதி வந்தனைக்குரிய
யாழ்ப்பாணம் ஆயர் தலைமையில் எதிர்வரும் 05.08.2018
ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.
மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கவனத்துக்கு:**

- யாழ் . ஊர்காவற்றுறை பேருந்துகள் சின்னமடு ஆலயத்துக்கு முன்பாக பயணிக்கும்.
- எதிர்வரும் 04.08.2018 சனிக்கிழமை இரவு யாழ். திரும்பும் மக்களுக்கு போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படும்.
- வியாபாரிகள் உரிய அரச அனுமதிப்பத்திரங்களுடன் இருந்தால். வியாபாரத்துக்கான இடத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். எதிர்வரும் 01.08.2018 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வியாபாரிகளுக்கான இடங்கள் கொடுக்கப்படும்.
- ஆலயத்தில் உணவு தானம் செய்வோர் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

**அனைத்து சகோதரர்களதும் அன்பான ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.**

**சின்னமடுமாதா ஆலயம், சின்னமடு, சரவணை.** **பரிபாலகர்.**



# தேசத்தின் நவோதயம்

## எழுச்சிபெறும் பொலன்னறுவை

“ அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஊடாக நாட்டில் தன்னிறைவுமிக்க பொருளாதாரத்தையும் சௌகரியமான வாழ்க்கை முறையையும் உருவாக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, கிராமிய வாழ்க்கையின் புரட்சிகர மாற்றம் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. ”

## 6000 கோடி ரூபா

அளவிலான பாரிய முதலீட்டில்

பொலன்னறுவை மாவட்டம் முழுவதுமாக மேற்கொள்ளப்படும் கல்வி, சுகாதாரம், குடிநீர், வீதிப் போக்குவரத்து வசதிகள், நீர் முகாமைத்துவம், விவசாயம், விலங்கு வேளாண்மை, ஜீவனோபாய அபிவிருத்தி, வணக்கஸ்தலங்களின் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, தொல்பொருள் நிலைய அபிவிருத்தி, விளையாட்டு, கலாசார அபிவிருத்தி, வீடு, காணி பகிர்ந்தளித்தல், நகர அபிவிருத்தி, உப நகர அபிவிருத்தி மற்றும் மக்கள் வலுவூட்டல் திட்டங்கள் போன்ற

**180 அபிவிருத்தி செயற்திட்டங்களை மக்கள் மயப்படுத்தல்**

**ஆகஸ்ட் 01 02 03 ஆம் திகதிகளில்**

மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் தலைமையில்
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலில்...

பல்லாயிரக்கணக்கான கிராமங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற மைத்ரியின் கனவை நோக்கி.....

**மைத்ரீ ஆட்சி பேண்தகு யுகம்**

# மாகாணத்தேர்தலைக்காலந்தாழ்த்தவே அரசு அரசமைப்பைக் கையிலெடுக்கிறது

## சிறிலங்கா மக்கள் முன்னணி கூறுகிறது

கொழும்பு, ஜீலை 29
மாகாணசபைத்தேர்தலைநடத்தாது காலம் தாழ்த்துவதற்கே அரசமைப்புவிவகாரத்தைஇந்த அரசு கையில் எடுத்துள்ளதாக சிறிலங்கா மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால் தோல்வியடைவார்என்றும்அது குறிப்பிட்டுள்ளது.

சிறிலங்கா மக்கள் முன்னணியின்பத்தரமுல்லையிலுள்ளதலைமையகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம்வகிக்கும்நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருந்த அதில்கருத்துத்தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால்தேர்தலைஎதிர்கொள்ள முடியாது. எனவேதான் தேர்தல் நடத்தவுள்ளதாகக் கூறிக் கொண்டு வர்த்தகத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான துறைகள்பற்றிக்கவனம்செலுத்துகிறது.

கூட்டரசு பன்னாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றது. அவ்வாறெனின்அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைஏன்விற்பனைசெய்ய வேண்டும். அந்தத் துறைமுகத்துக்குக் கப்பல் வருவதில்லை எனக் குறிப்பிட்டே கூட்டரசினர் விற்பனைசெய்தனர். பன்னாட்டு ஆதரவைப்பெற்றஅரசுஎன்றால் அந்த ஆதரவுடன் துறைமுகத்துக்குக் கப்பல்களைக் கொண்டு வந்திருக்கலாம். நெல்களஞ்சியப்படுத்துவதற்காக மத்தள வானூர்திநிலையத்தைஇந்தியா வாங்கவில்லை. வானூர்தி நிலையத்தில் வானூர்திகளைத் தரையிறக்குவற்காகவேவாங்கியுள்ளது. அவ்வாறெனின் பன்னாடுகளின்ஆதரவைப்பெற்றுக் கொண்டுஏன்கூட்டரசால்அங்கு வானூர்திகளைக் கொண்டு வர முடியாது?

வானூர்தி சேவைகள் சட்டத்தை மாற்றியமைத்தே மத்தள வானூர்திநிலையத்தைஇந்தியாவுக்குவழங்கவுள்ளனர். ஆகவே அந்தச் சட்டத்தைப் பின்பற்றிக் கட்டுநாயக்கவானூர்திநிலையத்தையும்வெளிநாடுகளுக்குவிற்க மாட்டார்கள் என்று எவ்வாறு நம்பிக்கை கொள்வது? எனவே அரசிடம் திட்டமிட்ட கொள்கையில்லை.

**வாக்குறுதிகளை ரணில் நிறை வேற்றுவதில்லை**

மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்து பத்து மாதங்களும் ஐந்து நாள்களுமாகின்றன. இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை. கடந்த மார்ச் மாதம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று நாடாளுமன்றில் 2017 ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் குறிப்பிட்டிருந்தார். அவர் வழங்கும் வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றுவதில்லை.

இன்னும் 70 நாள்களில் மத்திய மற்றும்வடமேல்மாகாணசபைகளின்பதவிக்காலம்நிறைவடையவுள்ளது. இன்னும் 44 நாள்களின் பின்னர் வடக்கு மாகாண சபையின்பதவிக்காலமும்நிறைவடையுள்ளது. புதிய அரசமைப்பைக் கொண்டுவந்து தேர்தலைப் பிற்போடுவதற்கே அரசு எதிர்பார்க்கிறது.

விடுதலைப்புலிகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் அமைச்சுப் பதவியிலிருந்துவிலகியபோதும், அவரின் பாதுகாப்பு உட்பட சலுகைகள் நீக்கப்படவில்லை.

**பிரபல்யமடையவே தூக்குத் தண்டனைக் கதை**

போதைப்பொருள் வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்குவதுகுறித்துஅவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான குற்றச்செயல்களுக்குத் தூக்குத்தண்டனைவழங்குவது ஒரு தீர்வாக அமையலாம். எனினும் தூக்குத் தண்டனைக்குச் செல்வதற்கு முன்னர் வேறுவகையிலான தீர்மானங்களும் உள்ளன. எனவே பிரபல்யம் அடைவதற்காகவே தூக்குத் தண்டனைத் தீர்வுக்குச் சென்றுள்ளார் என்று நான் கருதுகிறேன்.

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன பிரபல்யம் அடைவதற்காகப் பல்வேறு வாக்குறுதிகளைக் கடந்தகாலங்களிலும்முன்வைத்துள்ளார். எனினும் அவற்றை நிறைவேற்ற முடியாது போயுள்ளது. எனவே இதனையாவது அவருக்குநிறைவேற்றக்கிடைத்தால் சிறந்தது. அவரால் மீண்டுமொருமுறை நாட்டின் அரசதலைவராகவரமுடியாது. அடுத்து வரும் அரசதலைவர் தேர்தலில் அவர்போட்டியிட்டால்தோல்வியடைந்து விடுவார் -என்றார்.

(4,31)



ஆறாத் துயர் காணும்
31ஆம் நாள் நீங்காத நினைவுகள்
மலர்வு 02 . 09 . 1934
உதிர்வு 30 . 06 . 2018
யாழ்ப்பாணம், பாசையூரைச் சொந்த இடமாகக்கொண்ட
திருமதி அருளம்மா வைற்றஸ் (தவம்)
"மண்ணுலக வாழ்வில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"
நிஜங்கள் நிழல்களானாலும் வரும் நினைவுகள்
- நிறம் மாறுவதில்லை
உங்கள் உடல் எம்மை விட்டு பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
அமைதியும் நிறைவும் தரும் உம் இன்பவான் வீட்டில்
இவர் இன்புற்றிருக்க வரம் அருள வேண்டி உம்மை
- மன்றாடுகின்றோம்
முடிவில்லா ஒளி இவர்மீது பிரகாசிப்பதாக - ஆமென்
இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (30.07.2018) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
மேலும் மறைவு செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டோர், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்
G.பெர்னாட் - 021 221 1938
A.P.சாள்ஸ் - 075 842 1327
போயிட்டி - இளவாலை
அன்புடன் நினைவு கூரும்
மகன் - மருமகள்,
பேரப்பிள்ளைகள்
(சுவிஸ்)

# மூவின மக்களின் வாக்குகளையும் பெறக்கூடியவர் மைத்திரிபாலதான்

## அமைச்சர் மகிந்த அமரவீர கூறுகிறார்



கொழும்பு, ஜீலை 29
மூவின மக்களின் வாக்குகளையும் பெறக்கூடிய வேட்பாளர் அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன மாத்திரமே. வேறுஎந்த வேட்பாளருக்கும் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறமுடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமானமகிந்தஅமரவீர தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தலில் சிறிலங்காசுதந்திரக்கட்சிவேட்பாளர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் அவர்மேலும்தெரிவித்ததாவது:

அரசதலைவர்தேர்தலில்போட்டியிடப் போவதாகப் பல கட்சிகளில் இருந்தும் பெயர்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறு தெரிவிக்கப்படும் வேட்பாளர்களில்சிங்களம், தமிழ்மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை யாருக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஐக்கியமக்கள்சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேனமட்டுமேமூவினமக்களின்வாக்குகளையும்பெறமுடியும்.

இதுவரை காலமும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர்கள் பிரதேச சபைகளில் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். ஆனால் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தலில்126முஸ்லிம்உறுப்பினர்கள் எமது கட்சியால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கிழக்கில்சிலதொகுதிகளை எமதுஉறுப்பினர்களே வெற்றி கொண்டனர். இந்தநிலை கடந்த காலங்களில் இருக்கவில்லை. அரசதலைவர் மீதுவைத்திருக்கும் நம்பிக்கையே இதற்குக் காரணம்.

எமது நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வதாக இருந்தால் பன்னாடுகளின் ஒத்துழைப்புத் தேவை. ஏனெனில் உலகத்துக்குள்தான் இலங்கை இருக்கின்றதே தவிர இலங்கைக்குள் உலகம் இல்லை. இலங்கைக்குள் உலகம் இருப்பதாகவே ஒருசிலர் நினைத்துக்கொண்டு செயற்படுகின்றனர். ஆனால் இன்று மைத்திரிபால சிறிசேன மீது பன்னாட்டுத் தலைவர்கள் நம்பிக்கைவைத்துள்ளனர்.

நாட்டில்சட்டவிரோதசெயல்கள்குறைவடைந்துள்ளன. ஆனால் ஊடகங்களிலேஅதிகமாகக்காட்டப்படுகின்றன. கடந்தகாலத்தில்பெரும்ஊழல்மோசடி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைதுசெய்யப்படவில்லை. சிறிதளவில் குற்றம் செய்தவர்களே கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இன்று அரசதலைவரின் ஒத்துழைப்பு இதற்கு இருக்கின்றது. எந்தப் பாதாள தலைவருக்கும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் அரசு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலைஏற்பட்டிருந்து. குறிப்பாகவெள்ள இடர், வறட்சி மற்றும் உரமானியம் போன்ற சிக்கல்கள் இருந்த நிலையிலேயே தேர்தல் இடம்பெற்றது. எதிர்க்கட்சியும் இதனைப் பயன்படுத்திக் கொண்டு தேர்தல் பரப்புரை செய்தது. மக்களும்முறையானநிவாரணங்கள் கிடைக்கவில்லை என்ற வேதனையிலே மக்கள் முன்னணிக்கு வாக்களித்தனர். ஆனால் அந்த நிலை தற்போதுமாறியுள்ளது. அத்துடன்அந்தத் தேர்தலை அரசதலைவர் தேர்தல் போன்றே கூட்டு எதிர்க்கட்சி பரப்புரை செய்தது. இருந்தபோதும்அவர்களால் 41வீதவாக்குகளைப்பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அரசதலைவர் தேர்தலில் இவர்கள் 41வீத வாக்குகளைப் பெற்றுக் கொண்டு வெற்றிபெற முடியாது. அதுபோன்று ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகள் மூலமாக அரசதலைவர்தேர்தலில்அவர்களும் வெற்றிபெறமுடியாது. ஆனால்ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் ஒருவருக்கே அரசதலைவராகும் வாய்ப்பு இருக்கின்றது. மைத்திரிபால சிறிசேனவே ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியில் போட்டியிடுவார். அவராலேயேமூவினமக்களின் வாக்குகளை பெறமுடியும் - என்றார்.

(4.31)

# திருக்கோணேஸ்வர ஆலய அடிவாரத்தில் வரலாற்று உண்மைகள் பொதிந்துள்ளன

## வெளிக்கொணர வேண்டும் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜீலை 29
திருக்கோணேஸ்வரத்தின்அடிவாரத்தில் உள்ள சமுத்திரத்தில் ஆதிகால திருக்கோணேஸ்வரத்தின் சிதைவுகள் மற்றும் வரலாற்று உண்மைகளும் புதைந்துள்ளன. அதனை வெளிக் கொணர ஆய்வு நடத்த வேண்டியஅவசியம்உள்ளதுஎன்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

வரலாற்று ஆய்வாளர் என். கே. எஸ். திருச்செல்வம்எழுதியார்இந்தஇராவணன் என்ற நூல் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அந்தநிகழ்வில்சம்பந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

**சரித்திர ரீதியான ஆய்வுகள் நடத்தி எமது வரலாற்றை ஆவணப்படுத்தி வெளியிடுவதுஇன்றையகாலகட்டத்தின் மிக முக்கியமான தேவையாகவுள்ளது.**

1624ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் திருக்கோணேஸ்வரர் ஆலயம் உடைக்கப்பட்டபோது இந்த ஆலயத்தில்ஒருபகுதியாகஇருந்த1000கால் மண்டபத்தை உடைத்தே தற்போதுள்ளபிரட்ரிக்கோட்டைஉருவாக்கப் பட்டள்ளதாக அறிந்துள்ளோம்.

சமுத்திரத்தின் அடியில் ஆலயத்தின் பல சிதைவுகளும் வரலாற்று உண்மைகளும் புதையுண்டுள்ளன. எனவே இந்த ஆராய்ச்சி சட்டபூர்வமாக இடம் பெறவேண்டும் எனவும் நாம் விரும்புகின்றோம்.

இராவணன் இலங்காபுரியை ஆண்ட பலம் வாய்ந்த தமிழ் மன்னன். அவர் சிவபெருமானின் தீவிர பக்தனாக இருந்துள்ளார். அதற்கான பலஆதாரங்கள்உள்ளன. திருக்கோணேஸ்வரத்தின் வலது புறத்தில் உள்ள இராவணன் வெட்டு அதற்கு ஒரு சான்றாகும்.

இராவணன்இலங்கையில்பலசிவாலயங்களைக்கட்டியுள்ளார். இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் சிவாலயங்களை அமைத்துள்ளார். இந்தியா மற்றும் ஏனைய பல நாடுகளில் அவரைக் கடவுளாக வழிபடும்வழக்கமும்காணப்படுகின்றது. இராவணன்ஆயுள்வேதவைத்தியத்திலும் கை தேர்ந்தவர் என்றும் வரலாறுகூறுகின்றது. இராமாயணத்தில் இராமன்பற்றிஅதிகமாகக்கூறப்பட்ட போதும் இராவணன் பற்றிய தகவல்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை. அந்தக்குறையைப்போக்கயார் இந்த இராவணன் என்ற நூல் வெளிவந்துள்ளது என்று நான் கருதுகின்றேன்-என்றார்.

(4)

# SKT சிறி குமரன் ரெக்ஸ்

ஆடி பிறந்திருச்சி
ஆடித்தள்ளுபடி
ஆரம்பமாயிருச்சு
தட்டாதெரு சந்தியில்
அசத்தலான ஆடித் தள்ளுபடி!



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள் அனைத்தும் தள்ளுபடி விலையில்

விசேடமாக Office wear சாறிகள் மிக குறைந்த விலையில்

இல. 770, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(Sup/1525)(10)

## பற்கள் மற்றும் முரசுகளை நன்கு பாதுகாக்கும் ஒரேயொரு பற்பசை வென்டோல் டி அன்ட் ஜி

## Teeth & Gums Protector




- சில பற்பசைகள் மூலம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கிடைப்பது இரசாயன மின்ற் சுவை மட்டுமே. அவற்றால் முரசுகளை நலமாகப் பேணவோ பற்களைப் பாதுகாக்கவோ முடியாதென்பதை உலகெங்கிலுமுள்ள பல் வைத்தியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.
- தேசிய மருத்துவத்துக்கு மதிப்பளித்து வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவதற்காக உன்னத ஆயுர்வேத தைலங்கள் மற்றும் மூலிகைகள் கொண்டு தயாரிக்கப் படும் **டி அன்ட் ஜி** பற்பசையைப் பாவிக்கும் சிறுவர்கள் பெரியவர்கள் அனைவரும் தமது பற்களை வாழ்நாள் முழுவதும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது சான்றோரின் கருத்தாகும்.
- உணர்திறனை **(Sensitivity)** இல்லாமற் செய்யும் சில இரசாயன பற்பசைகளினால் கண்களிலுள்ள மென்மையான நரம்புகள் பலவீனம் அடையவும் கூடும்.
- எனாமல் தேய்வதால் ஏற்படும் பாதிப்பின் காரணமாகப் பற்களிலும் முரசிலும் உண்டாகும் கூச்ச உணர்வைத் தடுத்து ஆரோக்கியமான முரசையும் வலிமையான பளிச்சிடும் வெண்மைப் பற்களையும் பெற்றுக்கொள்ள ஒரேயொரு இயற்கை மூலிகைப் பரிகாரம் **டி அன்ட் ஜி** பற்பசையாகும்.
- கராம்பு, கறுவாப் பட்டை, சாதிக்காய், வஸாவாஸி, ஏலக்காய் ஆகிய பிரதான பதார்த்தங்கள் உள்ளடக்கிய நறுமணச் சேர்வையைக் கொண்டுள்ளதால் இப் பற்பசை நாள் முழுவதும் உங்கள் வாயில் நற்சுவாசம் கமழச் செய்யும்.

(IN/9804)(11,17)



ரூ.50/- மட்டும்

அழகிய புன்னகையின் இரகசியம் வென்டோல் **T&G**

## தரம் 5 புலமைப்பரிசில் எதிர்பார்க்கை சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்

**ஜூலை மாத ஒளி அரசி சஞ்சிகையில்**
சிங்கள மொழி பெயர்ப்பு மாதிரி வினாத்தாள்
**இலவசமாக இணைக்கப்பட்டுள்ளது**
ஒளி அரசி சஞ்சிகையை அனைத்து
**புத்தகசாலைகளிலும்,**
**பத்திரிகை முகவர்களிடமும்**
பெற்றுக்கொள்ளலாம்

**077 656 9617 / 071 427 3035**

# YARL HOSPITAL

யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

**24 மணிநேர சேவை**

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

### ✓ Laproscopy Surgery (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)

- -Hernia (ஹேணியா) — 130,000/=
- -Appendectomy (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை) — 110,000/=
- -Hysterectomy (கருப்பை அகற்றல்) — 130,000/=
- -Cholecystectomy (பித்தப்பை அகற்றல்) — 130,000/=
- -Lap & Dye Examination — 55,000/=
- -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 70,000/=

### ✓ Gyn & Obs (பெண்ணியல் சத்திரசிகிச்சைகள்)

- -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 55,000/=
- -Vaginal Hysterectomy (குடல் இறக்க சீர் செய்தல்) — 99,000/=
- -Abdominal Hysterectomy (கர்ப்பப்பை அகற்றல்) — 99,000/=
- -D & C (கர்ப்பப்பை சுத்திகரித்தல்) — 39,000/=

### ✓ Laser Surgeries

- -Laser Vericose Surgery (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

### ✓ Eye Laser Treatment

நீரிழிவு நோயினால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்பு பகுதி மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை

**Video Colonoscopy** (வீடியோ மூலம் (மலவாசல்) பெருங்குடல் பரிசோதனை) — 50,000/=

**Video Endoscopy** (வீடியோ மூலம் உணவுக்கால்வாய் பரிசோதனை) — 12,500/=

அக்ரகாரா. அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

### ✓ General Surgeries

- -Vericosevein (வரிகோஸ் சத்திரசிகிச்சை) — 95,000/=
- -Hernina (ஹேணியா சிகிச்சை) — 80,000/=
- -Appendectomy (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை) — 75,000/=
- -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=
- -Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்) — 110,000/=
- -Anal Fissure — 45,000/=
- -Anal Fistula — 45,000/=
- -Haemorrhoids (Piles) Surgery — 55,000/=

### ✓ E.N.T சத்திர சிகிச்சைகள்

**Nose மூக்கு**

- -Septoplasty (மூக்கு சீராக்கல்) — 90,000/=
- -Septorhinoplasty — 170,000/=
- -Endoscopic Sinus Surgery — 95,000/=
- -Endoscopic Nasal Polypectomy — 85,000/=

**Ear காது**

- -Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்) — 90,000/=
- -Mastoidectomy — 120,000/=

**Larynx & Throat தொண்டை**

- -Tonsilectomy / Adenoidectomy — 75,000/=
- -Phono Surgery (குரல் மாற்ற சத்திரசிகிச்சை) — 60,000/=
- -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=

(SUP/1506)(10)

(திருத்தலைக்குட்டப்பட்டது)

மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் சத்திரசிகிச்சை கூடம், வைத்திய நிபுணர்கள், அத்துடன் ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: **077 310 7685**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- ஊளைச் சதையா?
- உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- வயிற்று கோளாறா?
- வயிறு.மார்பு குறைக்க வேண்டுமா.
- உடல் எடை குறைகிறதேயில்லை என்ற கவலையா?

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம்
(பால்மா. குளிசை. கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

**(விலை - 3500, 5500, 9000)**

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி வளர வேண்டுமா?
- பேன். பொடுகு தொல்லையா?
- முடி கொட்டுகிறதா?
- இளநரையா?
- தலையிடியா?
- முடி அடர்த்தி இல்லையா?
- புதிதாக முடி முளைக்க வேண்டுமா?

பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சைவேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் 100% ஆயுள்வேத முறைப் படி காய்ச்சிய இவ்வெண்ணையைப் பாவித்து பலனடைய.

**பதிவு இல: 16168**
**077 210 6155**
**221, நாவலர் றோட், யாழ்.**

## VACANCY

☑ OFFICE ASSISTANT:
All office works corresponding to Office Administration.
Coordinating with clients, suppliers etc.
Eligibility : Communication skill in English & Sinhala (Optional)
Able to do computer typing.

☑ TECHNICAL OFFICER :
NCT:- Civil/QS with 01 year experience or
HND B Tech NVQ level V) with 2 years experience or
HNDE / NDT (Civil/QS)

தொடர்பு:- VISVAKARMA (PVT) LTD,
28, MAARI AMMAN LANE,
THIRUNELVELY, JAFFNA.

(CS/18592)(10)

Tel : 021 222 6781 / 021 492 7338
Fax : 021 221 9976 / Mail: msivam25@yahoo.com


## முதலாம் ஆண்டு நினைவு



மண்ணில்
12.11.1985

விண்ணில்
09.08.2017

திதி: 29.07.2018

### அமரர் குணரத்தினம் சுபஜீவன்

பாரினிலே பலருக்கு பண்பான பிள்ளையாய்
பறந்து திரிந்த நீ பாதியிலே விட்டு விட்டு போனாயே - ஜீவா
ஆண்டுகள் ஆயிரமானாலும் ஆறாது நின்பிரிவு
மாண்டு நீ போனாய் என்ற வலிதானும் மறையுமோ
நீண்ட நின் உறவினை பிரிந்து ஆண்டு ஒன்று ஆனதின்றே

சந்தியடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்
23 . 06 . 1946

மறைவு
09 . 08 . 2017

### தருமலிங்கம் விமலாதேவி (கமலா)

திதி:- துதியை

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
அனைவரையும் அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(CS/18555)(11,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நடராசா கணேசரட்ணம்

சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா கணேசரட்ணம் (ராசா) நேற்று (28.07.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - மகேஸ்வரி தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஸ்ணதேவி யின் (தேவி) அன்புக் கணவரும், திருமதி சௌந்தர நாயகி, திருமதி சிவயோகநாயகி (டென்மார்க்), சிவானந் ரட்ணம் (UK), சரோஜினிதேவி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனடியார், செல்வக்குமார் (டென்மார்க்), கமலாதேவி (UK), இலங்கேஸ்வரலிங்கம் (UK) ஆகியோ ரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை சங்கரத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் வழுக்கையாறு மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
க.சிவனடியார்
(மைத்துனர்)

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(CS/18575)(11,17)

077 899 4077


## விற்பனைக்கு உண்டு

இரண்டு வருடங்கள் பாவித்த நிலையில் உள்ள Japan Yamaha Diesel Generator (5.5 kw, EDL 7000SE) விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 256 1990**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகரின் மையப்பகுதியில் வேம்படி பாடசாலைக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(CS/18595)(10)

**T.P:077 467 6243**

## விற்பனைக்கு

DAMRO அலுமாரி 3 கதவுகள், கண்ணாடி மேசை என்பன விற்பனைக்குண்டு.

(CS/18597)(10)

**T.P:076 216 0099**

## Luxury Apartment வாடகைக்கு

1 B/Room, 2 B/Room, 3 B/Room



நாள், கிழமை, மாத அடிப்படையில்
கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்
Sea View, Complete Furnished, Wi-fi, Cable TV, Kitchen Appliance, Washing Machine and Parking, 24 Hours Security Also Provide Transport Facilities

0773 540 632 / 0774 440 586
0776 332 580 / 0779 919 388
011 2363991

EDNA

# வெற்றிகரமான வியாபாரத்தின் பங்குதாரராக எம்முடன் இணையுங்கள்

# Rs.200,000/- மேலான மாத வருமானம்

எம்முடன் இணைவதற்கு
கீழ்வரும் பகுதிகளில் வெற்றிடங்கள் உள்ளன

## யாழ்ப்பாணம் / வவுனியா

**E I & M (PVT) LTD**

**நீங்கள் பங்குதாரராக இணைவதற்கு தேவையானவை**

- ★ வியாபாரம் பற்றிய அறிவு
- ★ வங்கி உத்தரவாதம்
- ★ களஞ்சியசாலை மற்றும் காரியாலய வசதி (குறைந்தது 15'×15' இட வசதி)
- ★ பொருட்களை வினியோகிப்பதற்கு அலுமினியம் Aluminium Body யுடைய 10 1/2 அடி லொறி வசதி
- ★ அனுபவமுடைய காரியாலய உத்தியோகத்தர் மற்றும் பண வசூலிப்பவர் (Cash Collector)
- ★ பொருட்கள் வினியேகிப்பதில் போதிய அறிவு

விற்பனை முகாமையாளர், எட்னா தனியார் நிறுவனம்,
இல-257 கிரேன்பாஸ வீதி,கொழும்பு
தொலைபேசி இல - 0703053909

Edna GOLD · Edna RED · Edna CRUNCHY CRISPY · BUNTY SMACKER · Edna Cashew · Edna Chef's Choice · Edna JOY CHOCO · Edna Choco Fingers

உங்களது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை
E Mail: eimsales@edna.lk என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம்

## வாடகைக்குண்டு
யாழ்நகரில் இருந்து 3Km தூரத்தில் பலாலி வீதியில் Rooms வாடகைக்கு உண்டு.
**076 546 0811**

## தேவை
அரைக்கும் ஆலைக்கு (யாழ்ப்பாணம்) வேலை தெரிந்தவர், பழக விரும்புபவர், பொதியிடல், பில்கிளாக், சமையல், உதவியாளர் என்பவற்றுக்குப் பெண்கள் தேவை. (CS/18566)(11,17)
**077 174 6101**

## காணி விற்பனைக்கு
பளைப்பிரதேச சபைப் பகுதியில் வண்ணான்கேணி கிராம அலுவலர் (கே.என்.85) பிரிவில் A9 வீதியிலிருந்து இரண்டாவதாக அமைந்துள்ள **"இன்னாசி மணற்காடு"** என்னும் நி.பர.18 விஸ்தீரண ஆதனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு அலை இல -
**021 205 0802**

## வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் **பிரபல சுப்பர் மார்க்கட்டுக்கு 18 முதல் 25 வயதுக்கு உட்பட்ட ஆண்/ பெண் விற்பனை உதவியாளர்** உடன் தேவை. **கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**
மேலதிக தகவலுக்கு:- **077 477 3483**

## வேலையாள்கள் தேவை
கொக்குவிலில் இயங்கும் களஞ்சியசாலைக்கு தங்கி நின்று பொதி ஏற்றி இறக்கும் பணியாளர் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் உண்டு. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
**077 477 3483**

## மாடி வீடு வாடகைக்குண்டு
உயரப்புலம், ஆனைக்கோட்டையில் பிடாரி அம்மன் கோயில் அருகில் சகல நவீன வசதிகள் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு.
அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
077 136 3047

## நகைக்கடை தளபாடம் விற்பனைக்கு
**கண்ணாடி பிற்றிங் அலுமாரிகள்**
7 அடி உயரம் X 14 அடி நீளம் - 02 பிற்றிங்
7 அடி உயரம் X 04 அடி நீளம் - 02 பிற்றிங்
**விற்பனை மேசை (கவுன்டர்) - 02**
**076 618 0144** (ACH/432)(11,17)

## வேலையாள்கள் தேவை
K.K.S.**மாவிட்டபுரத்தில் இயங்கிவரும்**
**K.M.V.R மருந்துக்கடைக்கு**
வேலையாள்கள் தேவை.
(இருபாலாரும் விரும்பத்தக்கது.)
077 913 2049/ 021 224 3676

## பெயர் மாற்றம்
மன்னார் விடத்தல் தீவை வசிப்பிடமாகக் கொண்ட **சுதர்சன் ஸேபா** ஆகிய நான் எனது பெயரை **சுதர்சன் திவ்யா** என மாற்றம் செய்கின்றேன் எனவும் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **சுதர்சன் திவ்யா** என கையொப்பமிடுவேன் எனவும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
**சுதர்சன் திவ்யா**

## பணியாளர்கள் தேவை
யாழ். நகரில் இயங்கும் **சிறி நதியா நகைமாளிகை** நிறுவனத்துக்கு **ஆண், பெண் பணியாளர்கள் தேவை.**
வயதெல்லை 25 முதல் 40 வயதுவரை. பணியாளர்கள் தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். சுயவிவரக் கோவையை **06.08.2018** இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**சிறி நதியா நகைமாளிகை** (CS/18593)(11,17)
**இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## வீடு வாடகைக்குத் தேவை
கொக்குவில், தாவடி, கோண்டாவில் மற்றும் அதை அண்டிய பகுதிகளில் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
**078 545 0813** (CS/18577)(11,17)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
ஜேர்மன் சப்பேர்ட் (ஆண், பெண்) மூன்று மாதங்கள் நிறைந்தது. (CS/18580)(11,17)
**077 434 1551 (சங்கானை)**

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் 25/10 ஆம் இலக்கம் கொண்டதும், 2 குளி 7.20 விஸ்தீரணம் கொண்ட காணி உடனடியாக விற்பனைக்குண்டு. (CS/18503)(11)
**075 667 7654, 0033 7511 39540**

## வேலையாள்கள் தேவை
**யாழ் நகரிலுள்ள**
**பான்சி கடைக்கு**
**ஆண்** வேலையாள்கள் தேவை.
**077 858 0995**

## பணியாளர் தேவை
ஒப்செற் பிறிண்டிங் மெசின் மைண்டர் பழக விரும்புவோர் தேவை. **KORD** மெசின் மைண்டர் விரும்பத்தக்கது. பிறிண்டிங் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (CS/18547)(11,17)
**077 774 6855, 077 632 0491**

## புதிய கார் விற்பனைக்கு
**புத்தம் புதிய கார் (Suzuki zelerio ZXI Model), Nissan Avainor 1999 Model (1800 CC Full option)**
என்பன விற்பனைக்குண்டு.
**077 213 3988, 021 225 1199**

## உதவியாள்கள் தேவை
யாழில் இயங்கிவரும் **நிகழ்வு ஒழுங்கமைப்பு மற்றும் மேடை அலங்கரிப்பு** நிறுவனத்துக்கு உதவியாள்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். அடிப்படைச் **சம்பளம் 15,000 - 18,000 வரை.**
மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு.
**077 201 8833** (CS/18569)(11,17)

## சைக்கிள் விற்பனை
இங்கிலண்ட் றலி சைக்கிள் இரண்டு விற்பனைக்குண்டு.
**078 685 7291** (CS/18512)(11)

## சமையல் - பராமரிப்பு
பணிப்பெண், வெள்ளவத்தையில் வசிக்கும் அப்பா, அம்மா இருவர் மட்டும் உள்ள வீட்டில் தங்கி நின்று பணிபுரிய வட பகுதியர் தேவை. தனியார் வசதிகள் உண்டு.
**வயது 30 - 38.**
**சம்பளம் 25,000 - 28,000**
**076 225 6684** (ACO/293)(11,17)

## மணமகள் தேவை
யாழ்.கிறிஸ்தவ கௌரவ குடும்பம் 1984 பரணி நட்சத்திரம். Bsc பட்டதாரி ஆசிரிய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
Rc, இந்துக்கள் பரிசீலிக்கப்படும்
077 071 2304

## TONERS விற்பனைக்கு
HP/Epson/Canon/Lexmark மற்றும் சகல விதமான Comportable & Original Toners, Cartridge & Ribbons என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.
*Replacement warranty தரப்படும்.
85A-1200/= 35A-1200/=
12A-1200/= 78A-1200/=
36A-1200/=
**Ultra Stationers**
**No. 20/4, Bankshall Street, Colombo 11.**
**077 308 4336, 011 232 7187**

## தினமும் கொண்டாட்டம்
**விருந்தினர் விடுதி**
**யாழ். ஒடியல் கூழ் - 150/=**
**இந்தியன் தம் புரியாணி -250/=**
**மதிய / இரவு உணவு**
**பிறைற் றைஸ் / நூடில்ஸ்**
**பைட்ஸ்** மற்றும் மேலும் பல
**யாழ்பாடி**
**49/51, அம்மன் வீதி, நல்லூர்.**
**021 222 6868/075 987 5800**

## இலவச ஊடகப் பயிற்சிப் பட்டறை
ஊடகப்பெண்கள் குழுவின் ஏற்பாட்டில் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், ஊடகவியலாளர்களாக பணிபுரியும் பெண்கள் மற்றும் எதிர் காலத்தில் ஊடகத்துறையில் பணிபுரிய விரும்பும் பெண்களுக்கான இலவச ஊடகப் பயிற்சிப் பட்டறை

**காலம் : 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி - மாலை 4.00 மணி**
**இடம் : பண்பாட்டு மலர்ச்சிக்கூடம்**
**பழம் வீதி (பிள்ளையார் கோயில் அருகாமை), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**பதிவுகளுக்கு:** Jaaltharmini@gmail.com
Phone : 077 654 4158


அனுசரணை:
- **நியூரங்கனாஸ் ஹோம் பில்டர்ஸ், யாழ்ப்பாணம். (077 654 4158)**
- **நியூரங்கனாஸ் நகைமாடம் , மார்க்கம், கனடா (0016 4770 22 159)** (cs 8557) (13,17)

## வேலையாள்கள் தேவை
எமது நிறுவனத்திற்கு வெல்டிங் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். உணவு தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**தொடர்பு - 077 075 7602**

## Information & Communication Technology ( ICT)
**Classes for grade 10 & 11 are conducted (At Home)**
**தரம் 10 & 11 இற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
வகுப்புக்கள் (எமது இல்லத்தில்) நடைபெறுகின்றன.
**(English & Tamil Medium)**
**Contact us : No.5/8, Press Road, Jaffna.**
**T.P : 077 587 3948**
**ஆசிரியர் - Jean Thomas**
**(HNDIT, BSc in com.Sci)**

## வீடு, வளவு விற்பனைக்கு உண்டு
சிவபூமி அறக்கட்டளைக்குச் சொந்தமான மாதகல் வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு.
**மேலதிக விவரங்கள் :- மாதகல் கிழக்கு, மாதகல்** என்னும் முகவரியில் அமைந்துள்ள வீட்டில் வசிக்கும் **கலாநிதி ச.கனகசபை** அவர்களை நேரில் சந்தித்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (CS/18495)(11)
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்


## சுப்பர் மார்க்கட்டுக்கு பணியாளர் தேவை
கொழும்பில் இயங்கும் பிரபல சுப்பர் மார்க்கட்டுக்கு 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட ஆண்/ பெண் பணியாளர்கள் உடன் தேவை. 30,000/= ரூபா சம்பளம் வழங்கப்படும். பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு.
மேலதிக விவரங்களுக்கு **077 477 3481** (IN/7354)(10)

## விசேட ஆடித் தள்ளுபடி !!!

மாதாந்த தவணை கட்டணம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
**Discount 5,000/= to 50,000/=**
Until 30th Aug 2018
We Accepted MasterCard VISA

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**


உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.
**Water Softener System**
Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**


வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

**நீச்சல் தடா[illegible] வடிவமைப்பு**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.

**நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.**

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna. | 021 222 6888, 021 567 7567 | 077 362 6230

# தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஹோட்டலுக்குக் கீழ்க் காணும் பதவிகளுக்கு அனுபவமும் ஆற்றலுமுடையவர்களிடம் இருந்து பாஸ்போட் அளவு படத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வரவேற்பாளர் - ஆண்
ஆங்கில மொழியிலும், சிங்கள மொழியிலும் சரளமாக பேசத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. இரவு நேரம் பணியாற்றக் கூடியவர்கள் விண்ணப்பிக்கவும்.

02. உணவு பரிமாறுபவர்கள் - ஆண்
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

03. கொள்வனவாளர் - ஆண்
கொள்வனவுத் துறையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-**

**விளம்பர இலக்கம் : 1003**
**மே/பா - உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/18582)(10)

## கோப்பாய் கோவையம்பதி பலானை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயம் பூங்காவனத் திருவிழா - 29.07.2018

நண்பகல் 12.00 மணிக்கு அபிஷேகப் பூசைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பி.ப. 2.00 மணியளவில் அம்பிகை பூங்காவில் எழுந்தருளி விசேட பூசைகள் இடம்பெற்று பிற்பகல் 3.30 மணியளவில் விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெற்று இரவு 7.00 மணியளவில் அம்பிகை பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதியுலா வந்தருளும் திருக்காட்சி காணவாரீர்.


### தவில் நாதஸ்வர கலைஞர்கள் விவரம்

- அளவையூர் தவில் வித்துவான் **தட்சணாமூர்த்தி** அவர்களின் புதல்வர் **உதயசங்கர் குழுவினர்**
- அள்வையூர் நாதஸ்வர வித்துவான் **எஸ்.சிதம்பரநாதன்** அவர்கள்
- ஈழ நல்லூர் நாதஸ்வர வித்துவான் **P. ரஜேந்திரன்** குழுவினர்
- கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் **K.P. குமரன்** குழுவினர்
- தாவடி நாதஸ்வர வித்துவான் **K.நாகதீபன்** குழுவினர்
- ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான் **K.S. கண்ணன்** அவர்கள்
- வட்டூர் **K.N. இராமநாதன்** அவர்களின் புதல்வர்கள் **சீலன்** குழுவினர்
- சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் **M.பஞ்சாபிகேஷன்** அவர்களின் பேரர்கள் **V.சித்தார்த்தன், V.பிரதித்தன்**
- இவர்களுடன் இந்திய தவில் நாதஸ்வரக் கலைஞர்களும் கலந்து சிறப்பிப் பார்கள்.

**தகவல்:- திரு.சு.கந்தசாமி**

(CS/18591)(11,17)

## மரண அறிவித்தல்



# பத்மநாதன் டினேஸ்

*(ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம் - வவுனியா தெற்கு வலயம்)*

யாழ்ப்பாணம் இனுவிலைப் பிறப்பிடமாகவும், இல.15/1, 3ஆம் கட்டை, நெலுக்குளம், வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் டினேஸ் 27.07.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதன் - சரோஜினி தம்பதியின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் சரஸ்வதி தம்பதியின் அன்பு மருமகனும், செல்வராணியின் (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம்) அன்புக் கணவரும், பார்கவியின் அன்புத் தந்தையும், யசோதா (ஆசிரியர் - CCTMS - வவுனியா), ஜெனிதா (ஆசிரியர் - சைவபிரகாச ஆரம்ப பாடசாலை - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லையா, நிலான் (ஆசிரியர் - CCTMS - வவுனியா), பத்மநிதி (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஸ்னுஜன், எரிக் ஷா, ஜெனிக் ஷா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெலுக்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நெலுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(in 7349) (13)

**தகவல்: குடும்பத்தினர்.**

**024 222 4808**

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் ஸ்ரீனிவாசன் ஜெயசீலன்

கண் மகிழ
06.10.1983

மண் நெகிழ
14.06.2018

மாதங்கள் ஒன்றல்ல யுகங்கள் பல சென்றாலும் மறவாது
உன் பசுமையான நினைவுகள் நித்தமும் பெற்றவள்
கலங்கித் துடிக்கிறாள் நீயில்லா எமது வீடு ஒளியிழந்து போனதடா
உன் அப்பாவை விட்டு எம் இளங்குயிலே
எங்கு சென்றாயோ? பார்க்கும் இடமெல்லாம் உன்
நினைவுகள் நிழலாடுதடா எம் பாச மகனே....

செல்வா வாசிகசாலையடி,
கைதடி வடக்கு, கைதடி.
077 358 9211

(CS/18576)(11,17)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர் (மாமனார்)

## மரண அறிவித்தல்



மலர்வு
31.08.1934

உதிர்வு
27.07.2018

# திருமதி கமலாம்பிகை கணேசவேல்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கரப்பன்காடு வவுனியா, யாழ்ப்பாணம், நல்லூரினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கணேசவேல் கடந்த (27.07.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இளையபிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம் வடிவாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணேசவேலின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கீதா, ஜெயகாந்தன், உஷா, உமா, முரளிதரன், ஹரிதரன், ஜீவகாந்தன், லெனின்காந்தன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற வர்களான நீலமேகநாதன், சுதந்திரராசா, சாந்தாதேவி மற்றும் தாரணி, தில்லைநாதன், மரினா, ஜெயராணி, வலரி ஆகியோரின் அன்புமாமியும் ஸ்ரீசிவஜோதி, ஜெயசுதன், கோபாலரூபன், கோகுலராஜி, ஆர்த்தி, அபிராமி, சௌந்தர்யா, சிந்துரேகா, உமாகாந்தன், லக்ஷ்மிகரன், துவாரகன், கிருத்திகா, பிரசன்னா, பிரதர்சன், கஜேந்தி, மிஷெல், எனாஸ், ஷாலினி, ஷஜீவன், எம்மா, ரிபேக்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் டானியன், ரூபிகா, டினேகா, ரொசானா, இவானா, பூரணி, ஜனார்த்தன், அஸ்வின், ருஜென், ஓஜென், கேஜென், டஜென், துளிகா, சர்ஜீன், சாந்தி, அமாரோ, இலாய், கியான் லொவைன், ஜதுர்ஷி, டிலக்ஷி, மித்ருதா, லியானா, ரெஹானா, ரிச்சாட் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2018) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 15/2, அரச வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**077 033 4615, 076 400 1025**

**தகவல்: குடும்பத்தினர்.**

# ‘அக்குபஞ்சர்’

## சிகிச்சை முறை, பயன் தொடர்பில் அறிந்துகொள்ளுதல்

சஜினி லோகநாதன்

**தோற்றமும் வரலாறும்**
ஏனைய மருத்துவ நடைமுறைகளைப் போன்று அக்குபஞ்சர் முற்றிலும் வித்தியாசமான பக்கவிளைவுகள் அற்ற மருத்துவ முறைமையாகப் பின்பற்றப்படுகிறது. இதனுடைய ஆரம்பங்களை சீனாவில் கண்டுகொள்ளலாம். ஆனாலும் இன்று உலக முழுமையும் பரவி பிரசித்தி பெற்றுள்ளது. இந்த மருத்துவ முறையில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ஊசி நோயாளியின் தோலில் சில மில்லி மீற்றர் ஆழம்வரை செலுத்தப்படும். சில நிமிடங்களில் தோலில் இருந்து அகற்றப்படும்.

**அடிப்படைத் தத்துவம்**
**பஞ்சபூதக் கோட்பாடு** (Fire element theory)
‘நெருப்பு, மண், உலோகம், நீர், மரம்’ போன்றன முறையே ‘சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, பச்சை’ நிறங்களை கொண்டுள்ளன.


| பஞ்ச பூதங்கள் | உடல் உறுப்புகள் | நிறம் |
|---|---|---|
| நெருப்பு | இருதயம், சிறுகுடல், இனப்பெருக்க உறுப்புக்கள் | சிவப்பு |
| மண் | இரைப்பை, மண்ணீரல் | மஞ்சள் |
| உலோகம் | பெருங்குடல், நுரையீரல் | வெள்ளை |
| நீர் | சிறுநீர்ப்பை, சிறுநீரகம் | கறுப்பு |
| மரம் | பித்தப்பை, ஈரல் | பச்சை |


மனிதன் வாழ்வதற்கு உயிர் வேண்டும். அந்த உயிர்ச்சக்தியை சீனர்கள் ‘குயி’ என்கிறார்கள். இந்தச் சக்தி சுவாசிப்பதன் மூலமும் உணவை உட்கொள்வதன் மூலமும் உற்பத்தி செய்யப்படுகிறது. அண்டத்தில் இருந்து கிடைக்கின்ற சக்தியையும் உணவு மற்றும் நீரில் இருந்து கிடைக்கின்ற சக்தியையும் ஒன்று சேர்த்தே ‘குயி’ எனக் குறிப்பிடுகின்றனர்.
இந்த சக்தியானது குறிப்பிட்ட முறையில் அக்குபஞ்சர் புள்ளிகளினூடாக உடல்முழுமையுமாக விநியோகிக்கப்படுகின்றது. இந்தச் சக்தி மனித உடலில் நிலைத்திருப்பதில்லை. குருதியைப் போன்று உடலெங்கும் தங்குதடையின்றி தொடர்ந்து குறிப்பிட்ட பாதைகளில் சுற்றிவருகின்றது. இந்தப் பாதைகளை ‘சனல்’ என்று குறிப்பிடுவர். உடலின் மேற்பகுதியில் 3சோடி ‘சனல்’ காணப்படுகின்றது. அவ்வாறே உடலின் கீழ் பகுதியில் 3சோடி ‘சனல்’ காணப்படுகிறது. இவை தவிர உடலின் முற்புறத்தில் ஒன்றும், பிற்புறத்தில் ஒன்றும் ஆக மொத்தமாக 14 ‘சனல்’ காணப்படுகின்றது. இவை அனைத்தும் அக்குபஞ்சர் புள்ளிகளைக் கொண்டுள்ளன.

**அக்குபஞ்சர் புள்ளிகளை இனங்காணுதல்**
அக்குபஞ்சர் புள்ளிகளை கண்டுபிடிக்க ‘Accupunctoscope’ எனும் கருவி பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் அக்குபஞ்சர் புள்ளிகளை விரைவாக கிளர்ச்சி அடையச் செய்ய ‘எலக்றிக் ஸ்ரிமியூலர்’ எனும் மின்கருவியும் ‘லேசர்’ சக்தி கதிர்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**நோய்கள் எப்போது ஏற்படும்**
பொதுவாக உடல் ஆரோக்கியத்தை எடுத்துக் கொண்டால் உடலின் வெளிப்பாகத்துக்கும் உட்பாகத்துக்கும் இடையே சமநிலை இருந்து கொண்டே இருக்கிறது. சீனர்கள் உடலின் வெளிப்பாகத்தை ‘Yang’ என்றும் உட்பாகத்தை ‘yin’ என்றும் குறிப்பிடுகின்றனர். இவை இரண்டுக்கும் இடையே ஏற்படுகின்ற குழப்ப சூழ்நிலை காரணமாகவே உடலில் நோய் ஏற்படுகிறது.

**அக்குபஞ்சர் மருத்துவத்தின் அடிப்படை**
எந்த உறுப்பு தன் செயற்றிறனை இழக்கின்றதோ அந்த உறுப்பின் செயற்றிறனை பழைய நிலமைக்கு உயர்த்தி நோயைக் குணப்படுத்துவதே அக்குபஞ்சர் மருத்துவத்தின் அடிப்படையாக சொல்லப்படுகிறது. இதற்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஊசிகள் பயன்கொள்ளப்படுகின்றன.






**ஊசிகளின் பயன்பாடு**
சிகிச்சை முறையில் ஊசிகள், அழுத்தும் ஊசிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தங்கம், வெள்ளி, எஃகு போன்றவற்றால் தயாரிக்கப்படுகின்றன. சாதாரணமாக அக்குபஞ்சர் சிகிச்சை ஊசி ஒரு கைப்பிடி மற்றும் ஒரு கப்பி ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும். பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஊசி 7.5 சென்ரி மீற்றர் அளவுடையதாகவும் 30 காஜ் விட்டம் கொண்டதாகவும் இருக்கும். அக்குபஞ்சர் ஊசிகள் 1.25 சென்ரி மீற்றர் தொடக்கம் 15.25 சென்ரி மீற்றர் நீளம்வரை காணப்படும்.
குறிப்பாக இந்த ஊசிகளில் மருந்து ஏற்றப்படுவதில்லை. மாறாக குறிப்பிட்ட அக்குபஞ்சர் புள்ளிகளில் ஊசிகளை ஏற்றி 20 நிமிடங்களின் பின்பு அவை அகற்றப்படும். அழுத்தும் ஊசிகள் குறிப்பிட்ட அக்குபஞ்சர் புள்ளியில் வைத்து அழுத்தப்பட்டு 3 தொடக்கம் 5 நாள்கள் வரை அப்படியே இருக்கும்.

**பாவிக்கும் முறை**
வளைந்த துருப்பிடித்த ஊசிகளை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. ஊசிகளை வெந்நீரில் அவித்து நன்கு காயவைத்துப் பயன்படுத்தலாம். ஊசிகளைக் காயப்பட்ட இடத்திலோ அல்லது குருதிக்குழாய் உள்ள இடத்திலோ அல்லது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நரம்புகள் காணப்படுகின்ற இடத்திலோ குத்தக் கூடாது.

**அக்குபஞ்சர் மூலம் நோய் குணமடைதல்**
உதாரணமாக எமக்கு காயங்கள் ஏற்படுகின்ற போது அதற்குரிய தகவலை தசை நார்கள் மின்னல் வேகத்தில் மூளைக்கு எடுத்துச் செல்கின்றன. பின்பு மூளையின் கட்டளைப்படி நாம் வலியை உணர ஆரம்பிக்கிறோம்.
அக்குபஞ்சர் சிகிச்சை அளிக்கும் போது உணர்ச்சி நரம்புகள் சாதாரண நிலையைவிடவும் மிக வேகமாக தகவலை மூளைக்கு எடுத்துச் செல்வதால் மூளைக்குச் செல்லும் கட்டுப்பாட்டுப் பாதையின் கதவு மூடப்பட்டு விடுகிறது. உணர்ச்சி நரம்புகள், தசை நார்களை விடவும் வேகமாக பயணம் செய்யக்கூடியவை. எனவே தசைநார்கள் மூலம் எடுத்துவரப்படும் தகவல்கள் மூளைக்குச் செல்லாது இந்த உணர்ச்சிக் கட்டுப்பாட்டு மையத்தை அடையமுடிவதில்லை. எனவே அங்கு செல்லாத எந்த உணர்வுகளையும் உடல் உணர்வதில்லை. வலியும் தெரியாது.

**எவ்வாறான நோய்களைக் குணப்படுத்தலாம்**
பொதுவாக எவ்வகையான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இருந்த போதிலும் வலியோடு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு விரைவில் தீர்வுகிடைக்கும்.

**சிகிச்சைக் காலம்**
பொதுவாக நோயின் தன்மை, நோயாளியின் உடல் நிலை, உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தி போன்றவற்றை கருத்தில் கொண்டு சிகிச்சைக் காலம் மாறுபடும். பொதுவாக குறைவான காலமாக தொல்லை கொடுக்கும் நோய்களுக்கு 7முறை சிகிச்சை அளிப்பதன் மூலம் குணமாக்கலாம். அதேபோன்று நீண்டகாலமாகத் தொல்லை கொடுக்கும் நோய் அறிகுறிகளுக்கு ஏழுக்கும் அதிகமான தடவைகள் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

**சிகிச்சை நேரம்**
காலைப் பொழுதில் அதிகாலை 4 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரையும், மாலைப் பொழுதில் பிற்பகல் 4 மணி தொடக்கம் முன்னிரவு 9 மணிவரையும் சிகிச்சை மேற்கொள்ளல் பயனுடையது.

**சிகிச்சையில் ஏற்படும் இடர்பாடுகள்**
- ஊசி குற்றிய இடத்தில் இருந்து வலி நீடித்திருத்தல்.
- அதிக குருதி வெளியேற்றம்.
- நோயாளி மயக்கம் அடைதல்.
- கிருமித் தொற்று.
- முக்கிய உறுப்புக்கள் காயப்படுதல்.
- சில சந்தர்ப்பங்களில் சிகிச்சை ஊசி உடைந்து போதல்.
- பெண்கள் கருவுற்றிருக்கும் போது கருச்சிதைவு ஏற்படலாம்.

*கட்டுரையாளர்: சிரேஷ்ட மருத்துவர், ஊனாவை மருத்துவமனை.*

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் கிறீஸ் பூதங்களா?

கொலைகள், கொள்ளைகள், பாலியல் கொடுமைகள், வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடிகள் எல்லாம் தாண்டி இப்போது வீடுகளின் மீதும் பெண்கள், குழந்தைகள் மீதும் கல்லெறிந்துவிட்டு ஓடும் குள்ளர்களும் வந்துவிட்டார்கள். சில வருடங்களுக்கு முன்னரும் இதே போன்றதொரு நிலமை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளுக்கும் அது பரவியிருந்தது. "கிறீஸ் பூதம்" என்ற பெயரால் அழைக்கப்பட்ட அந்தச் சம்பவமும் இதுபோன்றதொன்றாகவே அமைந்தது.

"கிறீஸ் பூதம்" என்பது உண்மையா, அப்படியொன்று இருப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளனவா என்பதையெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு, அந்தக் கதை ஏற்படுத்திய அச்சம் மற்றும் பீதி, உண்மை என்பதை ஏற்றாகவேண்டும். இந்த அச்சத்தையும் பீதியையும் சிலர் பயன்படுத்திக்கொண்டனர் என்பதையும் ஏற்றுக்கொண்டுதானாகவேண்டும். இது போன்ற சூழ்நிலைகள் திருடர்கள், கொள்ளையர்களுக்கும் சாதகமாக அமைந்திருக்கின்றன.

"கிறீஸ்" பூத விவகாரம் நாவாந்துறைக் கிராம மக்களை அடித்து, உதைத்து, முறித்து ஒரு அரச அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் அளவிற்கும் சென்றதை மறந்துவிட முடியாது. "கிறீஸ்" பூதம் என்று கருதப்பட்டவர்கள் பெண்களைத் தாக்கிவிட்டு அருகில் இருந்த இராணுவக் காவலரணுக்குள் ஓடிச் சென்றுவிட்டார்கள் என்று குற்றஞ்சாட்டிய நாவாந்துறை மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து அந்தக் கிராமம் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டு, வெளியிலிருந்து மக்கள் பிரதிநிதிகளைக்கூட உள்ளே செல்ல அனுமதிக்காமல் அதிகாலை நேரத்தில் வீடு வீடாகச் சென்று மக்கள் தாக்கி முறிக்கப்பட்டார்கள்.

இராணுவத்தினருக்கு அல்லது பொலிஸாருக்கு அல்லது அரச அதிகாரத்துக்கு எதிராக எவராவது குரல் கொடுத்தால் ஒட்டுமொத்தக் கிராமத்துக்கும் தண்டனை வழங்கப்படும் என்ற செய்தியைச் சொல்லுவதைப் போன்று நடத்தப்பட்டது இந்தத் தாக்குதல். அது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை .பதிலாக தாக்குதலை நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு சிறப்புப் பரிசுகளும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன.

மரத்துக்கு மரம் தாவும் குள்ளர்களால் பெண்கள், குழந்தைகள் மீதும் வீடுகள் மீதும் தொடர்ச்சியாகக் கல்லெறித் தாக்குதல் நடத்தப்படுகின்றது என்று அராலி மக்கள் முறையிடுகிறார்கள். கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து வந்த இந்தப் பிரச்சினை நேற்றுமுன்தினம் இரவு பதற்றத்தை உருவாக்குமளவுக்கு அதிகரித்துள்ளது. மீண்டும் ஒரு "கிறீஸ் பூதம்" வருவதற்கான முன்னறிவிப்பா இது என்று அச்சப்படவேண்டியுமுள்ளது.

முதலில் தொடர்ச்சியான சில திருட்டுக்கள், பின்னர் நடுங்க வைக்கும் வகையிலான கொள்ளைகள், அதன் பின்னர் பயங்கரத்தை உருவாக்கும் வகையிலான பாலியல் கொடுமைகளையும் சேர்த்த கொள்ளைகள், அதற்கும் பின்னர் பாலியல் வன்கொடுமைகள், அதற்கும் பின்னர் வாள்வெட்டுக் குழுக்களின் துணிச்சலான அட்டகாசங்கள், அட்டூழியங்கள், கடைசியில் பூதங்கள் என்கிற இந்த வடிவமே முதலிலும் யாழ்ப்பாணத்தை அச்சுறுத்தியது என்று சொன்னால் மிகையாகாது.

அத்தகைய சில அச்சுறுத்தும் கொள்ளைகளில் இராணுவத்தைச் சேர்ந்த சிலருக்கும் தொடர்புகள் இருந்தன என்பது நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, உரிய தரப்புகள் அனைத்தும் இணைந்து, அதிலும் குறிப்பாக அரசியல் தலைமைகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெறும் சூழல்கள் மீண்டும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் தோன்றுவது எதனால், இவற்றின் பின்னணி என்ன என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்வதுடன் அதற்கான தீர்வையும் கண்டுபிடிக்க வேண்டும்.

குற்றங்கள் வேறு, உள்நோக்கத்துடனும், நீண்ட திட்டமிடலுடனும் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் வேறு. மக்களும் தலைவர்களும் விழிப்பாக இல்லாதவரையில், இரண்டாவது வகைக் குற்றங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது கடினமானது. எனவே நாவாந்துறை போன்ற மற்றொரு சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னதாக தேவையான நடவடிக்கைகளை சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பவர்களும், அரசியல் தலைவர்களும் இணைந்து எடுக்க வேண்டும்.

# எலும்புக்கூடுகளும் தமிழர் தாயகமும்



கு.மதுசூதன்

இப்போதெல்லாம் வடக்கு - கிழக்கில் புதையல் தோண்டும் நடவடிக்கைகள் தனியார் தரப்பினராலும், கொள்ளைக்காரர்களாலும், ஏன் இராணுவத்தினராலும்கூட மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதன் மூலமான கைதுகள் , புதையல் இருக்கும் இடத்தைக் கண்டறியும் அதி நவீன உபகரண பறிமுதல் உத்தரவுகள் என எல்லாமே பரபரப்புச் செய்திகளாக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.


இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக, இப்போது வடக்கு கிழக்கில் புதையல் தோண்டும்போது புதையல் கிடைக்கிறதோ இல்லையோ, ஆனால் மனித உடல் எச்சங்களும், எலும்புகூடுகளும் அதிக அளவில் வெளியே தலைகாட்டுகின்றன.

அண்மையில் மன்னார், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன வளாகத்தில் (ச.தொ.ச) கட்டட விரிவாக்கத்திற்காக நிலம் தோண்டப்பட்டபோது, மனித எலும்புக்கூடுகள் வெளிவர ஆரம்பித்தன. அது நீதித்துறைக்கு பாரப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் மேற்பார்வையில் தொடர்ந்தும் அதே இடத்தில் அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இன்னும் மனித உடல் எச்சங்கள் வெளிவருவது நின்றபாடாகத் தெரியவில்லை.

### பகுப்பாய்வுக்காக அனுப்பப்படவுள்ள மன்னார் புதைகுழி எச்சங்கள்

கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வுப் பணிகளின் போது, பல மனித எலும்புக்கூடுகள் தென்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தக் கட்டுரை எழுதப்பட்டவேளை வரை, மன்னார் நீதிமன்றத்தில் 52 பெட்டகங்களில் மனித உடல் எச்சங்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இது சர்வசாதாரணமாகக் கருதிக் கைவிட்டுக் கடந்து போகக்கூடியதொரு விடயமுமல்ல.

இந்த உடல் எச்சங்கள் பகுப்பாய்வுக்காக கொழும்பு



பலகலைக்கழகத்துக்கு அனுப்பப்பட இருக்கின்றன. அந்தப் பகுப்பாய்வு முடிவுகள் கிடைத்ததன் பின்னரே இந்த எலும்புக்கூடுகள் பற்றிய மர்ம முடிச்சுக்கள் அவிழும்.

குறித்தமனித உடல் எச்சங்களை ஆய்வுசெய்வதன் மூலம் அவற்றின் வயது , அவை புதைக்கப்பட்ட காலம், நிகழ்ந்த சம்பவம், இறந்த அல்லது கொல்லப்பட்ட காரணங்கள் எல்லாம் வெளிச்சத்துக்கு வரும். சில நேரங்களில் இந்த எச்சங்கள் குறித்த விவரங்கள் வெளிச்சத்துக்கு வராது தடுக்கப்படவும் கூடும். பகுப்பாய்வு அறிக்கை வெளிவர ம்ன்னரே, அந்த எச்சங்கள் சம்பந்தமாக என்ன நிகழ்ந்திருக்கலாம் என அலசி ஆராய்வதே இந்தக்கட்டுரையின் நோக்கமாகும்.

மன்னார் எனப்படுவது வடக்கின் தமிழர் தாயகப் பரப்பாகும். இந்த மாவட்டமும், கடந்த போர் இடம் பெற்ற காலத்தில் பல வடுக்களையும், நேரடி, மறைமுக போர்களுக்கு முகம் கொடுத்த பகுதியாகும். எனவே அதன் விளைவுகளின் அறுவடையாகக் கூட இந்த மனித உடல் எச்சங்கள் அமையலாம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இன்று 500 நாள்களையும் கடந்து சென்று கொண்டிருக்கும் சமாந்தர காலப்பகுதியில், இந்த மனிதப் புதைகுழி எச்சங்கள் வெளிவந்திருப்பது, காலத்தின் தன்னாக்க வெளிப்படுத்துகையோ அல்லது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கான நீதியின் விடையாகவோ கூட அமையலாம்.

போர் இடம்பெற்ற காலத்தில் பல தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்திருக்கிறார்கள், போர் முடிவடைந்த காலப்பகுதியில்கூட, பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று காணாமல் ஆக்கப்டோரைக் கண்டறியும் ஆணைக்குழு கூடத் தகவல் வெளியிட்டிருக்கிறது. அத்தோடு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்களில் கலந்துகொள்கின்ற உறவினர்களினால் காண்பிக்கப்படுகின்ற ஒளிப்படங்கள் கூட ஏராளமானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதுக்கு சான்றாக அல்லது சிறந்த மாதிரியொன்றாக (சாம்பிளாக) அமைகிறது. இந்த அகழ்வுப் பணியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகூடுகள் அதற்கான விடைகளை அல்லது அது யாராக இருக்கும் என்ற விடையை மரபணுச் சோதனைகள் மூலம் தந்துவிடலாம்.

### இரு மனித எலும்புக்கூடுகள் ஒன்றையொன்று பற்றிப் பிடித்த நிலையில்...

அத்தோடு மட்டுமல்லாது, கடைசியாக மன்னார் அகழ்வின் போது ஒரு குழிக்குள் இரு மனித எலும்புக்கூடுகள் ஒன்றை ஒன்று பற்றிப் பிடித்த நிலையில் தோற்றமளித்ததாக ஒளிப்பட ஆதாரங்களுடன் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த எலும்புக்கூட்டை நிதானமாக ஆழமாக அவதானித்தால் அதிலும் ஏதோ ஒரு விடயம் புலப்பட்டு வெளிப்படுகிறது., அந்த எலும்புக்கூட்டின் தலைப்பகுதி ஏதோ ஒன்றை வெளியுலக்குக்குச் சொல்ல எத்தனிக்கிறது போலிருக்கிறது.

அந்த எலும்புக்கூட்டை உற்றுப்பார்க்கும்போது, தலைப்பகுதியானது ஒரு கோணத்தினூடாக பார்த்து குரலெடுத்துக் கதறுவது போல தோற்றமளிக்கிறது. அதுவும் அது இன்னொருவரோடு இணைக்கப்பட்டும் காணப்படுகிறது.



**மன்னார் புதைகுழி விவகாரத்தில் வெளியாகும் பலதரப்பட்ட ஊகங்கள்**


இதன் மர்மம் என்னவென வெளிப்படுத்தப்பட்டே ஆக வேண்டும். ஒருவேளை துன்புறுத்தப்பட்டு கதறிய நிலையில் கொலை செய்யப்பட்டிருக்கலாம். அல்லது பலர் கைகள் கயிறுகளால் பிணைக்கப்பட்டு கூட்டாகக் கொல்லப்பட்டிருக்கக்கூட வாய்ப்பிருக்கலாம். அல்லது குற்றுயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம், என ஊகங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இது மனிதப் படுகொலையின் உச்ச விளிம்பு நிகழ்வுகளாகக்கூட அமைந்திருக்கலாம். அல்லது அவற்றின் பகுப்பாய்வு முடிவுகள் அண்மைய காலச் சம்பவமாக அல்லாது 200 முதல் 500 வரையான வருடங்களுக்கு முற்பட்டதாகக் கூட இருக்கலாம் என்பதும் வியப்புக்கு உரியதொன்றல்ல.

ஏனெனில், இலங்கை தீவு அந்நியர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் ஆளுகைக்கு உள்ளாகியிருந்தபோது கரையோரப் பிரதேசங்களே அந்த அன்னியர்களது முதலாளுகைக்கும், இராச்சிய நடவடிக்கைகளுக்கும் உள்ளாகியிருந்தமை வரலாற்றுப் பதிவுகள்.

மன்னார் பகுதியானது, இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களையும் கோட்டைகளையும் கொண்டிருந்தது. இந்த ஆளுகை போராட்ட சூழல்களில் கைதிகள், புரட்சி செய்தோர், படையெடுப்புக்களில் கொல்லப்பட்டோர், குற்றச் செயல்களுக்காக கொல்லப்பட்டோர் இவ்வாறு புதைக்கப்ப ட்டுமிருக்கலாம். அவற்றின் எச்சங்களாகக்கூட இவை அமையலாம், இத்தகைய ஊடகங்களுக்கெல்லாம், அந்த உடல் எச்சங்களின் பகுப்பாய்வின் மூலம், எலும்புக்கூடுகள் மண்ணில் புதையுண்டிருந்த கால இடைவெளியே விடையளிக்கப் போகிறது.

இது போன்றதொரு நிகழ்வாக அண்மையில் உக்ரைன் நாட்டில் கல்லறையொன்றில் கண்டெடுக்கப்பட்ட இணைந்த நிலையான மனித எலும்புக்கூடொன்று உலகத்தின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்திருந்தது.



**சடலங்கள் புதைக்கப்பட்ட காலத்தை பகுப்பாய்வு முடிவுகள் உறுதிசெய்தால் பல மர்மங்களுக்கு விடை கிட்டும்**

அந்த எலும்புக்கூடுகள் ஆணும் பெண்ணும் இணைந்தவாறான நிலையில் காணப்பட்டன, அது 3000 ஆண்டுகள் பழமையான எலும்புக்கூடுகள். அதில் ஆண் எலும்புக்கூடொன்றுடன் பெண் மிக பாசமாக, இயல்பாக இருப்பது போலத் தோன்றுகிறது.

அந்த எலும்புக்கூடுகளை ஆராய்ச்சி செய்த உக்ரைன் நாட்டு தொல்லியல் ஆராய்சியாளர்களது கருத்துப்படி, எலும்புக்கூடுகள் இருக்கும் நிலையை நோக்கும்போது, கணவன் மனைவியுடைய எலும்புக்கூடுகள் என்றும், இரண்டும் இறந்த பின்னர் ஒன்றாகப் புதைக்கப்படவில்லை என்றும், அதில் சாவின் பின் இயல்பாக புதைப்பது போன்று புதைக்கப்படவில்லை என்று தோன்றுவதாகவும், கணவன் இறந்த பின் உயிர்வாழ மனமில்லாத நிலையில் கணவன் மீது கொண்ட அன்பு காரணமாக மனைவியானவள் அடுத்த பிறவியில் தனது அந்தக் கணவனுடன் சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்தில், மெல்லச் சாகடிக்கும் விசத்தை அருந்திய பின்னர் கணவனின் உடலுக்கு அருகில் படுத்து, அவரது தலைக்கு கீழாக வலது கையை வைத்து கட்டியணைத்து, கணவனின் முகத்துடன் தனது முகத்தைச் சாய்த்து தனது கால்களிரண்டையும் கணவன் கால்களின் மீது போட்டு, இடது கையை அவரது மார்பு மீது வைத்தவாறு , இயல்பாக, விசத்தின் வீரியத்தால் மயக்கமடைந்து உயிர் துறந்திருக்கிறார் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருந்தனர்.

அந்த பெண்ணே இத்தகைய முடிவை விரும்பி மேற்கொண்டுள்ளார் என்றும், இறப்பின் பின்னர் இப்படியான இயல்பான உடல்களின் நெருக்கத்தை ஏற்படுத்திப் புதைப்பது இயலாத காரியம் என்றும் உக்ரைன் நாட்டு தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுவதோடு, குறித்த அந்தப் பெண் தனது கணவன்மீது கொண்டிருந்த பாசத்தை எண்ணித் தாம் மெய்சிலிர்ப்பதாகவும் கூறி யுள்ளனர். இந்தச்சம்பவம், உண்மைக் காதலுக்கு ஒரு சான்றாக இருப்பினும், இங்கு ஏன் இது குறித்து குறிப்பிட நேர்கிறதென்றால் , ஒரு எலும்புக்கூடு இருக்கும் நிலையை வைத்து குறித்த அந்த ஆணினதோ அல்லது பெண்ணினதோ இறப்புப் பற்றியும், இறக்கும் போதான சூழல் அமைவுகள் பற்றியும், குறித்த எலும்புக்கூட்டுக்குரிய நபரோ, பெண்மணியோ இறந்த காலம், நேரம், வயது, ஆணா அல்லது பெண்ணா அல்லது கர்ப்பவதியா, கன்னியா , என்ன இனம் , என்ன மொழி பேசினார்கள் என்பனவற்றைக் கண்டறியும் நவீன விஞ்ஞான யுகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**மர்மங்கள் என்றோ ஒரு நாள் துலங்கியே ஆகும்**

இதை ஏன் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளதெனில், மன்னார் புதைகுழியில் சிக்கிய எலும்புக்கூட்டின் முகபாவம் பல செய்திகளைச் சொல்கிறது. அதனுடன் இன்னொரு எலும்புக்கூடு இயல்பாக பிணைந்திருக்கிறது அல்லது பற்றிப்பிடித்திருக்கிறது. இந்நிலைகளை வைத்து முடிவுகளை நாம் எடுக்கலாம். அவை பல்வேறு வகைப்பட்ட ஊடகங்களின் முடிவில் மேற்கொள்ளப்படக்கூடும். ஆனால் இந்த எலும்புகூடுகள் உண்மையான பகுப்பாய்வுக்கு உட்பத்தப்படும்போது அது எந்த ஆண்டுக்குரியது? அவற்றுக்குரிய ஆண் அல்லது பெண், இறந்த ஆண்டு, இறக்கும் போது அவர்களது வயது, குண்டடி பட்டு இறந்துள்ளனரா? எலும்புகளில் உடைவுகள் உள்ளனவா? உடைவுகள், இறப்புக்கு சற்று முன் சித்திரவதையின்போது ஏற்படுத்தப்பட்டவையா? சம்பவம் எவருடைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றுள்ளது? அதன் மரபணுச் சோதனை மூலத்தை அறிந்தால், அவை எவருடைய, எவர்களுடைய உறவினர் அல்லது மகன் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் மரபணு மாதிரிகளுடன் ஒப்பிட்டு தீர்க்கமான விஞ்ஞான உண்மைகளின் அடிப்படையில் முடிவுகளை எட்ட முடியும்.

இத்தகையதொரு முடிவை எட்டுவதற்கு முதலில் பகுப்பாய்வு முடிவுகள் உண்மையாக இருக்க வேண்டும், உண்மையாக இருந்தாலும், அது அரசியல் அல்லது வேறு தலையீடுகள், தடைகளின்றி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

எனவே புதைகுழிகளில் இத்தனை காலமும் மறைந்து போயிருந்த மர்மங்கள் துலங்கும்காலம் வெகு தொலைவில் இல்லை. ஆனால் உண்மை உறுதிப்படுத்தப்படவேண்டியிருந்தால், குறித்த மனித உடல் எச்சங்கள் குறித்த பகுப்பாய்வுகள் நேர்மையானவிதத்தில், பக்கச்சார்பற்ற வகையில், அரசியல் தலையீடுகள் எதுவுமின்றி இடம்பெற்றாக வேண்டும்.

அத்தகையதொரு நீதியும் நேர்மையுமான பகுப்பாய்வுகள் பல உண்மைகளை வெளிக்கொணரும் வகையில் அமைய இடமுண்டு.

## ஆசிரியருக்கான கடிதம்

# அநியாய உயிரிழப்புக்களைத் தவிர்க்க முயல்வது இன்றைய காலத்தின் தேவை

ஏறக்குறைய மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் எத்தனையோ ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகியமை சகலரும் அறிந்ததொன்றே. குறிப்பாக போரில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அரச படையினர் மற்றும் தமிழ்ப் போராளித் தரப்பினர்கள் தம்மிடையேயான மோதல்களின்போது, பெருமளவில் உயிரிழந்தமை ஒரு புறமிருக்க, நேரடியாகப் போரில் சம்பந்தப்பட்டிராத நாட்டின் பொதுமக்களில் பெருந்தொகையானோர், மேற்குறித்த இருதரப்பினர்கள் மத்தியில் இடம்பெற்ற மோதல்களில் இடைநடுவில் சிக்கி அநியாயமாக உயிரிழந்தமையையும் நாமறிவோம்.

போர்முடிவுக்கு வந்த பின்னரான காலம் முதல் இற்றை வரையான காலகட்டத்தில், நாட்டில் வீதி விபத்துக்களில் சிக்கியும், வாகன விபத்துக்கள் காரணமாகவும் தமிழர் பகுதிகளில் ஏராளமானவர்கள் அநியாயமாக உயிரிழக்க நேர்ந்ததுண்டு. அதிலும், குறிப்பாக எமது எதிர்காலச் சந்ததியினரான இளைஞர்களில் பலர் மோட்டார் சைக்கிள்களை கண்மண் தெரியாத வேகத்தில் ஓட்டிச் சென்று விபத்துக்களில் சிக்கித் தமது உயிர்களை இழக்கும் பரிதாபம் குறித்துப் பச்சாதாபப்படாதவர்கள் இருக்க இயலாது.

அந்த வகையில், எம்முடைய கவனக் குறைவு, மற்றும் தவறான கையாள்கை என்பவை காரணமாக எம்மவர்களில் குறிப்பிடத்தக்கதொரு தொகையினர் மின்சாராத்தால் ஏற்படும் விபத்துக்களுக்கு முகம் கொடுத்து உயிரிழக்கும் பரிதாபம் குறித்த தகவல்கள் அடிக்கடி ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

அதன்படி நாடுதழுவிய ரீதியில் கடந்த 2017ஆம் ஆண்டில் மட்டும் பொதுமக்கள் தரப்பிலிருந்து 106பேர் உயிரிழக்க மின்சாரத் தாக்குதல் அல்லது மின்சாரப் பாதிப்பு காரணமாக ஆகியிருந்ததாக புள்ளிவிவரக் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் சட்டவிரோத மின்னிணைப்புக்களைப் பெறும் முயற்சிகளின்போதே மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் தேவையான தொழில்நுட்ப அறிவு இல்லாத தொழிலாளர்களால் வீடுகளின் உள்ளக மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுவதாலும், சில சமயங்களில் மின் ஒழுக்குக்கள் ஏற்பட்டு பொதுமக்களில் சிலர் அவற்றால் பாதிப்புற்று அநியாயமாக உயிரிழக்க நேர்கிறது.

மிக அண்மைக் காலத்தில் யாழ் குடாநாட்டில் இத்தகைய சம்பவங்களில் சிக்கி கணவன்- மனைவி மற்றும் தந்தை- மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவலச் சாவுகளைத் தழுவிக் கொண்டமை குறித்து எம்மில் பலர் அறிந்துள்ளோம்.

அந்த வகையில் இத்தகைய மின்சாரப் பாவனை தொடர்பான விபத்துக்களில் சிக்கி அநியாயமாக உயிரிழக்கும் சம்பவங்களைத் தவிர்க்க, அவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடைமுறைகளை முன்னெடுக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இன்றைய காலத்தின் தேவையொன்றாகவும் அது அமைகிறது. அதனை நாம் உரிய வகையில் பயன்படுத்திப் பலன்பெற முயலல் சிறப்பு.

*து.ஏகாம்பரம், நல்லூர்*




# நித்திய சுகம்

375

உடலே கோயில்

சி.சிவன்சுதன்



# புகையை பகை கொள்வோம்

புகைத்தல் நாகரீகத்தின் அடையாளமாகக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனாலும் அந்த நிலமைகள் தற்போது மாற்றம்கண்டுள்ளது. புகைப் பிடிப்பவர்களை தீண்டத்தகாதவர்களாகப் பார்க்கின்ற காலம் துளிர்விட ஆரம்பித்துள்ளது. இதற்குக் காரணம் புகைப்பிடிக்கும் பழக்கம் என்பது புகைப் பிடிப்போரை மட்டுமே பாதிப்பதில்லை. அவரைச்சுற்றியுள்ள அனைவரையும் பாதித்து நோயாளி ஆக்கிவிடும் தன்மையை கொண்டுள்ளது. இத்தகு காரண காரியம் கொண்டே பொது இடங்களில் புகைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டவிதி நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

புகைப்பிடிப்பதால் 'பாரிசவாதம், மாரடைப்பு, புற்றுநோய், சுவாசம் சம்பந்தமான நோய்கள், குருதிக் குழாய் சம்பந்தமான நோய்கள்' எனப் பல பாரதூரமான நோய்கள் ஏற்படுகின்றன. இதனை நாம் அனைவரும் அறிந்துகொண்டுள்ள போதும், புகைப்பிடிக்கும் பழக்கத்தை துடைத்தெறியும் மார்க்கம் தெரியாது துன்பப்படுகிறோம்.

கஞ்சாச் செடி வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதை நாம் அனைவரும் அறிந்துகொண்டுள்ளோம். ஆனால் பல இலட்சம் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் புகையிலைச் செடியை வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றமாக வெளிப்படுத்தப்படவில்லை. உண்மையில் நாம் பயிரிடுகின்ற ஒவ்வொரு புகையிலைச் செடியும் யாரோ ஒரு முகம் தெரியாது மனிதனை நோயாளியாக்கும் என்பதை உணர மறுக்கிறோம். இது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். அழிவில் இருந்து மீண்டுவர எம்மை நாமாக வழிப்படுத்த முன்வர வேண்டும். புகையிலை பயிரிடும் விளைநிலத்தில் மரக்கறிப் பயிர்களை பயிரிடுவதன் மூலம் உணவுத் தேவையில் தன்னிறைவு பெற முயற்சிக்கலாம்.



> ஆரோக்கியமான சமூக முழுமை காண்பதற்கான செயலூக்கம்

புகைத்தல் தனி மனித உரிமை எனில், ஒருவரை புகைக்க வேண்டாம் என்று வற்புறுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் புகைப்பதை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளலாம். அது மட்டுமே எம்மால் முடிந்த ஆரம்ப நிலை அறிவுரையாக இருக்க முடியும். புகைக்க விரும்பினால் சன நடமாட்டமற்ற நல்ல காற்றோட்டமான இடத்தை தெரிவு செய்து அங்கு சென்று புகைத்துக்கொள்ளுங்கள். இதனூடே குடும்பத்தையும் பிள்ளைகளையும் சுற்றத்தவர்களையும் நீங்கள் வெளிவிடுகின்ற புகையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஏற்படப்போகின்ற பாதிப்புகளை உங்களோடு மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி இருக்கும் ஒருவர் அந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்று வரும்போது அந்தப் பழக்கத்தினால் உடலில் ஏற்பட்ட தாக்கங்களின் பெரும்பகுதியில் இருந்து மீண்டு வருவதற்கான சந்தர்ப்பம் கிட்டும்.

புகைப்பிடிக்கும் பழக்கமுடைய ஒவ்வொருவரும் இப்பழக்கத்திலிருந்து முழு மனதோடு விடுபட்டு அதை நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் போது சில வேண்டத்தகாத அறிகுறிகள் தோன்றின் மருத்துவ உதவியை பெற்றுக் கொள்ளவும். புகைப்பிடிக்கும் பழக்கமுடைய ஒவ்வொருவரையும் நாம் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களை இந்தப் படுகுழியிலிருந்து காப்பாற்றிவிடுவதற்கு எம்மாலான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவோம்.

தன் உடலை அழித்து தான் சார்ந்த குடும்பத்தின் பொருளாதாரத்தை சிதைத்து, தனைச் சூழ்ந்துள்ளவர்களின் சுகாதாரத்தை சீர்குலைக்கும் செயற்போக்குடைய புகைப் பிடிப்போரே சுய சிந்தனையோடு செயற்படுங்கள். உடல் ஆரோக்கியம் பெற்று வாழ முன்வாருங்கள்.

**"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்."**

*கட்டுரையாளர் : பொது மருத்துவ நிபுணர்,
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.*

# கர்ப்ப காலமும் தைரொயிட் பிரச்சினைகளும்


எம். அரவிந்தன்

**கேள்வி:** எனது வயது 30 ஆகும். திருமண பந்தத்தில் இணைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. கர்ப்பம் தரிப்பது தாமதமாகி வருகின்றது. அண்மையில் மேற்கொண்ட 'தைரொயிட்' ஹோர்மோன் பரிசோதனையின் படி, தைரொயிட் ஹோர்மோன் சுரப்பு குறைவடைந்துள்ளதாக குடும்ப மருத்துவர் தெரிவித்துள்ளார். இது பற்றி விளக்கிக் கூறவும்.

**பதில்:** கர்ப்பம் தரித்தல் தாமதமாவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். பெண்ணொருவரின் தைரொயிட் ஹோர்மோன் சுரப்பானது குறைவாக இருக்கும்போது கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். தைரொயிட் சுரப்பானது குறைவாக இருக்கும்போது, 'உடற்பருமன் அதிகரித்தல், சோம்பல், அதிக தூக்கம், மலச்சிக்கல், குளிரைத் தாங்கமுடியாத தன்மை மற்றும் மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறுதல்' போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

இவ்வாறான அறிகுறிகள் இருப்பவர்களும், கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகளை உடையவர்களும் தைரொயிட் ஹோர்மோன் சுரப்பை பரிசோதித்துப் பார்க்க வேண்டும். குருதிப் பரிசோதனையை மேற்கொள்ளவதன் மூலம் இதனை இலகுவாக அறிந்துகொள்ள முடியும். இந்தப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு உணவு அருந்தாமல் இருக்க வேண்டும் என்பது அவசியமற்ற அறிவுறுத்தல்.

**தைரொயிட் சுரப்பு குறைவாக உள்ளோர் தைரொக்ஸின் மாத்திரையை உள்ளெடுக்க வேண்டும். உங்களைப் போன்றே கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகள் உள்ள பெண்கள் தைரொக்ஸின் மாத்திரையை மருத்துவர் கூறிய அளவு பரிமாணத்தில் உள்ளெடுக்கும்போது கர்ப்பம் தரிக்கின்ற வாய்ப்பு அதிகரிக்கின்றது. கர்ப்பம் தரிக்க விரும்பும் பொண்ணொருவர் 'ரி.எஸ்.எச்' எனப்படுகின்ற தைரொயிட் ஹோர்மோனின் அளவை சாதாரணமான ஒருவரை விடவும் குறைந்த நிலையில் பேணிக் கொள்ள வேண்டும்.**




தைரொக்ஸின் மாத்திரயை மருத்துவர் பரிந்துரை செய்த அளவில் காலை வேளையில் வெறும் வயிற்றில் உள்ளெடுக்க வேண்டும். அதன் பின்பு 30 நிமிடங்களுக்கு தேநீர் போன்ற ஆகாரங்களையோ, உணவையோ உள்ளெடுக்கக்கூடாது.

**கர்ப்பவதியானதை உறுதிப்படுத்திய பின்னர் (சிறுநீரில் 'எச்.சி.ஜி' பரிசோதனையை மேற்கொள்ளல்) உடனடியாகவே தைரொக்ஸின் மாத்திரையின் அளவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக 25 மில்லி கிராம் அளவால் குளிசையின் அளவை அதிகரிக்க வேண்டும். 50மில்லி கிராம் தைரொக்ஸின் மாத்திரை எடுப்பவர்கள் அதனை 75 மில்லி கிராம் ஆக அதிகரிக்க வேண்டும். இயன்றளவு விரைவாக மருத்துவரை நாடி ஆலோசனை பெறுதல் நன்று.**

கர்ப்பத்திலுள்ள சிசுவின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியில் முதல் மூன்று மாதங்கள் மிக முக்கியமான கால கட்டமாகும். சிசுவின் வளர்ச்சி தாயின் தைரொக்ஸின் அளவிலேயே தங்கியிருக்கின்றது. எனவே கர்ப்பவதியொருவர் குறிப்பிட்ட அளவில் தைரொக்ஸினை உள்ளெடுக்காத விடத்து, குழந்தையின் உடல் மற்றும் மூளை வளர்ச்சி பாதிப்படையும் சந்தர்ப்பங்கள் அதிகம் ஏற்படலாம்.

கர்ப்பகாலத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு ஒரு முறை தைரொயிட் ஹோர்மோனின் அளவைப் பரிசோதிக்க வேண்டும். தேவை ஏற்படின் தைரொக்ஸின் மாத்திரையின் அளவை மருத்துவரின் ஆலோசனைப்படி மாற்றலாம்.

கர்ப்பம் தரிக்க விருப்பமுடைய மற்றும் கர்ப்பிணியான பெண்கள் அவர்களுக்குத் தைரொயிட் சுரப்புக்குறைபாடு இருக்குமிடத்து, மேற்குறிப்பிட்ட விதமாக நோய் தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும். இதன் ஊடே தாயும், பிறக்கப் போகும் குழந்தையும் பாதிப்புக்கள் ஏதுமின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

*கட்டுரையாளர்:நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியியல்
விசேட மருத்துவ நிபுணர்,
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.*

சூரியகாந்தி
உதயன்











# அடுத்த அரச தலைவர்...?

கட்டுரை

வி.அருணாசலம்

சூடேறித் தணிந்திருக்கிறது இந்தக் கதை. ஆனாலும் அடுத்த அரசதலைவருக்கான தேர்தல் காலம் கிட்டும் வரையில் இது தொடரும்.

அடுத்த அரசதலைவருக்கான வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு மகிந்த குடும்பத்தி லிருந்து எவர் வரப்போகிறார்கள்? என்பதே தற்போது பிரபல்யமான கேள்வியாக உள்ளது. இதை வைத்துத்தான் சிங்கள அரசியல்வாதிகள் பலரும் தமிழ் அரசியல்வாதிகளும், சிங்கள, தமிழ் ஊடகங்களும் காலத்தை ஓட்டுகின்ற நிலை காணப்படுகிறது. இதில் கோத்தபாய ராஜபக்ச மிக முக்கிய நபராக இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார். போர்க்குற்ற விசாரணை, ஊழல் ஈடுபாடுகள், அமெரிக்கக் குடிமகனாக இருந்துகொண்டு இலங்கையில் தேர்தலில் நிற்கமுடியாது ஆகிய மூன்று விடயங்கள் அவர் தேர்தலில் களமிறங்குவதற்கு எதிராக உச்சரிக்கப்படுபவையாக இருக்கின்றன.



பிராந்தியச் சூழலும், பன்னாட்டுச் சூழலும் எவ்வாறான நெருக்கடிகளைக் கொடுத்தாலும் இனவாதத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் தக்கவைக்கக்கூடிய திறன் ராஜபக்ச மாரிடம் மட்டுமே உண்டு. சமல், மகிந்த, பசில், கோத்தபாய, நாமல் என ஒரே குடும்பத்துக்குள் மாற்றுத் தலைமைகளும் அவர்களிடம் உண்டு. கோத்தபாய தேர்தலில் நிற்கமுடியாத சூழலில் அந்தக் குடும்பத்திலிருந்து எவரோ ஒருவர் தேர்தலில் நிற்கமுடியும். அல்லது எவராவது ஒரு பலமான நபரைத் தேர்தலில் நிறுத்தமுடியும்.

அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் பௌதீகவியல் பிரிவில் 'பி.எச்.டி' படிப்பை முடித்த ஒருவர், "அமெரிக்கர்களின் நோக்கு நிலையில் எதையும் இலகுவாக மறந்துவிடுவார்கள் என்று ஆசிய நாட்டு மக்கள் சாதாரணமாகச் சொல்வார்கள்" என்று கூறினார். இந்த வரையறைக்குள்தான் இலங்கையின் அரசியலும் அடங்கும்.

'கோத்தபாயதான் அடுத்த அரச தலைவர்' என்ற சாரப்பட தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவின் பத்திரிகையான 'விஜயகுறுாப்' சார்ந்த ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிடுகின்றன. கோத்தபாய அந்த ஊடகங்கள் மீது இது விடயத்தில் ஆத்திரம் கொண்டிருந்தார். தனது பெயரைப் பாழாக்குகின்றனர் என்பதே அவரது குற்றச்சாட்டு.

**உளவியல் அரசியல்**

கோத்தபாய ராஜபக்சவே அடுத்த அரசதலைவர் என்ற மனப் பதிவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டுப் பின்னர் அவர் தேர்தலில் நிற்கவில்லை என்ற செய்தியை வெளியிடுகின்றபோது ராஜபக்ச குடும்பத்தினருக்கு அது பெரிய பின்னடைவாக அமையும் என்ற உளவியல்சார் அரசியல் எதிர்பார்ப்பே இது. ஆனால் நிலமை அவ்வாறல்ல.

எவர் அரச தலைவர் தேர்தலில் நிற்கப்போகிறார்கள்? என்பதை இதுவரை உத்தியோகபூர்வமாக மகிந்த குடும்பத்தினர் அறிவிக்கவில்லை. இதில் மக்களின் மனநிலையை அறிவதற்கான நாடி பிடிப்புக்களே ஊடகங்கள் ஊடாகப் பரவவிடப்படுகின்றன. கோத்தபாய தேர்தலில் நின்று வென்றால்என்ன நடக்கும்?, தேர்தலில்நிற்காவிட்டால் என்ன நடக்கும்? என ஆதரவு, எதிர்க் கருத்துக்கள் விவாதிக்கப்படுகின்றன. 'கீழைத் தேசத்தவர்கள் எதையும் இலகுவில் மறந்து விடுவர்' என்று அமெரிக்கர்கள் நினைப்பதுபோலவே ஒருசில விடயங்கள் இருக்கின்றன. ஆனாலும் சிங்கள இனத்தவர் மத்தியில் இருக்கிற புலிக்ள் பற்றிய பிம்பம் முற்றுமுழுதாக மாறிவிடாது. கடந்த காலத்தில் அதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க "புலி அடியோடு இல்லாது ஒழிக்கப்பட்டு விட்டது. அது பற்றிச் சிங்கள மக்கள் பயப்படவேண்டிய அவசியம் இல்லை" என்று அடித்துக் கூறி வந்த நிலையில், அவரது கட்சியைச் சேர்ந்த ராஜாங்க அமைச்சரான விஜயகலாவோ 'புலிகள் மீண்டும் வரவேண்டும்' எனப் பேசியிருக்கிறார். இது சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்ச குடும்பத்துக்கான மதிப்பையும் முக்கியத்துவத்தையும் சற்று மேம்படுத்தியிருக்கிறது. வடக்குக் கிழக்கில் நடக்கின்ற சிறிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடக்கின்ற எதிர்ப்புக்கள், சீமான், வை.கோ போன்றோரின் உரைகள், தமிழ்த் தேசியவாதிகளின் சூடான பேச்சுக்கள் எனப் பல காரணிகள் சிங்கள மக்கள் மத்தியில் இத்தகைய மனநிலையை இன்னமும் தூண்டி வருகின்றன. தமிழர்கள் த்மது நியாயபூர்வமான உரிமைகளைக் கேட்பதும், அது நிறைவேறாத நிலையில் மீண்டும் புலிகள்போன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்க வாய்ப்புண்டு அல்லது ஆரம்பித்தால் நல்லது எனப் பேசுகின்றமை கூடச் சிங்கள இனவாதத் தரப்புகளுக்கு வாய்ப்பான செய்திகளே.

**வியாபித்து வருகிற இந்தியக் கருமேகம்**

இலங்கை அரசு மற்றும் ஈழத்தமிழர் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டில் இந்து, பௌத்தம் ஆகிய மதங்கள் வேறுபட்டவை அல்ல என்பதும், கோயில்களும் பௌத்த விகாரைகளும் இலங்கை முழுவதும் பரவலாக இருப்பதில் தவறில்லை எனவும், சிவசேனா அமைப்பும் பௌத்தபீடங்களும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தமிழரும் சிங்களவரும் பிரச்சினைப்படாது இருப்பதற்கு 'ஈழத் தமிழர்கள்' என்ற ஒரு பிரிவினரை இல்லாது செய்தல் அவசியம் என்ற அரசியல் அதற்குள் இருக்கிறது. ஈழத்தமிழருக்குத் தனியான நிலம், தனியான கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பவை தென்னிந்தியாவை விட வேறுபட்டதாக இருக்கத் தேவையில்லை என்பதும் இந்தியாவின் நிலைப்பாடாகும்.

தென்னிந்தியச் சொற்பொழிவாளர்கள், திரைப்படத் துறையினர் எனப் பெருந்தொகையானோர் யாழ்ப்பாணத்துக்கு வருவது அதிகரித்து வருகிறது. பலாலி - சென்னை விமானப் போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டால் தென்னிந்தியத் தமிழர்களால் ஈழத்தமிழர்கள் 'விழுங்கப்பட' அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இது சிங்கள ஆட்சியாளரின் ஆக்கிரமிப்புக்களைவிட வீரியம் கூடியதாக இருக்கும். இது இலக்கியம், கலை, பொருளாதாரம், வர்த்தகம்போன்ற எல்லாத்துறைகளிலும் இடம் பெற வாய்ப்புண்டு. விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் இருக்கும்போது இந்தியச் செல்வாக்கை இலங்கைக்குள் இறங்க விடாது பல வழிகளிலும் அரணாக நின்று பார்த்துக்கொண்டார்கள். இந்த நிலை 2009ஆம் ஆண்டின் பின் மாற்றப்பட்டு விட்டது.

**சீனா, இந்தியா , இலங்கை**

சீனாவின் பரவல் மகிந்த குடும்பத்தின் மூலமே மேலும் வலுப்பட வாய்ப்புண்டு என்பது இந்தியாவுக்கு நன்கு புரியும். சீனாவும் தனது வர்த்தக ஆக்கிரமிப்பை இலங்கையிலுள்ள எந்த ஆட்சியாளருடனும் வைத்துக்கொள்ளும் மனநிலையிலேயே உள்ளது. மகிந்தவுக்கு இரகசிய உதவிகளைச் செய்வதன் மூலம் மட்டும் தனது நிலைப்பாட்டைச் சீனா தக்கவைத்துக்கொள்ள முடியுமே



தவிர, இந்தியாவையோ அமெரிக்காவையோ எதிர்த்து சீனாவால் தனது அரசியல் நிலைக்களத்தை உருவாக்க முடியாது. 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது சீனா, மகிந்த தரப்புக்குப் பணம் வழங்கியமை தொடர்பில் நல்லாட்சி அரசுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. ஆனபோதிலும் அதைக் கிடப்பில் போட்டு விட்டு, பின்னர் அமெரிக்க 'ரைம்ஸ்' பத்திரிகை மூலம் ஒரு செய்தியை வெளியிட வைத்து அதற்கு விளக்கம் அளிப்பதுபோல சீனா வழங்கிய காசோலை விவகாரத்தை வெளியில் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**ஆதரவுத்தளத்தை மாற்றியமைக்கின்ற போக்கு**

மகிந்த குடும்பம் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட பணத்தின் ஒரு பகுதி அவர்களின் ஆதரவாளர்களுக்கும் கிடைத்தது என்பதைச் சிங்கள மக்கள் பலரும் அனுமானிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இந்த விடயத்தில் ஒற்றுமைப்படுகிறார்கள். இதனால், ராஜபக்ச குடும்பத்தினருக்கான தமது ஆதரவுத்தளத்தை அவர்கள் குறைக்க மாட்டார்கள் என்பது உறுதி.

முஸ்லிம் பிரதிநிதிகளை அழைத்துப் பசில்ராஜபக்ச அண்மையில் உரையாடியபோது "சிறிலங்கா சுதந்திரக்கட்சி பற்றிக் கதைப்பதற்குச் சம்பந்தனுக்கு உரிமையில்லை" என்று குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் முஸ்லிம்களைத் தமக்குப் பலமாக மாற்றுவதுடன் 'சம்பந்தன்' என்று விழித்ததன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று வரையறுத்து அதை ஒதுக்கி விட்டு, ஏனைய தமிழ் மக்களுடன் கைகோர்ப்பது என்ற விடயமும் பூடகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. வடக்கிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும், மாகாணங்களில் சம அளவில் இராணுவப் பரம்பல் இருக்கவேண்டும் என்கிற சி.வி.விக்னேஸ்வரனின் கூற்றுக்கள் கூட இத்தகைய சிங்கள இன வெறியர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளன.

**ரணில் ராஜபக்ச அரசியல்**

ராஜபக்ச குடும்பத்தில் மூத்த ஆண் உறுப்பினரின் அறிவுரையைக் கேட்பவர்களாகவே இளையவர்கள் காணப்படுகின்றனர். சமல், மகிந்த, நாமல் ஆகியோர் சகோதரகர்களாக, தனி ஒரு குழுவாக இன்றுவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலேயே அங்கம்வகிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, மைத்திரியின் தலைமைத்துவத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இருந்தால் மட்டுமே அந்தக் கட்சியைப் பலமிழக்கச் செய்வதைச் சாத்தியமாக்கிக்கொள்ள முடியும். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ராஜபக்சாக்கள் தலைமை தாங்காது இருப்பதற்காக ஆற்றவேண்டிய அரசியல் எத்தனங்களே ரணிலுடைய மூளையின் முழுநேரப் பணியாக இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கக்கூடிய நெருக்கடி கோத்தபாய பற்றியதாகும். கோத்தபாய அரசதலைவர் தேர்தலில் நிற்பதானால், அமெரிக்கக் குடியுரிமையை இல்லாது செய்வது அவசியம். அவ்வாறானதொரு சூழலில் அமெரிக்கா ஏதாவது காரணம் சாட்டி கோத்தபாய தனது நாட்டுக் குடியுரிமையை நீக்குவதற்குனுமதிக்கப் பின்னிற்கும். இதனால் கோத்தபாய தேர்தலில் நிற்கும் வாய்ப்பு இல்லாது போகும். இந்தக் கட்டத்தில் இனவாதப் பின்னணியைக் கொண்ட சிங்கள அமைப்புக்கள், புலிகளை அழித்ததற்காகக் கோத்தபாயவை போர்க்குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தக் கூடாது என்ற குரலை எழுப்ப வாய்ப்புண்டு. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி, சிங்களத் தேசியத்தையும், சிங்கள மக்களைக் காப்பாற்றிய இராணுவத்தைக் காட்டிக்கொடுத்த கட்சியாகவும் விமர்சிக்கப்படும்.

'எலிய', 'வியத்மக' போன்ற சில சிங்களத் தேசிய அமைப்புக்கள் ராஜபக்சமார் சார்ந்த செயற்பாட்டில் இறங்கியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி தனக்குக் கிடைத்த இந்த அரசியல் வாய்ப்பைப் பயன்படுத்தி 2020ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவை அரச தலைவராகத் திருநிலைப்படுத்த முனைகிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு அருகில் உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்ந்தவர்களை, ஊழல் குற்றச்சாட்டுக்கள் போன்ற பல காரணங்களைக்காட்டிச் சிறையில் அடைப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

பிராந்தியச் சூழலும், பன்னாட்டுச் சூழலும் எவ்வாறான நெருக்கடிகளைக் கொடுத்தாலும் இனவாதத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் தக்கவைக்கக்கூடிய திறன் ராஜபக்சமாரிடம் மட்டுமே உண்டு. சமல், மகிந்த, பசில், கோத்தபாய, நாமல் என ஒரே குடும்பத்துக்குள் மாற்றுத் தல்லமைகளும் அவர்களிடம் உண்டு. கோத்தபாய தேர்தலில் நிற்கமுடியாத சூழலில், அந்தக் குடும்பத்திலிருந்து எவராவது ஒருவர் தேர்தலில் நிற்கமுடியும். அல்லது எவராவது ஒரு பலமான நபரைத் தேர்தலில் நிறுத்தமுடியும். இதன் மூலம் ஒரு கூட்டுப்பலம் அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்புண்டு. அவர்களைப் பதவியேற்க விடாது தடுக்க நினைக்கும் சக்திகள் அவர்களின் தவிர்க்க முடியாத வெற்றிக்குப் பின் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கவே வாய்ப்புண்டு.

ராஜபக்சகுடும்பத்தில் கோத்தபாய தான் அரச தலைவர் ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லை. எவராவது ஒருவர் அந்தக் கதிரையில் அமர்ந்தால் அவர்களுக்குப் போதுமானது. ஆனால், ஆளப்போவது மகிந்தவும், பசிலும், கோத்தபாய ஆகவுமே இருக்கும்.



# மலரோடு மலருங்கள்

பூக்கள் புன்னகைத்துக் கொண்டே இருக்கின்றன
பூபாளம் பாடிப் புலரும் உலகில்
காகிதத் தாள் தேடும் கடுகதி வேகத்தில்
தன்னைக் கவனிக்கத் தவறினாலும்
அவை புன்னகைத்துக்கொண்டே இருக்கின்றன

வண்ணங்கள் எத்தனை?
வகைகள் எத்தனை?
வாசம் தந்து நேசம் பெறும்
வல்லமைதான் என்ன?
அத்தனை இருந்தும்

ஆணவம் ஏது?
பிறரை அடக்கிடத் துடிக்கும்
ஆதிக்கம் ஏது?


மலர்கள் இல்லா இடமும் உண்டோ?
மண்ணில், மலையில், மருதத்தில்,
முல்லை வழியே நெய்தலிலும்
சுமங்கலியாய்ப் பல விதவைகளாய்ச் சில

எண்ணிப்பார்
உன்னைக் காட்டிலும் அவை
அதிகம் இருந்தும்
தலையில் சிறிதும் கனமில்லை
தன்னலமான செயலுமில்லை
கற்றுக் கொள்
கற்றுக் கொடு
மலர்கள் எப்போதும் மதிப்புக்குரியவை

கவிதை
வேலணையூர் தனு



# மலைப்பூட்டும் மடகஸ்கார்




கட்டுரை
ஏ.ஜே.ஞானேந்திரன்

மடகஸ்கார் என்ற பெயரைக் கேட்டதும், குழந்தைகளின் கார்ட்டூன் வகைத் திரைப்படமான மடகஸ்கார்தான் உங்களுக்குச் சட்டென ஞாபகத்துக்கு வரும்! அந்தத் திரைப்படத்தில் சிங்கம் வரும், ஒட்டகச்சிவிங்கி வரும், நீர் யானை, வரிக்குதிரை, பென்குவின்களும் வரும். ஆனால், இவையெல்லாம் நிஜத்தில் மடகஸ்கார் என்ற தீவில் கிடையாது. இந்தத் தகவலுடன் மடகஸ்கார் எனும் தீவுக்குள் நுழைவோம்.

**நான்காவது மிகப் பெரிய தீவு, 47ஆவது பெரிய நாடு**

5இலட்சத்து 88ஆயிரம் சதுர கிலோமீற்றர்களே இதன் பரப்பளவு. கிறீன்லாந்து, நியுகினி, போர்னியோ என்று தீவுகளைப் பரப்பளவின் அடிப்படையில் இறங்கு வரிசைப்படுத்தினால், நான்காவது இடத்தைப் பிடிப்பதுதான் இந்த மடகஸ்கார். இது ஒரு தீவு நாடு என்பதால் பரப்பளவைப் பொறுத்த அளவில் உலக நாடுகள் வரிசையில் 47ஆவது இடத்தைப் பெறுகின்றது. சரி இது எங்கே இருக்கிறது? தென்கிழக்கு ஆபிரிக்கக் கரையோரத்திலேதான் இந்தத் தீவு இருக்கின்றது. மடகஸ்கார் குடியரசு என்று இதை அழைக்கிறார்கள். 1897ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு வரை பிரித்தானியக் காலனித்துவ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கின்றது. இதன் சனத்தொகை 22மில்லியனைத் தொடுகின்றது. அலுவலக மொழிகளாக இரண்டு மொழிகள்இருக்கின்றன. ஒன்று பெரும்பான்மையானவர்கள் பேசும் மலகாசி மொழி. இரண்டாவது பிரெஞ் மொழி. மடகஸ்காரில் 69வீதமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என்பது சோகமான கதை! அதாவது தினசரி ஒரு டொலர் கூட உழைக்க முடியாதவர்கள்! 90 வீதமானவர்கள், நாளுக்கு 2டொலருக்குக் கீழ்ப்பட்ட வருமானத்தில் வாழந்து வருபவர்கள். இந்தியக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்து, 85மில்லியன் வருடங்களுக்கு முன்பு, இந்தத் தீவு பிரிந்ததாகப் புவியியல் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

**காட்டு உயிரினங்கள் தனித்துவமானவை**

இங்கு காட்டுவாழ் உயிரினங்கள் ஏராளமாக இருக்கின்றன. இங்கு காணப்படும் காட்டு உயிரினங்களில் 90வீதமானவை, உலகின் வேறு எந்த காடுகளிலும் காணமுடியாதவை என்பது, நாம் அறியாத சங்கதி. மிருகங்கள் மட்டுமா பல்வேறு வகையான புதுவிதத் தாவரங்கள்கூட இங்கு அபரிமிதமாக வளர்ந்து கிடக்கின்றன. மடகஸ்கார் மண்ணில் கிட்டத்தட்ட 15ஆயிரம் வரையான இனத் தாவரங்கள் காணப்படுகின்றன. இது ஒரு பிரமாண்டமான உயிரியல் பூங்கா என்று கூறினாலும் மிகையாகாது. 'பயோபாப்' என்று அழைக்கப்படும் மரம், இலண்டன் நகரின் பிக்பென் கடிகாரம்போன்று தனித்துவம் கொண்டது. இந்த அழகிய மரத்தில் 9 இனங்கள் இருக்கின்றன. அதில் 6இனங்களுக்குச் சொந்தக்காரர் மடகஸ்கார்தான்! வேறு எங்குமே இந்த ஆறு இனங்களையும் காணமுடியாது.



இந்த மண்ணுக்கேயுரிய 150 வரையான மீன் இனங்கள் இங்குள்ள ஆறுகளிலும், ஏரிகளிலும் காணப்படுகின்றன. வண்ணத்துப்பூச்சிகள், நத்தைகள், சிலந்திகள், வண்டினங்கள், என்று இந்த மண்ணுக்கே உரிய உயிரிகள் ஏராளம்.

ஆனால் மனிதர்கள் இங்கும் அழகிய சுற்றுச்சுழலை அழிக்கின்ற எதிரிகளாகவே இருக்கிறார்கள். 2ஆயிரத்து 400 வருடங்களுக்கு முன்பு மனிதன் இந்த மண்ணில் குடியேறிய பின்னர், தனது பெரும்பான்மையான காட்டுப் பகுதியை இந்த மண் இழந்து விட்டது.

**யானைப் பறவையைத் தெரியுமா?**

யானைப் பறவையைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா? மமொத் என்ற பெயரில், ஆதிகாலத்தில் யானையை ஒத்த இராட்சத மிருக இனம் வாழ்ந்து அழிந்துவிட்டதுபோல, யானைப் பறவை என்றொரு இராட்சத பட்சி இங்கு வாழ்ந்திருக்கின்றது. பூமியின் மிகப் பெரிய பட்சியாக இதைக் கணிக்கிறார்கள். இதனுடைய எடை 500கிலோக்கள் வரை இருக்குமாம். 17அல்லது 18ஆம் நூற்றாண்டில் இந்தப் பறவைகள் ஒரேயடியாக இல்லா தொழிந்து போயிருக்கின்றன. இதற்கான காரணம் தெளிவாக இன்னமும் அறியப்படவில்லை. இன்னொரு சுவாரஸ்ஸியமான சங்கதி ஒன்றும் மடகஸ்காரில் இருக்கிறது. இங்கே 80வகையான வேறுபட்ட பாம்பு இனங்கள் வாழ்கின்றன. ஆனால் இதில் எதுவுமே விடம் இல்லாத பாம்பு என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமான சங்கதி.

**இடர்களின் அட்டகாசம்**

வருடாந்தம் இங்கு சுழன்றடிக்கும் சூறாவளியின் அட்டகாசத்தை மக்களால் எதிர்கொள்ள முடிவதில்லை. இங்குள் பல கட்டடங்களை அழிக்கும் இந்தச் சூறாவளி, மக்களையும் கொல்லத் தவறுவதில்லை. 2004ஆம் ஆண்டில் இங்கு அடித்த சுறாவளி, 172பேரின் உயிரைப் பறித்ததோடு, 2இலட்சத்து 14ஆயிரம் பேரை வீடற்றவர்களாக நடுத்தெருவுக்கு இழுத்து வந்தது. இந்தச் சூறாவளியல் ஏற்பட்ட பொருளாதார இழப்பின் பெறுமதியை 250 மில்லியன் டொலர்களாகக் கணித்திருந்தார்கள்.

**கடற்கொள்ளைக்காரர்களின் தரிப்பிடமோ?**

ஒரு காலத்தில் ஐரோப்பிய கடற் கொள்ளைக்காரர்கள் தமது கடற்பயணங்களின்போது, இடைநடுவே தரித்து நிற்கும் பிரபல்யமான இடமாக இது இருந்திருக்கின்றது. இவர்களைப் பற்றிச் சில சுவாரஸ்ஸியமான தகவல்கள் உண்டு. தங்களை லிபேறி என்று அழைத்துக் கொண்ட இந்தக் கடற் கொள்ளையர்கள், இந்த மண்ணைச் சுதந்திரமான கொள்ளையர்களின் தேசம் என்று அழைத்தார்களாம். தங்களுக்கென்று ஒரு தனி அரசு, சட்டம் என்று ஆட்சி செலுத்தியவர்கள், கைதிகளையும் அடிமைகளையும் சுதந்திரமாகச் செல்லுமாறு விடுவித்துள்ளார்கள்.





கட்டுரை

டி.கார்த்திக்

# வெற்றிக் கதை

**கா**ல்பந்து உலகக் கோப்பையைப் பிரான்ஸ் அணி வென்றிருக்கலாம். ஆனால், உலகக் கால்பந்து இரசிகர்களின் மனத்தை வென்றது என்னவோ இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த குரேஷிய அணிதான். அந்த அணி கோப்பையைக் கோட்டை விட்டிருக்கலாம். ஆனால், அந்த அணி இன்று கோபுரமாய் உயர்ந்துநிற்கிறது. கடந்த ஆண்டு வரை உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியின் தகுதிச் சுற்றைக் குரேஷிய அணி தாண்டுமா? என்று நினைத்தவர்கள்தாம் அநேகர்.

ஆனால், இன்றோ உலகக் கோப்பை இறுதிச் சுற்றுவரை முன்னேறிப் புதிய அத்தியாயத்தை எழுதியிருக்கிறது குரேஷிய அணி. இந்தத் தலைகீழ் மாற்றத்துக்கு யார் காரணம்? இந்த மாற்றத்துக்கு வித்திட்டவர், அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்லாட்கோ டாலிக்.

கடந்த ஆண்டு உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு குரேஷிய அணி பத்தோடு பதினொன்றாகத்தான் இருந்தது. தொடர் தோல்விகளால் தள்ளாடிக் கொண்டிருந்தது. உலகக் கோப்பைத் தகுதிச் சுற்றுப் போட்டிக்கு முன்பாகப் பயிற்சியாளராக இருந்த ஆண்டி காஸிக்கைக் குரேஷியா கால்பந்து கூட்டமைப்பு நீக்கிவிட்டு டாலிக்கைப் பயிற்சியாளராக நியமித்தது. கடந்த ஆண்டு ஒக்ரோபரில்தான் அவர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். உலகக் கோப்பைக்குக் குரேஷியா தகுதிபெறுமா? என்று அந்தக் குட்டி நாடே எதிர்பார்த்த வேளையில்தான் அவர் பயிற்சியாளரானார். ஆனால், இந்த ஒன்பது மாதங்களில் அந்த அணியைப் பூஜ்ஜியத்திலிருந்து ராஜ்ஜியத்துக்கு அழைத்துச்சென்றிருக்கிறார் டாலிக். அந்த அணியை வெற்றிகரமான அணியாக மாற்றிக்காட்டியதில் ஸ்லாட்கோ டாலிக்குக்குப் பெரும் பங்கு இருக்கிறது. இன்று அவரை அந்த அணியின் 'இரும்பு மனிதர்' என்று அழைக்கிறார்கள். இதற்கு நூறு சதவீதம் பொருத்தமானவர் டாலிக்.

### கற்ற பாடம்

குரேஷிய கால்பந்துக் கூட்டமைப்பு டாலிக்கைப் பயிற்சியாளராக நியமித்தபோது, அந்தப் பணியை முழுமையாக அவர் ஏற்கவில்லை. "தகுதிச் சுற்றைத் தாண்டி உலகக் கோப்பைக்குக் குரேஷியா அணி சென்றால்தான் தொடர்ந்து பயிற்சியாளராக இருப்பேன். இல்லையென்றால், சென்றுவிடுவேன்" என்று சொல்லிவிட்டுத்தான் பயிற்சியாளரானார். ஆனால், தகுதிச் சுற்றை மட்டுமல்ல; உலகக் கோப்பை இறுதியாட்டம் வரை குரேஷியா சென்றது என்றால், டாலிக்கின் மாயாஜாலம் அப்படிப்பட்டது.

1998ஆம் ஆண்டில் குரேஷியா அணி அரையிறுதிவரை சென்றது. அப்போதும் பிரான்ஸ் அணியிடம்தான் குரேஷியா தோல்வியடைந்தது. ஆனால், குரேஷியா அணியை அரையிறுதிவரை அழைத்துச்சென்ற பெருமை அந்த அணியின் ஆலோசகரான மிராஸ்லவ் பிளேஸேவிக்கையே சாரும். மீண்டும் அப்படி ஒரு மாயாஜாலத்தை நிகழ்த்த வேண்டுமென்றால் நீண்ட கடினமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று டாலிக் நினைத்தார். அதன்படி சென்றதால்தான் இன்று குரேஷிய அணி பிற அணிகளுக்குப் பாடமாகி இருக்கிறது.

### பிரச்சினைகளுக்குத் தீர்வு

45 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்ட குரேஷியாவில் பெரிய கால்பந்துப் போட்டிக் கான கட்டமைப்போ சொல்லிக் கொள்ளும்படியான வசதியோகூட இல்லை. பன்னாட்டுத் தரத்திலான மைதானம் கூடக் குரேஷியாவில் இல்லை. ஆனால், கால்பந்தாட்ட வெறி அவர்களின் குருதியில் கலந்திருக்கிறது. ஆட்டக்காரர்கள் எல்லோருமே மிகவும் உணர்ச்சிவசப் படக்கூடியவர்கள். குரேஷியா அணியில் சிறுசிறு விடயங்கள்கூடப் பூதாகரமாக வெடிக்கும். டாலிக் பயிற்சியாளர் ஆவதற்கு முன்பு சிறு பிரச்சினைக்காக ஜெர்சியைக்கூட அணிவதற்கு ஆட்டக்காரர்கள் மறுத்தார்கள். டாலிக் பயிற்சியாளரான பிறகு இதுபோன்ற பிரச்சினைகளால் ஏற்படும் கவனச்சிதறல்களை முடிவுக்குக் கொண்டுவந்தார். நேர்மறையான விடயங்களை ஆட்டக்காரர்களின் மனத்தில் விதைத்தார். தொடர்ந்து பிரச்சினை ஏற்பட்டால் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் ஜொலிப்பதெல்லாம் கனவாகவே இருக்கும் என்று நினைவூட்டினார். சிறுசிறு விடயங்களால் ஆட்டக்காரர்களுக்கு மனச் சோர்வும் கவனச்சிதறலும் ஏற்படாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்தார் டாலிக். அதற்கு இப்போது கைமேல் பலன் கிடைத்திருக்கிறது.

அது மட்டுமல்ல இளம் வீரர்களின் அணுகுமுறைகளை முழுமையாக மாற்றினார். அதன்மூலம் ஒட்டுமொத்த அணிக்கும் புதிய வடிவத்தைக் கொடுத்தார்.

> 88 ஆண்டுகாலக் கால்பந்து வரலாற்றில் முதன்முறையாக இறுதிப்போட்டிவரை முன்னேறி தோல்வி அடைந்த குரேஷிய அணி நொருங்கிப்போய்விடும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், இறுதிப்போட்டி தோல்விக்குப் பிறகு குரேஷிய ஆட்டக்காரர்கள் சோர்ந்து போய் விடவில்லை. தங்களுடைய செயல்பாடுகளை எண்ணி பெருமையே கொண்டனர். மிகப் பெரிய தொடரின் இறுதியாட்டத் தோல்விக்குப் பிறகும் ஆட்டக்காரர்கள் அப்படிச் செயல்படப் பயிற்சியாளர் டாலிக்தான் காரணம்.

பயிற்சியின்போது ஆட்டக்காரர்களின் குறைபாடுகளைக் கண்டறிவது, அதைச் சரிசெய்வது, சிறப்பாகச் செயல்படுபவர்களை ஊக்கப்படுத்துவது, அந்தத் திறமையைத் தக்கவைக்க ஆலோசனைகளை வழங்குவது எனத் தன்னுடைய பயிற்சியை அமைத்துக்கொண்டார். அறிமுக ஆட்டக்காரர், அனுபவ ஆட்டக்காரர் என்ற கதையெல்லாம் அவரிடம் எடுபடவில்லை.

சரியாகச் செயல்படாத அனுபவ ஆட்டக்காரர்களைத் தயக்கமின்றி வெளியேற்றினார். திறமையான அறிமுக ஆட்டக்காரர்களை அரவணைத்தார். இதன் மூலம் அணிக்குப் புத்துயிர் ஊட்டினார். உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி நடக்கும்போதும் இந்த உத்திகளை மறக்காமல் பின்பற்றினார். இறுதியாட்டத்துக்கு முதன் முறையாக முன்னேறிய போதும் கொண்டாட்டங்களை அளவோடு தான் கொண்டாடினார்கள் குரேஷிய ஆட்டக்காரர். மிதமிஞ்சிய தன்னம்பிக்கை எதிர்மறையாகப் போய்விடும் என்பதால் கொண்டாட்டத்தைக்கூடத் தள்ளிப்போட்டனர். பிரான்ஸ் அணி இயல்பாகவே நுணுக்கங்களைக் கற்ற அணி. அந்த அணியுடன் மோதும்போது அதைவிட நுணுக்கங்கள் தெரிந்தால்தான் அவர்களை வெற்றிகொள்ள முடியும். அந்த வகையில் குரேஷியப் பயிற்சியாளர் டாலிக் தங்களுடைய அணி ஆட்டக்காரர்களை கடைசி கட்டம் வரை மெருகேற்றினார். அதற்கேற்ப அணியை டாலிக் தயார் செய்தார். 'சேம் சைட் கோல்', நடுவர் வழங்கிய சர்ச்சைக்குரிய பனால்டி ஆகிய இரண்டு தவறுகளால்தாம் இறுதியாட்டத்தில் குரேஷிய அணி தோல்வியடைந்தது. மற்றபடி இந்தத் தொடர் முழுவதுமே வெற்றிக்கொடியை அந்த அணி உயரப் பறக்கவிட்டதற்கு டாலிக்தான் முழுமுதற் காரணம்.

### தோல்வியிலும் உற்சாகம்

88 ஆண்டுகாலக் கால்பந்து வரலாற்றில் முதன்முறையாக இறுதிப்போட்டிவரை முன்னேறி தோல்வி அடைந்த குரேஷிய அணி நொருங்கிப்போய்விடும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், இறுதிப்போட்டித் தோல்விக்குப் பிறகு குரேஷிய ஆட்டக்காரர் சோர்ந்துபோய்விடவில்லை. தங்களுடைய செயல்பாடுகளை எண்ணி பெருமையே கொண்டனர். மிகப் பெரிய தொடரின் இறுதியாட்டத் தோல்விக்குப் பிறகும் ஆட்டக்காரர் அப்படிச் செயற்படப் பயிற்சியாளர் டாலிக்தான் காரணம்.




இறுதிப் போட்டித் தோல்விக்குப் பிறகு அவர்களுடைய உணர்வுபூர்வமான ஆட்டத்துக்கு நன்றியும் வாழ்த்தும் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்தினார் டாலிக். தோல்விதான் வெற்றிக்கான படிக்கட்டு என்ற நம்பிக்கையை விதைத்தார். உலகக் கோப்பையில் இரண்டாமிடம் பிடித்ததை எண்ணி பெருமைப்பட வேண்டும் என்று உரக்கச் சொன்னார். "இறுதிப் போட்டியில் தோற்றதால், நீங்கள் திருப்தி அடையாதவராக நினைக்க வேண்டாம். இந்தத் தொடர் முழுவதும் உங்களுடைய செயல்பாடுகளை எண்ணிப் பெருமைப்படுங்கள். ஒவ்வொருவரும் தன்னை நினைத்துப் பெருமைப்படுங்கள். அணியை நினைத்துப் பெருமைப்படுங்கள்" என்று சொன்னார் டாலிக். அதனால்தான் மிகப் பெரிய தொடரின் தோல்விக்குப் பிறகும் குரேஷியாவில் கொண்டாட்டங்கள் களைகட்டின.

குரேஷிய கால்பந்து அணியின் இந்த விஸ்வரூபத்தை நாளை சரித்திரம் பேசலாம். ஆனால், ஸ்லாட்கோ டாலிக் என்ற மனிதரை விட்டுவிட்டு குரேஷியக் கால்பந்து வரலாற்றை இனி யாரும் பேச முடியாது. ஏனென்றால், அந்த அணியின் சிற்பி அவர்!

நன்றி - தீ ஹிந்து




# மன்னிப்பின் பெறுமதி எந்த அளவில்...

ஒருவரோ, பலரோ தவறிழைத்துவிட்டால், அவர் அல்லது அவர்கள் தவறுக்கான தண்டனையிலிருந்து விடுபடுவதற்காகவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளவதற்காகவும் அதனால் பாதிக்கப்பட்ட ஒருவரோ அல்லது பலரோ, வழங்குகின்ற சந்தர்ப்பமே மன்னிப்பாகும். ஒரு குறிப்பிட்ட வரையறையளவிலான விடயங்களுக்குப் பொருத்தமானதாக இதைக் கருதலாம். ஆனால், தற்போதைய கலியுக காலத்தில் மன்னிக்க முடியாத குற்றங்களே அதிகரித்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் போதைப் பொருள் பாவனை, வன்புணர்வுகள், பாலியல் சேஷ்டைகள், கொடூரக் கொலைகள் என்பன அதிகரித்துள்ளன. கொலைக்குற்றம் எனின் நீதிமன்றத்தால் சாவுத் தண்டனை வழங்கப்படுகிறது. அந்தத் தண்டனையை வழங்கிய கையோடு நீதிமன்றானது மன்னிப்பு வழங்கக்கோரி அரசதலைவரை நாடிப் பரிந்துரை செய்வதும், அவரால் அந்தக் கைதிக்கான சாவுத் தண்டனைக்குக் குறிப்பிட்டளவில் மன்னிப்பு வழங்கப்பட்டு அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படும் நடைமுறையே இங்கு பின்பற்றப்பட்டு வருகின்றது. இது யாவரும் அறிந்த விடயமாகும்.

### தண்டனைப் பற்றாக்குறை

கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களைத் தற்போது இடம்பெறுகின்ற குற்றச் செயல்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாகில், தற்போதைய குற்றச்செயல்களில் கொடூரத்தன்மையின் உக்கிரத்தை அவதானிக்க முடியும். இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்வோமாகில் குற்றங்களுக்கான தண்டனை போதுமானதல்ல என்பதை நாம் இலகுவாக உணர முடியும். இதற்குரிய காரணத்தை மீள்பரிசீலனை செய்யாதவிடத்து அமைதி என்ற சொல்லைத் தேடி அலையவேண்டியதையே எதிர்காலச் சமூகம் தனது வாழ்நாள்வேலையாகக் கொள்ள வேண்டியிருக்கும். இவற்றுக்கு விடை காண்பதற்கு அரச நிர்வாகங்களிலும், சமுதாயப் பொறுப்பில் உள்ளவர்களும் சிந்திக்க வேண்டும்.



### பலம் குறைந்தவர்களைக் கொல்தல்

ஒன்றைச் சகிக்க முடியாத சந்தர்ப்பங்களிலும், பகையைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், இன்னும்பல காரணங்கள் அமையலாகவும் கொலையுறுதல்கள் நிகழ்கின்றன. ஒருவரை மற்றவர் கொல்வதான இது ஓர் அறிவற்ற செயல்.

இதில் சம பலமுள்ளவர்கள் மோதுவதால் நிகழ்கிற கொலைகளுக்கான தண்டனைகளுக்குத் தற்போது நாட்டின் 'மன்னிப்பு' நடைமுறை (சாவுத் தண்டனையை ஆயுள் தண்டணையாகக் குறைத்தல்) இருந்தாலும், தன்னை எதிர்க்க முடியாத, தன்னை எதிரி என்று நினைக்காத சிறுவர்கள், பெண்கள் தரப்பினரைச் சிதைத்துக் கொலை செய்வது துயரகரமானது. ஏனைய கொலைகளுக்கு வழங்கப்படும் மன்னிப்பு இத்தகைய கொடூரச் செயற்பாடுகளுக்கும் வழங்கப்படுவது பொருத்தமற்றது.

இத்தகைய குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்குப் பரிந்துரை செய்பவர்களும், மன்னிப்பு வழங்குபவர்களும், சற்றுச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எனவே சமய, சமூக, மதத் தலைமைகளும் சட்ட திட்டங்களை இயற்றும் வல்லமை உடையோரும் மன்னிப்பு என்பது எந்த அளவில் மட்டும் இருக்கலாம் என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும். இல்லாதவிடத்து காலகதியில் அரபு நாட்டுச் சட்டங்களே இங்குள்ளவர்களுக்கும் உகந்தது என்று சமய, சமூக, சமுதாயப் பொறுப்புள்ளோர் சிந்திக்க வேண்டிய காலம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எனவே சமுதாயப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் மன்னிப்பின் அளவு பற்றிச் சிந்தித்து இதற்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும்.

கட்டுரை
எஸ்.பாரத்

> குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்குப் பரிந்துரை செய்பவர்களும், மன்னிப்பு வழங்குபவர்களும், சற்றுச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எனவே சமய, சமூக, மதத் தலைமைகளும் சட்ட திட்டங்களை இயற்றும் வல்லமை உடையோரும் மன்னிப்பு என்பது எந்த அளவில் மட்டும் இருக்கலாம் என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

கவிதை
சர்விகா அண்ணாமலை

# 'இல்லைகள்' இனி வாழும்

இரப்போர் வந்து இரந்து நிற்கையில்
உரப்போர் தான் பெரும்பான்மையினர்
"இல்லை இங்கேதும்" என்றவுடன்
உடன் மூடுவார் கதவுகளை

இல்லை என்று வருவோரிடம்
"கை இல்லையா? கால் இல்லையா?" என்று
இரப்போரிடம் இருப்பதைக் காட்டி
தம்மைத் தாமே நியாயப் படுத்திக்கொள்வர்

இரப்போரும் இங்கு சீரில்லை இங்கு
கொடுப்போர் மடமை கொண்டிருந்தால்
வலுவிழந்தவனாய்ப் பொய்யுரைத்து
மதியிழந்து நிற்பர் மதுக் கடைகளில்

உண்மையில் தெரியவில்லை வித்தியாசம்
இரப்பவனுக்கும் இல்லாமல் நடிப்பவனுக்கும்
ஊமை விழிகளை மூடி உண்மை விழிகளால் பாருங்கள்
மெய்யாக இல்லை என்றால் முடிந்ததைக் கொடுங்கள்

இல்லை என்பது இன்றைய ஸ்லோகம்
இரப்பவன் மடிந்தாலும் இல்லை வாழும்
இனியும் உலகம் இல்லையில்தான் வாழும்
இல்லை இல்லையேல் உலகம் வாழும்



# போதிப்பு



போதிப்பு ஒரு சாதிப்பு
இல்லையேல் அது பாதிப்பு
நத்துக்கத்த உயிர்போனதும்
நாறின உடல் கொண்டவனே!
முத்தான கல்வியை வெளியே
வித்தேது என்ன பலன்
முத்தாத வெண்டிக்காயை முத்த வைத்தீர்
கல்வியைப் பிந்த வைத்தீர் அது நீதியா?
பித்தனே இனி நீயாகவே செத்தாய்
பொத்தாது நீ போதித்தால்
கத்தாது காத்திருப்பர் தானே!
சுத்தாது மாணவர்க்குக் கல்வியுடன்
சத்தை வழங்கினால், பத்தாதென்பாரோ?
வித்தை முத்தாக்கி மத்தால்
முத்தான இரத்தினங்களைக் கோவிலில்
வைத்த உச்சமே கோபுரம்
இனித்த கல்வியையேனும் தா
இனியுணர்ந்தாலும் மன்னிப்புண்டு வா?

கவிதை
தமிழ்மணி

# ரவுண்ட் த வேஸ்ட்

தொகுப்பு

பிரகாஸ்


## அணுவாயுதமும் வடகொரியாவும்

அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி வடகொரியா தொடர்ந்து அணுவாயுதங்களைத் தயாரித்து வருகிறது என்று குற்றம் சாட்டியுள்ளார் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில் கடந்த மாதம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இரு தலைவர்களும் பரஸ்பரம் பல வாக்குறுதிகளை வழங்கினார்கள். "தம்மிடம் கையிருப்பில் உள்ள அணுவாயுதங்கள் அழிக்கப்படும். வடகொரியா தொடர்ந்து அணுவாயுதச் சோதனையில் ஈடுபடாது" என்று கிம் ஜோங் உன் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த ஒப்பந்தங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் செயல்வடிவம் கொடுக்க வடகொரியா தொடர்ந்து தயங்கி வந்தது. இந்த நிலையில் வடகொரியா தொடர்ந்தும் அணுவாயுதங்களைத் தயாரிக்கிறது என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ.

**'ஓரமாப் போய் விளையாடுங்க...'**



## இம்ரானின் இன்னிங்ஸ்



பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் ஆகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான்.

1996ஆம் ஆண்டு தெக்ரிக் இ இன்சாப் என்கிற அரசியல் கட்சியை ஆரம்பித்தார் இம்ரான் கான். ஆனால் எந்தவொரு முக்கிய தேர்தலிலும் அவரின் கட்சி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறவில்லை. ஆனால் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இம்ரான் கானுக்கு மிகப் பெரியதொரு வாய்ப்பு இருந்தது. அதாவது, மற்றொரு முதன்மைக் கட்சியான முஸ்லிம் லீக் கட்சியின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சருமான நவாஸ் செரீப் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டதை அடுத்து அந்தக் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்தது. முஸ்லிம் லீக்கின் இந்த வீழ்ச்சி இம்ரான் கானுக்கு பெரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது. முஸ்லீம் லீக்குக்கு ஏற்பட்ட பின்னடைவைச் சிறப்பாகப் பயன்படுத்திய தெக்ரிக் இ இன்சாப் தேர்தலில் வெற்றிபெற்றது.

**'பாகிஸ்தானில் தற்போது இம்ரானின் இன்னிங்ஸ்...'**

## செவ்வாயில் ஏரி!

செவ்வாய் கிரத்தில் உயிரினங்கள் உள்ளதா? என்ற கேள்விக்கான விடையை தேடிக் கொண்டிருக்கின்றன உலக நாடுகள். இவ்வாறிருக்க "செவ்வாயில் உயிரினங்கள் இருப்பதற்கான ஆகக்கூடிய வாய்ப்பு உள்ளது" என்கிறது ஐரோப்பிய ஒன்றியம்.

ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் 'மார்ஸ் எக்பிரஸ்' என்ற திட்டத்தின் கீழ் செயற்கைக் கோளை செவ்வாய்க்கு அனுப்பியது. 'எக்பிரஸ்' வேகத்தில் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த செயற்கைக்கோள் சில ஒளிப்படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது. அந்த ஒளிப்படங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் செவ்வாயில் சுமார் 20 முதல் 30 கிலோமீற்றர் நீளமுடைய ஏரி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஏரி, செவ்வாயில் உயிரினங்கள் உள்ளன என்பதற்கான உச்சக்கட்டப் படிநிலை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

**'செவ்வாயின் மர்மங்கள் அவிழ்கின்றன...'**



## பதறியது ஏதேன்ஸ்

கிரீஸ் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் காட்டுத் தீ இடரும் ஒன்று. அந்த நாடு இந்த வாரமும் மிகப்பெரும் காட்டுத் தீயொன்றைச் சந்தித்துப் பதறிப்போயுள்ளது.

கிரீஸின் தலைநகர் ஏதேன்ஸில் இந்தக் கட்டுத் தீ ஏற்பட்டது. வெப்பக் காற்றுக் காரணமாக காட்டுத் தீ மிகத் துரித கதியில் பரவிவந்தது.

80 பேர் தீயில் அகப்பட்டு மடிந்தனர். நூற்றுக் கணக்கான வீடுகள், வாகனங்கள், கட்டடங்கள் என்பன தீக்கிரையாளியுள்ள ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகமான ரொயிடர்ஸால் வெளியிடப்பட்டிருந்தது. மனதைக் கனக்கச் செய்யும் வகையில் அந்த ஒளிப்படங்கள் அமைந்திருந்தன. ஏதேன்ஸ் மிகப்பெரும் ஆபத்துக்குள் சிக்கி மீண்டுள்ளது என்பது மட்டும் அப்பட்டம்.

**'பதறியதே ஏதேன்ஸ்...'**




## இஸ்ரேல் எனும் காட்சிச் சாலை

ஒரு நாட்டில் உள்நாட்டுப் போர் தீவிரம் பெற்றிருக்க இன்னுமொரு நாட்டின் எல்லையில் நின்று அதை விடுப்புப் பார்ப்பதென்பது எவ்வளவு துயரம். அது நடக்கிறது இஸ்ரேலில்.

சிரியா நீண்ட காலமாக உள்நாட்டுப் போரைச் சந்தித்து வரும் ஒரு நாடு. அந்த நாட்டின் இஸ்ரேல் எல்லைகளையொட்டிய பகுதிகளில் சிரிய அதிபர் அசாத் படைக்கும் அவருக்கு எதிரான ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் சமீப நாள்களாக உச்சக்கட்ட மோதல் நிலவுகிறது. இந்தப் போரை இஸ்ரேலின் எல்லைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதைகளினூடாகச் சென்று தினந்தினம் பல்லாயிரக் கணக்கான யூதர்கள் வேடிக்கை பார்க்கிறார்களாம். எதிரெதிர் நாடுகளாக இருந்தாலும் அப்பாவி மக்களின் சாவை வேடிக்கை பார்ப்பதென்பது எந்த வகையில் நியாயம். இதையடுத்து இஸ்ரேலுக்கு பன்னாட்டுச் சமூகங்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

**'என்று தீரும் இந்தக் குரோதம்...'**



தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்

# நின்னைச் சரணடைந்தேன்

"யார் அத்தானா கதைக்கிறீங்கள்? நான் நிவேதா பேசுறன். அக்கா இல்லையா?"

"பக்கத்திலை தான் இருக்கிறா. வண் மினிற் பிளீஸ்" என்று கூறிவிட்டுச் சுவேதாவிடம் போனைக் கொடுத்தான்.

"ஹலோ! சொல்லு நிவேதா! எல்லாரும் சுகம் தானே? கோபி வந்திட்டாரா? பிள்ளைகள் வந்திட்டார்களா?'

"எல்லாரும் சுகமாக இருக்கிறம். அக்கா திருப்பதிக்குச் சென்று திரும்பி வந்தால் ஒரு திருப்பம் நேருமாம் எண்ட பாட்டுக் கேட்டிருக்கிறியா?"

"ஓ கேட்டிருக்கின்றன். அதுக்கு என்ன நிவேதா?"

"நாங்கள் இஞ்சை வந்து உங்கை நடந்த விடயங்களைக் கூறினம். மாமியாக்கள் வாயடைச்சுப் போயிற்றினை. அடுத்த லீவுக்கு நாங்கள் உங்க வருவம். அத்தானைப் பார்க்க வேணும். உன்னைப் பார்க்க வேணும், தாத்தாவைப் பார்க்கவேணும் எண்டு பிள்ளையள் எல்லாரும் கோஷ்டி சேர்ந்து ஒரே அமளி."

"நல்லது வாருங்கள். எங்களுக்கும் சந்தோஷம் தான்"

"அத்தானைப் பற்றி நாங்கள் கூறியதைக் கேட்டுக் கோபியும். பாலாவும் அப்படியா? நாங்கள் சாதாரணமாய் நினைச்சி ருந்தம். என்று பாராட்டுகிறார்கள். அத்தானிடம் போனைக்கொடு கோபி கதைக்க வேணுமாம்" என்றாள்.

"ரவி உங்களோடு உங்கள் சகலை அதாவது நிவேதாவின் ஹஸ்பெண்ட் கதைக்கப்போறாராம் இந்தாங்கோ"என்று போனைக்கொடுத்தாள்.

"ஹலோ" என்று அழைத்து ஆங்கிலத்தில் பேசினான் ரவி.

"ஹலோ ஹலோ எனக்கு ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி கிடையாது. தமிழிலே பேசுங்கள்"என்றார் கோபி.

அவர்களது உரையாடலைக் கேட்டுச் சிரித்தாள் சுவேதா. அம்மாவுடன் சகோதரிகள் இடைக்கிடையே கதைக்கையில் ரவியுடனும் கதைத்திருக்கிறார்கள். மருமக்கள் இதுவரை கதைத்ததில்லை. அவர்கள் ரவிசங்கரைச் சாதாண கடைக்காரன், தோட்டக்காரன் என்று நினைத்திருப்பார்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்கிருப்பவர்களை மட்டமாக நினைப்பதால்தான் உறவுப் பிணைப்புக்கள் இல்லாமல் போய்விடுகின்றன. ரவிசங்கரும் அவர்களும் வெகுநேரம் கதைத்து, மகிழ்ந்து, ஓய்ந்தனர்.

அந்த நேரம் பார்த்து மீண்டும் போன் மணி ஒலித்தது. ரவி சங்கர் எடுத்துக் கதைத்தான்.

"எப்ப நடந்தது? எங்க ஆஸ்பத்திரியிலையா? பயப்படத் தேவையில்லையா? சரி சரி நான் சொல்கிறேன்" என்று கூறிச் சுவேதாவிடம் விடயத்தைக் கூறினான்.

"ஐயோ பாவம்" என்று பதறினாள் சுவேதா.

OOOOOO

ஒருவரிடம் பணம் வந்து சேர்ந்து விட்டால் அவரைப் பெரிய மனிதனாகக் கொண்டாடுகிறது சமூகம். சங்கீதமோ, நடனமோ என்ன என்ற அடிப்படை அறிவு கூட இல்லாதவர்களை அரங்கேற்ற விழாவுக்கு பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் என்று அழைத்து மாலை, மரியாதை செய்கிறனர். படித்தவர்களே இப்படியான செயல்களைச் செய்யும் போது படிக்காதவர்களும் அதைப் பின்பற்றுவதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. கல்வியே அழியாத பெரும் சொத்து என்பதை மறந்து பணத்துக்கு அடிமையாகியிருக்கும் சமூகத்தில், புலம்பெயர்ந்து வாழ்வோருள் செல்லரித்துப்போன சில கொள்கையுடையோரும் இருக்கவே செய்கின்றனர். யசோ, நிவேதா படித்த பெண்களாயினும், அதிகம் படித்திராத வெளிநாட்டு மாப்பிள்ளைகளைக் கல்யாணம் செய்திருந்தனர். அந்த நாட்டில் கடை வைத்துள்ள ஒருவரிடம் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களே அவர்கள். அவர்கள் ரவி சங்கரை ஒரு சாதாரணமானவனாக நினைத்தே அவர்களுடன் இறுக்கமான உறவை வைத்துக் கொள்ளவில்லை. அதற்குத் தாய்மாரும் தூபம் போட்டுக் கொண்டு இருந்ததார்கள். யசோதா, நிவோதாவால் எதுவும் எதிர்த்துப் பேசமுடியாதிருந்தது. ஊருக்கு வந்து பார்த்த பின்பு ரவிசங்கரைப் பற்றிய உண்மை நிலவரங்களைப் புரிந்து கொண்டு அங்கே திரும்பிய பின்பு அக்கா குடும்பத்துக்கு இருக்கும் செல்வாக்குகள் பற்றிக் கூறியிருக்கின்றனர். அதனால் அவர்களுக்கிடையில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. யசோவும், நிவேதாவும் சுவேதாவிடம் தொடர்பு கொண்டு சுகநலம் விசாரிப்பது வழக்கத்தில் வந்துவிட்டது. யசோதா ஒரு நாள் கதைக்கும்போது, "அக்கா உண்மையிலேயே நீ கொடுத்து வைத்தவள் நாங்கள் இஞ்சையிருந்தாலும் உங்கே இருக்கும் சந்தோஷமோ, சிறப்போ இங்கு கிடையாது. ஏதோ நீ எங்களைப் படிப்பித்தபடியால் சாதாரணமாகவாவது வேலை செய்கிறோம். எங்கடை வேலைகள் பற்றி அறிந்தால் எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பார்கள். அத்தானுக்கும் உனக்கும் ஊரிலுள்ள கௌரவத்தை நேரில் பார்த்தபோது தான் எங்களுக்குள் உணர்ச்சி வந்தது. பணத்தாலை மகிழ்ச்சியை விலைக்கு வாங்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டோம்" என்றாள்.

"யசோ உண்மையில் நான் மகிழ்ச்சியாருப்பதாய் நீங்கள் நினைக்கலாம். எனக்குச் சகலதும், இருந்தும் ஒரு குறை வாட்டிக் கொண்டேயிருக்கிறது. அதுவும் இறப்பின் தறுவாயில் அம்மா கூறிய குழந்தை விடயம் என்னை மிகவும் பாதித்து விட்டது"

"அக்கா நீ வருத்தப்படாதே எப்படியும் உனக்கு நிச்சயம் குழந்தை கிடைக்கும். அதுவரை பொறுமையாயிரு. அத்தான்உனக்குக்கணவன்மட்டுமாசிறுபிள்ளைகளைப்போல உன்னுடன்ஜோக்அடித்து விளையாடும்குழந்தைபோலவும் இருக்கிறாரே. அது போதாதா? எனக்குப் பொறாமையிருக்கு. நீ இதைப் பெரிய குறையாக ஏன் நினைக்கி றாய்? நீ நிச்சயம் குழந்தைப் பாக்கியத்துடன் வாழ்வாய்"

"நீ என்னடி அவர் கதைக்கிற மாதிரியே கதைக்கிறாய்"

"நாங்கள் நம்பிக்கையுடன், பொறுமை காத்து இருந்தபடியால் தான் இன்று எங்கள் உறவு மலர்ந்துள்ளது. நம்பிக்கை தான் வாழ்வு. கடவுள் சோதனையின் பின்பு தான் நல்லதைக் கொடுப்பார். இன்னும் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டியே"

"இல்லைச் சொல்லு"

" நீ விரும்பியா கல்யாணம் செய்தனி? அம்மா, அப்பாவுக்காகத் தானே சம்மதிச்சனி. ஆனா உனக்கு அத்தான் கணவனாய் வர நீசெய்த புண்ணியம் தான் காரணம். எந்தக் குறையும் இல்லாமல் நிச்சயமாக நலமாக வாழ்வாய் வருத்தப்படாதே அக்கா"

"சரி சரி எல்லாரும் சந்தோஷமாயிருந்தால் சரி, நிவோதாவுக்கும் சுகம் சொல்லிவிடு"

"அவள் பக்கத்தில் தானிருக்கிறாள் போனை ஸ்பீக்கரில் விட்டு இருக்கிறேன்"

"அப்படியா? நிவேதா, பிள்ளைகள், மைத்துனர் எல்லோரையும் விசாரித்தாகக் கூறு. சரி இன்னொரு நாளைக்குக் கதைப்பம்" என்று போனை வைத்தாள். அவர்களின் உரையாடல்கள் முடிந்திருந்தபோதுதான் மீண்டும் போன் மணி ஒலித்ததும், ரவிசங்கர் எடுத்து விசாரித்ததும், சுவேதா ஐயோ பாவம் என்று பதறியதும் நடந்தது.

OOOOOO

## அத்தியாயம் 24



"என்னம்மா சுவேதா?" என்றார் அவ்விடம் வந்த சுந்தரமூர்த்தி.

"ஒன்றுமில்லை மாமா. மிஸ்ரர் விஸ்வலிங்கம் எங்கேயே போய்விட்டு வரும் வழியில் யாரோ வழிமறித்து அடித்துவிட்டார்களாம்" என்றார் ரவி.

"நல்ல மனிசராச்சே ஏன் அடிச்சார்கள் பாவிகள். எந்த ஆஸ்பத்திரியிலையாம் ரவி" என்றாள் சுவேதா.

"பெரியாஸ்பத்திரிதான்"

"போய்ப் பாப்போமா?"

"நாளை காலையில் போய்ப் பார்க்கலாம். நீ ஏன் அந்தரப்படுகிறாய். அடி விழுந்ததில் பைக்கோடை விழுந்திட் டார். பெரிய காயமில்லை. சில சமயம் இப்பவே மருந்து கட்டி அனுப்பிவிடுவார்கள் எதற்கும் காலையில் போய்ப் பார்க்கலாம்" என்றான்.

"சுவேதா! அவர் தான் சொல்லுறாரே சீரியஸ் இல்லை என்று. அப்புறம் என்ன? காலையில் விசாரித்துவிட்டுப் போய்ப் பார்க்கலாம்" என்றார் சுந்தரமூர்த்தி.

OOOOOO

இரவு படுக்கையில் படுத்திருந்தபோதும் அவள் மனம் விஸ்வலிங்கத்துக்கு நிகழ்ந்ததையே நினைவில் கொண்டிருந்தது.

"ஏன் ரவி. எதற்காக அவரை அடித்திருப்பார்கள். திருடர்களாயிருக்குமா?"

"நான் இதற்குப் பதில் சொன்னால் உனக்குப் பிடிக்காது. திருடர்கள் அவரை அடிக்கவேண்டிய அவசியமே இல்லை. உனக்கு விழ வேண்டிய அடிதான் அவருக்கு விழுந்தி ருக்கும். உன்னை அடிக்கமுடியாது என்பதும் அடித்தவர்களுக்குத் தெரியும். நீ எப்படிப்பட்டனி என்பதும் அவங்களுக்குத் தெரியும். அதனால் தான் வினை விதைத்தவருக்கே கிடைச்சிருக்கு என நினைக்கிறன்" என்றான்.

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியாமலிருக்கே. விளக்கமாய்ச் சொல்லுங்களேன்"


"நாளை நீயே விளக்கமாய்க் கேள்விப்படுவாய். ஏன் அடிச்சார்கள் எண்டு. உண்மையில் அடிச்சதைக் கூட மிஸ்ரர் விஸ்வலிங்கம் சொல்லாமல் மறைச்சு வேற கதை தான் சொல்லுவார். அப்போதும் உனக்கு விளங் காவிட்டால் நாளை நானே சொல்லுகிறன். பேசாமலிரும்" என்று அவளை இழுத்து அணைத்து முத்தமிட்டான்.

"விடுங்கள் என்னை! எனது அண்ணனைப் போன்றவர் அந்த மனிசன். அந்தாள் அடிபட்டு ஆஸ்பத்திரியிலிருக்கும் போது எங்களுக்கு இது தேவையா?" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கையை விலக்கிக் கொண்டே ரவிசங்கர், "தேவை தான் நிச்சயம் உனக்குக் கிடைக்க வேண்டிய ஒன்றுக்கு இது தேவை தான்" எனக்கூற எண்ணியவன் எதுவும் பேசாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான். இவளும் பேசாமல் படுத்திருந்தாள். சிறிது நேரம் கழித்து, அவன் தூங்கி விட்டான் என நினைத்துக் கொண்டு அவள் எழுந்து விஸ்வ லிங்கத்தின் வீட்டுக்குப் போன் செய்தாள். எவரும் போனுக்குப் பதிலளிக்காததால், அனைவரும் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருக்கலாம் என நினைத்தாள். கட்டிலில் வந்து இருந்தாள். சில நிமிடங்களின் பின் அவளுடைய போன் ஒலித்தது. எடுத்து, "ஹலோ" என்றாள்.

(தொடரும்)

> கல்வியே அழியாத பெரும் சொத்து என்பதை மறந்து பணத்துக்கு அடிமையாகியிருக்கும் சமூகத்தில், புலம் பெயர்ந்து வாழ்வோருள் செல்லரித்துப் போன சில கொள்கையுடையோரும் இருக்கவே செய்கின்றனர்.



தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

சிறைச்சாலைக்குள் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தப் பொருள்களையும் வைத்திருக்க அனுமதி இல்லை. கயிறு, கத்தி, நச்சுப் பொருள்கள், வயர் போன்றவற்றுடன் பணம், போதைப்பொருள்கள் போன்றன இருந்தால் சிறை அறைகளைத் திடீரெனப் பரிசோதனை செய்யும்போது அவற்றை எடுத்துச் செல்வர். இதற்கான முக்கிய காரணம், கைதி ஒருவர் தவறான முடிவெடுத்துத் தனது உயிரைத் தானேபோக்கிக் கொள்ள, அல்லது வேறு ஒரு கைதியைக் கொலை செய்ய அல்லது அவற்றைப் பயன்படுத்தித் தப்பி ஓடி விட வாய்ப்பிருக்க முடியும். இதனாலேயே சிறைச்சாலை நிர்வாகம் இதை நன்கு கவனிக்கிறது.

**30.6.2002 அன்று இரவு.** தங்காலைச் (இலங்கையின் தென் கரையோரப் பகுதி) சிறைச்சாலையில் இருந்த தீங்கியல் கைதிகளில் 18பேர் சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்துக்குள் புகுந்து ஆயுதங்களைக் கைப்பற்றி, சிறைச்சாலை ஊழியர்களைப் பணயம் வைத்துத் தம்மை உடனடியாக விடுவிக்க ஆவண செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

**01.7.2002 அன்று காலை.** சிறைச்சாலை ஆணையாளர், உள்துறை அமைச்சர் (சிறைச்சாலைக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன் அமரதுங்கவும், அப்போதைய எதிர்க்கட்சி அமைச்சர் மகிந்த ராஜபக்சவும் தங்காலைச் சிறைச்சாலைக்குச் சென்று நிலைமையைச் சமாளித்தனர். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர் என்றும் செய்திகள் வந்தன. சிறைச்சாலையில் இருந்து தப்பி ஓட முற்படும்போது பிடிபட்டாலேயே கடுமையான தண்டனைகள் கொடுப்பார்கள். ஆயுதங்களையும் கையில் எடுத்துக் கலகம் செய்தததால் அவர்களுக்குரிய தண்டனைகள் எப்படியிருக்கும் என்று எங்களால் ஊகித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வாறான முயற்சிகளுக்குச் சிறைச்சாலை நிர்வாகம், அரசு பணிந்து போனால் பின்னர் தீங்கியல் கைதிகளின் கை எல்லா மட்டங்களிலும் ஓங்கிவிடும் என்பதால் ஏனைய கைதிகள் பயந்து போகும் அளவுக்கு இத்தகைய சம்பவங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவது உண்டு. தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தீங்கியல் கைதிகளைத் திறந்து வெளியே விட்டால் இரண்டு வருட காலப்பகுதிக்குள் மிக மோசமான குற்றச்செயல்களைச் சந்திக்க வேண்டி வரும்.

8

■ ■ ■ ■

தடைசெய்யப்பட்ட பொருள்களைச் சிறைச்சாலைக்குள் கொண்டு வந்து கைதிகளுக்கு அதிக விலைக்கு விற்பவர்கள் ஒரு சில சிறைச்சாலை ஊழியர்களே. சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உள்ள இன்னொரு பொறுப்பு கைதிகளின் வழக்குத் தொடர்பான கோவைகளை இரகசியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பது. ஒரு கைதி பற்றிய ஏதாவது தகவல்கள் வெலிக்கடைத் தலைமை அலுவலகத்தில் இருந்து வந்தாலும் உடனடியாகக் கைதிக்கு எதையும் கூற மாட்டார்கள். ஒரு கைதியை வேறு சிறைச்சாலைக்கு மாற்றும் உத்தரவு கிடைத்தால் அது பற்றி உடனடியாக அறிவிக்க மாட்டார்கள். குறிப்பிட்ட கைதியை மற்றைய சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்ட பின்னர், சிறைச்சாலை அறைகள் பூட்டப்பட்டிருக்கும் வேளை குறிப்பிட்ட கைதி தங்கியிருக்கும் அறையைத் திறந்து அவரை அவரது பொருள்களை எடுத்து வருமாறு சொல்லி அங்கிருந்து வெளியே கூட்டிச் செல்வர்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் மற்றவர்களுடன் கதைக்கவோ, வேறு பொருள்களைக் கைமாற்றவோ அவகாசம் கொடுக்க மாட்டார்கள். சிறைச்சாலை ஊழியர்களின் நேரடிக் கண்காணிப்பில் அவசர அவரசரமாக இது நடைபெறும்.

■ ■ ■ ■

சில கைதிகள் பொலிஸ் அல்லது இராணுவப் பிரிவுடன் இணைந்து செயற்பட்டுக் கைதிகள் பலரைச் சித்திரவதை செய்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட கைதிகள் உள்ள சிறைகளில் அவர்களை அடைக்க மாட்டார்கள். ஏனெனில் பாதிக்கப்பட்ட கைதிகள் அவ்வாறானவர்களுடன், முரண்பட, கொலை செய்ய வாய்ப்புண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் விசாரணையாளர்களின் (பொலீஸ் அல்லது இராணுவம்) வேண்டுகோளுக்கு இணங்க அந்த நபரைச் சிறைச்சாலையில் சிறப்புப் பாதுகாப்புடன் வைக்குமாறு நீதிபதி உத்தரவிடுவார். அதன்படி அவர்கள் தனியாகவே அடைக்கப்படுவார்கள். பெரும்பாலும் சிறைச்சாலை மருத்துவ சாலைகளில் அல்லது ஏனைய கைதிகளுடன் தங்க வைக்கப்படுவார்கள்.

சிறைச்சாலைக்குள் கைதிகளை அடையாளப்படுத்துவதற்கு அடையாள அட்டைகள் இருப்பதில்லை. சிலவேளை ஒரு கைதியின் பெயரைப் பயன்படுத்தி இன்னொரு கைதி தப்பிவிட வாய்ப்பேற்படும். இதற்காகவே நீண்டகால தண்டனை பெற்ற கைதிகளைத் தனியாக அடைத்து வைப்பதுடன், வெள்ளை உடுப்புக்களும் வழங்கப்படுவதுண்டு. நீண்ட காலம் சிறைத் தண்டனை பெறவேண்டிய ஒரு கைதியோ அல்லது தூக்குத் தண்டனை உறுதியான ஒரு கைதியோ விடுதலையாகவுள்ள ஒரு கைதியின் பெயரில் தப்பிப் போய்விட்டால் சிறைச்சாலை நிர்வாகத்தால் எதுவும் செய்ய முடியாது. அதேவேளை ஆள்மாறாட்டம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பெயருக்குரிய கைதியைச் சட்டப்படி விடுதலை செய்தே ஆகவேண்டும்.

சாவுத்தண்டனை பெற்ற கைதிகள், நீண்டகாலச் சிறைத் தண்டனை பெற்ற கைதிகள் ஆகியோரது அறைகளைச் சோதனை செய்யும்போது வர்ண உடுப்புக்கள் ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டால், குறிப்பிட்ட கைதி தப்பியோடுவதற்காக அவற்றைப் பயன்படுத்தவிருந்தார் எனக் குற்றம் சுமத்தப்படும்.

■ ■ ■ ■

போகம்பரை சிறைச்சாலையில் இரவு 10மணிவரை சிறிய ஒலிபெருக்கி ஒன்றின் மூலம் சிங்களப் பாடல்களை (சிறியளவான சத்தத்தில்) ஒலிக்கவிடுவார்கள். அந்தப் பாடல்கள் நிறுத்தப்பட்டவுடன் சகல கைதிகளும் படுத்துவிட வேண்டும். அதன் பின்னர் யாராவது எழும்பியிருந்தால் அவர் சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கான திட்டத்தை வகுத்தார் எனக் குற்றம் சுமத்தப்படும்.

எல்லாச் சிறைச்சாலைகளிலும் அந்தக் கட்டடத்திலுள்ள பெரிய (பிரதான வாயில்) கதவு முழுவதுமாகத் திறந்திருப்பதில்லை. ஒருவர் மட்டுமே புகக்கூடியதாக அதிலிருக்கின்ற சிறிய கதவு மட்டுமே திறந்திருக்கும். அந்தக் கதவில் ஒரு சிறிய துவாரம் போடப்பட்டிருக்கும். வெளியே நிற்பவர் அதில் பொருத்தப்பட்டுள்ள சிறிய இரும்புத்துண்டை எடுத்துக் கதவில் தட்டுவார். உள்ளே கடமையில் இருப்பவர் கதவின் சிறிய துவாரத்தினூடாக யார் வந்திருக்கிறார்? என்று உறுதிப்படுத்திய பின்னே கதவைத் திறப்பார்.

ஒரு கைதிக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படும்போது ஏனைய கைதிகள் அனைவரையும் அறைகளில் பூட்டிவிட்டுச் சிறைச்சாலையின் பிரதான கதவு உட்பட சகல கதவுகளையும் திறந்துவிடுவார்களாம். ஏனெனில் ஒருவருக்குத் தூக்குத்தண்டனை நிய மிக்கப்பட்ட நேரத்தில் சற்று முன்னதாக அந்தத் தண்டனையை நீக்கும் உத்தரவை மேலிடங்கள் பிறப்பிக்க வாய்ப்பு உண்டு. அதற்கான உத்தரவுக் கடிதத்து டன் அரச வாகனங்கள் தூக்குத்தண்டனை நிறைவேற்றும் இடத்துக்கு அதிகாரிகளுடன் அவசரமாக வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பிலேயே அவ்வாறு திறந்துவைக்கப்படுகிறது. (தற்போதுள்ள தொலைத்தொடர்பு வசதிகள் அப்போது இருக்கவில்லை)

■ ■ ■ ■

ஒரு மனிதனைச் சிறையில் போட்டு அடைக்கும் பக்குவம் ஒரு சிறைச்சாலை ஊழியருக்கு இருக்கவேண்டும். இது 'பாவம்' என்று நினைத்தால் ஒரு மனிதனைப் பூட்டிவிட்டுப் போய் அவரால் நிம்மதியாக இருக்க முடியாது. இது ஒரு தொழில் ரீதியான தேவையாக இருப்பினும் கால கதியில் சிறைச்சாலை ஊழியரின் மனோநிலை இறுகிவிட வாய்ப்புண்டு. இது ஓர் உளவியல் ரீதியான மாற்றமாகக் கூட இருக்கலாம். அவர் தன்னைத் தயார்ப்படுத்தவில்லையாயின் அந்த வேலையைக்கைவிட வேண்டியநிலைஏற்படும். இரவில் சிறைச்சாலைகளின் அறைகள் பூட்டப்பட்ட பின் அந்தத் திறப்புகளைப் பொறுப்பதிகாரி கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைப்பார். இந்த அறையில் ஓர் அதிகாரி எந்த நேரமும் கடமையில் இருப்பார். இவர் ஓர் 'இன்சார்ச்' அதிகாரியாக இருப்பார். சிறைச்சாலை யின் முழுத் திறப்புகளும் அங்குதான் வைக்கப்பட்டிருக்கும். திறப்புக்களை மீண்டும் பெறுவதாக இருந்தால் கடமையிலுள்ள ஜெயிலரின் அனுமதியுடன் தான் பெறமுடியும். பிரதம ஜெயிலர் அல்லது சிறைச்சாலை அத்தியட்சகர் போன்ற உயர் அதிகாரிகள் எந்த நேரமும் திறப்புக்களைப் பெறமுடியும். சாதாரண ஊழியர்களின் கையில் திறப்பு இருந்தால் அவர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து அல்லது கொலை அச்சுறுத்தலைக் கொடுத்து திறப்பைப் பெற்றுக் கைதிகள் வெளியேறிவிட வாய்ப்புண்டு.

■ ■ ■ ■

2001ஆம் ஆண்டு 48வரையான கைதிகள் (தூக்குத் தண்டனை, நீண்ட கால சிறைத்தண்டனை கைதிகள்) போகம்பரை சிறையிலிருந்து தப்பியோடுவதற்கான திட்டமொன்றை வகுத்தனர். தாம் வெளியேறுவதற்குத் திட்டம் வகுத்த கதவுத் திறப்பை ஒத்ததாக இரண்டு திறப்புக்களைத் தயாரித்திருக்கிறார்கள். இரண்டையும் வேறு வேறு இடங்களில் ஒழித்து வைத்துள்ளார்கள். திறப்பு செய்தவுடனேயே தப்பியோடும் திட்டம் தீட்டப்பட்டபோதிலும் சில கைதிகள் நாள், நட்சத்திரங்கள் எனச் சாத்திரம் பார்த்திருக்கிறார்கள். இதனால் நாள் ஒன்றைத் தீர்மானிப்பதில் இழுபறி நிலை இருந்திருக்கிறது. இதை அறிந்த ஒரு தூக்குத்தண்டனைக் கைதி அவர்களின் திட்டத்தைச் சிறைச்சாலை நிர்வாகத்துக்குத் தெரிவித்துவிட்டார்.

கைதிகளால் தயாரிக்கப்பட்ட போலியான திறப்பில் ஒன்று சிறைச்சாலை ஊழியர்களால் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. மற்றத் திறப்பைக் கண்டுபிடிப்பதற்கு எடுத்த முயற்சிகள் பயனளிக்காததால் அவ்வளவு கைதிகளும் மற்றவர்களுடன் தொடர்பில்லாத 'மக்சிமம்' பகுதிக்கு மாற்றப்பட்டனர். அவர்கள் தப்பியோடுவதற்குத் திட்டமிட்ட தூக்குத் தண்டனை அறையின் உக்கிப்போன அறைக் கதவுகள் மாற்றப்பட்டுக் கதவுகளுக்குப் புதிய பூட்டுக்களும் போடப்பட்டன. இவ்வாறு தப்பிப் போகவிருந்த குழுவில் செம்மணி -கிருசாந்தி கொலைவழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ராஜபக்சவும் இடம்பெற்றிருந்தார்.

■ ■ ■ ■

ஒரு கைதியை உறவினர்கள் பார்வையிடுவதாக இருப்பின் சிறைச்சாலைப் பதிவுப் புத்தகத்தில் பதிந்த பின்னர் சிறைச்சாலையிலுள்ள 'வருகை தரும்' அறைக்குள் வைத்துச் சந்திக்க முடியும். அவ்வாறில்லாமல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்போது அவர்களை உறவுக்காரர்கள் பார்ப்பதாயின் நீதிபதியின் அனுமதி பெறப்படல் வேண்டும். அனுமதி பெற்றாலும் பெறாவிட்டாலும் ஐந்து நிமிடங்க ளுக்கு மேல் கதைப்பதற்கு அனுமதியளிக்க மாட்டார்கள். அனுமதியளிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த ஐந்து நிமிடங்களுக்குள் 'இனிப் போங்கோ காணும்" என்று அவர்களை அவசரப்படுத்தும் போது கைதியின் நிலை சங்கடமாகவிருக்கும். உறவுக்காரர் ஏதாவது கையூட்டுத் தருவதாகச் சொன்னால் அதன்பின் 10 நிமிங்களாவது கதைக்கவிட்டுக் கதைத்தவர்களிடம் காசு வாங்குகின்ற சில ஊழியர்களையும் நான் கண்டிருக்கிறேன்.

(தொடரும்)

கவிதை

த.சர்மினி




# நிஜங்கள் சில...

எது நிச்சயம்?

பெண்கள்
போகப் பொருள் என்ற
கண்ணோட்டம்
நியாயமானதா?

வெற்றி நிச்சயம்
சாதனைகள்
முயற்சிகளில் மட்டுமல்ல
கனவிலும். கற்பனையிலும்கூட
நிறைவு பெறும்

சிறுவர்
சிறுவர் தம்முடைய
நிலைகளை
இழந்து
வாழ்வது என்பது
நியாயமானதா?



கட்டுரை

ந.லோகதயாளன்




# மாகாணசபையிடம் மாட்டிக்கொண்ட ‘கணிப்பீட்டு கருவிகள்’

முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தும்போது சாரதிகளால் அறவிடப்படும் கட்டுப்பாடு அற்ற கட்டண அறவீடுகள் தொடர்பில் நீண்ட காலமாகத் திருப்தியற்ற கருத்துக்கள் இருந்து வருகின்றன. இது குறித்த கருத்துக்களுக்கு முற்றுப் புள்ளியிடும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்புடையவர்கள் இது வரை எந்த நடவடிக்கையுமே மேற்கொள்ளாது காலம் கடத்துவது ஏன்? என்ற கோள்வி பூனைக்கு மணி கட்டப்போவது யார் என்பது போல் ஆகிவிட்டது. நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பாளிகளை அடையாளம் காண்பதற்கே பல காலங்கள் இழுபட்டிருக்கிறது. அடையாளம் காணப்பட்ட பொறுப்பாளிகள் வசம் ஏலவே ஆற்றப்படாமல் பல காரியங்கள் பொறுப்பாகவிருக்கின்றன. அத்துடன் பத்தொடு பதினொன்றாகியிருக்கிறது முச்சக்கர வண்டிகளுக்கான குறித்த கணிப்பீட்டுக் கருவிகள் (மீற்றர்) விடயமும்.

## முச்சக்கர வண்டிகளின் தேவை

இலங்கையின் போக்குவரத்துத் துறையில் பஸ்கள், ரயில்களுக்கு அடுத்த படிநிலையில் முச்சக்கர வண்டிகளே முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்து மார்க்கமாகக் காணப்படுகின்றன. ‘பிரசவத்துக்கு இலவசம்’, ‘முகவரி தெரியா ஒழுங்கைகளையும் ஆட்டோக்காரன் அறிவான்’ என்பன முச்சக்கர வண்டிகளுக்கான தனித்துவச் சொல்லாடல்களாகக் காணப்படுகின்றன. ஆனாலும் பயணிகளை வாடகைக்கு அமர்த்துகிறபோது பயணிகளுக்கும் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கும் இடையே பயணக் கட்டணம் தொடர்பாகக் குறை நிறைகள் நிலவாமல் விடுவதில்லை.

## ‘மீற்றர்’ பொருத்தினால் முரண்கள் குறையும்

இலங்கையில் அதிக வாகன நெரிசலும், அதன் காரணமாகப் போக்குவரத்தில் தாமதம் ஏற்படும் இடமாகவும் தலைநகர் கொழும்பு காணப்படுகிறது. கொழும்பில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளில் 90வீதமானவை, கட்டணக் கணிப்பீட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவ்வாறு போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் முதலாவது கிலோ மீற்றர் வரை பயணிப்பதற்கு 50ரூபாவையும், தொடர்ந்து பயணிக்கின்ற அடுத்த ஒவ்வொரு கிலோ மீற்றர்களுக்கும் 40 ரூபாவையும் அறவிடுகின்றன. அதேநேரம் காத்திருக்கும் நிலமை ஏற்படின் மணித்தியாலத்துக்கு 100ரூபாவைக் காத்திருப்புக் கட்டணமாகக் கோருகின்றன. தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து கிலோ மீற்றருக்கான பயணக்கட்டணத்தை மேலும் 10 ரூபா வரையில் அதிகரிக்கக் கோருகின்றனர். அதாவது முதலாவது கிலோ மீற்றருக்குப் பயணிப்பதற்கு 60ரூபாவையும் அடுத்து ஒவ்வொரு வரும் கிலோ மீற்றர்களுக்கும் 50ரூபாவையும் அதிகரிக்க அனுமதி கோருகின்றனர்.

## வடக்கில் நிலை தலை கீழ்

கணிப்பீட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டுப் பயணகாரர்களால் வாடகைக்கு அமர்த்தப்படும் கொழும்புபோன்ற பகுதிகளில் பயணக் கட்டணம் தொடர்பான முரண்பாடுகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கின்றன. ஆகையால் இதன் சாதகத் தன்மையைக் கருதி முச்சக்கர வண்டிச் சாரதிகள் முன்வைத்திருக்கும் மேற்குறித்த கட்டண அதிகரிப்புத் தொடர்பில் பரீசீலனை செய்யவும், கிலோ மீற்றருக்கு 60ரூபாவுக்கான அனுமதியை வழங்குவது தொடர்பாகவும் மேல்மாகாணப் போக்குவரத்து ஆணைக்குழு அடுத்த கட்டத்துக்கு நகர்வதற்குத் தயக்கத்துடன் ஆராய்ந்து வருகிறது. ஆனால், வடக்கு மாகாணத்தின் நிலமையோ தலைகீழாக உள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது தனியார் முச்சக்கர வண்டிச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயிரத்து 430வரையான முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக் குறித்த சங்கத்தின் தலைவர் இருதயராயா தெரிவிக்கிறார். இதேநேரம் சங்கத்தில் பதிவு இன்றி 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் சேவையில் உள்ளன. இவ்வாறு காணப்படும் முச்சக்கர வண்டிகள் எவற்றுக்குமே கட்டணக் கணிப்பீட்டுக் கருவிகள் கிடையாது. இங்குள்ள முச்சக்கர வண்டிகளுக்குக் கணிப்பீட்டுக்கருவிகளைப் பொருத்துகின்ற பணியோ மாவட்ட செயலகம், மகாண சபை எனத் தேங்கிக் கிடக்கின்றது.

## சிக்கல்கள்

கொழும்பு நகரில் 5கிலோ மீற்றர்கள் தூரப் பயணத்தை அரை மணி நேரம் ஆகினாலும் நிறைவுசெய்துவிட முடியாது. யாழ்ப்பாணத்தில் அந்த அளவு தூரத்தைக் கடப்பதற்கு 15நிமிடங்கள்கூடத் தேவை அற்றவை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் எரிபொருள் ஒரே விலையில்தான் இருக்கிறது. ஆனால், கொழும்பில் 5கிலோமீற்றருக்கு 210ரூபா செலுத்த, யாழ்ப்பாணத்தில் 400ரூபாவைத் தாண்டி 500ரூபா வரையில் பெறப்படும் நிலமை காணப்படுகின்றது. இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர வண்டிகளின் சங்கத் தலைவரிடம் கேட்டபோது, “முச்சக்கர வண்டிச் சாரதிகள் அனைவரும் கட்டண அறவீட்டில் தவறு விடுவது கிடையாது. ஒரு சிலர். அவ்வாறு அதிக கட்டண அறவீட்டை மேற்கொள்ளக்கூடும். ஏனையோர் நியாயமான கட்டணத்தையே அறவிடுகின்றனர்” என்கின்றார். கட்டணக் கணிப்பீட்டுக் கருவி (மீற்றர்) பொருத்துவது தொடர்பில் அவர் கருத்தேதும் கூறவில்லை.



## மாகாணசபையே பொறுப்புடையது!

குறித்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலாளரும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவருமான நா.வேதநாயகனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

“முச்சக்கர வண்டிச் சாரதிகளில் கட்டண அறவீடு தொடர்பில் பலரும் பலதடவைகள் முறையிட்டதைத் தொடர்ந்து கணிப்பீட்டுக் கருவிகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒரே தடவையில் அதிக அளவிலான கணிப்பீட்டுக் கருவிகளைப் பெறுவது கடினம். அதிக நிதியை ஒரே தடவையில் செலவு செய்வதற்கான சிரமம் குறித்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இவற்றின் மத்தியிலும் மாற்று ஏற்பாட்டின் மூலம்போதிய கட்டணக் கணிப்பீட்டுக் கருவிகளைத் தருவித்து முச்சக்கர வண்டிகளுக்குப் பொருத்திவித்து மக்களுக்கும் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கும் எந்தவிதமான மனக் கசப்பும் அற்ற இயல்பான போக்குவரத்துக்கு வழி சமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் வடக்கு மாகாண சபை சார்பில் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் எமக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில் குறித்த விடயம் மாகாண சபைக்கு உட்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாகக் குறித்த திட்டத்தில் இருந்து நாம் பின்வாங்கும் நிலமை ஏற்பட்டது. இதனால் இது தொடர்பான நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபையே விரைந்து எடுக்க வேண்டும்” என்றார்.

மக்களுக்கான குறித்த சேவை இப்படியாக இழுபட்டுக் கொண்டிருக்கிறது. குறித்த விடயத்தில் வடக்கு மாகாண சபையே அசமந்தப்போக்காக இருப்பதாகப் பலரும் விமர்சிக்கத் தொடங்கியிருக்கின்றனர். “உண்மையில் யாழ். மாவட்டச் செயலகம் மக்களுக்கு ஆற்றவிருந்த இந்தப் பணிக்கு வடக்கு மாகாண சபை தடையாக இருந்துள்ளது. மாவட்டச் செயலரை அந்தப் பணியை மேற்கொள்ள அனுமதித்திருந்தால் 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதமே அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் மீற்றர்கள் பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சு எழுதிய கடிதம் அதைத் தடுத்துவிட்டது” என்று இது தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கருத்துரைத்தமையைக் கவனத்தில் கொள்ளலாம். எப்படியிருப்பினும், முச்சக்கர வண்டிகளுக்கான ‘மீற்றர்’கள் அனைத்தும் இறுதியாக வடக்குமாகாணசபையிடம் போய் மாட்டிக் கொண்டுவிட்டன. அவற்றுக்கு இனி எப்போதுதான் விடிவோ?

**கட்டுரையாளர்- மாநகர சபை உறுப்பினர்.**

தொகுப்பு

அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து





## பொது அறிவு

துறைநீலாவணையைச் சேர்ந்தவரும், பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞருமான ஓய்வுபெற்ற அதிபர் அமரர் சா.சரவணமுத்து ஞாபகார்த்தமாகக் கல்முனை கல்விவலய உயர்தர வகுப்பு பாடசாலை மாணவரிடையே பொது அறிவுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது. மாணவர்களின் பொது அறிவு வான்மையை வெகுவாக வெளிப்படுத்திய இந்தப்பொது அறிவுச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர முன்னாள் ஆணையாளர் எஸ். நவநீதன், சமுர்த்தி முகாமையாளர் கே.விஜயராஜா ஆகியோரின் நெறிப்படுத்தலுடன் இடம்பெற்ற இறுதிச் சுற்று மற்றும் பரிசளிப்பு விழாவில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.மகேஸன் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை உவெஸ்லி 'பி' அணி சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்றது.

***மிகப் பொருத்தமான ஞாபகார்த்த நிகழ்வு இது!***

## போதைப் பொருள் பாவனை

"கல்முனை மாநகர சபைப் பிரிவில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என கல்முனை மாநகர சபையில் பெண் உறுப்பினரான



மூத்த சட்டத்தரணி சூரிக்கா காரியப்பர் குரல் எழுப்பியுள்ளார். கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது இது தொடர்பான பிரேரணை ஒன்றை முன்வைத்த உறுப்பினர் சூரிக்கா காரியப்பர் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையேயும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகப் பெரும் கவலை வெளியிட்டார்.

போதைப்பொருள் பாவனை, விற்பனைக்கு எதிராக மாநகர சபையால் பேரணி ஒன்றை நடத்துவது எனவும், பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவது எனவும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

***பொறுப்புக்கூற வேண்டிய சபையல்லவா?***



## அதிகாரம் அதிகாரம்

கல்முனை மாநகரசபையின் மாதாந்த அமர்வு மாநகர முதல்வர் (மேயர்) சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்களின், குறிப்பாக உபகுழுக்களின் அதிகாரங்கள் தொடர்பில் பெரும் வாதப்பிரதிவாதங்களும், சர்ச்சைகளும் இடம்பெற்றன.

இதன்போது, "ஒரு கட்டத்துக்கு அமைவாகவே என்னால் செயற்பட முடியும். உங்களுக்கு அதை மீறி அதிகாரம் வேண்டுமானால் நீதிமன்றம் சென்று அதிகாரத்தைப் பெற்று வாருங்கள்" என மேயர் றகீப் சூடாகப் பதிலளித்தார்.

நிதிக்குழுவின் ஆலோசனைகளான தீர்மானங்களை தமது மேயர் என்ற தற்துணிவில் நிறைவேற்றுவதாக மேயர் றகீப் அறிவித்தார்.

## நினைவுகூரல்

முன்னாள் அமைச்சரும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக இருந்தவருமான கல்முனை அபிவிருத்தியின் முன்னோடி மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வில் நினைவு கூரப்பட்டார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் எம்.ஏ.றகீப் தலைமையில் நடைபெற்றபோது மர்ஹூம் மன்சூரின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி உறுப்பினர்கள் பலரும் அன்னாரை நினைவுகூர்ந்து உரையாற்றினர். குறிப்பாகப் பிரதி மேயர் காத்த முத்து கணேஷ் உரையாற்றுகையில்,



"கல்முனைத் தொகுதியில் அதிக தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு முன்னின்று உழைத்த பெருந்தகை முன்னாள் அமைச்சர் மர்ஹூம் மன்சூர்" எனப் புகழாரம் சூட்டினார்.

கல்முனைக் குடியில் ஓர் உள்ளூர் வீதிக்கு மர்ஹூம் மன்சூரின் பெயரைச் சூட்டுவது எனவும் சபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

***மக்கள் மனம் வென்ற மக்கள் பிரதிநிதி மர்ஹூம் மன்சூர்***



## பேரீச்சம்பழம்

சவூதி அரபிய நாடுகளின் சீதோஷ்ண நிலையில்தான் பேரீச்சை மரங்களை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை எல்லோரிடத்திலும் முன்னர் இருந்தது. ஆனால் நமது நாட்டின் சீதோஷ்ண நிலையிலும் பேரீச்சை மரங்களை வளர்த்துப் பயன்பெற முடியும் என்பது காத்தான்குடி போன்ற சில பிரதேசங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் நிந்தவூரில் வீடொன்றில் வளர்த்த பேரீச்சை மரம் ஒன்றில் குலை, குலையாகக் காய்கள் காய்த்துக் குலுங்கும் காட்சியைத் தற்சமயம் காண முடிகின்றது.

***முடியாதது என்று ஒன்றுமில்லை***

## போசாக்குக் கண்காட்சி

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் போசாக்குக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்து நடத்தியது.


போஷாக்கு உணவு வகைகள், உணவுப் பழக்கங்கள், தொற்றா நோய்கள் என்பன போன்றவற்றைத் தெளிவுபடுத்தும் பொருள்கள் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்நீமா அமானுஸ்லா தலைமையில் இடம்பெற்ற கண்காட்சியை கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எஸ்.அலாவுதீன் வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

பெருந்தொகையான பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன் அடைந்தனர்.



சிறுகதை

மாகியப்பிட்டி ஆனந்தன்



# 'உலகக் கோப்பை

உங்களுக்கெல்லாம் நன்கு பரீட்சயமான சொல் அது. கேள்விப்படாத ஆள்கள், "அவ்வளவு பெரிய சாப்பாட்டுக் கோப்பையோ?" என்று கேட்டால் அர்களுக்கு விளக்கம் சொல்வது தேவையில்லாத வேலை. சும்மா சொல்லக் கூடாது உலகம் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கிப் போட்டுத்தான் ஓய்ந்திருக்கிறது அந்தப் போட்டி. எனக்கும் கால் பந்தாட்டம் என்றால் சின்னவயசிலை இருந்து நல்ல விருப்பம். என்னுடைய மகன் அறிவழகனுக்கும் கால்பந்தாட்டம் என்றால்போதும். படிப்பிலும் கெட்டிக்காரன்தான்.

மாணவர்களுக்கு அறிவு பெருகுவதற்குக் கல்வி எவ்வளவுக்கு முக்கியமோ, அந்தளவுக்கு உடல் ஆரோக்கியத்துக்கு விளையாட்டும் தேவை என்று நினைக்கிறவன் நான். என் மனைவி கூட கண்ட கண்ட தேவையில்லாத நிகழ்ச்சிகளை, மெகா சீரியல்களைப் பார்த்துப் பொழுதை வீணடிக்கிறவளில்லை. யாரும் தொலைக்காட்சிச் சீரியல்களைப் பற்றிக் கதைத்தால்போதும். என் மனைவிக்கு எரிச்சலும் கோபமும் பொத்துக் கொண்டு வரும். "உதுகளைப் பார்த்துப் பார்த்து உள்ள மூளையையும் மழுங்கடிக்கிறியளே. அறிவுள்ளதுகள் உதுகளைப் பாக்குங்களே? அவங்கள் வருசக் கணக்காக ஒரு நாடகத்தை இழுத்தடிச்சுப் பேய்க்காட்டுறாங்கள். நாடகத்தை எழுதிறவனுக்கே அது என்ன கதையெண்டு தெரியுமோ தெரியாது. பேய்ச்சனம் பார்த்துப் பார்த்து வாயாலை ஊத்துதுகள்" என்று பேசுவாள். இந்த விசயத்தில் நானும் என்னுடைய மனைவி வேணியின் பக்கம்தான்.

அதோட உந்த சன்சிங்கர், சுப்பர்சிங்கர் எண்டு நிகழ்ச்சிகள் நடக்குதெல்லே.·சின்னப் பிள்ளையளைச் சினிமாப் பாடல்களைப் பாடவைத்து, கரகோசம் செய்து பாராட்டி, அந்தப் பிள்ளைகளை கெடுக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகளும் எனக்குப் பிடிக்காது. படிக்கிற வயதிலே சின்னப் பிள்ளைகளுக்கு ஏன் சினிமாப் பாட்டு? சின்னப் பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரரா இருக்கவேணும். இல்லையெண்டால், விளையாட்டில் கெட்டிக்காரர இருக்கவேணும். இந்தச் சினிமாப் பாட்டுகளை விட்டு விட்டுத் தமிழிசை, பண்ணிசை என்று பாடித் தங்கள் திறமையைக் காட்டச் சந்தர்ப்பம் அளித்தால் பரவாயில்லை. அதை நான் பாராட்டுவேன்.

சரி, அது கிடக்கட்டும் நான் சொல்ல வந்த விசயத்தைச் சொல்லுறன். ஒரு மாதமாய் ரஷ்யாவில் கால்பந்தாட்டப் போட்டி நடந்ததுதானே. வீட்டு ரீவியில் போட்டியைப் பார்த்தால், மகனுடைய படிப்புக் குழம்பிவிடும் என்று வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருக்கும் நண்பன் சரவணனின் வீட்டுக்குப் போய் விளையாட்டுப் போட்டியைப் பார்ப்பது வழக்கம். ஒரு நாள் இரண்டு நாளல்ல. தினமும் இதே வேலை என்றால்? மனைவி வேணி பொறுத்துக் கொண்டிருப்பாளே? புறுபுறுக்கத் தொடங்கிவிட்டாள்.

ஒருநாள், "உதே உங்களுக்கு வாடிக்கையாய்ப் போச்சு. ஒவ்வொரு நாளும் பன்னிரெண்டு மணிக்கு நீங்கள் வரும் வரை நான் நித்திரை கொள்ளாமல் கேற்றையும் பூட்டாமல் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஊரிலை என்னென்ன நடக்குதெண்டு தெரியாதே? உங்களுக்கு அதைப் பற்றிச் சிந்தனை ஏதுமிருந்தால்தானே? சொல்லிப் போட்டேன். இனிக் கேற்றைப் பூட்டிப் போடுவன். ஏலுமெண்டால் ஏறிக் குதிச்சு வாங்கோ" என்றுவிட்டாள்.

இதென்னடா வம்பாய்ப் போச்சு. போட்டிகள் உச்சக் கட்டத்தை அடையிற நேரத்தில இவள் இந்தப் போடு போடுகிறாளே? மூன்று வயதுப் பிள்ளை கேற்றை ஏறிக் குதிச்சாலும் குதிக்கும் ஆனால், நான் ஏறிக் குதிக்கமாட்டன். அப்படி ஏறிக் குதிச்சனெண்டால் அன்றோடு உலகம் அழியும்.

"இஞ்சை பார் வேணி! இன்னும் மூன்று நாள்களிலை போட்டியெல்லாம் முடிஞ்சிரும். தயவு செய்து அது மட்டும் பொறுத்திரும்" என்றேன். மனைவி இறங்கி வருவதாகக் காணோம். "உங்களாலை உங்கடை மகனின் படிப்பும் கெட்டுப் போகுது. நீங்கள் இரவிலை விளையாட்டுப் பார்க்கப்போகும் வரையும் புத்தகத்தை எடுத்து வைச்சுக் கொண்டு படிக்கிறதாகப் பேய்க்காட்டுவான். நீங்களும் வெளிக்கிட அவனும் புத்தகத்தை மூடி வைச்சிட்டு ரீவிக்கு முன்னாலை குந்திடுவான்" என்றாள்.

"ஓகோ கதை அப்படிப் போகுதோ?" என மனதுக்குள் எண்ணிக் கொண்டு "ஏனப்பா ரியூசன் மாஸ்ரர் வாறேல்லையே?" எனக் கேட்டேன். "ரியூசன் மாஸ்ரரோ? அவரும் உங்களுக்குத்தோதான ஆள்தான். படிப்பிக்கிறன் எண்ட பேரிலை எட்டு மணி மட்டும் ஏதேதோவெல்லாம் அலம்புவார். அவரும் கால்பந்தாட்டப் போட்டி பாக்கிறவராம். போட்டி எல்லாம் முடிஞ்ச பிறகு கூடுதல் நேரம் படிப்பிக்கிறன் எண்டு சொல்லி, அசடு வழிந்து விட்டுப் போய்விடுவார். இந்த வருசம் ஓ.எல் எடுக்கிறான் அறிவு. கடைசியாக ஒவ்வொரு கேள்விக்கும் மெஸ்ஸி என்றும் றொனால்டோ என்றும் மாறி மாறிப் பதில் எழுதட்டும். சொல்லிப் போட்டன். இரவிலை இனி ஓர் இடமும் வெளிக்கிடக் கூடாது" கோபத்தோடு நிபந்தனை விதித்தாள் மனைவி.

அன்று! ஞாயிற்றுக்கிழமை பிரான்சும் குரோசியாவும் மோதும் கடைசிப் போட்டி. மனைவியைக் கொஞ்சம் குளிர வைத்தால் இரவு விளையாட்டுப் பாக்கலாம் என எண்ணிக் கொண்டேன். எனக்குக் கொஞ்சம் உலக வரலாறு தெரியும். சமய சம்பந்தமாகவும் தெரியும். இடைக்கிடை மகனுக்கு அவற்றைச் சொல்லிக் கொடுப்பது வழக்கம். அவனுக்கு அவை தெரிய வேண்டும் என்பதைவிட என்னுடைய மனைவிக்கு எனது அறிவின் விசாலத்தைக் காட்ட வேணும் என்பதுதான் என் முக்கிய நோக்கம். அதனால் மனைவிக்கும் கேட்கும்படி சற்றுச் சத்தமாகவே சொல்லிக் கொடுப்பது வழக்கம்.

மகனைக் கூப்பிட்டேன் "அறிவு! மகா என்ற பட்டப் பெயரோடு ஒரு வீர அரசர் இருந்தார். அவர் யார் தெரியுமோ?" எனக் கேட்டேன். "தெரியவில்லையப்பா" என்றான் தலையைச் சொறிந்தபடியே.

"அடே அது அலெக்சாண்டரடா அவர் பெரும் வீரர். அதனால் மகா அலெக்சாண்டர் என்று அவரை அழைத்தார்கள். என்றேன். "அப்படியா? சரியப்பா" என்றான் மகன். "மாவீரன் என்று அழைக்கப்படுபவன் யார்?"

"அந்தக் கதையை ஏனப்பா இப்ப எடுக்கிறியள்? அதைப் பற்றிக் கதைத்தால் இப்ப பிரச்சினை தான் வரும்"

"நான் சொல்லுறது அதையில்லையடா. நெப்போலியன் என்றவர் பிரான்சை ஆண்டவர். அவரும் அஞ்சா நெஞ்சம் படைத்த பெரும் வீரர். அதனால் அவரை மாவீரன் நெப்போலியன் என்றார்கள்"

"அப்படியே? நான் நீங்கள் பிரச்சினையான விசயம் ஏதோ சொல்லப் போறீங்களாக்கும் பயந்திட்டன்"

"அதை விடு அக்பரைப் பற்றித் தெரியுமோ?"

"கேள்விப் பட்டு இருக்கிறேன். அவரைத் தெரியாது"

"என்னடா கேள்விப் பட்டிருக்கிறேன் தெரியாது. நீ என்ன சொல்கிறாய். எனக்கு விளங்கேல்லை? "

"உங்கடை அப்பர் உங்களுக்குக் கொஞ்ச வயதாயிருக்கும் போதே உங்கடை அம்மாவோடு கோவிச்சுக் கொண்டு போனவர்தான். என்ன ஆனார் எண்டு இதுவரை ஒண்டும் தெரியாது எண்டு நீங்கள்தான் சொன்னீங்கள். பிறகு எப்படி எனக்கு அவரைத் தெரியும்?"

"நாசயமாய்ப் போச்சு! அப்பரில்லையடா. அக்பரடா. அக்பர் அவர் வட இந்தியாவை ஆண்ட முஸ்லிம் பேரரசர். அனார்கலி - சலீம் கதை தெரியாதே உனக்கு? அந்தச் சலீமின் தகப்பன் தான் அக்பர்"

"ஓகோ அவரைப் பற்றியே சொல்லிறியள். எனக்கும் அந்தச் சரித்திரம் தெரியும்"

"மங்கோலியாவை செங்கிஸ்தான் என்ற பராக்கிரமம் பொருந்திய மன்னன். ஒருவன் ஆண்டிருக்கிறான்"

"ஓ! கேள்விப்படேல்லை"

"நான் சொன்ன இவ்வளவும் வேற்று நாட்டு அரசர்களைப் பற்றி. எங்களுடைய தமிழ் மன்னர்களும் வீரத்திலை குறைஞ்சவர்களில்லை. ராஜராஜ சோழனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறியே? "

"சிவாஜி நடித்த படத்தைப் பற்றித்தானே கேக்குறியள்?"

"ஓமடா! நான் சொல்லுற ராஜ ராஜ சோழனின் பாத்திரத்தை, சிவாஜி ஏற்று நடித்த படத்தைத்தான் நீ சொல்லுகிறாய். ராஜ ராஜ சோழன் பெரும் வீரர். அவரின் பெரும் முயற்சியால் தான் சிதம்பரக் கோயிலில் ஓர் அறையில் மண்மூடிக்கிடந்த தேவார, திருவாசகங்கள் எங்களுக்குக் கிடைத்தன. அவரின் மகன் இராஜேந்திர சோழன் கூட மலேசியா, யாவா போன்ற நாடுகளைத் தனது கடற்படையின் உதவியால் கைப்பற்றி தனது வீரத்தையும் தமிழரின் வீரத்தையும் நிலை நாட்டியிருக்கிறார்."

"ஓ! தமிழர்களாகிய நாங்கள் பெருமைப் பட வேண்டிய விசயம்தான்" இவ்வளவையும் சத்தமாக மகனுக்குச் சொல்லிக் கொண்டே குசினிக்குள் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மனைவி எனது விரிவுரைக்கும் காது கொடுக்கிறாளா?

43

இஞ்ச இன்னடைக்கு ரியூசன் சொல்லித்தர வரமாட்டன் எண்டு நேற்றுப் போகேக்கையே ரியூசன் மாஸ்ரர் சொல்லிப் போட்டுப் போனவர். அறிவு இன்னடைக்கு உந்தக் கால்பந்தாட்டம் பார்க்கிறதை விட்டுட்டு புத்தகத்தை எடுத்துப் படி. படிச்சிட்டு வேளைக்குப் படு என்று. இரவுச் சாப்பாடும் முடிந்தது. மகன் அறிவு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் புரட்டிப் படிப்பது போல நடித்துக் கொண்டிருந்தான். கவனம் முழுக்க கால்பந்தாட்டப் போட்டியில் இருக்க அவன் எங்கே படிப்பது?

கட்டுரை

ஜெகதீஸ்வரன்

# யாழ்ப்பாணத்து நீர் மாசு

## ஒவ்வொரு தனி மனிதர்களும் பொறுப்பாளிகள்...!

எனக்குத் தெரிந்த ஓர் ஒப்பந்தகாரரை யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சந்திக்கக் கிடைத்தது. அவரைப் பார்த்துப் பல காலங்களாகியிருந்தன. அவரது முன்னைய தோற்றத்துக்கும் தற்போதுள்ள .தோற்றத்துக்கும் ஆறு வித்தியாசங்களைத் தேடினால், அது பன்னிரண்டுக்கும் அதிகமான வித்தியசங்களைத் தந்துநிற்பதாக அமையும்.

'அவராகத்தான் இருக்கவேண்டும்' என்று மிகவும் சிரமப்பட்டு எடுத்த முடிவுடன் "ஐயா! நீங்கள் இன்னாரெல்லலோ?" என்று கேட்க, அவர் என்னை வியப்பாகப் பார்த்தார்.

"என்ன வருத்தம் ஐயா? ஆளை அடையாளம் தெரியவில்லை?" என்றேன்.

"எனக்கொரு வருத்தமும் இல்லை. எல்லாம் நானாய்த் தேடிக் கொண்டது" என்றார். தொடர்ந்தார்.





**தன் வினை...!**

"நான் வன்னியில் ஒப்பந்த வேலை செய்தபோது பல குடிநீர்க் கிணறுகளை வெட்டியிருந்தேன். கிணறுகளைச் சீமெந்துக் கட்டால் கட்டி, அதற்குப் பின்புறமாகவுள்ள மண் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடைவெளிப்பகுதிக்குள் வேறொரு வகை மணலைப் போடவேண்டியிருந்தது. (நீர் வழிந்தோடுகிற பகுதியாகையால் சுத்திகரிக்கும் தன்மையுடைய மணலைப் போட்டு நிரப்பவேண்டியிருந்தது) பதிலாக அதில் அகழ்ந்தெடுத்த மண்ணையே திரும்பவும் அதற்குள் நிரப்பினேன். ஆனால், பார்வைக்குத் தெரியும்படியாக மேல் மட்டத்துக்கு மாத்திரம் அதற்கெனக் குறித்தொதுக்கியிருந்த (பில்டர் சுத்திகரிப்பை ஒத்த தன்மையுள்ள மணல்) ஒரு லோட் மணலைக் கொட்டி, 'ரீ.ஓ' மாருக்குக் காட்டி, வேலையை முடித்துவிட்டு 15தொடக்கம் 20 லோட் வரையான மணல் காசை எடுத்தனான். நாங்கள் 95இலை இடம்பெயர்ந்து வன்னிக்குப்போனபோது அந்தக் கிணறு ஒன்டிலைதான் குடிநீர் அள்ளிக் குடிச்சனாங்கள். என்ர மகளின்ர பிள்ளை அந்தக் கிணத்து நீரால் வந்த நோயால செத்துப் போனாள். என்ர மனைவிக்குக் கூட இந்தச் சங்கதியை நான் சொல்லவில்லை" என்று குலுங்கிக் குலுங்கி அழுதார்.

"அண்டைக்குப் பிடிச்ச வருத்தம் ஐயா! இது வருத்தம் இல்லை. கடவுள் தண்டனை" என்றார்.

**நீரை மாசுபடுத்தும்போது மனிதன் விலங்காகிறான்**

உலகிலேயே மிகச் சிறந்த குடிநீர் 'அஷர்பைஜான்' நாட்டுக்கு அருகிலே காணப்படுகிறது. (கஸ்பியன் கடலுக்கு மேற்குப்பக்கத்தில் அமைந்துள்ளது) அங்கு மிகவும் சுத்தமான காற்றும் காணப்படுகிறது. அங்குள்ள மக்களின் இறப்பு வயதெல்லை சராசரியாக 130வருடங்கள். இந்த வயதில் கூட ஒருவர் ஓடிச் செல்லும் அளவுக்கு உடல்பலம் உள்ளவராக இருக்கிறாராம்.

சுத்தமான காற்றையும், குடிநீரையும், தாம் வாழ்வதற்கு மட்டுமல்லாது எதிர்காலத்தில் தமது சந்ததிகளும் பயன்படுத்தும் வகையில் மாசுபடாமல் பாதுகாக்க வேண்டியவர்களாகத் தற்காலத்தினர் உள்ளனர்.

சுத்தமான குடிநீரைக் கடவுள் தந்திருக்கிறார் என்று வைத்துக் கொண்டால், அதை மாசுபடுத்துகின்ற மனிதன் கடவுளுக்கு எதிரான செயற்பாட்டாளன். சீரழிக்கும்போது மனிதன் ஒரு குரூரமான விலங்காகி விடுகிறான்.

**சாதி பார்த்ததில் தூய்மையடைந்த நீர்**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நிலத்தடி நீரை அசுத்தப்படாமல் பாதுகாப்பதில் எமது முன்னோர்கள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டார்கள். அதிக இரசாயணங்களைப் பாவிக்காத அந்தக் காலத்திலேயே குடிநீருக்கென்று தனியாகக் கிணறுகளை வைத்திருந்தார்கள். நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக வறட்சியான பகுதிகளில் துரவு வெட்டும் பழக்கம் எமது மூதாதையரிடம் இருந்தது. இதன் மூலம் நிலத்தடி நீரைப் பெருமளவில் தக்க வைத்தார்கள்.

தண்ணீரில் சாதி பார்த்த சமூகமிது. தாழ்த்தப்பட்ட மக்களை உயர் சாதியினர் தமது கிணற்றில் தண்ணீர் அள்ள அனுமதிப்பதில்லை. அவ்வாறானவர்களுக்குத் தண்ணீரைத் தாமே கிணற்றில் அள்ளி ஊற்றினர். மற்றவர்கள் ஏந்திக் குடித்தார்கள். இன்றும் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் சாதி அடிப்படையில் குடிநீர்க் கிணறுகளும் குளிக்கும் கிணறுகளும் உள்ளன. இந்த விடயத்தில் சாதிப்பாகுபாடே பெருமளவில் தெரிந்தாலும், தண்ணீரில் அவர்கள்சுத்தம் பார்த்தமையும் ஊடாடியிருந்தது. தற்போது சுன்னாகம் கழிவு ஒயில் கலப்புப்போன்ற பலவற்றாலும் யாழ்ப்பாணத்துத் தரைக்கீழ் நீர்வளம் மிகவும் பாதிப்படைந்துபோய்விட்டது.

**யாழ்ப்பாணத் தரைக்கீழ் நீர் வளம்**

யாழ்.குடாநாட்டில் சுன்னாகம், நிலாவரை, நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளிலேயே மிகச் சிறந்த நன்னீர்வளம் இருந்தது. 2005ஆம் ஆண்டுக்கு முன்னபான காலப்பகுதியில் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த 'மக்' என்ற நிறுவனம் யாழ்ப்பாணத்துக் குடிநீர் பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருந்தது. அவர்களது ஆய்வின் முடிவில் தயாரித்த வரைபடம் ஒன்றில் சுன்னாகத்தை அண்மித்த பகுதித் தரையின் கீழே ஒரு பெரிய கப்பல் போன்ற அமைப்பில் நன்னீத் தேக்கம் காணப்பட்டது.

அத்தகைய சிறந்த நன்னீர்த்தேக்கத்துக்குள்ளேயே சுன்னாகம் மின்சார நிலைய 'நெதேர்ன் பவர்' நிறுவனத்தின் கழிவு ஒயில் கலந்தது. இது மிகப் பெரிய சுற்றுச் சூழல் மீறலாகும். இது மனிதனால் மேற்கொள்ளப்பட்ட இடராகும். மனிதன் விலங்காகியதால் நிகழ்ந்தது.

**நீர் வளம் மட்டுப்படுத்தப்பட்டது**

உலகில் தற்போது காணப்படுகின்ற நன்னீரின் அளவை ஒருபோதும் அதிகரிக்க முடியாது. ஆனால், அவற்றை அவ்வாறே வைத்துப் பேண முடியும். அதிலும் யாழ்ப்பாணத்துத் தரைக்கீழ் நீர்வளத்தின் நிலை மிகவும் சொற்பமானது. தரையின் கீழ் வடிகிற நீரின் அளவையும் பயன்படுத்துகிற நீரின் அளவையும் சமாந்தரத்தில் பேணிக் கொள்ளவேண்டும். அதற்குச் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் பாதுகாவலராக இருப்பது அவசியம். நீர் மாசடையும் ஒரு வேலையைச் செய்யும்போது தனது பேரப் பிள்ளையோ, அல்லது பூட்டப் பிள்ளையோ அதனால் பாதிக்கப்படும் என்பதை முன்னுணர வேண்டும். தமது பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்கிறார்கள் அவர்களை இந்த நீர் மாசு எதுவும் செய்துவிடாது என்ற முடிவுக்கு வருவது முட்டாள்தனமானது.

**சுன்னாகத்து நீரின் மாசுபாடு**

யாழ்.குடாநாடு சுன்னாம்புக் கற்களை நிலத்தடியில் கொண்டிருக்கிறது. எண்ணைக் கழிவுகளை உறிஞ்சும் திறன் இந்த நிலத்துக்கு இல்லை.

ஆரம்பத்தில் சுன்னாகத்து கழிவு ஒயில் பரல்களில் நிரப்பப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்தப் பணியில் பங்கெடுத்த ஒருவர் (தற்போது வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரிகிறார்) "பாதை பூட்டிய பிறகு (போர் ஆரம்பித்ததன் பிறகு) அந்தக் கழிவு ஒயிலுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை" என்றார். அந்த எண்ணைக் கழிவுகள் சுன்னாகம் பகுதியில் துளையிடப்பட்டு நிலத்தடியில் விடப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இவ்வாறு துளையிட்டு எண்ணைக் கழிவுகளை நிலத்துக்கு அடியில் விடுவதற்குச் சில தமிழ்ப் பொறியியலாளர்களும், அரசியல்வாதிகளும் காரணமாக இருந்தார்கள். இதிலுள்ள கொடுமை என்னவென்றால் இந்த மாகாண முதலமைச்சரே இது விடயத்தில் ஒரு போலியான அறிக்கையை நம்பி மக்கள் அந்த நீரைக் குடிக்கலாம் என்று கூறியதுதான். முதலமைச்சரும், சூழலியாளாலர் எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் ஐங்கரநேசனும் இந்த விடயத்தில் நேரடியாக மக்களிடம் சவால் விட்டிருக்க வேண்டும். "குடிக்க முடியாது அல்லது மாசடைந்துள்ள நீர் என்று எம் மீது குற்றம் சாட்டுவோர் தங்கள் கிணற்றுத் தண்ணீரை மாகாணசபைக்குக் கொண்டு வாருங்கள். சபை அமர்வுகளின்போது நாங்கள் உங்கள் முன்னிலையில் அதைக் குடித்துக் காட்டுகிறோம்" என்று. இதன்மூலம், மக்களுக்கு நாம் உண்மையாக இருக்கிறோம். தண்ணீரில் மாசு உள்ளது என்று கூறுவது பொய் என்பதை நிரூபித்திருக்க முடியும். ஆனால் நிலமையோ இங்கு வேறானது.

**சுன்னாகத்து நீரால் பாதிப்பு**

ஒயில் கலந்த சுன்னாகத்துக் குடிநீரைக் குடிப்பதால் நேரடியாக ஏற்படுகின்ற நோய்களையும், பக்க விளைவுகளையும்விடப் பல பாதிப்புக்கள் மக்களைத் தாக்குகின்றன. குடிநீர் எடுக்கும் விடயத்தில் வயது வித்தியாசமின்றி எல்லா இடங்களுக்கும் ஓடுகின்றார்கள். 80வயதைத் தாண்டிய ஒரு முதியவர் குடிநீரைக் கலன்களில் எடுத்துத் தூக்கியதால் தோள்பட்டையில் பாதிப்பு ஏற்பட்டு கடும் உபாதைகளுடன் வாழ்ந்து வருகிறார். இவ்வாறு பலருக்குப் பல்வேறு விதமான பாதிப்புக்களை சுன்னாகத்து நீர் மாசு ஏற்படுத்தியிருக்கிறது. தங்களுக் கென்று சொந்தமாகக் கிணறுகளை வைத்திருந்தும் அவர்கள் அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியாமல் போனதே இந்த இடருக்கான காரண்ம்.

**பொறுப்பற்ற தலைமைகள்**

போராலும், இழப்புக்களாலும், வாழ்வாதார மார்க்கமின்றியும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் இனத்தின் தலைவர்கள் மிகவும் பொறுப்புடன் நடந்திருக்க வேண்டும்.

"நீரில் எண்ணைப் படிவுகள் உள்ளமை பற்றிய ஆய்வில் இந்தியா முன்னிலையில் உள்ள ஒரு நாடு. உலங்கு வானூர்தியில் ஒரு கிலோ மீற்றர் உயரத்தில் பறந்தவாறு நிலத்தடி நீரைப் பரிசோதிக்கும் வசதிகளையும், எண்ணைப்படிவுகள் இருக்கும் பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை வெளியேற்றும் வழி வகைகளையும் கொண்ட தொழில்நுட்பம்கூட அவர்களிடம் இருக்கிறது. மிகக் குறைந்த செலவில் அதைச் செய்து முடிக்கலாம்" என இந்தத் துறை சார்ந்த வல்லுநர் ஒருவர்கூடக் குறிப்பிடுகிறார்.


ஆனால், இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவை வைத்திருக்கும் முதலமைச்சர் நீர் மாசு விடயத்தில் இந்தியாவை நாடவில்லை. மாறாக மதம் சார்ந்த மார்க்கங்களையே கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கிறார்.

**தனி மனிதர்கள் பொறுப்புடையவர்கள்**

சிங்கள மக்களின் பாரம்பரியத்தில் மூன்றுதலை நாகத்தின் தலை பதித்த கல் வைக்கப்பட்ட குளங்கள் குடிநீருக்கு உரியவை. அவற்றில் மக்கள் குளிப்பதில்லை. அந்தக் குடிநீர்க் குளத்தின் கட்டிலே, குளத்தை அண்மித்தோ சிறுநீர் கூடக் கழிக்க மாட்டார்கள். இதைவிட மகாபராக்கிரமபாகு என்ற மன்னன், 'ஒரு துளி நீரை ஏனும் வீணே கடலுக்குள் செல்ல அனுமதிக்கக்கூடாது' என்ற கோட்பாட்டைச் சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்தார். தமிழர் மத்தியில் 'ஒரு துளி நீரை அசுத்தப்படுத்தக்கூடாது' என்ற கோட்பாட்டையேனும் உருவாக்க வேண்டும்.

சுன்னாகம் மாசடைந்த நீர் விடயத்தில் மல்லாகம் நீதிமன்றம், மருத்துவர்கள், மருத்துவ பீடம், வலிகாமம் பொது அமைப்புக்கள் எனப் பலர் குரல்கொடுத்து வருகின்றனர். இது இனி நிகழாமையை ஏற்படுத்த வல்லது.

குடிநீரில் விசம் கலப்பது என்பது இயற்கை நீதிக்கும் இயற்கைக்கும் எதிரானது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். அதிலும் அதிக கோவில்களைக் கொண்ட, கடவுள்நம்பிக்கை உள்ளவடபகுதிமக்கள்மேலும் மேம்பட்டவர்களாக இருப்பது அவசியம். தனித் தனி மனிதர்கள் இதற்கெல்லாம் பொறுப்புடையவர்களாகித் தமது வாக்குகளை அளிக்கின்றபோது அரசியல்வாதிகளும் பொறுப்புணர்ந்து செயற்படுவர். யாழ்ப்பாணத்துக்கு இயற்கையாகக் கிடைத்த அரிய பொக்கிசமான குடிநீரை மாசுபடுத்துவதற்குப் பக்க பலமாக நின்றவர்கள் அரசியல்வாதிகளே.



கட்டுரை

முகமது ஹுசைன்


# நாளையுடன் முடிவு 'மெஸேஞ்சர்'

'கூகுளின்' வளர்ச்சி முதலில் 'யாகூ'வைப் பின்னுக்குத் தள்ளியது. அதன் பின்வந்த 'வட்ஸ்அப்', முகப்புத்தகம் போன்றவற்றின் அபரிமிதமான வளர்ச்சி 'யாகூ மெஸேஞ்சரைக்' கடுமையாகப் பாதித்தது. இந்த ஜூலை 31ஆம் திகதியோடு 'யாகூ மெஸேஞ்சருக்கு' மூடு விழா நடத்தப்போவதாக 'யாகூ' நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த 'யாகூ மெஸேஞ்சரால்' உலகம் சுருங்கி, மக்களின் நட்புப் பரப்பு விரிந்தது எனலாம்.

**'ஏ.எஸ்.எல்'**

அந்தக் காலகட்டத்தில் உலகையே 'யாகூ மெஸேஞ்சர்' அடிமையாக்கியது என்றுதான் சொல்ல வேண்டும். மெஸேஞ்சரின் வெற்றியால் 'பிறவுசிங் சென்ரர்' என்ற புதிய தொழில் உருவானது. 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'பிறவுசிங் சென்ரர்' தொடங்குவது வெற்றிகரமான தொழிலாக இருந்தது. குக்கிராமத்திலும் 'பிறவுசிங் சென்ரர்கள் ' முளைத்தன. குக்கிராமத்தில் இருந்த இளைஞர்கள், அமெரிக்காவில் வசிக்கும் இளைஞர்களிடம் 'ஏ.எஸ்.எல்' (ASL) கேட்டுக் கொண்டிருந்தார்கள். 'ஏ.எஸ்.எல்' என்பது வயது (ஏஜ்), பால்(செக்ஸ்), இடம்(லிவ்விங்).

இந்த மெஸேஞ்சரை உருவாக்கியவர்கள் ஜெர்ரியும் டேவிட்டும். டேவிட் கணினியில் கில்லி. 'சி லாங்குவேஜ்ஜி'ல் அவர் எழுதிய 'வ்பிலோ சேவர் புரோகிராம்' உலகையே மாற்றியமைத்தது. 1994ஆம் ஆண்டில் தனது நண்பர் ஜெர்ரியுடன் இணைந்து உருவாக்கிய 'ஜெர்றி அன்ட் டேவிட்ஸ் க்யூட் ரூ தி வேர்ள்ட் வைட் வெப்' (Jerry and David|s Guide to the World Wide Web) என்ற இணையத் தளம் இணையத்தின் முதல்



தேடல் தளம். இன்றைய 'கூகுள்', 'வட்ஸ்அப்', முகப்புத்தகம் போன்ற அனைத்துக்கும் முன்னோடி அந்த இணையத்தளமே. இணையத்தளம் தொடங்கிய சில நாள்களில் அதன் பெயரை 'யாகூ' என்று மாற்றியமைத்தார்கள். 'yahoo' என்பதன் விரிவாக்கம் 'Yet Another Hierarchically Organized Oracle'. அதாவது, வரிசைப்படி முறையாக அடுக்கப்பட்ட இணையத் தளங்கள் என்பதே இதன் அர்த்தம்.

**உலகைக் கவர்ந்த 'யாகூ...'!**

முதலில் 'யாகூ' வெறும் தேடல் தளமாகவே இருந்தது. விளையாட்டாக ஆரம்பிக்கப்பட்ட அந்த இணையத் தளம், சில நாள்களிலேயே உலகின் பேசு பொருளானது. விளையாட்டுப் பிள்ளைகளாக இருந்த அந்த இளைஞர்கள், மிகப் பெரும் தொழில் அதிபர்களாக மாறினர். பணமும் புகழும் பெருகின. யாகூவை வெறும் தேடல் தளமாக மட்டும் சுருக்கிக்கொள்ளாமல், அதன் பயனை அவர்கள் விரிவாக்கினார்கள்.

அவர்கள் உருவாக்கிய யாகூ மின்னஞ்சல், அப்போது பிரபலமாக இருந்த 'ஹொட் மெயி'லுடன் மல்லுக் கட்டியது. விரைவிலேயே 'ஹொட் மெயிலை' அது பின்னுக்குத் தள்ளியது. 'யாகூ' மின்னஞ்சலின் வெற்றி அளித்த உற்சாகத்தில், 1998ஆம் ஆண்டில் அவர்கள் 'யாகூ பேஜரை' உருவாக்கினார்கள். 1999ஆம் ஆண்டில் 'யாகூ பேஜர்', 'யாகூ மெஸேஞ்சராக' மாறியது.

**இரு இளைஞர்களின் கைவண்ணம்**

ரொம் அன்ட் ஜெர்ரி போன்று(கார்ட்டூன் பட வரிசையில் பிரபலமான பூனையும் எலியும்) ஜெர்ரியும் டேவிட்டும் சதா முட்டிக்கொண்டு திரியும் நபர்கள் அல்ல. அவர்கள் இருவரும் 'முஸ்தபா முஸ்தபா' என அப்பாஸ்- வினித்போன்று சதா ஒட்டிக்கொண்டு திரியும் தோஸ்துகள். அவர்களுக்கு இடையிலான நட்பு, கண்டம் தாண்டிய ஒன்று. ஜெர்ரியின் பூர்விகம் தாய்வான். இரண்டு வயதிலேயே தந்தையை இழந்தவர். அதன் பின், ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த ஜெர்ரியின் அன்னை, குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறி, ஜெர்ரியை அங்கேயே வளர்த்தெடுத்தார். அமெரிக்காவில் குடியேறியபோது ஜெர்ரிக்குத் தெரிந்த ஒரே ஆங்கிலச் சொல் 'Shoe'. ஆனால், அடுத்த மூன்றாண்டுகளில் அவரது ஆங்கிலப் புலமை அமெரிக்க வாழ் மக்களுக்கே சவால் விடும் விதமாக வளர்ந்தது ஒரு தனிக் கதை.

பள்ளியில் நன்கு படித்த ஜெர்ரிக்கு ஸ்டேன் வ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பொறி யியல் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. பொறியியலில் முதுநிலைப் படிப்பையும் ஜெர்ரி அங்கேயே படித்தார். அப்போதுதான் ஜெர்ரி தனது வாழ்நாள் தோழரான டேவிட் ரொபேர்ட் வ்பிலோவைச் சந்தித்தார். ஜெர்ரிக்கும் டேவிட்டுக்கும் எட்டு மணிக்குச் சென்று ஐந்து மணிக்குத் திரும்பும் வழக்கமான நிறுவன வேலையில் ஈடுபாடும் விருப்பமும் இல்லை.

வசதி படைத்த வீட்டுப் பிள்ளைகளாக அவர்கள் இருந்திருந்தால், வெட்டியாக அவர்கள் உலகைச் சுற்றி வந்திருப்பார்கள். வசதி இல்லை என்பதால், அவர்கள் இணையத்தையே சுற்றி வந்தனர். அவர்கள் தனித்துவத்துடன் வாழ்ந்து உலகமே திரும்பிப்பார்க்கும்படி வென்று காட்டினர்.

நாளையுடன் அவர்கள் உருவாக்கிய யாகூ மெஸேஞ்சர் எனும் சகாப்தம் மட்டும் முடிவுக்கு வரவில்லை. அதைப் பயன்படுத்திய மக்களின் இருபது வருட நினைவுகளும் நட்புகளும் சேர்ந்தே முடிவுக்கு வருகின்றன. இருபது வயதிலேயே ஒரு சகாப்தம் சாவடைவது துயர் மிகுந்ததுதான்.

கவிதை

வேலணையூர்தாஸ்

# எப்படிச் சொல்வேன்...?



வீட்டிலிருந்து மூன்றாவது வீடு தள்ளி
குண்டு விழுந்து நான்காம் நாள்
கடல் கடந்தாய்...
அன்று நீ அப்பாவின் கை பிடித்து நடந்தபோது
உன் கடைக் கண்களில் வழிந்த
அந்த ஏக்கம், உயிரின் ஆவல் தீராத் தழுவல்,
அன்பே எப்படியிருக்கிறாய்...?
இருபது ஆண்டுகள் கழித்து
வருவதாகச் சொல்லியிருக்கிறாய்
எப்படிச் சொல்வேன் பெண்ணே
அன்று துளிர்த்த காதல்
இன்றும் நெஞ்சில் வாடாதிருப்பதை...?

நல்லதண்ணிக் கிணற்றுக்கு
நீரள்ளச் செல்லும் தோழிகளையும்
பள்ளிக்காலத் தோழர்களையும்
சந்திக்க வேண்டுமென்றாய்
எப்படிச் சொல்வேன்
அவர்களில் பலர் காணாமல் போயினரென்று...?

நிரை நிரையாய் நின்றோங்கும் பனம் தோப்புக்களை
பார்க்கவேண்டும் என்றாயாம்
'செல்'களால் தலை இழந்து எம் தோப்பழிந்த
கதை தன்னை எப்படிச் சொல்வேன் உனக்கு?

மலைபோலும் மண்கும்பான் மேடுகளை
ஏறிப்பார்க்க வருகிறாய் என்றார்கள்
எப்படி உரைப்பேன் மணல் இழந்து ஆழக் கிடங்காகி
அது அழகிழந்து போன கதையை?

சாட்டிக் கரையோரம் ஊற்றெடுக்கும் நன்நீரில்
நா நனைக்க வேண்டுமென்றாய்
எப்படிச் சொல்லலாம்
இயந்திரங்கள் உறிஞ்சி உவராக மாறிவரும்
அந்த நீரின் நிலைப்பாட்டை?



இராஜாக்களின் ஆடலை
திருவிழாக் கூடலை நாடகப்பாடலை
இரசிக்க வருகிறேன் என்றாய்
ரீவி நாடக வருகையால் தொலைந்த
எம் கலைவெளிக் கவலையை
எப்படிப் பகருவேன் பெண்ணே ?

மாமா, மாமி, உறவினர் வீடுகள் போகலாம்
சைக்கிளில் என்றாய்
என் இனியவளே!
தூரம் தூரமாய் துரத்தப்பட்டோமடி
ஒவ்வொரு ஊரிலும் ஊன்றி முளைத்துள்ளோம்
முகவரி அறிதல் முடியாதெனினும் முகநூல்
வழியே முயலலாம்
என்று எப்படிச் சொல்வேன் என்னுடைப் பெண்ணே?

முத்தமிழ் பயிலும் முற்ற வெளிக்குப்
போகலாம் என்கிறாய்
சிங்களப் பொப்பிசை, கண்டியநடனம்
இடையிடை பிரித் ஓதிடும் சத்தம்
இப்போதெல்லாம் எங்கள் வெளியிதுவல்ல
என்பதை எப்படிச் சொல்லலாம் என்னரும் தோழியே?

காதலைச் சுமந்து காற்றென வருகிறாய்
என் காதல் பெண்ணே
எப்படிச் சொல்வேன் உன்னை அழைக்க
என் இளைய மகனும் வருகிறான் என்று?

# 'ஹொட்டேல் ட்றான்ஸ்சில்வேனியா -3'

முதல் இரண்டு பாகங்களை அடுத்து (வெளிவந்திருக்கிறது) அதன் மூன்றாவது பாகமாகவும் தொடர்ச்சியாகவும் 'ஹொட்டேல் ட்ரான்ஸ்சில்வேனியா - 3'. முதலாவது பாகம் பாராட்டும் படியாகவும் தொடர்வன எல்லாம் படுசொதப்பல்களாகவும் அமைவதென்பது தமிழ் சினிமாவுக்கு மாத்திரமன்றி ஹொலிவூட் சினிமாக்களுக்கும் பொதுவான ஒன்றாகத்தான் இருக்கிறது. அவ்வகையிலமைந்த இதுவும் அப்படித்தான் அண்மையில் திரைக்கு வந்திருக்கிறது.

**கதை**

முதல் பகுதியில் தன்னுடைய மகளின் காதலுக்குச் சம்மதம் தெரிவித்து, இரண்டாவது பகுதியில் திருமணம் செய்து வைத்துப் பேரனையும் பார்த்துவிட்டு மூன்றாவது பாகத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் முழிக்கிறார் படத்தின் நாயகன் 'கவுண்ட் ராகுலா' இயக்குநரும் சேர்ந்தே முழிப்பது திரைக் கதையில் தெரிகிறது. தந்தை ஓய்வே இல்லாமல் உழைக்கிறார். தந்தைக்கு ஓய்வுவேண்டும். அவரை ஒரு விடுமுறைப் பயணத்துக்குக் கூட்டிச்செல்லத் தீர்மானிக்கிறாள் மகள். அந்த விடுமுறைப் பயணத்தின்போது நிகழ்பவையே கதை.

முதல் இரண்டு பாகங்களிலும் சிரிக்க வைக்கின்ற காட்சிகளே இருந்தன. கதை மூலம் சொல்லுகிற செய்தி குறைவாகவிருந்தது. இந்தப் பாகத்தில் அதுவும் அறவே இல்லாமல் போயிருக்கிறது.

'சொனி' பிக்சர் அனிமேசன் தனது அனிமேசன் தரத்தில் எந்தக் குறையும் இல்லாமல் கனகச்சிதாமாக வண்ணங்களை வைத்து மாயாஜாலம் காட்டுகின்றது. காட்சிகள் கண்களைப் பறிக்கின்ற வண்ணங்களால் ஈர்க்கின்றன. படத்தின் ஆரம்பத்தில் காட்சியாகிற கடந்தகாலத்தைச் சித்திரிக்கின்ற காட்சி, ஒரு நாயை வைத்துக் குட்டிச் சிறுவர்கள் விடுகிற சேஷ்டைகள், ஆரம்பத்தில் வருகிற விமானப் பயணக் காட்சி எனச் சில காட்சிகள் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. கதையோடு ஒட்டாத வகையில் பல காட்சிகளும் இருப்பதால் இந்தத் தொடர் வரிசைப்படங்களின் வருகை இத்தோடுநிறைவுற்றாலும் நிறைவுறலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. படத்தில் கடைசி இருபது நிமிடங்கள் இதற்குப் பலம் சேர்க்கின்றன.

இத்தகைய கார்ட்டூன் - அனிமேசன் படங்கள் சிறுவர்களைக் கவருவதையே முதன்மையாகக் கருதி எடுக்கப்பட்டாலும் அதிகளவில் அவை பெரியவர்களையும் கவரத் தவறுவதில்லை. ஆனால், குழந்தைகளுக்கு இந்தப் படம் பிடித்தாலும் பிடிக்கலாம் என்றே சொல்லத் தோன்றுகிறது.







# 'ஸ்கைகிறேப்பர்'


உலகத்திலேயே உயரமான கட்டடம் 'ஹாங்ஹோகில்' கட்டப்படுகிறது. அதன் பாதுகாப்புக் கட்டமைப்புக்குப் பொறுப்பாக இருக்கிறார் நாயகன் 'றொக்'. அவருடைய மனைவி, இரண்டு குழந்தைகள் சகிதம் அந்தக் கட்டடத்திலேயே அவர் குடும்பத்துடன் குடியேறுகிறார். ஒரு கட்டத்தில் அந்தக் கட்டடத்தை விட்டு நாயகன் வெளியேறுகிறார். அதே நேரத்தில் ஒரு கும்பல் அந்தக் கட்டடத்துக்குள் புகுந்து கட்டடத்தின் 96ஆவது தளத்துக்குத் தீ வைத்துவிடுகிறது. மறுபக்கத்தில் நாயகனைக் கொல்வதற்கு ஒரு கும்பல் செயலாற்றுகிறது. பொலிஸாரும் நாயகனைத் தேடுகின்றனர். இத்தகைய இக்கட்டுகளுக்கு நடுவில் தீமூட்டப்பட்ட கட்டடத்துக்குள் நாயகன் எப்படி நுழைகிறார்? குடும்பத்தை எப்ப்டிக் காப்பாற்றுகிறார்? எதற்காகத் தீ வைக்கப்பட்டது? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

'றொக்'கின் விரும்புபவர்களாக, அவரைக் குத்துச் சண்டைக் காலத்திலிருந்து தூக்கி வைத்துக் கொண்டாடுபவர்களாக இருக்கின்ற அவருடைய இரசிகர்களுக்கு மட்டுமே இந்தப் படம் பிடித்துப்போகக்கூடும். நாயகனின் சாகசங்களைக் கொண்டாடுவதுடன் எந்நேரமும் 'றொக்'கையே உச்சரிக்கின்ற காட்சிகளே இதில் நிறைந்திருக்கின் றன.

படத்துக்கான சாகசக் காட்சிகள் அனைத்துக்கும் பொருந்திப்போகிறார் நாயகன் 'றொக்'. ஒரு வகையில் அதுவே வீழ்ச்சியாகவும் அமைகிறது. என்ன ஆபத்து, இக்கட்டு வந்தாலும் நாயகன் வந்து எல்லாவற்றையும் வென்றுவிடுவார் எனும் மந்திர வாக்கியம் இங்கேயும் ஒலிக்கிறது. நாயகனைத் தற்செயலாக நெருங்குகின்ற ஆபத்திலிருந்துகூட அவர் எதேச்சையாகத் தப்பிவிடுகிறார். ஆனால், அந்தத் தற்செயல்களும், எதேச்சைகளும் படம் முழுதும் நீடிப்பதுதான் சலிப்பு. தொழில்நுட்பத் தளத்தில் சற்று மெருகூட்டிச் சுவையளிக்க முயன்றிருக்கிறார் இயக்குநர் ராஸன். சண்டைக் காட்சிகளில் இது தொனிக்கிறது. ஆனால், 'றொக்' மாத்திரமே படத்தைச் தூக்கிச் சுமப்பதும், அவருடைய நாயகத்தனங்கள் படம் முழுதும் தொடர்வதும் தான் சலிப்பு.

'றொக்'கின் விரும்புபவர்களாக அவரைக் குத்துச் சண்டைக் காலத்திலிருந்து தூக்கி வைத்துக் கொண்டாடுபவர்களாக இருக்கின்ற அவரு டைய இரசிகர்களுக்கு மட்டுமே இந்தப் படம் பிடித்துப்போகக்கூடும். நாயகனின் சாகசங்களைக் கொண்டாடுவதுடன் எந்தநேரமும் 'றொக்'கையே உச்சரிக்கின்ற காட்சிகளே இதில் நிறைந்திருக்கின்றன.





கவிதை

## இது தான் நடக்கும்.....

பா.பாலாஜினி

என் கடிகாரம்
அதன் கை அசைவில்
என் காலங்கள் அதன்
கட்டளைகளின் படி
பொம்மைபோலே நான்
பெரும் யோகி போலே அது
என் வேலைகளை எல்லாம்
விரைந்தே முடிக்கிறது.

சுத்தமாய் எனக்குப் பிடிப்பதில்லை
சொன்னாலும் அது கேட்பதில்லை
அமிலக் கண்களால் எனை
உரசிப் போய் சிரிக்கிறது

இருப்பினும் .... இதை மட்டும் என்னால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை
தினம் இரவுகளில் என்
படுக்கை அறைப் பகிர்தல்களை


உணர்வுகளே இல்லாத
கூடல்களில் இன்று
வெறும் சுகம் மட்டுமே
எனக்குச் சுமையாகி போனதிங்கே.

# வெயிலில் இருந்து தற்காத்தல்...

கட்டுரை

சி.யமுனாநந்தா

அண்மைக்கால, அதிகரித்த வெயில் காரணமாக இற்றைவரையில் யாழ்ப்பாணத்தில் நான்குபேர் சாவடைந்துள்ளனர் என்கிற பத்திரிகைச் செய்திகள் துயரகரமானவை. ஏதாவதொரு வகையில் (அதிக வெயில்) என்பது குறித்த நால்வருடை சாவுக்கும் காரணமாக இருந்திருக்கிறது. பெரும் இடர்களால் உயிரினங்கள் அழிவது தவிர்க்க முடியாதது. ஆனால், இயற்கை ஏற்படுத்துகிற இத்தகைய சிறியளவிலான அல்லது வீரியம் குறைந்த இயற்கை இடர்களில் இருந்து உயிரினங்களால் உயிர் பிழைத்துக்கொள்ள முடியும். ஆறறிவுள்ள மனிதனால் இன்னும் ஒருபடிமேலாகச் சிந்திந்து உயிர் பிழைத்துக்கொள் வதை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.



### சூழல் வெப்பமும் உடல் வெப்பமும்

மனித உடல் ஏலவே குறிப்பிட்டளவு வெப்பநிலையைச் சீராகப் பேணியவாறு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் ஏற்றத் தாழ்வு ஏற்படுமிடத்து சுகவீனங்கள் ஏற்படுகின்றன. உடல் தவிர்ந்த புறக்காரணியான சூழல் வெப்பநிலை அதிகரிப்பதால், உடல் வெப்பநிலை அதிகரிக்கிற தன்மை ஏற்படுகிறது. அல்லது சூழல் வெப்பநிலை உடல் வெப்பநிலையுடன் வியாபிக்கின்றது. இது 'ஹீற் ஸ்றறோக்' (Heat Stroke) என்று சுட்டப்படுகிறது. ஒரு மனிதனுக்குச் சாதாரண்மாக உடல் வெப்பநிலை 98.4பாகை பரணைட் ஆகவே இருக்கும். சூழல் வெப்பநிலை அதிகரிக்கின்றபோது இதிலும் அதிகரிகப்பு ஏற்படுகிறது. இந்த அதிகரிப்பானது 104பாகை பரணைட் வரை சென்றுவிடின் இந்த நிலை('ஹீற் ஸ்றறோக்') ஏற்படுகின்றது. பூமி தனது நீள் வட்டச் சுழற்சிப் பாதையில் பயணிக்கையில் சூரியனை அண்மிக்கின்ற மற்றும் கோடை காலங்களில் தான் இந்த நிலை அதிகம் ஏற்படுகின்றது.

### பாதிப்புக்கள்

சூழலில் அதிகரிக்கின்ற சூரிய வெப்பம், சூழலின் அனைத்துப் பொருள்களிலும் வியாபித்துப் பரவுகின்றது. நீர்நிலைகளில் ஆவியாதல் அதிகரிக்கின்றது. (கோடை காலம் ஆதலால் நீர் நிலைகள் ஏலவே வறண்டு போயிருக்கின்றன. அத்தோடு யாழ்ப்பாணத்தில் ஆறுகள், குளங்கள் குறைவு). தாவரங்களின் ஒளித்தொகுப்பு மற்றும் செயற்பாடுகளில் அதிக நீரை இழத்தல் நிகழ்கிறது. விலங்குகள் மனிதர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

மனிதர்களிலும் அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைகளும் முதிய வர்களும்தான். அத்தோடு அதிக வெயிலைக் கவனத்தில் கொள்ளாது கடினமாக உடற்பயிற்சி செய்பவர்களும், வெயிலில் நின்றபடி கடினமான வேலைகளைச் செய்வோரும்கூடப் பாதிக்கப்படுவர். இந்த அதிகரித்த வெப்பத்தால் உடலில் எரிகாயங்கள் ஏற்படலாம். தசைகள் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுத் தசைப் பிடிப்பு ஏற்படும்.

இதனால் கை, கால் நோவு மற்றும் வயிற்றுநோவும் ஏற்படும். நீரிழப்பால் மயக்கம் ஏற்படும். உடலானது தனது வெப்பநிலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். அதிகரித்த வெப்பத்தால், உடலில் இவ்வாறு ஏற்படுகின்ற இத்தகைய தளம்பல்களையே 'ஹீற் ஸ்றறோக்' நோய் எனச் சுட்டுகிறார்கள்.

> வெயில் அதிகரிக்கின்ற நேரங்களில், குறிப்பாக மதியம் 12மணியிலிருந்து 2மணி வரைக்கும் வெளியில் செல்வதைத் தவிர்த்தல் நல்லது. போதிய நீராகாரம் அருந்துதல் வேண்டும். குறைந்தது நாளுக்கு 3லீற்றர் கள் நீராவது அருந்துதல் வேண்டும். தளர்வான ஆடைகளை அணியவேண்டும்.

### ஆபத்துக்கான அறிகுறிகள்

அதிக வெப்பத்தைத் தாங்க முடியாதபோது இந்தநோயின் அறிகுறிகள் உடனடியாக வெளித்தெரியும். சடுதியில் நிகழ்வதால், மாரடைப்பை ஒத்த அறிகுறிகள்போல் தோன்றும். பொதுவாகவே குமட்டல், வாந்தி, இருக்கும், களைப்பு, உடல் பலவீனம் இருக்கும்.

தலையிடி, தசைப் பிடிப்பு, தலை வலி, தலைச் சுற்றல் இருக்கும். அடுத்ததாகஉடல் வெப்பநிலை அதிகரிக்கும். வியர்த்தல் இன்மை காணப்படும் (வியர்க்காது). சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். நாடித்துடிப்பு அதிகரிக்கும் நடத்தையில் மாற்றங்கள் ஏற்படும். மாறாட்டம், வலிப்பு ஏற்பட்டு மயக்கம் அல்லது நினைவிழத்தல் ஏற்படும்.

### தற்காத்தல்

இதிலிருந்து அனைவராலும் தம்மைத்தற்காத்துக்கொள்ள முடியும். வெயில் அதிகரிக்கின்ற நேரங்களில், குறிப்பாக மதியம் 12மணியிலிருந்து 2மணி வரைக்கும் வெளியில் செல்வதைத் தவிர்த்தல் நல்லது.

போதிய நீராகாரம் அருந்துதல் வேண்டும். குறைந்தது நாளுக்கு 3லீற்றர்கள் நீராவது அருந்துதல் வேண்டும். நீர்ப்பிடிப்பு அதிகமுள்ள பழங்கள் (தர்ப்பூசணி, வெள்ளரி போன்ற பழங்கள்), நீராகாரங்களை அதிகம் உண்ணுதல் வேண்டும்.

தளர்வான ஆடைகளை அணியவேண்டும். கடுமையான நிற ஆடைகளைத் தவிர்த்தல் வேண்டும். மதுபானம், கோப்பி என்பனவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

இவை ஆபத்தானவை. அத்தோடு கடுமையான உடற்பயிற்சி, கடுமையான வேலைகளையும் தவிர்க்க வேண்டும். தவிர, அதிகரித்த வெயிலை உணரும் தருணங்களில் வெளியே நடமாடாதிருத்தல் நல்லது.

*கட்டுரையாளர் மருத்துவர்*



தொகுப்பு
செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 19

**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் அனைவரையும் ஆசிரியர்கள் என்றே அழைக்கிறோம். ஆனால், அவர்களுள்ளே ஆசிரியராகத் திகழ்பவர்கள் ஒரு சிலரே. அண்மையில் தொண்டர் ஆசிரியர்கள் என்ற வகுதிக்குள் உள்ளடங்கிய ஒரு தொகையினருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டமையை யாவரும் அறிவர். தொடரும் ஆசிரிய பணிக்குள் தம்மை ஈடுபடுத்தி எதிர்காலத்திலும் அந்த வகையில் அவர்கள் தம்மைச் சிறந்த ஆசிரியர்களாக முன்னிறுத்த வேண்டும் என்பதையே சமூகம் எதிர்பார்க்கின்றது. அந்த வகையில் அன்று கிளிநொச்சிக் கல்வி அலுவலகத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய அமரர் வை. நாகராஜன் விளக்கு சஞ்சிகையின் நான்காவது சுடரில் 'பாடசாலைக் கட்டமைப்பில் ஆசிரியர்' என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையை இவ்விடத்தில் நினைவில் கொள்ளலாம்.

### பாடசாலைக் கட்டமைப்பில் ஆசிரியர்

ஆன்மாக்கள் இலயப்படும் இடம் ஆலயம். அதேபோல் வித்தை எனும் கல்வியால் இலயப்படுகின்ற மனிதன் பக்குவமடைகின்ற இடமே வித்தியாலயம் என்று அழைக்கப்படுகின்ற பாடசாலையாகும். பாடசாலைகளில் கல்வியைப் பெற வருகின்ற மாணவர்கள் இங்கே அறியாமை இருளில் இருந்து அறிவொளி என்னும் பக்குவம் பெறுவர். இதன் மூலமூர்த்தி அதிபராவார். பரிவார மூர்த்திகளாக ஆசிரியர்களும் அடியார்களாக மாணவரும் காணப்படுகின்றனர். அடியார்களுக்கு அருள்புரியும் மூலமூர்த்தியான அதிபர் பற்றியும் பரிவார மூர்த்திகளான ஆசிரியர்கள் பற்றியும் நன்கு விளங்கிக் கொள்வது முதற்கண் நல்லது. மூலமூர்த்தியின் ஆழமான அருள் பரிவாரமூர்த்திகளின் மூலம் வெளிப்படுவதுபோல் அதிபரின் ஆளுமை, அறிவு, ஆற்றல், செயற்பாடு என்பன ஆசிரியர்கள் மூலம் வெளிப்படும். ஆதலின் அதிபரும் ஆசிரியர்களும் உருவில் வேறு வேறாயினும் மூலம் ஒன்றே! அதிபரின் மூலம் ஆசிரியமே. ஆசிரியரின் மூலமும் ஆசிரியமே. எனவே, அடிப்படையில் அதிபரும் ஆசிரியரும் மாணவர்களுக்கு அறிவு, ஆற்றல், ஆளுமை ,அனுபவம் என்பவற்றைத் திரட்டித் தரும் மூலவேர்கள்; வழிகாட்டிகள் எனலாம். இவர்களது செயற்பாட்டிலும், ஊட்டலிலும், வழிநடத்தலிலும் உருவாகும் மாணவர் குழாமே நாளைய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் சிற்பிகளாவர்.

ஆசிரியத்தின் அறிவுலகப் புத்திஜீவிகள் பற்றி எமது ஆன்றோர் சான்றோர் நல்ல கருத்தும் எண்ணமும் கொண்டிருந்தனர். இதற்கான நல்லிலக்கணமும் வகுத்திருந்தனர். நன்னூல் ஓர் இலக்கண நூல். இதில் மாணவர் பற்றியும் ஆசிரியர் பற்றியும் நல்லிலக்கணம் கூறப்படுகிறது.

'குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை
வன்மை நிலம் மலை நிறைகோல் மலர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இவையாவும்
அமைபவன் நூலுரை
ஆசிரியன்னே!'

ஓர் ஆசிரியன் நிலத்தைப்போல் பொறுமையும், மலையைப்போல் உறுதியும், தராசைப்போல் நடுவு நிலமையும், மலர்போல் மங்கலமும் மென்மையும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய ஆசிரியர்களால் சமுதாயம் பெரும் நன்மையடையும். இன்றைய விரைந்தோடும் அவசர உலகில் சமூக உறவும் தொழிற்பாடும் இன்றியமையாததாக வேண்டப்படுகின்றன. ஆதலின் சமூகத்தின் ஓர் அங்கமான கல்வித்துறை செம்மையான நெறியில் தொழிற்படல் வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. இதனுள் செலுத்தப்படும் உள்ளீடும், வெளிப்படும் வெளியீடும், பயன் உடையதாக இருத்தல் வேண்டும். இன்றைய ஆசிரியம், முகாமைத்துவம் என்ற பொருளியல் நோக்கில் சிறப்பான எடுகோளுடன் விளங்குகிறது. ஆசிரியத்தை ஓர் எடுப்பான, செழிப்பான கலையாகக் கருதி அதை முகாமைத்துவ நோக்கிலும் நோக்குகிறோம். அதிபர் முதன்மை முகாமையாளர் என்றால், ஆசிரியர்கள் துணை முகாமையாளர்களாகக் கருதப்படுவர்.

எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஒரு கட்டமைப்பு தேவை. அந்த வகையில் பாடசாலைக்கும் ஒரு கட்டமைப்பு உண்டு. நவீன மயம் நோக்கி நிற்கும் முகாமைத்துவப் பணிக்கு இது மிக அவசியம். இந்தப் பணியில் ஈடுபடுவோரிடையே நல்லொழுக்கம், நல்லுறவு, நற்செயற்பாடு தேவைப்படுவதால் அவரிடையே புரிந்துணர்வும், சேவையுணர்வும், தியாகவுணர்வும் எந்த நேரமும் இழையோடி நிற்கவேண்டும். பாடசாலை என்ற நிறுவனம் ஒரு புறவடிவமாயினும் அதன் அகவடிவம் ஆழமான கருத்திலும் செயற்பாட்டிலும் உள்ளது.


முதன்மை முகாமையாளராக இருக்கும் அதிபரின் கட்டுக்கோப்பில் இயங்கும் இந்தத் தாபனம் ஓர் ஒழுங்கு முறையில் இருப்பதையும் செயற்படுவதையும் காணச் சமூகம் விரும்புகிறது. அதிபரின் செயற்பாட்டுக்கு, செயல் ஒழுங்குக்கு, துணைநிற்பவர்களே ஆசிரியர்கள். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் இவர்களுள் ஆசிரியர்களே மிகவும் நெருங்கிய அணுகத் தகுந்த தொண்டர்களாக, உதவியாளர்களாக இருப்பர். ஆசிரியர்களின் பங்களிப்பு என்ன என்பதையும் அவர்தம் கடமைகள் யாவை என்பதையும் இங்கு சுட்டிப்பாக அறிவோம். அதிபருக்குத் துணைநிற்கும் உதவி ஆசிரியர்களுள் மூப்பு, அறிவு, ஆற்றல், அனுபவம், ஆளுமை மிக்கோர் முன் துணையாளர்களாக மூத்த ஆசிரியர்களாக இருப்பர். இந்த 'மூப்பு' பதவி வழியாலும் வரலாம். அல்லது ஆற்றல், அனுபவம், விசுவாசம் என்பவற்றாலும் வரலாம். இதன்வழியே பாடசாலை நிருவாகத்தில் பதவி வழியில் முதற்படியில் அதிபரும் இரண்டாம் படியில் பிரதி, உதவி அதிபர் அல்லது மூத்த ஆசிரியரும் மூன்றாம் படியில் பாட வகுதித் தலைவர் அல்லது பாடப் பொறுப்பாசிரியர்களும் நான்காம் படியில் ஏனைய உதவி ஆசிரியர்களும் இருந்து பாடசாலையின் நிருவாகத்தைக் கட்டி எழுப்புவர். பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் பாடசாலைக்கு வெளியே நின்று உதவுவர். பாடசாலைக்கு மேலதிகாரிகள் மேலாண்மை செய்வர். இந்த மேலாண்மைக்குக் கட்டளைச் சட்டங்கள், விதிகள், சுற்றுநிருபங்கள் மற்றும் நடைமுறைகளும் பணிப்புரைகளும் உதவும்.

### வகுப்பறையில் தோன்றும் ஆசிரியர்

பாடத்தில் கலந்து கொள்ளும் மாணவரை இனங்காண வேண்டும். வகுப்பறையின் பௌதிக வளத்தைக் கவனித்தல் வேண்டும். சுற்றுச்சூழலின் தூய்மை, புனிதம் என்பவற்றைக் கவனிப்பதோடு பேணவும் வேண்டும். கற்பித்தலில் வகுப்பாளுமை பேண வேண்டும். வகுப்பு முதல்வரின், உதவியை நாடலாம். ஆனால் அவரை நம்பியிருத்தல் ஆரோக்கியமானதல்ல.

### வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்

தனக்குரிய பாடநேர அட்டவணையைக் கைவசம் வைத்திருந்து அதற்கேற்ப செயற்படல் வேண்டும். நடைமுறைச் சாத்தியமான பாடத்திட்டத்தை விரிவாகத் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும். ஆசிரியர் கைந்நூல் பாடத்திட்டம் என்பவற்றுக்கு இணங்க ஒழுங்கான பாடக்குறிப்பு தயாரித்து



அதிபர், வகுதித் தலைவரின் அங்கீகாரத்துடன் வைத்திருத்தல் வேண்டும். வகுப்பறைக் கற்பித்தல் பாடத்திட்டம், பாடக் குறிப்பு என்பவற்றுக்கு இயைபாக இருத்தல் வேண்டும். கூடிய அளவு கரும்பலகை, வெண்கட்டியுடன் படங்கள் அட்டவணை என்பன பயன்படுத்தல் வேண்டும். கற்பித்தல் செயற்பாட்டுக்குப் பாடசாலையின் சுற்றாடலில் கிடைக்கக் கூடிய மூலவளங்களை விவேகமாகவும் இயல்பாகவும் பயன்படுத்தல் வேண்டும். வகுப்பறைச் சூழலுக்குப் பொருத்தமான முறைகளையும் பயன்படுத்தல் வேண்டும்.

மாணவர் செயலூக்கத்தோடு அவர்தம் பாடத்தில் ஈடுபடும் தன்மையையும் ஊக்குவித்தல் வேண்டும். கற்பித்தலின் போது வகுப்பறையில் உள்ள சகல மாணவர்களையும் கவனத்தில் கொண்டு செயற்படல் வேண்டும். வகுப்பின் மாணவர் உளப்பாங்கு, விருப்பு வெறுப்பு, உடல், உள, சமூக அமைவுகள் பற்றிய பிரக்ஞை கொண்டிருத்தல் வேண்டும். பாடநேரம் முழுவதிலும் மாணவரின் அவதானத்தை ஈர்த்துக் கொள்வதோடு அதைப் பேணிக் கொள்ளவும் வேண்டும்.

தனது பாடத்துறையில் தெளிந்த அறிவு விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்பித்தல் முறைகளை அடியொற்றித் தனக்கென ஒரு கற்பித்தல் பாணியை உருவாக்கிக் கொள்ளவேண்டும். கற்ற பாடத்தை மாணவர் மீட்டுக் கொள்ள ஊக்கமும் ஆர்வமும் ஊட்ட வேண்டும். குறித்த நேரத்தில் எடுத்துக் கொண்ட பாடப்பரப்பின் அலகை அல்லது ஒரு பகுதியை நிறைவு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். மாணவரின் தனியாள் வேறுபாடுகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதி திறன் மாணவர், பின்னடைவு மாணவர் என்போரின் தன்மைகளை இனங்கண்டு அவரவர் இயல்புகளுக்கு ஏற்ப செயற்படல் வேண்டும். பரிகாரக் கற்பித்தலுக்குத் திட்டமிட்டுச் செயற்படல் வேண்டும். மாணவரின் தொழிற்பாட்டை மதிப்பிடுதல், முடிந்தவரை பாட அலகின் இறுதியில் மதிப்பீடு செய்தல் வேண்டும். மாணவருக்குக் கொடுக்கப்படும் ஒப்படைகளையும் பயிற்சிகளையும் கிரமமாகப் பார்வையிடுதல் வேண்டும். இதற்குரிய பொருத்தமான மதிப்பீட்டு முறைகளைக் கையளுதல் வேண்டும். வார, மாத, தவணை, ஆண்டிறுதித் தேர்ச்சி மதிப்பீட்டு வினாத்தாள்களைத் தரப்படுத்திப் பேணுவதோடு பாட ரீதியாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் வேண்டும். வினாத்தாள்களை ஒழுங்குமுறைக்கு இணங்க மதிப்பீட்டுத் திட்டத்தைக் கைக்கொள்ளுதல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றுக்கு இணங்க எதிர்காலக் கற்பித்தல் பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்ள வேண்டும். தொடர்பதிவு முறைகளைக் கையாளுதல் வேண்டும். மாணவரின் பெறுபேற்று விவரங்களைப் பெற்றோருக்குத் தெரிவிக்க ஏற்ற ஒழுங்கு முறைகளைக் கிரமமாக மேற்கொள்ள வேண்டும். மாணவரின் தனிமுயற்சி, குழுமுயற்சிக்கு ஏற்ப வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தல் வேண்டும்.

### ஆசிரியரின் வினைத்திறனும் ஒழுக்காறும்

பாடசாலைக்கும் வகுப்புக்கும் வருவதில் ஒழுங்கும் கிரமமும் பேண வேண்டும். வகுப்பில் மாணவரது தினவரவு இடாப்பு, பாடப்பதிவேடு, சுயபாடக்குறிப்பு, வகுப்பறை நூல்கள் என்பனவற்றை ஒழுங்காகவும் முறையாகவும் பேணல் வேண்டும். பாடசாலை வேளையில் நேரவிரயமின்றி பயன்மிக்க செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். வழமையான நியமக் கற்பித்தல் வேலைக்கு மேல் பாடசாலையின் புறமுயற்சிகளில் தானாகவே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். தொழில் தகைமைக் குறைபாடு அல்லது விடய ஆற்றலின்மை காரணமாக அதிபர், திணைக்கள அலுவலர்கள் குற்றம் காணாதிருக்கத் தன்னை வளமாக்கிக் கொள்ள வேண்டும். வாண்மை வளர்ச்சியுடன் செயற்படல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்டுக் குற்றவாளியாகக் காணப்படாதவகையில் உள்ளும் புறமும் நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியத் தொழிலுக்கு உவப்பான நடத்தை, நடை, உடை, பாவனைகளில் நல்லியல்புகள் பொருந்தக் கடமை செய்தல் வேண்டும்.

### இணைபாடவிதானக் கலைத்திட்டச் செயற்பாடுகள்

அதிபரால் திணைக்களத்தால் வகுதித் தலைவரால் குறித்தொதுக்கும் அலுவலகப்பணிகள் புறக் கடமைகள் என்பவற்றுக்கு முழுவதுமான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பாடசாலையில் பேணப்பட வேண்டிய ஒழுக்கம், கட்டுப்பாடு, நடைமுறை என்பவற்றுக்கு இணங்கத் தன்னாலான சகல ஒத்துழைப்புக்களையும் நல்க வேண்டும். பாடசாலையின் பொது நலமே முதன்மையானது எனக் கொள்ள வேண்டும். பாடசாலையின் விளையாட்டு, சாரணியம், சமூக சேவைக் கழகங்கள், தேர்ச்சிக் கழகங்கள், கலை, இலக்கியக் கழகங்கள் என்பவற்றுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குதல் வேண்டும்.

இணைபாடவிதான முயற்சிகளில் தன்னாற்றலுக்கு ஏற்பத் தலைமை வகித்து, வழிநடத்தல் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம்போன்ற அமைப்புகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குதல் வேண்டும். ஆசிரிய நலன்புரி மன்றங்களுடன் இணைந்து ஆசிரிய சகோதரத்துவம் பேண வேண்டும். ஆசிரியர் தொடர்பான உறவுகளுக்கு ஆதரவும் பங்களிப்பும் நல்க வேண்டும் வாண்மை வளர்ச்சிக்கான பயிற்சியும் தேர்ச்சியும் பரந்த அளவில் பலதும் பத்தும் வாசிக்கும் பழக்கத்தைப் பேணி நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசித்துக் கிரகித்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொடர்புச் சாதனங்களுடன் தொடர்பும் ஈடுபாடும் கொண்டு தன்னறிவு வளத்தைப் பேணுவதோடு மாணவர்களையும் அவற்றுடன் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்குகளில் ஒழுங்காகப் பங்குபற்ற வேண்டும். வேண்டிய தரவுகள் குறிப்புக்களைச் சேகரிக்க வேண்டும். தான் பெற்ற ஆற்றல் அநுபவத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். தன் தொழில் விருத்தி, புதிய கல்வி நோக்குகள் கொள்கைகளில் நாட்டமும் அக்கறையும் கொண்டு பல்வேறு கற்கை நெறிகளை அனுசரித்து ஆய்வுடன் செயற்படல் வேண்டும்.

### நல்லுறவு.

பாடசாலை நிர்வாக இயந்திரத்துடன் விரிந்த நோக்கில் கூட்டுறவாய் இயங்க வேண்டும். மாணவர், பெற்றோர், பழைய மாணவர், சிற்றூழியர் என்போருடன் ஒற்றுமையாய் நல்லுறவு மிளிரப் பழக வேண்டும். ஆசிரியத்தின் சீரான உறவுகளைப் பேணி நற்பணி ஆற்ற வேண்டும். (தொடரும்)

கவிதை

வேலணையூர் மயிலைக்கிளி




காடெல்லாம் ஈஞ்சு பழுத்துமே சொரியும்
கடலெல்லாம் மீனினம் துள்ளியே குதிக்கும்
நாடெல்லாம் செந்நெல்லு குலுங்கியே சிரிக்கும்
நாடி நரம்பெல்லாம் ஈகை நிறைந்தே இருக்கும்

வீடெல்லாம் ஆவின் பால் நிரம்பியே வழியும்
வீசு புகழ் புகையிலையும் கூடவே மணக்கும்
தோட்டமெல்லாம் இசை வண்டுகள் இசைபாடி மகிழும்
தேடியே புட்களெல்லாம் உரையாடிப் பறக்கும்

ஆலடியான் மணியோசை அசைந்தே ஒலிக்கும்
அரோகரா சத்தமது காற்றையே கிழிக்கும்
பலமோடு குரலோச்சும் வேளாண்மை சிலிர்க்கும்
பார்ப்போரைத் தீவக மண் கவர்ந்தே இழுக்கும்

பாவலரும் புரவலரும் கூடியே வாழ்ந்திடும்
பாசமிகு உறவுகளின் உறைவிடமாய் மிளிரும்
காவலர்கள் யாருமின்றிக் கழனியெல்லாம் காடாகி
கருகிப்போய்க் கதறுதையா எந்தன் மண் இன்று

# பயனுள்ளதாகட்டும் பருவகால விடுமுறை



கட்டுரை

செ.செல்வராஜா

ஒருசாரார் ஆவலுடன் எதிர்பார்த்து, தமது பிள்ளைகளைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வருகிற ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது. பலரும் பலவித அழுத்தத்தில் இருப்பர். இதைப் புரியக்கூடியதாகத் தமிழில் சொன்னால்'ரென்சனில்' இருப்பர். தாமும் ரென்சனாகி, மற்றவர்களையும் 'ரென்சனாக்கும்' தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகிற பிள்ளைகளின் பெற்றோரது ரென்சன், அதற்கு அடுத்தடுத்த மாதமான ஒக்ரோபரில் பெறுபேறு கிடைக்கும் வரை நீளும். இந்தத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல், பிள்ளை தரம் 1, 2இல் கற்கும்போதே தொடங்கிவிடும். அப்போது தொடங்கிய பிள்ளைக்கான நெருக்கீடுகள், தரம் ஐந்தில் ஓகஸ்ட் ஐந்தின் பின்னராவது தீர்ந்துவிடுமோ தெரியவில்லை. அது பெற்றோரின் மனோ நிலையைப் பொறுத்தது.

### எதிர்காலம் என்பது கல்வி மட்டுமல்ல

அண்மையில் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியை ஒட்டி, ரஷ்யாவைப் பற்றியப் பல விடயங்கள் ஊடகங்களில் அலசப்பட்டன. அதில் ஒரு சுவையான விடயமாக, பாலே(பலே) நடனம் கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் பற்றிய தாகவும் சிறிய பார்வை இருந்தது. மிக விருப்போடு அவர்கள் 'பாலே' கற்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது எதிர்கால இலட்சியம் என்ன என்று கேட்கப்பட்ட பொழுது தாம் ஒரு 'பாலே' நடனக்காரராக வரவேண்டும் என்றும் ஒருசிலர் கூறினர்.

1689ஆம் ஆண்டு வரை ரஷ்யாவில் பாலே நடனம் என்பது ஒரு கனவாகவே இருந்தது. பாலே நடனமானது இத்தாலியில் இருந்தும், பிரான்சில் இருந்தும் ரஷ்யாவைச் சென்றடைந்ததாகக் கூறப்படுகின்றது. அதுபற்றிய பல விமர்சனங்களும் உள்ளன. இந்தப் பாலே நடனம் பொழுது போக்குக்காகவோ, மகிழ்வூட்டுவற்காகவோ ரஷ்யாவுக்குக் கொண்டுவரப்படவில்லை. மேலைத்தேச நாடுகளுடன் சவால் விடுக்குமுகமாகவே கொண்டுவரப்பட்ட ஓர் உடலியல் நடத்தையாகக் கொள்ளப்பட்டது. ரஷ்ய மக்களைப் புதியவர்களாகப் பண்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் தற்போது ரஷ்ய மக்களின் இதயங்களில் பாலே நடனம் முக்கிய வெற்றிக் குறியீடாக இடம்பெற்றுள்ளது.

### 'பாலே'யால் பல சாதகங்கள்

இந்தப் பாலே நடனமானது பிள்ளைகளின் உடல் ஆரோக்கியமாக இருப்பதற்குத் தேவைப்படும் ஓர் உடல் அப்பியாசமாகத் திகழ்கின்றது. வளர்ந்தவர்கள்கூட தமது உள, உடல் இயக்கத் திறனைப் பேணுகின்ற ஒரு செயற்பாடாக இந்த நடனப் பயிற்சியை மேற்கொள்கின்றனர். இந்த வகையில்தான் எமது தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகின்ற பிள்ளைகள் ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி வரை, காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு திரும்பவும் படிப்பு, படிப்பு என்ற நிலையிலிருந்து விடுபட்டு உடலையும் கவனிக்கின்ற ஒரு நிலைக்குக் கொண்டுவரப்படவேண்டும். மூளை வளர்ச்சிக்கான அப்பியாசங்களுக்கு அப்பால், அவர்களது உடலும், உளமும் சேர்ந்து இயங்குகின்ற விருப்புச் செயற்பாடுகளுக்கு இந்தப் பரீட்சையின் பின்னராவது வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் அவசியம்.

### விடுமுறைகள் மகிழ்வளிக்க வேண்டும்

இந்தியாவில் பல பிரதேசங்களிலும், பருவகால விடுமுறைகளைப் பிள்ளைகள் எவ்வாறு செலவிட வேண்டும் எனத் திட்டமிட்ட முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோடை விடுமுறையில் பிள்ளைகளை 'சம்மர்' வகுப்புக்களுக்கு அனுப்பும் முடிவிலிருக்கும் பெற்றோர், வழக்கமான நீச்சல், ஓவியம், யோகா வகுப்புக்களைத் தவிர்த்து வித்தியாசமான வகுப்புக்கள் பற்றிச் சிந்திக்கின்றனர்.

இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த தன்னம்பிக்கைப் பயிற்றுநர் மற்றும் ஆசிரியரான திவ்யா தனது திட்டத்தை 'மாயா ஜாலம்'(மெஜிக்), 'மூளைக் குத்துப்பாட்டு', 'பிறந்த நாளுக்கான எனது அலங்காரம்' என்கின்ற மூன்று எண்ணக்கருக்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இத்தகைய செயற்பாடுகளுக்குப் பெற்றோர் தமது பிள்ளைகளை அழைத்துச் சென்று பங்குகொள்ளவிடுகிறார்கள். பிள்ளைகளது மிக விருப்புக்குரிய செயற்பாடாக இது அமையும். இத்தகைய ஒரு கலாசாரம் இங்கு உள்ளதா? என்பது கேள்விக் குறியே. உலகளாவிய ரீதியில் மாயாஜால வித்தையானது சிறுவர் முதல் பெரியோர் வரை ஈர்க்கும் ஆற்றுகைக் கலையாக நடத்தப்பட்டு வருகிறது. இது பிள்ளைகளுக்கு விநோதத்தையும், வேடிக்கையையும் மட்டுமன்றிக் கவனத்தையும் ஒன்று குவிக்கும் ஆற்றல் மிக்க ஒரு சாதனமாகும். ஆராய்வு ஊக்கத்துக்கு உரம் சேர்ப்பதாகவும் அமைந்து, அவர்களது மூளை விருத்திக்கும் உதவும் என்கிறார் திவ்யா.

அதேபோன்று மூளைக் குத்துப்பாட்டு என்கின்ற சாதாரண செயற்பாட்டையும் விளக்குகின்றார். குத்துப்பாட்டு என்றால் தானகவே நடனமாடும் கால்களையும், மூளையையும் மெல்லிய இழையால் இணைக்கும் ஒரு விளையாட்டு என்கின்றார். எடுத்துக்காட்டாக, 'பிம், பம், பெரி' என்பதாக இராகத்துடன் பாடும் பாட்டில் பிம் என்பது கைகளைத் தட்டுவது: பம் என்பது சொடுக்குப் போடுவது மற்றும் பெரி என்பது கைகளைத் தட்டுவது எனத் தாளத்துக்கமைய மீண்டும் மீண்டும் செய்வதே இந்தக் குத்துப்பாட்டு என விவரிக்கின்றார். மூன்று வயதுள்ள பிள்ளைகள் கூட இதை விருப்போடு செய்வர் என்பது அவரது அனுபவம்.

'எனது பிறந்தநாளுக்கான எனது அலங்கரிப்பு' என்ற எண்ணக்கருவில், தனது பிறந்த நாளுக்கான கேக் தயாரிப்பு, காகிதப்பூக்கள் தயாரிப்பு, மற்றும் சில அலங்கரிப்புக்களைப் பிள்ளைகள் தாமே கூடிச் செய்வதற்கு வழிகாட்டுகிறார். இத்தகைய செயற்பாடுகள் மூலம் பல்வேறு அனுபவங்களைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்கிறார்கள்.



### சூழலுக்கேற்ப பயனுள்ள பொழுதுபோக்குகள்

நல்ல வேளையாக இந்த வருடம், தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சையை எமது பிள்ளைகள் பாடசாலையின் இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பிக்கும் காலத்திலேயே பூர்த்திசெய்துவிடுவர். (முன்பு இந்தப் பரீட்சை க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னரே நடைபெற்று வந்தது. அவ்வேளை பிள்ளைகளது விடுமுறை முடிந்துவிடும். தமது இனிய விடுமுறையைப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தப்படுத்தலில் தொலைத்திருப்பர்.

ஆனால் இந்த முறை அவ்வாறல்ல) எனவே பின்னாளில் கிடைக்கும் விடுமுறை தினத்தைப் பிள்ளைகள் அவரவர் சூழலுக்கு ஏற்ற விதத்திலும், கிடைக்கும் வளங்களுக்கு அமையவும் திட்மிட்டமுறையில் முன்கொண்டு செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் அவசியம். மேற்சொன்ன மாயாஜாலம், குத்துப்பாட்டு, பிறந்த நாள் எண்ணக்கருக்கள் தான் அவசியமென்றில்லை.

குரும்பட்டியில் தேர் செய்து, பூக்களால் அலங்கரித்து, ஒன்று கூடித் தேர் இழுத்து, 'அம்மனோ... சாமியோ' என்கின்ற குத்துப்பாடலை ஒலிக்கவிட்டோ 'வேப்பிலை வேப்பிலை மாரியம்மன் வேப்பிலை' போன்ற பக்திப் பாடல்களையோ பாடி ஆடி மகிழலாம்.

பாலே நடனத்தில் கிடைக்கின்ற உடல் வலுவூட்டலும், பெங்களூர் ஆசியரின் வகுப்பில் கிடைக்கின்ற அனுபவமும் எமது பண்பாட்டில் ஊறிய பல்வேறு செயற்பாடுகளில் உள்ளன. அவற்றை ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவதே இன்றுள்ள தேவை.

பரீட்சைப் பெறு பேறுகள் எவ்வாறு அமையுமோ? எனத் தாமும் ஏங்கிப் பிள்ளைகளையும் மன உழைச்சலுக்கு உள்ளாக்குவதைத் தவிர்த்து, பிள்ளைகளது ஆரோக்கியமான விருப்புச் செயற்பாடுகளுக்கு வழியேற்படுத்தி, அவர்கள் புத்துணர்ச்சியுடன் அடுத்த கட்டக் கற்றலுக்குச் செல்ல, வழியை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறுவர் மீது கரிசனை கொண்ட ஒவ்வொருவரினதும் கடமையாகும். வாழ்க்கை என்பது தொலைப்பதற்கான ஒன்றல்ல. வாழ்வதற்கானது. அதற்கான அடியெடுத்துக் கொடுத்தல் என்பது ஒவ்வொரு பெற்றொரினதும் பணியாகும். செய்வீர்களா?



# வெள்ளி பாக்கப்போற சடங்கு...

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்




பள்ளிக் கூடங்களிலை நடக்கிறதுகள் கனக்கக் கிடக்கு சொல்லுறதுக்கு. நேரமல்லே காணாமல் கிடக்குது. என்னடா இவன் எந்தநேரமும் பள்ளிக்கூடக் காரரைப் பற்றியே அலட்டிக் கொண்டிருக்கிறான் எண்டு நினைச்சாலும் நினைப்பியள். என்ன இருந்தாலும் பாருங்கோ சமூகத்தை ஆரோக்கியமா வளத்தெடுக்கிற அடிப்படைக் கட்டமைப்பா அதுமட்டும்தானே இருக்குது. குகைக்குள்ள மாட்டின பிள்ளையளை, அந்த நாட்டு அரசும் அதின்ர பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் எண்டு பெரியதொரு கூட்டு முயற்சியின்ர விளைவாலை மீட்டு எடுத்ததை உலகம் மூக்கிலை விரலை வைச்சுப் பாத்ததைக் கனபேர் அறியயில்லை எண்டதைப் பற்றியல்லே அண்டைக்குச் சொன்னனான்.. அதுகும் வாத்திமாரே அறியாமலிருக்கிறதுதான் அதிசயம்.. ஆபத்துந்தானே? இல்லையே?

'எங்கட கல்வி முறையும் நாங்களும்' எண்டு சலிக்கிற வாத்திமாரும் இருக்கினமெண்டது கொஞ்சமெண்டாலும் ஆறுதலான விசயம்தான் பாருங்கோ. பள்ளிக்கூடத்துப் புத்தகங்களுக்கு வெளியாலை ஒண்டும் தெரியாத வாத்திமாரும் இருக்கினமெண்டதுதான் இப்ப பிரச்சினையே.. சோதினைப் பேப்பரை அவைதானாம் 'செற்' பண்ணுகினம். ஆதாலை பிள்ளையளும் அதுக்கு வெளியாலை ஒண்டையும் தேடவோ, ஆராயவோ வெளிக்கிடுறதில்லை. பெத்ததுகளும் விடுகிறதில்லைத்தானே? பிள்ளையளுக்கு அறிவு எப்பிடிப் பரந்து விரியும்?



⊛⊛⊛⊛⊛⊛

"பள்ளிப் படிப்புக்கு வெளியாலை ஓர் உலகம் இருக்குது எண்டதை விட வெளியாலைதான் உலகமே இருக்குது எண்டதுதான் உண்மை" எண்டு பேரம்பலத்தார் அடிக்கடி சொல்லுறதிலை உண்மை இருக்கல்லே? நாங்கள் அதைக் காட்டுறதில்லை. (காட்டுறதுக்குத் தெரிஞ்சிருக்க வேணுமல்லே எண்டு சொல்லக்கூடாது அது கொஞ்சம் ஓவராப் போகுடும்). ஒருநாள் ஒரு வாத்திப் பொடியனைக் கேட்டனான். நாங்கள் சுற்றுலாவுக்கு பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வருசா வருசம் போறனாங்கள்தானே எண்டார். எங்கைஎங்கை எல்லாம் போனனீங்கள்? என்ன என்னவெல்லாம் காட்டுகிறனீங்கள்? எண்டு விடாமல் கேட்டன். அவருக்கு அது அவ்வளவாய் பிடிக்கேல்லை 'எண்டதை அவற்ற முகம் போன போக்கை வைச்சுப் பிடிச்சிட்டன். அவர் கொஞ்ச இடங்களின்ர பெயருகளைச் சொன்னவர். அதுகள் இப்ப தேவையில்லை பிறகு சொல்லுறன் சரியே?

⊛⊛⊛⊛⊛⊛

ஒருக்கா இப்பிடித்தான் செல்லர் அண்ணையின்ரை பெட்டை ஒரு மாதமா ரூர்..ரூர் எண்டு கனவிலை வாய்புசத்திக் கொண்டிருந்தித்து. பிறகு எங்கேயோ எல்லாம் ரூர் எண்டு போயும் வந்துது. என்னவெண்டு விடுப்புக் கேக்கவெண்டு போய் நானும் கேட்டன். அங்கை போனம், இஞ்சை போனமெண்டு குத்துமதிப்பிலை சொல்லிச்சுதே தவிர விளக்கமா ஒரு விசயத்தையும் சொல்லத்தெரியாமல் தடுமாறிக் கொண்டு நிண்டுது. "என்ன பிள்ளை நாலு நாள் ரூர் எண்டு போனாய், பார்த்த இடங்களெண்டு கேட்டால், மூண்டு நாலுதானெ சொல்லுறாய்? அதுகும் வடிவாப் பாக்காத மாதிரியல்லே தடுமாறுறாய்?" எண்டு பிடுங்கினன். "எல்லாருமாப் போகேக்குள்ள நாங்களாய் நிண்டு மினக்கெட ஏலுமே? சேந்து இழுபட்டதுதான்" எண்டு சலிச்சாள் பெடிச்சி. அதுதான் உண்மை பாருங்கோ ..."நாலு நாள்" எண்ட பேர்தான்.. ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு திக்கு. போக்கு வரத்திலை.

பஸ்சுக்குள்ள இருந்து ஓடுறதிலையே நாள் போகுடும்.. பிறகென்னத்தைப் பாக்கிறது? ஊரிலை வகுப்பிலை பாத்த அதே முகங்கள் பேச்சுகள் ....? புதிசா ஒண்டுமிராது. அதுக்குப் பேர்தான் ரூர். இப்ப விளங்குதே ...வாத்தியாருக்கு முகஞ்சரியில்லாமல் போனதுக்குக் காரணம்?... ம்ம்... விளங்கிற மாதிரிக்கிடக்குதோ?

⊛⊛⊛⊛⊛⊛

எங்கட காத்திகேசன்ணையின்ர ரண்டாவது மேள் 'ஜோகிறபிப்' பட்டதாரியல்லே. அதுகும் ஒருக்காச் சுத்திக்கொண்டு வந்தநேரம் போய்க் கேட்டனான். அது என்ன சொன்னது தெரியுமே? "கதிரேசண்ணை எரிச்சலைக் கிளறாதயுங்கோ, ச்சீ, பேய்க்கவட்டம், ஒரு பிளானிங் இல்லாத ரூர், பஸ்சுக்குள்ள இருந்தே நாரியும் கழுத்தும் முறிஞ்சு போச்சு, போற இடமெல்லாம் அம்பிட்ட எல்லாத்தையும் வாங்கி வாங்கித் திண்டுதுகள். பஸ் யன்னலுகள் பூட்டிக் கிடந்திருந்தா பஸ் வெடிச்சிருக்கும், நினைக்கவே தலையைச் சுத்துது. பாத்தது எண்டு சொல்ல ஒண்டுமில்லை" எண்டு எரிஞ்சு விழுந்தாள்.

⊛⊛⊛⊛⊛⊛

"ஒவ்வொரு வருசமும் போற அதே இடங்கள் தான். புதுசா என்னத்தைப் பாக்கிறது? சித்திர வாத்தியார் சந்திரவட்டக் கல் என்பார்... வரலாற்று ரீச்சர் பொலநறுவை - அநுராதபுரம் கொழும்பு என்பா, சமயக்காறர் கதிர்காமம் என்பினம். விஞ்ஞானக்காறர் சூ... இப்பிடியே ஆளாளுக்கு இழுத்து எல்லா இடமும் போய், பஸ்சாலை இறங்கி முன்னுக்குப் போற ஆளின்ர முதுகையே விடாமப் பாத்தபடி போய், அம்பிடுற கடையளிலை, கன்ரீனுகளிலை நிண்ட நிலையிலை அதையிதைக் கடிச்சு விழுங்கி, ஒண்டுக்கு ரண்டுக்குப் போய்.. ஆக்களை எண்ணி பஸ்சுக்குள்ள திரும்ப அள்ளியேத்தினா ஓட்டம்தான். பிறகென்ன அடுத்த இடம்.. அதிலையும் இதேயொழுங்கிலை தான் அத்தினையும்" எண்டு சலிச்சுது கோபாலற்றை கடைக்குட்டி. அதுவும் ஒரு வாத்தி. அதிலையும் பொம்பிளை வாத்திமார் ரூருக்குப் போகேக்க தங்கட சொந்தப்பிள்ளையளோட படுகிற பாட்டை பள்ளிப் பிள்ளையள் பாத்துச் சிரிக்கிறதும் உண்டு. ஒரு பொடியன் சொன்னான். "ரூருக்குப் போன இடத்திலை சேர் ஆக்கள் ரண்டு, மூண்டு பேர், பொழுது படுமாப்போல போனுக்குக் காட் போட எண்டு போச்சினை. ஒன்பது மணியாகும் திரும்ப வர. வந்த உடனயே தலையிடிக்குது எண்டு படுத்தினம். அடுத்தநாள் தான் எழும்பிச்சினம். நாங்கள் எங்கட பாடுதான்..." எண்டு சொல்லிச் சிரிக்கிறான் பெடியன். 'காட்' போடுற கதையக் கேட்டு நானுஞ் சிரிச்சன். வேறயென்ன செய்ய?

⊛⊛⊛⊛⊛⊛

சுற்றுலா போறது அறிவை வளக்கத்தான் எண்டதைக் கூடச் சரியாய் உணராத ஆக்களாய்ப் போனம். ஓரிடத்துக்குப்போய் ஆறுதலாய்த் தங்கியிருந்து ஆராய்ஞ்சு அறியிற அறிவு இல்லாமல் போச்சுது. 'பெயருக்குப் போனமாம், வந்தமாம் எண்டும், எல்லாரும் போயினம் எண்டும் போட்டுவாற அலைச்சல்தான் கல்விச் சுற்றுலா' எண்டு இவையின்ர இந்த வித்தைக்கு வரைவிலக்கணம் சொல்லலாம். அந்தளவுக்கு இருக்குது கூத்து.

நீங்கள் என்ன நினைக்கிறியள்?

வடக்கு மாகாணத்துக்குள்ளயே பாக்கிறதுக்கும் அறியிறதுக்கும் எவ்வளவோ கிடக்குது. இதுகளைப் பட்டியல் போட்டு வழிப்படுத்துறதுக்கு ஆளில்லை. ஆனா நாடு பூராவும் அலையுறம் ஒரு பயனுமில்லாமக் காசு.. நேரம்.. உடல் ஆரோக்கியம் எல்லாத்தையும் வீணாக்கிறம். இல்லையோ? பயனுள்ள பயணங்கள் நல்லதுதான். ஆனால் எங்கட பயணங்கள் வெள்ளிபாக்கிற பயணங்களாய் எல்லோ கிடக்குது...?

## மௌனத்தின் தேடலில்...



உன் மௌனத்தின் தேடலில்
தொலைகிறேன்...
கரையும் நொடிகள்
எனைச் சுட்டெரிக்க
குருதி வற்றிய நரம்புகளை
என்னில் காண்
என் உயிரின் வலியை
உணர்வாய்...

உன் நிராகரிப்புக்களால்
நிதம் துவள்கிறேன்
என்னுள் ஆயிரம் ஆயிரம்
புயல் மையம் கொள்ள
உன் மௌனமோ நீண்டு செல்கிறது
தொடர் கதையாய்

அங்கீகாரம் கிடைக்கிற
என் திறமைகளை
செல்அரிக்கக் காத்திருக்கிறது

சீக்கிரம் கலைத்துவிடு
உன் மௌனத் தேடல்களை

என் வரிகளை உணர முற்படு
என் வலிகளை உணர்வாய்
வானைக் கடந்த என் கனவுகளுக்கு
மீண்டும் புத்துயிர் கொடு
உனக்கும் எனக்கும் [illegible]கிற மொழியால்...

கவிதை

மாதவி உமாசுத சர்மா



# 'சுகப்படுத்தும் சேவை'யை சரிவரப் பயன்படுத்துவோம்!

கட்டுரை

ஸ்டோஸ்வாமி

'சுவசெரிய' அல்லது சுகப்படுத்தும் சேவை என்று அழைக்கப்படும் நோயாளர் காவுவண்டிச் சேவை வடபுலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய நிதி உதவித்திட்டத்தில் தொடங்கப்பட்டு, முன்பு தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்த இந்தச் சேவை, இனி நாடெங்கும் விஸ்தரிக்கப்பட இருக்கிறது. இந்த நிலையில் வட மாகாணத்தில் குறித்த சேவையை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் வைபவம், தலைமை அமைச்சரின் வருகையுடனும் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

1990 என்னும் கட்டணமற்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து, பெற்றுக்கொள்ளக்கூடிய இந்த 24மணிநேர இலவச உதவிச்சேவை, அவசர விபத்து மற்றும் மருத்துவ நிலைமைகளின் போது, பாதிக்கப்பட்டவரை முறையாகவும், விரைவாகவும் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வசதியை வழங்குகின்றது. அவசர அம்புலன்ஸ் சேவையாகவே இது அறியப்பட்டாலும் உண்மையில் வைத்தியசாலையை அடையுமுன்னர் பாதிக்கப்பட்டவரை அல்லது நோயாளியைக் கவனமாக தயார்ப்படுத்தும் பணியை இலக்கு வைத்ததாக இது இயங்கும்.

**வைத்தியசாலையை அடைவதற்கு முன்னான பராமரிப்பின் முக்கியத்துவம்!**

அவசர நிலைமைகளின்போது, பாதிக்கப்பட்டவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்திய பராமரிப்பு குழுவினர் அவருக்கான சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன்பு அவர் வைத்தியசாலையைச் சென்றடையும் விதம் மற்றும் சென்றடையும் நேரம் என்பன வாழ்வா? சாவா? நிலையைத் தீர்மானிக்கின்றன. இந்தத் தயார்ப்படுத்தலானது வைத்தியசாலையில் தொடரப்பட இருக்கும் சிகிச்சையை இலகுவாக்குவதுடன், பாதிக்கப்பட்டவர் மற்றும் தங்கி வாழ்வோர் ஆறுதல் அடையவும் துணை புரிகிறது.


**'1990' சுவசெரிய மன்றமும் நிறுவப்படுகிறது**

இந்த உதவிச் சேவையை வழங்குவதற்காக 1990 சுவசெரிய மன்றமும் நிறுவப்படுகிறது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஆளுகையின் கீழ் வரும் இது, ஆரம்பத்தில் இந்திய உதவியுடன் தொடங்கப்பட்டாலும் பின்னர் இலங்கைக்கே உரித்தானதும், சுயாதீனமாக இயங்குவதுமானதாக மாற்றப்படும்.

**இந்தச் சேவைக்கு முன்னோடி வடக்கே!**

இந்திய அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச்சேவை, 2016ஆம் ஆண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டது. எனினும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். காரணம், இந்திய அரசின் உதவியுடனான குறித்த திட்டம், இலங்கையில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு வாய்ப்பாக அமைவதாக வாதிட்டிருந்தனர். அதே காலப்பகுதியில், இவ்வகையான இலவச நோயாளர் காவு வண்டிச்சேவை உள்ளூர் பணியாளர்களை ஈடுபடுத்தி வடமாகாண சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்கிவந்தது. வெளிநாட்டு உதவி எதுவுமின்றி இயங்கி வந்த இந்தச் சேவையை மெச்சிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், அவ்வாறான சேவை ஒன்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இந்த உதவிச் சேவையை வழங்குவதற்காக 1990 சுவசெரிய மன்றமும் நிறுவப்படுகிறது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஆளுகையின் கீழ் வரும் இது, ஆரம்பத்தில் இந்திய உதவியுடன் தொடங்கப்பட்டாலும் பின்னர் இலங்கைக்கே உரித்தானதும் சுயாதீனமாக இயங்குவதுமானதாக மாற்றப்படும். இந்த சேவைக்கு முன்னோடி வடக்கே! இந்திய அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச்சேவை, 2016ம் ஆண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டது



**வடக்கில் இயங்கிய சேவை முடிவுக்கு வருகிறது**

021 222 4444 மற்றும் 021 222 5555 இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம்வடக்கில்பெறமுடிந்த அவசர மருத்துவ நிலைமைகளின் போதான அவசர அம்புலன்ஸ் சேவை இந்த மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. கிளிநொச்சி பொதுவைத்தியசாலையை முதன்மைக் கட்டுப்பாட்டு மையமாகக் கொண்டு இயங்கிய இந்த முன்னோடிச்சேவை, 2016ஆம்ஆண்டு ஜனவரி மாதத்தில் அப்போதிருந்த வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

**சேவை வரப்பிரசாதமே!**

மருத்துவர் தங்கி நிற்கக்கூடிய வசதி இல்லாத வைத்தியசாலைகளையும், வாகனப்போக்குவரத்து குறைவான கிராமப் புறங்களையும், வண்டிகளைச் செலுத்திச்செல்வதற்குக் கடினமான சாலைகளையும் கொண்டிருக்கும் வடபிராந்தியத்துக்கு, மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு அடுத்தபடியாக இந்தச் சேவை வந்து சேர்ந்திருப்பது பெரிய வரப்பிரசாதமாகும்.

2016ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட சேவை, இதுவரை 606, 365 ஆகிய அவசர தொலைபேசி அழைப்புக்களை பெற்றிருப்பதுடன், 84 ஆயி ரத்து, 360 பேர் வரையில், பாதிக்கப்பட்டவர்களை அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்த்திருக்கிறது. விபத்து மற்றும் மருத்துவ அவசர நிலைமைகளின் போது மிக பேருதவி புரிகிற இந்தச் சேவை, நமது தாயகப் பிரதேசத்தில் ஏற்படக்கூடிய ஆபத்து நிலைகளின் போது வினைத்திற னான முறையில் பயன்படுத்தப்படவேண்டும்.

வீட்டில் வலியெடுத்த பிரசவங்களை சுகப்பிரசவம் ஆக்குவதில் ஆகட்டும், வீதி விபத்துக்களில் ஆகட்டும், தீக்காயங்களில் ஆகட்டும், நீரில் மூழ்கும் சம்பவங்களில்ஆகட்டும், பாதிக்கப்பட்டவருக்கு விரைவான மருத்துவக் கவனிப்பு கிடைப்பது அவசியமாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் கை கொடுக்க 1990 சேவை காத்திருக்கிறது.

**பொலிஸ் நிலையத்திலிருந்தே புறப்படும்!**

வடக்கில் தற்போது பரவலாக இடம்பெறும் வாள் வெட்டுக்களில் பாதிக்கப்படுவோருக்கே குறித்த அம்புலன்ஸ் சேவை அதிகம் பயன்பாடாக இருக்கும் என ஊகித்ததலேயோ என்னவோ, இந்த அம்புலன்ஸ் சேவையை பொலிஸ் நிலையங்க ளுக்கூடாகவே முன்னெடுக்க உத்தேசித்திருக்கிறார்கள். சுவசெரிய திட்டத்தின் கீழ், 21நோயாளர் காவு வண்டிகள் வடக்குக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் 20 வண்டிகள் அந்த அந்த பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 7 வண்டிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவை யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, அச்சுவேலி, வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களூடாகச் சேவை வழங்கவுள்ளன. விபத்துச் சம்பவங்கள் நடந்து 1990 மூலம் உதவி கோரப்படுமாயின், அந்தத் தகவல் உடனுக்குடன் அந்தப் பிரதேசத்துக்குக் கிட்டிய அம்புலன்ஸ் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும். அவசியம் ஏற்படின், ஓரிரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அம்புலன்ஸ் சகிதம் பயணிப்பர்.

அவசர நிலைமைகளின்போது விலைமதிப்பற்ற மனித உயிரைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தச் சேவை தொடர்பில் மக்கள் அறிந்து வைத்திருப்பதுடன், சரியான தகவல்களை வழங்குவதன் மூலம் அம்புலன்ஸ் சேவையை விரைவாக பெற்று பயன்பெறவும், வினைத்திறனதாக இந்தச் சேவையை மாற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# தாய் சொல்லைத் தட்டாதே



கிராமமொன்றிலே ஓர் இடையன் ஐம்பது ஆடுகளுடன் தனது வாழ்க்கையைச் சந்தோசமாகக் கழித்து வந்தான். இடையன் ஆடுகள் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். ஆடுகளும் இடையனோடு மிகுந்த அன்பாய் இருந்தன. ஒரு நாள் இடையன் தன்னுடைய ஆடுகளைப் புதியதோர் பகுதிக்கு மேய்ச்சலுக்காக ஓட்டிச் சென்றான். அந்தப்பகுதி பச்சைப் பசேல் என அழகாகக் காட்சியளித்தது.

அந்த இடத்துக்குச் சென்றதும் ஆட்டு மந்தைக் கூட்டத்தில் இருந்த தாயாடொன்று தனது குட்டியைப் பார்த்து "நீ என்னை விட்டுத் தனியே எங்கும் சென்று விடாதே. புதிய இடம் ஆபத்துக்கள் வரலாம்" என்று எச்சரித்தது.

ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. குட்டியாடு, தனது தாய் சொன்னதை மறந்து, பசுமையான புல்வெளிப்பக்கம் சென்று தனிமைப்பட்டு விட்டது. திடீரென மேகம் கறுத்தது. ஆங்காங்கே இடிச்சத்தம் உடனே இடையன் அங்கே இருந்த ஆடுகளையெல்லாம் அவசர அவசரமாக ஓட்டிக்கொண்டு வீடு சென்றான். கூட்டினுள் ஆடுகளை அடைக்கும் போது எண்ணிக்கையில் ஒரு ஆடு குறைவதைக் கண்டான். அத்தோடு தாயாடும் குட்டியில்லாமல் கனைப்பதைப் பார்த்தான். குட்டியாட்டைக் காணவில்லை என அவனுக்கு விளங்கியது.

இடையன் மிகுந்த மனவேதனையுடன் தீப்பந்தமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு ஆடுகள் மேய்க்கச் சென்ற இடத்தை நோக்கிச் செல்லலானான். அங்குமிங்கும் தேடிப்பார்த்தான். குட்டி ஆட்டைக் காணவில்லை. இடையனுக்குக் கவலை அதிகரித்தது. முயற்சியைக் கைவிடாது தாய் ஆட்டைப் போன்று கனைத்தான். இடையனின் சத்தம் குட்டி ஆட்டின் காதுகளில் மெதுவாகக் கேட்டது. உடனே குட்டியாடு இது தன் தாயின் குரலல்லவா என்று எண்ணிக்கொண்டு இருந்துவிட்டது. இடையன் மீண்டும் மீண்டும் கனைத்தான். அப்போதுதான் இந்தச்சத்தம் தன் எசமானனது என்பதை குட்டி ஆடு உணர்ந்தது. கனைப்பு வந்த திசையை நோக்கி குட்டி ஆடும் பதிலுக்குக் கத்தியது. இடையன் உற்சாகமடைந்தான். மீண்டும் கனைத்தான். பதில் வந்தது. குட்டி ஆட்டின் சத்தம் வந்த திசையை நோக்கி விரைந்தான். அங்கே குட்டியாடு வேர் இடுக்கொன்றில் மாட்டிக் கொண்டு துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். குட்டி ஆட்டை அதிலிருந்து விடுவித்தான். குட்டி ஆடு தன் எசமானரைக் கண்டு சந்தோசப்பட்டது. இடையன் மனவேதனையை மறந்து குட்டியாட்டைத் தன் தோளிலே தூக்கிக்கொண்டு போய் தாயுடன் சேர்த்தான். தாயைக் கண்ட குட்டியின் முகமும், குட்டியைக் கண்ட தாய் ஆட்டின் முகமும் மலர்ந்தன.

# வண்ணக் களஞ்சியம்

1) சாலைப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தப் பயன்படும் விளக்குகளில் மஞ்சள் வண்ணத்தை அடுத்து வரும் வண்ணம் எது?
2) புராதன பிரித்தானியர்கள் ஒருவகைத் தாவரச் சாற்றைத் தங்கள் உடலில் பூசிக் கொண்டிருந்தார்களாம் அதன் நிறம் என்ன?
3) சீனாவில் துக்கத்தைக் குறிக்கும் நிறம் என்ன?
4) பொறாமையைக் குறிக்கப் பயன்படும் நிறம் எது?
5) வண்ணங்களின் பெயர்களையுடைய நான்கு கடல்கள் எவை?
6) வைத்தியத்தைக் குறிக்கப்பயன்படும் வண்ணம் எது?
7 றோஜா சிவப்பு நகரம் என்று அழைக்கப்படுவது எந்த நகரம்?
8) கோழைத்தனத்தைக் குறிக்க எந்த வர்ணத்தைப் பயன்படுத்துகிறார்கள்?
9) இரவில் செவ்வானம் எதைக் குறிக்கிறது?
10) கறுப்பு வைரம் என்று சில எதைக் கூறுகிறார்கள்?

## விடைகள்

1. *சிவப்பு*
2. *நீலம்*
3. *வெள்ளை*
4. *பச்சை*
5. *வெள்ளைக்கடல் கருங்கடல், செங்கடல், மஞ்சள்கடல்,*
*6.மஞ்சள்*
7. *ஜோர்டானிலுள்ள பெட்ரா நகரம்*
8. *மஞ்சள்*
9. *நல்ல காலநிலையை*
10. *நிலக்கரியை*

# ஈழத் தமிழ் இலக்கியத்தில் என்.கே.ரகுநாதன்



1951ஆம் ஆண்டு முதல் சிறுகதைகளை எழுதத் தொடங்கிய என்.கே.ரகுநாதன், பல சிறுகதைகளை ஈழத்துப் பத்திரிகைகளான ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், தாயகம், சிரித்திரன் ஆகியவற்றிலும், தமிழகப் பத்திரிகைகளான தாமரை, சரஸ்வதி, பொன்னி, இலக்கியப் பாலம் ஆகியவற்றிலும் எழுதியுள்ளார்.

ஈழத்தின் முற்போக்கு இலக்கிய அணியில் உருவாகி வந்த என்.கே.ரகுநாதன், இலங்கையின் வடபகுதியில் உள்ள வராத்துப்பளை என்னும் கிராமத்தில் 1929இல் பிறந்தார். பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர், பதுளை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற நிலையில், கனடாவில் கா்லமானார். இவர் இலங்கை கொம்யூனிஸ்ட் இயக்கத்திலும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திலும் இணைந்து நெடுங்காலமாக இயங்கியவர். கலை இலக்கிய வடிவம் மக்களுக்குப் பயன் தரக்கூடியதாகவும், ஒருகாலகட்ட நகர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய சம்பவங்களைக் கொண்டதாகவும், அச்சம்பவங்களினால் சமூக நீதிக்கும் மானிட நேயத்துக்கும் அச்சுறுத்தல்களாக இருக்கும் தடைகளை நீக்குவதற்கு வாசகர்களை அணிதிரட்டும் வகையில் அமைய வேண்டும். இத்தகைய இலக்கியப் படைப்புக்கள்தான் என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய சிரஞ்சீவி இலக்கியமாகத் திகழும். இதற்கு அமைவாக என்.கே.ரகுநாதனின் பல சிறுகதைகள் சமுதாய பிரக்ஞையுடன் எழுதப்பட்ட முற்போக்குக்கதைகளாக உள்ளன. தாம் வாழ்ந்த காலத்து மனிதர்களையும், எதிர்கொண்ட துன்பங்களையும் வைத்தே தமது கதைகளைப் புனைத்துள்ளார். அனேகமாக இவரது கதைகள் தீண்டாமை ஒழிப்பு, இன ஐக்கியம், வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளர் ஒற்றுமை, போலிச் சீர்திருத்த வாதிகளின் நடத்தை போன்ற சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன.

இவர் எழுதிய பன்னிரு கதைகள் அடங்கிய "நிலாவிலே பேசுவோம்" சிறுகதைத் தொகுதி 1964இல் வெளியிடப்பட்டது. இதில் இடம்பெற்ற "நிலாவிலே பேசுவோம்" சிறுகதை அந்தக்காலத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. 1996இல் தசமங்கலம் என்ற சிறுகதைத்தொகுதி வெளியிடப்பட்டது. இந்த நூலுக்கு 1997ஆம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது. வாழ்வில் திரை மறைவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் அம்பலத்துக்கு கொண்டுவந்து கற்பனை மெருகூட்டி இலக்கியமாக்கும் துணிவான காரியத்தில் வெற்றிபெற்றவர் என்.கே.ரகுநாதன்.

இவர் சிறுகதைகளோடு நின்றுவிடாது இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை மையமாகக் கொண்டு 'கந்தன் கருணை' என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார். இந்த நாடகம் இலங்கை முழுவதும் மேடையேற்றப்பட்டது. அடுத்ததாக இவர் 'ஒரு பனஞ்சோலைக் கிராமத்து எழுச்சி' என்ற வரலாற்று நூல் ஒன்றை 2004ஆம் ஆண்டு வெளியிட்டார். இது தான் பிறந்து வளர்ந்த வராத்துப்பளை கிராமத்தை மையமாகவைத்து எழுதப்பட்டது. வரலாற்றுச் சித்திரமாக எழுதப்பட்ட இந்த நூல் ஆசிரியரின் இலக்கிய வன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

# பந்தாட்டம்



வீட்டுக்குள்ளே பந்தாண்டம்
விறுவிறுப்பாய் நடக்கிறது
ஓட்டத்தோடு உருட்டுவதும்
ஓயாதடித்து விரட்டுவதும்
வீட்டுக்குள்ளே பந்தாட்டம்
விறுவிறுப்பாய் நடக்கிறது

காலால் அடிப்பான் ஒருபோது
கையால் பிடிப்பான் சிலபோது
மேலால் கீழால் நாற்புறமும்
மேயும் பந்தின் அநியாயம்
கோலப் பையன் குறும்பாட்டம்
குறைக்கப் பாட்டி கத்துகிறாள்

வீட்டுக்குள்ளே பந்தாட்டம்
வீழ்த்தி உடைக்கும் கண்ணாடி
ஓட்டம் ஆட்டம் அதிரடிகள்
ஓய்வதெப்போ என்று பயத்தோடு
பாட்டி கண்கள் பயத்தோடு
பார்க்கப் பையன் பந்தாட்டம்



இ.சங்கீதா,
தரம் - 7,
யா/ஆனைப்பந்தி, மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்.



பி.குருசரண்,
தரம் - 7,
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.




**மேடம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தாமதமான செயல் கூட எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். சமூகப் பணி புரிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சுயநலத்துடன் சிலர் உங்களிடம் அணுகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகலாம். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**துலாம்:** சுயநலத்துடன் சிலர் உங்களிடம் பழகலாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நிலை அதிருப்தி அளிக்கலாம் கவனம்.


**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் தேவை. தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** நேர்மையை மதித்து செயல்படுவீர்கள். எளிய முயற்சியால் பலமடங்கு நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**மகரம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் முன்னேற கூடுதல் உழைப்பு அவசியம்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பிற்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் நட்பு பாராட்டி நெருங்குவர். தொழில்வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைபடுவர். கூடுதல் உழைப்பால் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.



# சிவனடியாராக நடிக்கும் சாயாஜி ஷிண்டே

பாரதியாக நடித்து பிரபலம் ஆனவர் சாயாஜி ஷிண்டே. இவரது வித்தியாசமான நடிப்பில் 'அகோரி' என்கிற படம் தயாராகி வருகிறது. சாயாஜி ஷிண்டே இதில் அகோரியாக நடிக்கிறார்.
இந்தப் படத்தில் நடிப்பது பற்றி அவர் தெரிவிக்கையில்,
"தமிழில் பாரதி படம் எனக்கு அழுத்தமான அறிமுகம் கொடுத்தது. அதன் பிறகு குணச்சித்திரம், வில்லன், நகைச்சுவை என்று விதவிதமான பாத்திரங்களில் நடித்திருக்கிறேன். இந்தப் படத்தில் நடிக்கக் கேட்டபோது அவர்கள் சொன்ன கதை எனக்குப் பிடித்திருந்தது. இப்படத்தில் நான் ஓர் அகோரியாக அதாவது சிவனடியாராக நடிக்கிறேன். நான் அகோரியைச் சந்தித்து இருக்கிறேன். அவர்களிடம் ஆசியையும் பெற்று இருக்கிறேன். அப்படிப்பட்ட அகோரியாக நானே நடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.
இந்தப் பாத்திரமும் அதன் தோற்றமும் நடிப்பும் என் வாழ்வில் குறிப்பிட் டுச் சொல்லும்படி இருக்கும் என நம்புகிறேன்" என்றார்.

இதுவரை நடந்ததை எண்ணி யோசிப்பதை விட இனி எப்படி நடக்க வேண்டும் என யோசிப்பவர்களே வாழ்க்கையை வாழத் தெரிந்தவர்கள்.

உழைக்காமல் வாழ்பவர்களை விட,

வாழாமல் உழைப்பவர்களே அதிகம்.!



# எது முதன்மையானது?

"எமது உடம்பிலே மிக முக்கியமான உறுப்பு" என்ற தலைப்பில் ஆசிரியர் தனது மாணவர்களை ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். அந்த வகுப்பில் சிறப்புத் தேவையுடைய ஒரு சிறுமியும் இருந்தாள். கட்டுரைக்கான தலைப்பே அவளுக்கு பிடிக்கவில்லை. தவிர, சக மாணவர்கள் அந்தச் சிறுமியின் ஊனத்தைச் சொல்லி கிண்டல் செய்ய.. அன்றைய வகுப்பு பாவம் அவளுக்கு நரகமாகக் கழிந்தது.

மாலை வீடு திரும்பியதும் அந்தச் சிறுமி தன் தாயின் தோள்களில் சாய்ந்து அழுதபடியே கேட்டாள்.. "எமது உடம்பில் முக்கியமான உறுப்பு எதும்மா?"

"உடம்பிலே கண் தான் முக்கிய உறுப்பு! ஏன் என்றால், கண் இல்லையெனில் உலகமே இருட்டாகி விடுமே" என்று சொன்னாள் அம்மா. ஆனால், அதைச் சரியான பதிலாக அந்தச் சிறுமியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. "அப்படியானால் கைகள் தான் முக்கியமான உறுப்பு. அது இல்லையென்றால் நம்மால் எழுதவோ, வேறு எந்த வேலையும் செய்ய முடியாது இல்லையா"

கடைசியில் அந்தச் சிறுமியே ஒரு பதிலைச் சொன்னாள்.. "எமது உடம்பில் தோள்கள் தான்மா முக்கியமான உறுப்பு. மற்ற உறுப்புக்கள் எல்லாம் எமக்கு உதவியாக இருக்கும். ஆனால், தோள்கள் தான் ஆதரவு தேடும் அன்பு முகங்கள் புதைந்து கொள்ள இடம் கொடுக்கும். இதோ, நான் கூட இப்போது உன் தோள்களிலே முகம் புதைந்து அழுகிறேன். என்னைப் பொறுத்தவரை அடுத்தவர் அழுவதற்கு இடம் கொடுக்கும் தோள்கள் தான் உடம்பிலே முக்கியமான உறுப்பு!"



கருணாநிதிக்கு சிறப்பான சிகிச்சை. விரைவில் அவரே உங்களுக்கு நன்றி சொல்வார் - ஸ்டாலின்

அம்மா நலமுடன் உள்ளார். இட்லியும் பொங்கலும் சாப்பிட்டார் - ஓ.பி.எஸ்.



# இதுவும் கடந்து போகும்...

எவ்வளவு அழகான உணர்வுபூர்வமான வார்த்தை. இதன் தத்துவத்தை புரிந்து கொண்டால் வாழ்க்கை தத்துவமே விளங்கி விடும். இன்பம் துன்பம் அனைத்தும் சமமாக தெரியும்.
இன்று நாம் சந்தோசம் என்று நினைக்கும் ஒரு விசயம் வருத்தமான செய்தி வந்ததும் சந்தோசத்தை மறந்து கவலைப் பட ஆரம்பித்து விடுகிறோம். அதே போல் வருத்தமான நேரத்தில் சந்தோச செய்தி வந்தவுடன் வருத்தத்தை மறந்து சந்தோசப்பட ஆரம்பித்து விடுகிறோம்.
மகிழ்ச்சியோ வருத்தமோ எதுவும் நிரந்தரம் இல்லை எல்லாம் கடந்து போகும்.
இன்று நாம் பெரிய பிரச்சினை என்று நினைக்கும் ஒரு விசயம் அதை காட்டிலும் பெரிய பிரச்சினை வந்ததும் பழையதை மறந்து புது பிரச்சினை பெரியது என்று பழைய விசயங்களை மறந்து விடுகிறோம். இது தான் வாழ்க்கை அனைத்தும் கடந்து போகும் இறந்தவர்களுடன் சுடுகாட்டுக்கு செல்லும் பொழுது நாமும் ஒரு நாள் இங்கே வரவேண்டியவர்கள் தான் என நினைத்தாலே சண்டை சச்சரவு இல்லாமல் வாழலாம்.
இதுவும் கடந்து போகும்.

# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 2 |
| | | | | | | | 1 | 4 |
| 1 | 3 | | | 5 | | | | 7 |
| | | 5 | 6 | | | | | |
| | 6 | | 2 | 9 | 7 | | 4 | |
| | | | | | 3 | 6 | | |
| 9 | | | | 7 | | | 8 | 1 |
| 4 | 8 | | | | | | | |
| 2 | | | 9 | | | | | |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 5 | 8 | 4 | 2 | 9 | 3 |
| 4 | 8 | 2 | 7 | 3 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 9 | 3 | 1 | 6 | 2 | 8 | 4 | 7 |
| 6 | 4 | 5 | 8 | 1 | 7 | 3 | 2 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 5 | 3 | 6 | 8 | 1 |
| 8 | 3 | 1 | 2 | 9 | 6 | 5 | 7 | 4 |
| 1 | 6 | 4 | 3 | 7 | 8 | 9 | 5 | 2 |
| 9 | 5 | 7 | 6 | 2 | 1 | 4 | 3 | 8 |
| 3 | 2 | 8 | 9 | 4 | 5 | 7 | 1 | 6 |

நேற்றைய விடை

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 80 | 80 | 100 |
| முள்ளங்கி | 80 | 60 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 180 | 80 | 100 | 100 |
| பாகல் | 280 | 200 | 150 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 110 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 50 | 60 | 60 |
| தக்காளி | 180 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 40 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 10 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 450 | 500 | 500 |
| புடோல் | 110 | 70 | 100 | 100 |
| கோவா | 150 | 200 | 170 | 160 |
| வெண்டி | 100 | 90 | 80 | 100 |
| போஞ்சி | 300 | 300 | 280 | 280 |
| லீக்ஸ் | 240 | 160 | 180 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 350 | 300 | 300 |
| கரட் | 280 | 280 | 220 | 180 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 200 | 180 |

# அதிக சத்துள்ளது வேர்க்கடலை



வேர்க்கடலையில் கொழுப்புச் சத்து அதிக அளவு இருக்கிறது. ஆனால் அது நல்ல கொழுப்பு. மேலும் உடம்புக்குத் தேவையான புரதச்சத்தும் அதிகமாக உள்ளது.

வேர்க்கடலை சாப்பிட்டால் அதில் இருந்து உடம்பில் சேரும் சர்க்கரையின் அளவு மிக மிகக் குறைவு. எனவே சர்க்கரை வியாதிக்காரர்கள் வேர்க்கடலையை எவ்விதப் பயமுமின்றி அளவாகச் சாப்பிடலாம். வேர்க்கடலையில் உள்ள மெக்னீசியத்திற்கு இன்சுலினைச் சுரக்கும் ஹார்மோன்களைத் துரிதப்படுத்தும் தன்மை உள்ளது.

வேர்க்கடலையில் விற்றமின் ஏ. நீரில் கரையக் கூடிய விற்றமின் பி3 போன்றவை அதிகமாக உள்ளன. இந்த விற்றமின்கள் கர்ப்பிணிகளுக்கு மிகவும் அவசியமானவை. இந்தச் சத்துப் பொருள்கள் குறைந்தால் பிறக்கும் குழந்தை நரம்புக் கோளாறுகளுடன் பிறக்க வாய்ப்புள்ளது.

வேர்க்கடலையில் நைட்ரிக் அமிலம் உள்ளது. வேர்க்கடலையைச் சாப்பிடுவதன் மூலம் உடம்பில் உற்பத்தியாகும் நைட்ரேட் குருதிக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. இதனால் குருதி சீராக இருப்பதோடு, குருதி அழுத்தமும் குறையும். வேர்க்கடலையிலுள்ள ஆன்ட்டி ஆக்ஸிடென்ட்ஸ் உடம்பில் உள்ள தேவையற்ற கழிவுகளை நீக்கிவிடும்.

அதாவது, வேர்க்கடலை சாப்பிட்டால் அதிலுள்ள உயிர் வேதிப் பொருள்கள், தேவையில்லாமல் குருதியில் சுற்றிக் கொண்டிருக்கும் பொருள்களை கல்லீரலுக்குள் தள்ளிவிட்டுவிடும். தேவையில்லாத அந்தப் பொருள்கள் கழிவாகி வெளியேறிவிடும்.

வேர்க்கடலையை பச்சையாகச் சாப்பிடுவதைவிட, அவித்தோ, வறுத்தோ சாப்பிடலாம். ஆனால் இதை எண்ணெயில் போட்டு வறுத்துச் சாப்பிடக் கூடாது. வேர்க்கடலையை தோலை நீக்காமல் சாப்பிட வேண்டும். ஏனென்றால் அதில் தான் அதிக அளவு சத்துகள் உள்ளன.

## ஓட்ஸ் பொங்கல்



**தேவையான பொருள்கள்**

ஓட்ஸ் - 2 கோப்பை
பாசிப்பருப்பு - 1 கோப்பை
இஞ்சி - 1 துண்டு
நெய் - 2 தேக்கரண்டி
தண்ணீர் - தேவையான அளவு
மிளகு - சிறிதளவு
சீரகம் - சிறிதளவு
பச்சை மிளகாய் - 2
பெருங்காயத்தூள் - சிறிதளவு
கறிவேப்பிலை - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
முந்திரிப் பருப்பு - சிறிதளவு

**செய்முறை**

இஞ்சி, ப.மிளகாயை தூளாக நறுக்கிக் கொள்ளவும்.
சட்டியில் மிதமான சூட்டில் ஓட்ஸ், பாசிப் பருப்பு இரண்டையும் தனித்தனியாக வறுத்துக்கொள்ள வேண்டும்.
அடுப்பில் பாத்திரத்தை வைத்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி ஓட்ஸ், பாசிப்பருப்பு, இஞ்சி, பெருங்காயத்தூள், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து வேக வைக்க வேண்டும்.
அவிந்ததும் பொங்கல் கலவையை மசித்துவிட வேண்டும்.
சட்டியில் நெய்யை ஊற்றி அது சூடானதும் முந்தி ரிப் பருப்பு, ப.மிளகாய், மிளகு, சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றை போட்டு தாளித்து பொங்கல் மேல் ஊற்றி கிளறிவிட வேண்டும்.
ஓட்ஸ் பொங்கல் தயார்.


## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 700 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 300 |
| வாளை | 200 | 300 | 400 | 200 |

# கீரைகள்

## அறிந்ததும் அறியாததும்



கீரைகள் சத்துமிக்கவை என்பது அனைவரும் அறிந்தது தான். ஆனால் கீரை வாங்கி சமைத்துச் சாப்பிட்டால் மட்டும் எமக்கு முழு பயன் கிடைத்துவிடாது.

**கீரையின் சத்துக்கள் அப்படியே உடலுக்கு கிடைக்க என்ன செய்ய வேண்டும்?**

கீரைகளை தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதின் மூலம் குருதிச்சோகை வருவதை தடுத்து, உடல்நலனைப் பெறலாம்.

கீரைகள் சுண்ணாம்புச் சத்து, பீட்டா கரோடின், விற்றமின் சி போன்றவற்றை அதிகம் கொண்ட முக்கிய மூலப்பொருளாகும்.

சிறுவர்கள் விற்றமின் ஏ, குறைபாட்டினால் கண்பார்வை இழக்கும் நிலை ஏற்படுகிறது. கீரைகளில் உள்ள கரோடின் என்னும் பொருளானது உடலில் விற்றமின் ஏ ஆக மாறுவதால் பார்வை இழக்கும் நிலை தடுக்கப்படுகிறது.

கீரைகள் பி காம்ப்ளக்ஸ் விற்றமின்களையும் கொண்டுள்ளது.

கீரைகளை நன்கு சமைத்து, மசித்து கீரையிலுள்ள நார் பொருள்களை நீக்கிய பின்னரே சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

பக்டீரியா கிருமிகள், சிறு பூச்சிகள் மற்றும் மாசுப்பொருள்கள், தண்ணீர் அல்லது மண்ணின் மூலம் கீரைகள் மாசுபட வாய்ப்பிருக்கிறது. எனவே நன்கு கழுவி சுத்தம் செய்யாமல் கீரையை உபயோகிக்கக் கூடாது. இல்லாவிட்டால் வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினைகள் வரலாம்.


கீரையில் உள்ள சத்துக்கள் முழுமையாக கிடைக்க, முதலில் கீரைகளை நீண்ட நேரம் சமைப்பதை தவிர்க்க வேண்டும். அதிக நேரம் சமைப்பதினால் கீரையிலுள்ள முக்கிய சத்துப்பொருளான கரோட்டின் சிதைந்து விடும். கரோட்டின் பார்வைத்திறனுக்கு உதவும் சத்துப்பொருளாகும்.

கீரைகளைச் சமைக்க பயன்படுத்தும் தண்ணீரை கொட்டி விடக் கூடாது. கீரைகளை சமைக்கும் பாத்திரங்களை சமைக்கும்போது மூடி வைக்க வேண்டும்.

கீரைகளை வெயிலில் உலர்த்தக் கூடாது. அப்படிச் செய்தால் அவற்றிலுள்ள கரோட்டீன்கள் வீணாகி விடும்.

கீரைகளை பொரிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

கோடையில் குளிர்ச்சி தரும் கீரைகளை சமைத்துச் சாப்பிடுங்கள்



## இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# ‘உலகக் கோப்பை’

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை அறிவதற்குக் குசினிப்பக்கம் எட்டிப் பார்த்தேன். தேங்காய் துருவும் ஓசையும், பாத்திரங்கள் கழுவும் சத்தமும் கேட்டன. மனைவி யைக் காணமுடியவில்லை. சற்று ஏமாற்றமாயிருந்தது.

நேரம் ஆறைக் கடந்து ஏழானது


மனைவி சொன்னாள்.

“இஞ்ச இண்டைக்கு ரியூசன் சொல்லித்தர வரமாட்டன் எண்டு நேற்றுப் போகேக்கையே ரியூசன் மாஸ்ரர் சொல்லிப் போட்டுப் போனவர். அறிவு இண்டைக்கு உந்த பந்தடி பார்க்கிறதை விட்டுட்டுப் புத்தகத்தை எடுத்துப் படி. படிச்சிட்டு வேளைக்குப் படு” என்று.

இரவுச் சாப்பாடும் முடிந்தது. மகன் அறிவு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் புரட்டிப் படிப்பதுபோல நடித்துக் கொண்டிருந்தான். கவனம் முழுக்கக் கால்பந்தாட்டப் போட்டியில் இருக்க அவன் எங்கே படிப்பது? எப்போது இவன் புத்தகத்தை மூடி வைச்சிட்டுப் படுக்கப் போவான் என்று எதிர்பார்த்தபடியே அன்றைய பத்திரிகை ஒன்றை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். பத்திரிகையில் இருப்பது எங்கே புரியப் போகிறது. நான் இருக்கும் மனநிலையில்? பிறந்தநாள் வாழ்த்தும் சரி சாவு அறிவித்தலும் சரி. இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

கடைசியாக எனது வேண்டுதல் நிறைவேறும் நேரமும் வந்தது. “அம்மா நித்திரை வருகுது… படுக்கப் போறன்” என்றவாறே தனது அறைக்குள் படுக்கப் போனான். லைற்கள் எல்லாவற்றையும் அணைத்துவிட்டு நானும் எமது அறைக்குள் போய்க் கட்டிலில் விழுந்தேன். திருட்டு முளி. முளித்துக் கொண்டே கிடந்தேன். நித்திரை வருமோ எனக்கு? “பிரான்ஸ்-குரோசியா, பிரான்ஸ் குரோசியா” எனக் காதுக்குள் யாரோ இரகசியமாகக் கூறுவது போலிருந்தது.

நேரம் போய்க் கொண்டிருந்தது. போட்டி முடிவையாவது பார்க்க வேண்டாமா? என்ற ஆவலில் மெதுவாக எழுந் தேன். மெல்ல மெல்ல நடந்து போய் தொலைக்காட்சிப்



பெட்டிச் சுவிச்சைப் போட்டுவிட்டு, ரிமோட்டை எடுத்தேன். எனது மகன் தொலைக்காட்சி பார்த்து விட்டு நிப்பாட்டும்போது சத்தத்தைக் குறைக்காமல் நிப்பாட்டியிருக்கிறான் போலும். தொலைக்காட்சிப் பெட் டியைப் போட்ட உடனே ஊரைக் கூப்பிடுவதுபோல பெரிய சத்தம் வந்தது. பதறியடித்துப் பெரும் பிரயத்தனப்பட்டுச் சத்தத்தைக் குறைத்துக் கொண்டு போட்டியைப் பார்த்தேன். பிரான்ஸ் இரண்டு கோல்களும் குரோசியா ஒரு கோலும் அடித்திருந்தன. பரவாயில்லை போட்டி முடிய நேரமிருக்கு இன்னும் பார்க்கலாம் என்ற திருப்தியுடன் நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

போட்டி மிகவும் விறு விறுப்பாக நடந்து கொண்டிருந்தது. குரோசியா வெல்ல வேண்டும் என்ற விருப்பத்திலிருந்த நான் என்னையறியாமல் “அடியடா, விடாதை, அவனிட்டை பாஸ்.பண்ணு, இஞ்ச இவனிட்ட பாஸ் பண்ணு” என்று சொல்லிச் சொல்லி நாற்காலியிலமர்ந்தபடி கையைக் காலை அசைத்து நடனமாடினேன். அப்போது “அவன் தான். விடாதை கொண்டு போ. ஓடு ஓடு கொண்டோடு” என்று சத்தம் எனக்குப் பக்கத்திலிருந்து வந்தது. நான் வாய் திறக்கவில்லை. எனது வாயிலிருந்தும் சத்தம் வரவில்லை. அது எனக்கு நன்றாகத் தெரியும். எப்படிச் சத்தம் வந்தது? என்று பயத்துடன் எழுந்தோட ஆயத்தமாகிக்கொண்டு, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பக்கத்தில் பார்த்தேன். மகன் அறிவு உட்கார்ந்திருந்தான். அவனது வாயிலிருந்து தான் சத்தம் வந்தது என்று அறிந்ததும் எனது பயம் நீங்கியது. எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவன் என் மகனல்லவோ? என்ரை குணம் அவனுக்கு வராமல் வேறு யாருக்கு வரும்? வாயில் விரலை வைத்துச் சத்தம் போடாதே என்பதுபோல் காட்டி விட்டுப் பரிவுடன் அவனது கையைப் பற்றிக் கொண்டேன்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 533

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | | 9 | |
| 10 | | | 11 | | 12 | | |
| | | 13 | | | 14 | | |
| | 15 | | | 16 | | | 17 |
| 18 | | | | | | 19 | |
| | | | 20 | | 21 | | |
| 22 | | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................

முழுமையான தபால் விலாசம்: ....................................

.....................................................................

கையொப்பம்:..............................................................

### இடமிருந்து வலம்

1. வாதம் செய்
4. பயப்படாத தன்மை
7. பண்பாடு
9. ஒரு கணிதக் குறியீடு
10. பொட்டலம்
11. வல்லரசுகளும் இப்போது இதனையே விரும்புகின்றன.
13. கூட்டல் என்றால் இதுவே
14. மேல் நாட்டுக் குடிவகையொன்று
15. ஊக்கத்தைத் தூண்டுவது
18. சத்தான தானிய வகையில் இதுவும் ஒன்று
19. இது வளர்த்தால் நாடு வளம் பெறும்
20. வறண்ட வெளிப்பிரதேசம்
22. ஊசி இலை மரம்
23. தமிழர்களின் இனப்பிரச்சினை இங்கும் ஆராயப்பட்டது.

### மேலிருந்து கீழ்

1. அழிவு
2. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்
3. எண்ணெய் விளக்கு எரிக்க இது அவசியம்
4. அன்னை
5. அரசாணைப்படிவம்
6. மத்திய இடம்
8. ஒரு சரக்குப் பொருள்
12. மனைவி
13. அற்பம் / சிறிது
15. மேன்மை
16. சோகம்
17. ஆசைப்படு
19. செல்வம்
20. சூழ்நிலை
21. வாழ்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 531 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பதிகம் (4)கமுகு (7)திருடி (8)நாற்றம் (9)மதமாற்றம் (10)நகம் (11)பல் (13)கள் (14)வாது (15)குரு (16)அலி (17)மலம் (18) சந்தி (19)நரம்பு (20)திரவம்

**மேலிருந்து கீழ்**

(1) பதி (2)திருமகள் (3)கடிதம் (4)கற்றல் (5)முறம் (6) கும் (8) நாற்பது (10)நகரசபை (12)கரும்புகை (14)வாலி (15)குலம் (16)அதிதி (17)மரம்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.533**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (08.08.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 531 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

திருமதி ஸ்ரீகிருஷாந்தி உமாபதி சிவம்,
இல. 18.வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

த.சிவநேசம்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

**3 ஆம் பரிசு**

வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**

திருமதி ப.செல்லத்துரை,
புலோலி வடமேற்கு,
புலோலி.

**5 ஆம் பரிசு**

த.செந்தூரன்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

**பாராட்டுப் பெறுவோர்**

நகுலன் லக்ஷகி,
காளிகோவிலடி, துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

போ.கோபிசாளினி,
இல.82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி ச.லிங்கமூர்த்தி,
அமெரிக்கன் மிஷன்
பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

சொற்சிலம்பம் போட்டி இல.533 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.08.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு. இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 531 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**29.07.2018 முதல் 04.08.2018 வரை**

உங்களுக்கு எப்படி?



## மேடம்

புதன், சுக்கிரன், குரு அளப்பரிய நன்மை தருவர். தன்னம்பிக்கை ஊற்றெடுக்கும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தாராள பணச்செலவில் குடும்ப தேவை நிறைவேறும். பிள்ளைகள் பெற்றோரிடம் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். வழக்கு விவகாரத்தில் நல்ல முடிவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் வளர்ச்சிக்கு துணைநிற்கும். வெளியூர் பயணத்தில் இனிய அனுபவம் கிடைக்கும். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பால் ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.



## இடபம்

ராகு, சூரியன், சுக்கிரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் நட்பும் பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும். வெளியூர் பயணத்தால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களிடம் தயக்க மனதுடன பழகுவர். ஆரோக்கியம் சீராக இருக்கும். சத்தான உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை, விரும்பிய இட மாற்றம் கிடைக்கும். பெண்கள் தாராள பணவசதி கிடைத்து புத்தாடை நகை வாங்குவர். மாணவர்கள் லட்சிய மனதுடன் படிப்பில் ஈடுபடுவர்.



## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரனால் வியத்தகு நற்பலன் கிடைக்கும். வாழ்வில் புதிய வளர்ச்சிப்பாதை உருவாகும். உங்களை புகழ்ந்து பேசுபவர்களிடம் கவனமாக இருங்கள். பிள்ளைகள் அறிவாற்றல் சிறந்து சுதந்திரமாக செயல்படுவர். பூர்வீக புண்ணியபலன் அளப்பரிய நன்மையளிக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை உண்ண வேண்டாம். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் சேமிக்கும் விதத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் தாய் வீட்டுக்கு தேவையான உதவியை வழங்குவர். மாணவர்கள் படிப்பில் மேம்பட அதிக முயற்சி தேவைப்படும்.

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரனால் நன்மை ஏற்படும். அன்றாடப் பணி நேர்த்தியாக நிறைவேறும். உறவினர்கள் அதிக அன்பும் ஆதரவும் காட்டுவர். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பிள்ளைகளின் தேவைகளை கவனத்தில் கொண்டு செயல்படுவீர்கள். வாழ்வில் குறுக்கிடும் சிரமங்களை இதமான அணுகுமுறையால் அணுகுவீர்கள். மனைவியின் கருத்தை ஏற்று பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர நவீன மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக அதிகரிக்கும்.



## சிங்கம்

சுக்கிரன், சந்திரன், செவ்வாய், கேது அதிகளவில் நன்மை தருவர். பேசும் வார்த்தையில் வசீகரம் நிறைந்திருக்கும். தாமதமான பணிகள் புதிய முயற்சியால் நிறைவேறும். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லும் அறிவுரையை தயக்கமுடன் ஏற்பர். நோய் தொந்தரவு குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றுவர். பெண்கள் வகை வகையாக உணவு தயாரித்து உறவினர்களை உபசரிப்பர்.



## கன்னி

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். நற்செயலால் நண்பர்களிடம் புகழ் பெறுவீர்கள். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற உதவுவீர்கள். குடும்பத்தேவைக்கான பணச்செலவில் தாராளம் இருக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு தெய்வ அருளால் பிரார்த்தனை நிறைவேறும். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர். பெண்கள் சந்தோஷ வாழ்வு நடத்துவர்.



## துலாம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் வியத்தகு அளவில் நற்பயன் தருவர். நற்செயலில் ஈடுபட்டு மற்றவர் மத்தியில் புகழ் பெறுவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பிள்ளைகள் ஆர்வமிகு செயலில் ஈடுபட்டு வெற்றி காண்பர். குடும்பத்தில் சுபநிகழ்வு நடத்த திட்டமிட வாய்ப்புண்டு. நண்பர்களால் மகிழ்ச்சிகரமான சூழல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் தாய் வீட்டுக்கு தேவையான உதவியை வழங்குவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசும் பாராட்டுப் பெறுவர்.



## விருச்சிகம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் வியத்தகு அளவில் நற்பயன் தருவர். நற்செயலில் ஈடுபட்டு மற்றவர் மத்தியில் புகழ் பெறுவீர்க். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பிள்ளைகள் ஆர்வமிகு செயலில் ஈடுபட்டு வெற்றி காண்பர். குடும்பத்தில் சுபநிகழ்வு நடத்த திட்டமிட வாய்ப்புண்டு. நண்பர்களால் மகிழ்ச்சிகரமான சூழல் ஏற்படும். மனைவி குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசு. பாராட்டு பெறுவர்.



## தனுசு

புதன், குரு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். சமூகத்தில் உங்களின் நன்மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு திட்டமிட்டபடி நிறைவேறும். தம்பி, தங்கையின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். பிள்ளைகள் உற்சாக மனதுடன் செயல்பட உதவுவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்திடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி இனிதாக நடத்துவீர்கள். தொழில், வியா பாரத்தில் போட்டியை திறம்பட சரி செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை பூர்த்தி செய்து சலுகை பெறுவர். மாணவர்கள் ஆசிரியரின் தனிக் கவனம் கிடைத்து படிப்பில் முன்னேறுவர்



## மகரம்

சுக்கிரன், சந்திரனால் நற்பயன் கிடைக்கும். தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் அறிவார்ந்த செயல் மனதில் புதிய நம்பிக்கையை தரும். நோய் தொந்தரவு தகுந்த சிகிச்சையால் குறையும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சலை உருவாக்கலாம். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் ஆடம்பர பணச்செலவு தவிர்க்கவும். பெண்கள் சமையலறை பணிகளில் பாதுகாப்பு பின்பற்றவும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக்கூடாது.



## கும்பம்

சுக்கிரன், சந்திரனால் நற்பயன் கிடைக்கும். தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் அறிவார்ந்த செயல் மனதில் புதிய நம்பிக்கையை தரும். நோய் தொந்தரவு தகுந்த சிகிச்சையால் குறையும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சலை உருவாக்கலாம். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் ஆடம்பர பணச்செலவு தவிர்க்கவும். பெண்கள் சமையலறை பணிகளில் பாதுகாப்பு பின்பற்றவும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக்கூடாது. பெண்கள் தாய் வீட்டுக்கு தேவையான உதவியை வழங்குவர்.



## மீனம்

செவ்வாய், கேது, சந்திரன் சிறப்பான பயன் தருவர். எதிர்பார்ப்பு நிறைவேற உறவினரின் உதவி கிடைக்கும். வீடு, வாகனப் பாதுகாப்பில் கூடுதல் கவனம் தேவை. பிள்ளைகள் வளர்ச்சி நோக்கி பொறுப்புணர்வுடன் செயல்படுவர். நிர்பந்தபணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடியாகலாம். தொழிலில் மாற்று உபாயம் பின்பற்றுவதால் வளர்ச்சி உருவாகும். பணியாளர்கள் அதிக நிபந்தனையுடன் கடன் பெறக் கூடாது. மனைவி குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். பெண்கள் கணவரின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வதால் குடும்பத்தில் ஒற்றுமை வளரும். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்

தொகுப்பு
தி.இராஜநாயகி




## கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிப்பதே இந்தப் பகுதி. அவ்வகையில் இது அ.யேசுராசா எழுதிய 'திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம்' என்கிற நூலில் இருந்து 'கொய்யப்பட்ட' ஒரு பகுதி. (காலச்சுவடு பதிப்பக வெளியீடு – டிசம்பர்2013)




# பொதுப்புத்தி அவமதிக்கப்படுவதை உணர முடியாத பார்வையாளன்

**திரைப்படம் பற்றிய விளக்கத்தை முதலில் கூறுங்கள்…?**

நவீன அறிவியல், தொழில்நுட்பச்சாதனைகளில் ஒன்றுதான் திரைப்படம்; ஆயினும், மிக முக்கியமான கலை வடிவமாக நிலை நிறுத்தப்பட்டு நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இதுவரை, மேதைமை நிறைந்த திரைக் கலைஞர்களால், உலகெங்கிலும் ஏராளமான திரைக்காவியங்கள் உருவாக்கப்பட்டு, மனித குலத்துக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இலக்கியம், நாடகம், ஓவியம், இசை .போன்றவற்றை இணைத்த 'கூட்டுக் கலை'யாகவும் அது உள்ளது; வெவ்வேறு துறைக் கலைஞர்களின் பங்களிப்பு இருந்தாலும், இறுதி ஆய்வில் அது 'நெறியாளரின் ஊடகம்' என்றே அழைக்கப்படும். 1895இல் லூமியர் சகோதரரின் **பகற்போசனவேளை**என்றதுண்டுப்படத்துடன்ஆரம்பம்கொண்டது; ஆரம்பத்தில் மௌனப் படமாகவே இருந்தது. 1927இல், **ஜாஸ் பாடகன்** முதலாவது பேசும்படமாக வந்தது. 1913இல், **ராஜா ஹரிஷ்சந்திரா** என்ற முதலாவது இந்திய மௌனப்படத்தைத் தாதாசாகேப் பால்கே பம்பாயில் வெளியிட்டார்; இந்தியாவின் முதலாவது பேசும் படமான **ஆலம் ஆரா** 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்தது. தமிழ்நாட்டில் முதலாவது மௌனப் படமான **கீசக வதம்** 1916இல்நடராஜமுதலியாரால்வெளியிடப்பட்டது; முதலாவது தமிழ்ப் பேசும் படமான **காளிதாஸ்** 1931 ஒக்ரோபரில் வெளிவ்ந்தது.

**இன்றைய நமது சமூகச் சூழலில் திரைப்படம் பற்றியபொதுப் பார்வை எப்படி இருக்கிறது?**

பெரும்பாலும் கலையாக அன்றி ஒரு 'பொழுதுபோக்குச் சாதனமாகவே' திரைப்படம் பார்க்கப்படுகிறது. மகிழ்ச்சியாய்ப்பொழுதைப்போக்குவதற்குரியஒன்றுதான்திரைப்படம் எனக் கருதப்படுவதால், நம்ப முடியாத கதையமைப்பு, பாத்திரங்களின் அதி தீவிர சாகசங்கள், பொருத்தமில்லாத கோஷ்டி நடனங்கள் (உடற்பயிற்சிகள்…!), நகைச்சுவை என்ற பெயரிலான 'அலட்டல்கள்' என்பனவெல்லாம் கேள்விக்கிடமேதுமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகின்றன; தமது பொதுப்புத்தி தொடர்ந்தும் அவமதிக்கப்படுவதை உணர முடியாதளவுக்கு, பழக்கமாகிப் போய்விட்ட ஓர் இரசனை முறைக்குள் பார்வையாளர் சிக்கியுள்ளனர். கல்வித் தரம், வர்க்க வேறுபாடு என்பவற்றைத் தாண்டி, பரவலாக இந்த இரசனைப்போக்கே காணப்படுகிறது!

**திரைப்படம் பற்றிப்பேசும்போது 'திரைப்பட மொழி' என்ற சொற்றொடர் அதிகம் கையாளப்படுகிறது. இது தரும் விளக்கம் என்ன?**

இலக்கியம் எழுத்தையும், ஓவியம் வர்ணங்களையும் கோடுகளையும், இசை ஒலியையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுபோல திரைப்படம் காட்சியை - ஒளியை - அடிப்படையாகக் கொண்ட 'கட்புல ஊடகமாக' உள்ளது. காட்சிகள் மூலமாகத்தான் செய்திகளோ, கதைகளோ சொல்லப்படுகின்றன. உதாரணமாக, வானொலியில் வாசிக்கப்படும் அதே செய்தியை வெறுமனே தொலைக் காட்சியில்வாசிப்பதுடன்நிறுத்துவதுதவறு.வாசிக்கப்படும் செய்திக்குரிய காட்சிகளைக் காட்டுவது தொலைக்காட்சி என்ற ஊடகத்துக்கு முக்கியம்; ஏனெனில் அது அடிப்படையில் ஒரு கட்புல ஊடகம்.

எனவே, திரைப்படத்துக்குரிய காட்சி ரூப, மொழியில் காட்சி(shot), கட்டம் (scene), அங்கம்(sequence) என்பன அமைகின்றன. இவற்றை முறையே வாக்கியம், பந்தி, அத்தியாயம் எனச் சொல்லலாம். இவ்வாறு காட்சிகளைத் தொடர்ந்து கட்டமைக்கும் முறையில் அண்மைக் காட்சி(close up), தொலைவுக் காட்சி(long shot), மத்திம காட்சி(medium shot), நோக்குக் கோணக் காட்சி(p.o.v.shot),இருண்டுதோன்றல்(fadein),மங்கி மறைதல் (fade out), காட்சிக் கலப்பு(dissolve), ஆக்க இணைப்பு உத்தி(montage), உறைகாட்சி(freeze), மெதுவான அசைவு(slow motion), விரைவான அசைவு(fast motion), விசிறிக் காட்சி(panning shot), பொருளை எம்மை நோக்கிக் கொண்டு வருதல்(zoom) போன்றவை கையாளப்படும். இத்தோடு, தொகுப்பு (editing) முக்கியமானதாக இருக்கிறது; இன்னும் வேறு அம்சங்களும் உண்டு. ஒலி, இசை துணைப் பொருள்களாகக் கையாளப்படும். இவ்வாறாக, கதை கூறப் பயன்படுத்தப்படும் ஊடக முறைமையே திரைப்பட மொழி எனப்படுகிறது.

**'நல்ல திரைப்படம்' என்ற முடிவு எந்த அளவுகோல்களைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது?**

கலை, இலக்கிய மதிப்பீடுகள் அகச் சார்பானவை எனவே எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய 'பொது அளவுகோல்' இல்லை. ஆயினும், ஒரு கலைப் படைப்பின் அடிப்படை அம்சங்கள் எனச் சில உண்டு. அவற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும். திரைப்பட வடிவத்தில் காட்சிப்படுத்தும் பண்புமுக்கியமானது. இயல்பான - நம்பத்தகுந்த - கதை, செம்மையான பாத்திர உருவாக்கம், இயல்பான நடிப்பு, சம்பவச் சூழலின் உணர்வு வெளிப்பாட்டுக்குத் துணை செய்யும் இசை - இயற்கை ஒலிகள் என்பன இணைந்து, இறுக்கமானதாய்-பிசிறல்கள்அற்று-வடிவநேர்த்தியுடன் அமையும்திரைப்படத்தை'நல்லதிரைப்படம்'எனச்சொல்லலாம்.

**'நல்லதிரைப்படம்'என்றவகையினுள்அடங்கக்கூடியதமிழ்ப் படங்கள் சிலவற்றைக் கூறமுடியுமா?**

முழுமையான அர்த்தத்தில் நல்ல கலைத் திரைப்படம் எனக் கூறமுடியாவிட்டாலும், பல சிறப்பம்சங்களைக் கொண்டபடங்கள்உருவாக்கப்பட்டேயுள்ளன. இவற்றை 'நடுத்தரப் படங்கள்' (middel Cinema) என்ற வகையினுள் அடக்கலாம். **அந்த நாள், ஏழை படும் பாடு, திக்கற்ற பார்வதி, உன்னைப்போல்ஒருவன், அக்கிரஹாரத்தில்கழுதை, குடிசை, உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், பசி, அழியாத கோலங்கள், அவள் அப்படித்தான், தண்ணீர் தண்ணீர், மறுபக்கம், கறுத்தம்மா, பாரதி, குட்டி, நிலாக்காலம், நாயகன், தேவதை, முகம், பன்னீர்ப் புஷ்பங்கள், ரெறறிஸ்ற், அழகி** என்பவற்றோடுவேறுசிலவற்றையும்சொல்லலாம். ஈழத் திரைப்படங்களில் **பொன்மணி, காற்றுவெளி, முகங்கள்**, நிதர்சனம்தயாரிப்பில்வெளிவந்த பல குறும்படங்கள் முக்கியமானவை.





**வகைதொகையற்ற தமிழ்த் திரைப்பட வெளியீடுகளிடையே 'சிறந்த படம்' ஒன்றைத் தெரிய முனையும் ஒருவரின் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்?**

யதார்த்தமான கதை, அதாவது, தான் காணும் - கேள்விப்படும் - மனிதர்களின் பிரச்சினைகளை உண்மையான வாழ்க்கையைச் சித்திரிப்பதாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும். தனது பொதுப் புத்தியை அவமதிக்கும்- தன்னை மடையனாக்கும் அம்சங்களைக் கொண்டுள்ளவற்றைப் புறக்கணிக்க வேண்டும். ஆபாசமான காட்சிச் சித்திரிப்புக்க ளின் மூலம் தன்னைக் கவர முயலும் படங்கள், தன்னைக்குறைவாகமதிப்பிட்டுஇழிவுபடுத்துபவை என்று உணர்தல் வேண்டும் ஆகவே, அவற்றை ஒதுக்க வேண்டும். குறைந்தளவு குறைபாடுகளுடன், வித்தியாசமான கதையுடன், காட்சி ரூப வெளிப்பாடக வருவனவற்றையும் தெரியலாம். உதாரணமாக **பவித்ரா, காதல் கோட்டை, மூடுபனி, சிட்டுக் குருவி, ஜானி, என்னுயிர்த் தோழன்** போன்ற படங்களைச் சொல்லலாம். நல்ல படங்களைப் பற்றிய தகவல்களைப் படிக்கும்போதோ கேட்கும் போதோ குறித்து வைத்துக் கொள்வதும் தெரிவதற்கு உதவியாய் அமையும்.

**எமது விடுதலைப்போராட்டம், ஈழத்தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி வெளிவந்த தமிழகத் திரைப் படங்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

சிறியஎண்ணிக்கையிலானபடங்களேஇவ்வாறுவந்துள்ளன. உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர் 'சந்தை'யை இலக்காகக் கொண்டு, பண வருவாய்க்காகவே இத்தகைய படங்கள் அங்கு தயாரிக்கப்படுகின்றன; **காற்றுக்கென்ன வேலி** ஒரு புறநடை. இவற்றுள் பொரும்பாலானவற்றில் ஈழத்தமிழரின் உண்மை நிலைமைகள் சித்திரிக்கப்படவில்லை; அடிப்படைப் பிரச்சினைகள் என்னவென்றும்சொல்லப்படவில்லை. **கன்னத்தில்முத்தமிட்டால்** படம் பல விடயங்களைக் கொச்சைப்படுத்துகிறது; எதிர்ப் பிரச்சாரம் செய்கிறது. **காற்றுக்கென்னவேலி** ஈழத்தமிழருக்குஆதரவானமனநிலையைவெளிப்படுத்தியுள்ளபோதும், பல தவறான அம்சங்களைக் கொண்டுள்ளது. **ரெறறிஸ்ற்**ஒருதற்கொலைப்போராளியின் உளவியலை ஆராயும் படமாக உள்ளது. அதன்முடிவுசர்ச்சைக்குரியது;வேறுகோணங்களில் அதைநோக்கும்வாய்ப்புஉள்ளது. ஆயினும்திரைப்பட மொழியினைக் கையாண்ட முறையில் முக்கியத்துவம் நிறைந்தது. போராட்டச் சூழல், பாத்திரங்களின் உருவாக்கம், உளவியல்பரிமாணம்என்பவற்றிலும் சிறப்பம்சங்க ளைக் கொண்ட படம். கண்டுகொண்டேன் **கண்டுகொண்டேன், நந்தா** ஆகிய படங்களிலும் ஓரிரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களைக் காணலாம்.


**தொடர்ச்சியான அசாதாரண நெருக்கடிச் சூழல், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இருந்து வருகிறது இத்தகைய நிலையிலும் மோசமான திரைப்பட இரசனை எவ்வாறு நிலவுகிறது?**

மக்களின் பார்வைக்குக் கிடைப்பவை தமிழ்நாட்டுத் திரைப்படங்கள்தாம்; இவற்றில் பெரும்பாலானவை பொழுதுபோக்கு'மசாலாப்படங்கள்'!இப்படங்களும், இவைபற்றிவணிகப்பத்திரிகைகள்வெளிப்படுத்தும் போலிக் கருத்துகளுமே பொதுமக்கள் திரளின் இரசனையைக் கட்டமைத்து வருகின்றன. இவற்றுக்கு மாற்றான நல்ல திரைப்பட இரசனை பற்றிய கருத்துக்களோ,நல்லதிரைப்படங்கள்–அவற்றின்சிறப்பம்சங்கள் - பற்றிய விளக்கங்களோ மக்களைச் சென்றடைவதில்லை. நல்ல இரசனை பற்றிய புரிதல் மிகச்சிறிய தொகையினரிடம்தான் நிலவுகிறது. துன்பங்கள், நெருக்குதல்களை மறந்து பொழுதைப் போக்குவதற்குரிய சாதனம்தான் திரைப்படம் என்ற கருத்தே, பெரும்பாலான மக்களிடம் ஆழப்பதிந்துள்ளது. அது ஒரு கலை வடிவம் என்ற உணர்வு இல்லை. தொடர்ந்து வரும் இப்பின்னணியில்தான் அவலங்கள், அழிவுகள் நிறைந்த அசாதாரண சூழலின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கு 'மசாலாப் படங்களையே' சரணடைகிறார்கள்; இது ஒரு கசப்பானயதார்த்தம். இந்தநிலைமையைமாற்றுவதுமிகவும் கடினமானது. நிறுவனபலத்துடன், பரந்துபட்டமக்களைச் சென்றடையும் வேலைத் திட்டத்துடன் பாடசாலைகள், சனசமூகநிலையங்கள், கலைநிகழ்வுகள்என்பவற்றில்- தொடர்ச்சியாகச் செயற்படுவதன் மூலம்தான் கொஞ்சம் கொஞ்சமாவது மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# அரசியல் நாடகமாடும் தூக்குத் தண்டனை



அரசத்லைவர் மைத்திரிபால சிறிசேன அண்மைக்காலங்களில் கலந்துகொள்ளும் மக்கள் சந்திப்புக்களில் எல்லாம், 'எக்காரணம் கொண்டும் எதிர்காலத்தில் தூக்குத் தண்டனைகளை நிறைவேற்றுவது என்ற தனது முடிவிலிருந்து பின்வாங்கப் போவதில்லை' என்பதை உறுதியுடன் தெரிவித்து வருகிறார். உள்நாட்டிலும் பன்னாட்டு அளவிலும் இதற்கு எழக்கூடிய எதிர்ப்புகளைப் பொருட்படுத்தப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்து வருகிறார். பௌத்த மதக் கோட்பாடுகளின்படி சாவுத் தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டாலும் எதிர்காலச் சந்ததியைப் போதைப் பாவனையிலிருந்து பாதுகாப்பதற்காகவே சாவுத் தண்டனைகளை நிறைவேற்றும் முடிவை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்து வருகின்றார்.

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் வர்த்தகம் அதிகரித்து வருவதும், அதில் சக்தி மிக்க பாதாள உலகக் குழுவினர்களும் ஏனைய சில குழுக்களும் ஈடுபட்டு வருவதும், அதனால், இளம் தலைமுறையினர் உயிர்கொல்லியான போதைப் பழக்கத்துக்கு உட்பட்டு வருவதும் கட்டுப்படுத்தப்பட வேண்டியவை என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதே நேரத்தில் சாவுத் தண்டனை அளிப்பதன் மூலம் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்த முடியுமா? என்ற ஒரு கேள்வி எழுகிறது.

**எதிர்ப்புக்களும், ஒப்பாரியும்**

தூக்குத்தண்டனையை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாகப் பன்னாட்டு மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் சபை போன்ற ஐ.நா நிறுவனங்களும், ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் போன்றனவும் தமது எதிர்பைத் தெரிவித்துள்ளன. போதைப்பொருள் ஒழிப்பு என்ற பெயரில் தங்களை இலக்கு வைத்தே இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் ஒப்பாரிவைத்துள்ளனர். எது எப்படியிருப்பினும் தூக்குத் தண்டனையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் போதைப் பொருள் வர்த்தகர்களைக் கட்டுப்படுத்த முடியுமா? என்ற கேள்வி வலிமையாகவே எழுந்து நிற்கிறது. போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கே முதலில் சாவுத் தண்டனையை விதிக்கவிருப்பதாகவும், சிறையில் உள்ள இவர்களில் சிலர் சிறைக்குள்ளே இருந்தவாறே மேற்படி வர்த்தகத்தில் தொடர்ந்தும் ஈடுபடுவதாலேயே அரச தலைவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் தெரிய வருகிறது. இவர்களின் உயிர் பறிக்கப்பட்டால் மட்டும் மேற்படி வர்த்தகத்தை நிறுத்திவிட முடியுமா?

**கட்டுப்படுத்துதலே சிறந்த வழி**

சிறைக்குள் இருந்தவாறே கைதி ஒருவரால், போதைப் பொருள் வர்த்தக வலைப்பின்னலை வழிநடத்த முடியுமானால், அவருக்குத் அங்கு தடையற்ற வெளித் தொடர்புகள் கிடைக்கவேண்டும். அதற்குக் கைபேசிகள், சிம் அட்டைகள், கைபேசித் தொடர்புகளை இரகசியமாக மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் எனப்பல விடயங்கள் சாதகமாக அமைந்திருக்க வேண்டும். சிறைச்சாலையின் உயர் மட்ட அதிகாரிகள் முதல் சிற்றூழியர்கள் வரை பலதரப்பட்டவர்களின் ஒத்துழைப்பு அதற்கு அவசியம்.



இது சிறு குழந்தை கூடப்புரிந்து கொள்ளக் கூடிய விடயம். அதுவும்கூட சிறைஅதிகாரிகளை ஒன்றிணைத்த ஒரு வலைப்பின்னலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேற்படி விடயத்தில் பிடிபடுகிற ஒரு கைதி இந்த வலையின் ஒரு புள்ளிதான். அவன் தூக்கில் போடப்பட்டுக் கொல்லப்பட்டால் அந்த ஓட்டை இன்னொரு கைதியால் நிரப்பப்படும். தேவையேற்படும் இடத்தில் இன்னொருவர் வெளியிலிருந்தும் கொண்டு வரப்படலாம். எனவே போதை வர்த்தக வலைப்பின்னல் எவ்வித தடைகளுமின்றி இயல்பாகச் செயற்படும். ஆகவே இவ்விடயத்தில் தூக்குத் தண்டனை விதிப்பது என்பது பிரச்சினைக்குரிய முற்று முழுதான தீர்வாக இல்லை. கைதியாக இருக்கிற குற்றவாளிகள் தொடர்ந்தும் குற்றங்களில் ஈடுபடாமலிருப்பதற்கான சூழலைக் கட்டியமைத்தலே அவசர தேவையும், நல்ல தீர்வும்கூட. இதற்குச் சிறைச்சாலை நிர்வாகம் சீர்திருத்தப்பட்டு, கடுமையாக்கப்பட வேண்டும்.

**சிறைச்சாலைத் துவாரங்கள்**

ஓர் அதிகாரி தனது கைபேசியை ஒரு கைதிக்குக் கதைப்பதற்கு வழங்கினால் ஒரு முறைக்கு 2ஆயிரம் ரூபா கைதியால் வழங்கப்படுகிறது என்றதொரு தகவல் ஊசலாடுகிறது. இப்படியான பல்வேறு வழிகளில் கைதிகள் வெளியே தொடர்பு கொள்வதைத் தடுப்பது யார்? சிறைச்சாலைக் கட்டமைப்புக்களே போதைப் பொருள் வர்த்தகத்தின் மூலஸ்தானமாக விளங்குகின்றன. இப்படியிருக்க, தனிநபர்களைத் தூக்கி லிடுவதால் என்ன பயன் கிட்ட முடியும்?

> போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிக ளுக்கே முதலில் சாவுத் தண்டனை விதிக்கப்பட விருப்பதாகவும், சிறையில் உள்ள இவர்களில் சிலர் சிறைக் குள்ளே இருந்தவாறே மேற்படி வர்த்தகத்தில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது.

**பொலிஸாரும் துணை!**

பொலிஸாரின் துணையுடனேயே போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுகின்றது என்று முன்னாள் நீதியமைச்சரும், தற்போதைய உயர்கல்வி பௌத்த சாசன அமைச்சருமான விஜயதாச ராஜபக்ச வெளிப்படையாகவே தெரிவித்திருந்த கருத்தை அலட்சியம் செய்துவிட முடியாது. பொலிஸாருக்கும் போதைப் பொருள் வியாபாரிகளுக்கும் உள்ள தொடர்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகும். கடந்த அரசின் காலத்தில் உச்ச வளர்ச்சிகண்ட இதன் பயனையே இப்போது சமூகம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறது. போதைப் பொருள் வியாபாரத்தின் முதலாளிகள் துபாய் போன்ற வெளிநாடுகளில் இருந்துகொண்டே இங்கு குறித்த இந்த வர்த்தகத்தை நெறிப்படுத்தி வருகின்றனர். கடற்படை, இராணுவம், உள்வரவு - வெளி அகல்வுத் துறையினர் எனும் பல தரப்புக்களுடனும் நெருக்கமான உறவு இல்லாமல்கூட நாட்டுக்குள் போதைப் பொருள்களைக் கொண்டுவரமுடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. பின்னர் பொலிஸாரின் ஒத்துழைப்பு இல்லாமல் அவற்றைத் தேவையான இடங்களுக்கு விநியோகம் செய்ய முடியாது? இலங்கையின் பிரபல அரசியல்வாதிகள் பலருக்கு துபாய் வங்கிகளில் பெருந்தொகையான பணம் வைப்பிலிட்டுப்பட்டிருப்பதாக அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்திருந்தார். இந்தப் பணத்துக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கும் தொடர்பு இல்லையென்று சொல்லிவிட முடியாது. இவ்வாறு பல அதிகாரத் தரப்பினரின் பின்னணியில் இடம்பெறும் போதைப் பொருள் வியாபாரத்தைச் சில தனிநபர்களைத் தூக்கில் போடுவதால் தடுத்துவிட முடியாது.

**ஏனைய ஒழுங்கமைப்புக்களும் ஒழுங்காக்கப்படவேண்டும்**

அடிப்படையில் இலஞ்சம், ஊழல், அதிகார முறைகேடு என்பன கோலோங்கிய ஒரு நாட்டில் அவற்றின் ஆதரவில் கொடிகட்டிப்பறக்கும் போதைப்பொருள் வர்த்தகத்தை எப்படி ஒழிக்க முடியும்? அவற்றை முற்றாக ஒழிக்கப் போவதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்த இந்த அரசு இவை தொடர்பான பெரும் முதலைகள் எவரையும் இதுவரையில் தண்டிக்கவில்லை. பல கோடிகளை விழுங்கிய உதயங்க வீரதுங்க வையோ, அர்ஜுன் மகேந்திரனையோ கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை. பல கோடிக்கணக்கில் 'அவன்காட்' ஊழலில் சம்பந்தப்பட்டதாகக் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்பட்டிருந்தும்கூட தீர்வின்றி அது இழுபடுகிறது. வடக்கிலும் கொலை, கொள்ளை, அதிகார முறைகேடு, ஆள்கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதிகாரமுள்ள அரசியல்வாதிகளாக வலம் வருகின்றனர். இப்படியான சட்ட விரோதக் காரியங்கள் தண்டிக்கப்படாதவையாக தொடர்ந்திருக்கும்போது தனிநபர்களைத் தூக்கில் போடுவதால் மட்டும் போதைப் பொருள் வர்த்தகத்தை ஒழிக்கமுடியுமா?

மைத்திரிபால சிறிசேன தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதாக மீண்டும் மீண்டும் குரலெழுப்பி வருகிறார். சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலை ஆணையாளர், மதகுருமார் உட்பட முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை அமைத்துத் தூக்குத்தண்டனையை நிறைவேற்றுகிற முடிவை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். தூக்குத் தண்டனையை நடைமுறைக்குக் கொண்டு வருவதால், எவ்வித மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை. ஆனாலும் தூக்குத் தண்டணையை நடைமுறைக்குக் கொண்டு வருவதான அரச தலைவரின் பேச்சு, சில காலங்களுக்குக் காரசாரமாக இருந்து விட்டு மறைந்துவிடுகிற வழமையான அரசியல் நடவடிக்கைகளைப்போன்ற ஒன்றாகவே இருக்கும் என்பதால் யாரும் இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

# வெற்றியில் ஜேர்மனியன் தோல்வியில் துருக்கியன்



வெற்றியின்போது நான் ஜேர்மனியன் தோல்வியின்போது நான் துருக்கியனா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜேர்மனிய வீரர் ஒசில்.

உலகக்கிண்ணத் தொடர் ரஷ்யாவில் நடைபெற்று அண்மையில் முடிவடைந்தது. இந்தத் தொடரில் ஜேர்மனி அணி லீக் சுற்றுடன் வெளியேறி பேரதிச்சியை ஏற்படுத்தியது. நடப்புச் சம்பியனான அந்த அணியின் வெளியேற்றத்தால் கடும் எதிர்பலையையும் விமர்சனங்களையும் அந்த அணி சந்திக்க வேண்டியிருந்தது. சிலவீரர்களுக்கு எதிராகவும் விமர்சனங்கள் குவிந்தன. அவர்களில் ஒருவர்தான் ஒசில்.

ஒசில் ஜேர்மனியில் பிறந்தாலும் அவரின் பெற்றோர் துருக்கியைச் சேர்ந்தவர்கள். பிறப்பால் ஜேர்மனியான இருந்தபோதிலும் தனது பாரம்பரியத்தால் துருக்கியைச் சேர்ந்தவராகவே ஒசில் இருந்தார். உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் ஒசில் துருக்கிய அதிபர் எர்டகனைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பையும் உலகக்கிண்ணத் தொடரில் ஒசில் வெளிப்படுத்திய மோசமான ஆட்டத்தையும் இணைத்துவிட்டனர் சிலர். அதாவது, துருக்கிக்கு விசுவாசம் காட்டுவதற்காகத்தான் ஒசில் உலகக்கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தினார் என்றவாறாக வெளிப்படையாகவே விமர்சிக்கப்பட்டது. ஆனால், இதே ஒசில்தான் 2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் ஜேர்மனி கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். அப்போது அவரை ஜேர்மனியன் என்று தூக்கி வைத்திருந்தவர்கள் தோல்வியின் போது சட்டெனத் துருக்கியனாக மாற்றியது ஏன்?. இதைத்தான் ஒசிலும் கேட்கிறார். நியாயமான கேள்விதானே?

# கொண்டாடப்படுகிறார் அஞ்சலோ மத்தியூஸ்



இலங்கை கிரிக்கெட் அணியின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தலைவராகப் பெயரிடப்பட்டுள்ளார் மத்தியூஸ். இதையடுத்து அவரின் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் தத்தமது மகிழ்ச்சியையும் கொண்டாட்டங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இலங்கை அணியின் தலைமைத்துவத்தில் இருந்து விலகி சராசரி வீரராகத் தனது பயணத்தைத் தொடர்ந்து வந்தார் மத்தியூஸ். ஆனால் அவரைப் பதவி தற்போது தேடி வந்துள்ளது. பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிக்கி தடைபெற்ற இலங்கை அணியின் தலைவர் சந்திமல் தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலிரு ஒருநாள் ஆட்டங்களுக்குமான இலங்கை அணியில் இடம்பெறவில்லை. இதையடுத்தே தலைமைத்துவம் மத்தியூஸ்க்கு மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் அடுத்த வருடம் உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்தத் தொடரில் மட்டுமல்லாமல் அடுத்தடுத்த தொடர்களிலும் மத்தியூஸ் தலைமைப்பொறுப்பில் நீடிக்க வேண்டும் என்பதே இலங்கை ரசிகர்களின் தற்போதைய பெரிய விருப்பம்.

விளையாட்டு
பிரகாஸ்

# இங்கிலாந்தா இந்தியாவா?

டெஸ்ட்டில் தற்போது ஜாம்பவான் இந்தியாவா அல்லது இங்கிலாந்தா? என்ற கேள்விக்குப் பதிலை அறியும் நேரம் வந்துவிட்டது. இன்னும் சில வாரங்களில் இதற்குரிய பதில் ஓரளவு கிடைத்துவிடும்.

இந்திய அணி தற்போது இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரை இந்திய அணி 2:1என்ற அடிப்படையில் கைப்பற்றியது. பதிலுக்கு ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது இங்கிலாந்து. இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட நீண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது.

இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கும், திடீர் மேலெழும்பலுக்கும், உட்திரும்பல், வெளித்திரும்பலுக்கும் பிரபலமானது. இவை அனைத்தும் ஒருசேர வெளிப்படுத்துபவரான புவனேஸ்வர் குமார் காயம் காரணமாக அவதிப்பட்டுவருவது இந்தியாவுக்கு நிச்சயம் கெட்டசெய்தியே. அதேநேரம் இந்திய அணியின் ஏனைய பந்துவீச்சு வரிசையையும் கவனிக்க வேண்டியது அவசியம். பும்ரா, சமி, சர்மா, யாதவ் என்று சாதிக்கக்கூடிய பட்டியலாக அது அமைகிறது. இதில் மற்றொரு நாயகனாக உள்ளார் பாண்டியா. பாண்டியா வேகப்பந்து வீசக்கூடியவர். அத்துடன் நன்றாகத் துடுப்பெடுத்தாடவும் கூடியவர். இதனால் இங்கிலாந்துத் தொடரில் இந்திய ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பு பாண்டியாதான்.

ஆடுகளம் சுழலுக்குச் சாதகமானால் குல்தீப் யாதவ் இருக்கவே இருக்கிறார். ஆனால் வழக்கம்போன்று அஸ்வின், ஜடேயா இருவருக்கும் இந்திய அணியின் வாய்ப்புக் கிடைக்காது. இவர்களில் ஒருவருக்குத்தான் விளையாடும் பதினொருவர்கொண்ட அணியில் இடம்கொடுப்பார் கோக்லி.

இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை என்று பார்த்தால் அந்த அணியின் தலைவர் கோக்லி இமாலயப் பலம். இறுதியாக இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் கோக்லி சாதிக்கவில்லை. இதனால் இந்தத் தொடரில் தன்னை நிரூபிக்க வேண்டிய தேவையும் அவருக்கு உள்ளது. அதே நேரம் தவான், இங்கிலாந்துக் கழகத்துக்காக விளையாடிப் பழக்கப்பட்டவரான புஜாரா, டினேஸ் கார்த்திக் ஆகியோர் பெரும் பலம். ஆக, இங்கிலாந்து அவ்வளவு இலகுவில் கிண்ணம் வெல்ல முடியாது என்பது மட்டும் நிதர்சனம்.




# விளையாடோணும் உருளக்கூடாது....

அதென்ன "விளையாடோணும் உருளக் கூடாது...". பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் மீது தொடுக்கப்படும் வசைதான் இந்த "விளையாடோணும் உருளக் கூடாது...".

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் எதிர் வீரர்களின் கால் மெல்லப் பட்டாலே போதும் நெய்மர் பத்தடி தூரத்துக்கு உருள ஆரம்பித்துவிடுவார். இதனால் உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றது முதல் நெய்மருக்கு ஏகப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனம் இந்த வருடத்தின் சிறந்த வீரருக்கான தெரிவுக்கு 10 வீரர்களின் பெயர்கள் கொண்ட பட்டியலை **அண்மையில் வெளியிட்டது. அதில் நெய்மரின் பெயரே இல்லை. இதையடுத்துத்தான் சமூக வலைத்தளங்களில் பிரபரமாகியுள்ளது "விளையாடோணும் உருளக்கூடாது..." என்ற பதம்.**





‘இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா’ படத்துக்குப் பிறகு இயக்குநர் கோகுலும் நடிகர் விஜய் சேதுபதியும் இணைந்திருக்கும் இரண்டாவது படம் ஜுங்கா. ‘சூதுகவ்வும்’ படத்துடன் ஒருவகையில் இதுவும் ஒத்துப்போகிறது: சீரியஸான நகைச்சுவை.




# ஜூங்கா

## வழமையான தமிழ் சினிமா

**கதை**

ஜுங்காவின் (விஜய் சேதுபதி) தந்தை ரங்காவும், தாத்தா லிங்காவும் மிகப் பெரிய தாதாக்கள். ஆனால், தாதாவாக இருப்பதற்காகப் பெரும் செலவு செய்து சொத்துக்களை அழித்தவர்கள். ஆகவே அவர்களைப்போல ஜுங்கா வந்துவிடக்கூடாது என்பதற்காக அந்த வரலாறே தெரியாமல் வளர்க்கிறார் ஜுங்காவின் தாய் (சரண்யா). ஒரு நாள் இந்தக் கதை ஜுங்காவுக்குத் தெரியவருகிறது. இதையடுத்து, தானும் ஒரு ‘டானாக’ மாறிப் பணம் சம்பாதித்துத் தந்தை இழந்த பரடைஸ் சினிமாத் தியேட்டரை மீட்க முடிவு செய்கிறார்.

ஆனால், அதற்குள் அந்தத் தியேட்டரை வைத்திருக்கும் சோப்ராஜ் (ராதாரவி), செட்டியார் (சுரேஷ் மேனன்)என்பவரிடம் அதைக் கொடுத்துவிடுகிறார். செட்டியார் தியேட்டரை ஜுங்காவுக்கு விற்க மறுப்பதோடு அவமானப்படுத்தியும் விடுகிறார். இதனால் வெகுண்டெழும் விஜய் சேதுபதி, சுரேஷ் மேனன் முன்பு சவால் விடுகிறார். பிறகு பாரீஸில் உள்ள செட்டியாரின் மகள் யாழினியை (சாயிஷா) கடத்தித் தியேட்டரை மீட்க முயல்கிறார். இறுதியில் தியேட்டர் யாருக்குச் சொந்தமானது? விஜய் சேதுபதியின் காதல் என்ன ஆனது? போன்ற கேள்விகளுக்குக் கொஞ்சம் சுற்றி வளைத்துப் பதில் சொல்கிறது ‘ஜுங்கா’.



‘ரௌத்திரம்’, ‘இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா’, ‘காஷ்மோரா’ படங்களை இயக்கிய கோகுல், ‘ஜுங்கா’வில் சீரிய ஸானன நகைச்சுவையைத் தூவி இருக்கிறார். ஆனால், அது படம் முழுக்க எடுபடவில்லை என்பதையும் சொல்லியாக வேண்டும்.

**பாத்திரங்கள்**

பஸ் நடத்துநராக, தாதவாகத் தோற்றம், தாத்தா பெயர் லிங்கா, அப்பா பெயர் ரங்கா, என விஜய் சேதுபதி படம் முழுக்க வழக்கமான அதகளம் செய்திருக்கிறார். முகத்தில் குத்து வாங்கும்போதே அடடா… இதிலும் அடிக்கத் தெரியாத சேதுவா? என்று அயர்ந்துபோகும் சூழலில் திருப்பி அடித்து இரசிகர்களை நிமிர வைக்கிறார். பஸ் ரிக்கெட் எடுக்காதவர்களை மேப்பம் பிடித்துக் கண்டறிந்து ரிக்கெட் எடுக்க வைப்பது. அடியாள் தேடலில் சில ஆயிரங்கள் செலவு செய்த கோபத்தில் ரவுடிகளை வெளுத்து வாங்குவது, சென்னையில் தாதாவாக நிலை கொள்வது, காதலில் விழுவது, பாசமுள்ள மகனாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது என நடிப்பில் எந்தக் குறையும் வைக்கவில்லை. யோகி பாபுவுடன் சேர்ந்து நகைச்சுவையிலும் தனித்தடம் பதிக்கிறார்.

சயிஷா படம் முழுக்க அழகோவியமாக மட்டுமே வருகிறார். நன்றாக நடனம் ஆடுகிறார். நடிப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. கிடைத்த பாத்திரத்தில் மிக நன்றாக நடித்திருக்கிறார் ராதாரவி. அதுவும் ரவுடிகளுக்கு நேர்ந்த கதியைத் தனது பாணியில் அவர் சொல்லும் விதம் அழகு. மடிப்புக் கலையாத கோட் சூட்டில் கம்பீரமாக வரும் சுரேஷ் மேனனுக்குப் படத்தில் பெரிதாக எந்த வேலையும் இல்லை. மடோனா செபாஸ்ரியன் ஒரு பாடலுக்குப் பயன்பட்டிருக்கிறார். சுந்தரத் தெலுங்கில் பேசும் அவர் கௌரவத் தோற்றத்துக்கான பங்களிப்பைச் சிறப்பாக வழங்கியிருக்கிறார். விஜய்சேதுபதியின் தாயாக நடித்திருக்கும் சரண்யா பொன்வண்ணன் நடிப்பில் பிரமாதப்ப டுத்துகிறார். பாட்டியாக நடித்திருக்கும் விஜயா பாட்டி இன்னும் கலக்குகிறார். பம்முவது, பாய்வது என இருவித பரிமாணங்களை அவர் வெளிப்படுத்தும் தோரணை அலாதி அழகு.

யோகி பாபுவைக் கண்டாலே தியேட்டர் கைதட்டுகிறது. அவர் பேசும் வசனங்களுக்கு விசில் பறக்கிறது. நகைச்சுவைப் பாத்திரத்துக்கான தேவையைப் பூர்த்தி செய்வதோடு பொறுப்பான குணச்சித்திரக் கதாபாத்திரத்தை கண்முன் நிறுத்தி அழுத்தமாக மனதில் இடம்பிடிக்கிறார்.

**ஒளிப்பதிவு, இசை**

டட்லியின் ஒளிப்பதிவும், சித்தார்த் விபினின் இசையும் படத்துக்குப் பலம். பாடல்கள் பொருத்தமில்லாத இடங்களில் துருத்திக்கொண்டு வேகத்தடையை ஏற்படுத்துகின்றன.


**பலம்-பலவீனங்கள்**

கதாபாத்திரத் தேர்வில் கவனிக்க வைத்த இயக்குநர் கோகுல், அவர்களின் பாத்திர வார்ப்பில் கோட்டை விட்டிருக்கிறார். எதைச் சொன்னாலும் நம்பிவிடும் கிளிப்பிள்ளையாகத் தொழிலதிபர் இருப்பதும், முன்பின் வந்திராத வெளிநாட்டில் இருந்துகொண்டு பிரான்ஸ் போலீஸ், தீவிரவாதக் கும்பல் எல்லோருக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு விஜய் சேதுபதி தப்பிப்பதும் நம்பும்படியாக இல்லை. எப்படி இது சாத்தியம்? என்று இரண்டாம் பாதி முழுக்க கேள்விகள் நீள்கின்றன. அவற்றுக்குப் பதில்கள் கிடைக்கவில்லை. ஆனால், சிரிக்க வைக்க வேண்டும் என்ற இயக்குநரின் குறிக்கோள் மட்டும் நிறைவேறி இருக்கிறது. படம் துவங்கி முதல் அரை மணி நேரத்தில், படுவேகமாகவும் சுவாரஸ்யமாகவும் பறக்கும் திரைக்கதை ஈர்த்துவிடுகிறது. வழக்கமாகச் சலிப்பூட்டும் விதத்தில் அமையும் கடந்தகாலக் காட்சிகள் இந்தப் படத்தில் கலகலப்பூட்டுகின்றன. செட்டியாரின் மகளைத் தேடி ஜுங்கா பாரீசுக்குப் போனதும் படத்தின் வேகம் வெகுவாகக் குறைந்துவிடு கிறது. அதற்குப் பிறகு இறுதிக்காட்சி வரும்வரை இலக்கில்லாமல் செல்லும் திரைக்கதை சலிப்பூட்டுகிறது.

ஆண்டவன் கட்டளை போன்ற ஒரு சில திரைப்படங்களைத் தவிர, பெரும்பாலான படங்களில் விஜய் சேதுபதியின் நடிப்பு ஒரே மாதிரியானதாக இருக்கும். அது சில கதைகளுக்குப் பொருந்தும். வேறு சில கதைகளுக்குப் பொருந்தாது. இந்தப் படத்துக்கு மிகவும் பொருந்துகிறது என்பதால், விஜய் சேதுபதி செய்யும் சேட்டைகளுக்கு திரையரங்கு அதிர்கிறது.

கோகுல் இயக்கிய இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, காஷ்மோரா படங்களில் எல்லாம் படத்தின் சில பகுதிகள் மிகச் சிறப்பாகவும் சில பகுதிகள் மிகத் தொய்வாகவும் இருக்கும். அந்தப் பலவீனம் இந்தப் படத்திலும் இருக்கிறது. மற்றபடி, வழமையான தமிழ் சினிமாதான்.

## ‘வ்பிறைடே அண்ட் வ்பிறைடே’




தமிழ்ச் சிறுகதை ஒன்று பிரெஞ்சுத் திரைப்படமாகியிருக்கின்றது. சமகால தமிழ் இலக்கிய எழுத்துச் சூழலில் பேசப்படுவர் ஈழத்தைச் சேர்ந்த ஷோபாசக்தி. எழுத்தில் மட்டுமின்றி திரை நடிப்பிலும் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறார். அவருடை நடிப்பில் அடுத்து வெளிவரவிருக்கிறது ‘வ்பிறைடே அண்ட் வ்பிறைடே’ என்ற பிரெஞ்சு திரைப்படம். ஷோபாசக்தி எழுதிய ‘வெள்ளிக்கிழமை’ சிறுகதையைத் தழுவி எடுக்கப்பட்டுள்ள முழுநீளத்

கட்டுரை

பா.குமுதன்

# வடக்கின் வறட்சி



உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாதது நீர். தண்ணீர் இல்லையேல் உயிர்கள் இல்லை, உயிர்கள் இல்லையேல் உலகம் இல்லை. இதனையே 'நீர் இன்றி அமையாது உலகு' என்று வள்ளுவர் அன்றே கூறினார். பூமிப் பரப்பின் 70சதவிகிதத்துக்கும் அதிகமான பகுதி நீரால் சூழப்பட்டிருந்தாலும் வறட்சியின் கோரத்தாண்டவம் உலக மக்கள் அனைவரையும் வாட்டி வதைத்துக் கொண்டேதானிருக்கிறது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை நடைபெறும் சம்பவங்கள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. கடலால் சூழப்பட்டுள்ள தீவான இலங்கை 103ஆறுகளையும், 70க்கும் மேற்பட்ட பெரிய நீர்தேக்கங்களையும், பல ஆயிரக்கணக்கான சிறிய குளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் வறட்சியின் தாக்கத்திலிருந்து தன்னை விடுவித்து கொள்ள அதனால் முடிவதில்லை. அதிலும் குறிப்பாக இத்தகைய நீர்நிலைகள் அரிதாகவிருக்கிற வட பகுதியே பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு நிற்கின்றது.

> மகாவலி நீரை வடபகுதிக்குத் திசை திருப்பும் செயற்திட்டம் அரசால் செயற்படுத்தப்படவிருக்கிறது. அதன் பிரகாரம் மொரகாகந்தை நீர்தேக்கதில் இருந்து வவுனியாவின் சேம மடுக்குளத்துக் மகாவலி நீர் கொண்டுவரப்படும். அதிலிருந்து பல குளங்களுக்கும் கொண்டு செல்லப்படும். குறித்த திட்டத்தின் மூலம் வட பகுதி விவசாயிகளும் பலபோக விவசாயத்தைச் செய்யகூடிய நிலை இருக்கிறது.

### வடக்கில் வறட்சியின் தாண்டவம்

இலங்கையைப் பொறுத்தவரை கொடிய போரால் பேரிழப்புகளையும் , வாழ்வாதாரங்களையும், இழந்து தவிப்பவர்கள் வடபகுதி மக்களே. 'பட்ட கண்ணிலேயே படும், கெட்டகுடியே கெடும்' என்பதுபோல அவர்களைத் தொடரும் பிரச்சினைகளோ ஏராளம். அவற்றில் மிகவும் பாராதூரமான விடயமாகப் பரிணமித்துவருகின்றது வறட்சியின் தாக்கம். இலங்கையின் உலர்வலயப் பகுதியாக இருக்கிற வடக்குமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வறட்சியின் தாக்கம் உச்ச அளவில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. கடந்த பத்துவருட காலப்பகுதியில் உணரப்படுகிற காலநிலை மாற்றம் வடபகுதியில் பெரியளவிலான தாக்கங்களை ஏற்படுத்தி நிற்புதை மறுப்பதற்கில்லை. அதைச் சீர் செய்யக் கூடிய விடயங்களை உரியதரப்பினர் மேற்கொள்ளாமல்இருப்பது இனிவருகிற காலப்பகுதிகளில் பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



வடக்கைப் பொறுத்த வரை யாழ்பாணம், மன்னார், முல்லைதீவு போன்ற பகுதிகள் கரையோரப் பிரதேசங்களானாலும் மழை வீழ்ச்சிமூலமே விவசாய, மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு நீரைப் பெற்று வருகின்றன. கடந்து சென்ற வருடங்களின் காலம் தாழ்த்திய மழைவீழ்ச்சி காரணமாகவும், அதிகரித்த வெயில் காரணமாகவும் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் வற்றிக் காணப்படுவதுடன், நிலத்தடி நீரும் குறைவடைந்து கொண்டிருக்கும் நிலமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் குடிப்பதற்கே நீர் இன்றி வடக்கின் பல கிராமங்களில் மக்கள் அலைந்து திரிகிற அவலத்தை வார்த்தைகளால் வடிக்க இயலாது. வறட்சி காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கபடுவதுடன், கால் நடைகள் இறக்கும் சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெற்றுவருகின்றன. அதிலும் யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகள், பூநகரியை அண்மித்த சில கிராமங்கள் மற்றும் மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் இதன் பாதிப்பு அதிகமாக இருக்கின்றது. கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் செயற்பாடுகளை பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுவந்தாலும் அங்கிருக்கும் வளப்பற்றாக் குறை, ஆளணி வெற்றிடம் எனப்பலவும் மக்களின் தேவைகளை முழுமையாகப் பூர்திசெய்வனவாக இருக்கவில்லை.

### பயனில்லாத அபிவிருத்தி

வடக்கைப் பொறுத்தவரை இலங்கை அரசால் தூர நோக்கற்ற, தேவையற்ற பல அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் புறம்தள்ளி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாகக் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் பன்னாட்டுத் தரத்திலான மைதானம், வவுனியா-ஓமந்தையில் அமைக்கப் பட்டு வரும் தேசியத் தரத்திலானமைதானம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பலவருடங்கள் ஆகின்றன. இன்னும் முழுமை செய்யப்படாமல் இருக்கின்றன. பலகோடி ரூபாக்கள் அதற்காகச் செலவு செய்யப்பட்டு, வேலைகள் மந்த கதியிலேயே நடைபெற்றுவருகின்றன. மைதானங்கள் தேவையானதாக இருக்கின்றபோதும் போருக்குப் பின்னர் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுடன் ஒப்பிடும்போது அவை இரண்டாம் பட்சத்திலேயே இடம்பிடிக்கின்றன.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட அரசதலைவர் மாளிகைக்காக 200 கோடிக்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளது. அதன்பயனையார்?, எவ்வாறு அடைந்துகொள்கிறார்கள்? அதுபோல பல அரச கட்டடங்கள் வடக்கில் அமைக்கப்பட்டுள்ளன. அவை பயன்படாமல் புதர் மண்டிக்கிடப்பதையும் கணலாம். கட்டடங்கள் அமைப்பதே நாட்டின் வளர்ச்சி என்று அனைவரும் சிந்தித்துவரு கின்றமையே இவ்வாறான பாரதூரமான விளைவுகளுக்கு வித்திடுகின்றது. அத்துடன்பன்னாடுகளால்வழங்கப்படுகின்றநிதிஉதவிகள் கூட விவசாயத்தை மையப்படுத்திய உற்பத்தித் துறைகளுக்கு ஒதுக்கப்படுவதில்லை. அவை ஆடம்பரம் சார்ந்த விடுதிகள், சுற்றுலா விருத்திக்கே பயன்படுத்தப்படுகின்றன. நிதியை வழங்குகின்ற நாடுகளின் பரிவின் பின்னால் பெரிய பொருளாதார அரசியல் இருப்பதை எமது தலைவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றனர் அல்லது நடிக்கின்றனர். நாடு அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கின்றது என்று கூறுபவர்கள் எவரும் இந்த நாட்டவர்களில்லை என்றுகூறிவிட முடியும். அல்லது அவர்கள் மக்களை அணுகாத அபிவிருத்தி பற்றிப் பேசுகிறார்கள் என்றும் கொள்ளலாம்.



### வடக்கில் குளங்களின் நிலை

விஸ்வரூபம் எடுத்துள்ள வறட்சியைத் தாங்கும்படியான முன்னேற்பாடுகள் எவையும் வடக்கில் உருவாக்கப்படவில்லை. மழை நீரை மேலதிகமாகத் தேக்கி வைப்பதற்கான பெரிய நீர்த்தேக்கங்கள் இங்கு அமைக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இரணைமடுக்குளம் மாத்திரமே வடக்கைப் பொறுத்தவரையில் பெரியகுளமாகக் காணப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களில் பல சிறிய குளங்கள் அமைந்திருந்தாலும் அவை சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கே போதாதவையாக இருக்கின்றன. போர்ச் சூழலால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாகப் பல குளங்கள் பயன்பாடற்று, அழிவடைந்துள்ளன. கிட்டத்தட்ட 500க்கு மேற்பட்ட குளங்களைச் சீரமைக்கவேண்டிய தேவை இருக்கிறது. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தற்போது பயன்பாட்டில் இருக்கின்ற பல குளங்களும் நீண்டகாலமாகச் சீர்செய்யப்படாத நிலையிலேயே இருக்கின்றன. இதனால் அவற்றின் நீர்க் கொள்ளளவு குறைந்து செல்கிறது. பயன்பாட்டில் உள்ள அநேகமான குளங்கள் பண்டைய மன்னர்களாலும், ஆதிக்குடிகளாலும் அமைக்கப்பட்டவையே. நீரின் தேவைபற்றியும் வறட்சி பற்றியும் நன்கு அறிந்து வைத்தனால் அன்று அவர்கள் நீர்சேமிப்புத் திட்டங்களை உருவாக்கினர். அன்று தேவைகள், சனத்தொகைகள் குறைவாகக் காணப்பட்டன. ஆனால் இன்றோ சனத்தொகைப் பெருக்கம் உணவுத்தேவைகளின் உச்சகட்ட அதிகரிப்பு. நீரின் தேவை என்பன அதிகரித்துச் செல்கின்றன. நாம் பழைய குளங்களைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவதே அரிதாக இருக்கிறது. இப்படியிருக்கப் புதிய குளங்களைக் கட்டுவது பற்றி எப்போது சிந்திப்பது? வடக்கில் பொரிய நீர்த் தேக்கங்களையோ அல்லது குளங்களையோ உருவாக்ககூடிய தரைத்தோற்றம் இருக்கின்றபோதும் அதை யார் செய்வது? என்ற கேள்வி எழுகிறது. பயன்பாட்டுக்குரிய மழைநீர் கடலில்சென்று கலக்கின்றது. நீர்த் தேக்கங்கள், குளங்களில் நீர் போதியளவுக்கு இல்லாமையால் நிலத்தடிநீரும் வற்றிவிடுகின்றது. வறட்சி வாட்டுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு தேவைகளுக்காக ஒதுக்கப்படும் பெருமளவு நிதியில் சிறு தொகையை ஆவது நீர் முகாமைத்துவத்துக்காக ஒதுக்கவேண்டும். வறட்சி கழுத்தை நெரிக்கும்போதுதான் அதுபற்றிய சிந்தனை இங்கு எழும்.

### மகாவலி நீரும் சிங்களக் குடியேற்றமும்

மகாவலி நீரை வடபகுதிக்குத் திசை திருப்பும் செயற்திட்டம் அரசால் செயற்படுத்தப்படவிருக்கிறது. அதன் பிரகாரம் மொரகாகந்தை நீர்தேக்கத்தில் இருந்து வவுனியாவின் சேம மடுக்குளத்துக்கு மகாவலி நீர் கொண்டுவரப்படும். அதிலிருந்து பல குளங்களுக்கும் கொண்டு செல்லப்படும். குறித்த திட்டத்தின் மூலம் வட பகுதி விவசாயிகளும் பலபோக விவசாயத்தைச் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. நிலத்தடி நீரைப் பாதுகாத்துக்கொள்வதுடன், வறட்சிப் பாதிப்புகளையும் தாங்கிக் கொள்ள முடியும். இவ்வாறான திட்டங்கள் எமக்குத் தேவையானவையாக இருக்கின்றபோதும் திட்டங்களில் பொதிந்து கிடக்கின்ற உள்நோக்கங்கள் பல சந்தேகங்களை ஏற்படுத்தி நிற்கின்றன. குறிப்பாக மகாவலி அபிவருத்தித்திட்டம் என்ற போர்வையில் இலங்கை அரசால் பல சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்பகுதிகளில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவின் மணலாறு, கொக்கிளாய், நாயாறு ஆகிய தமிழரின் பூர்விகக் கிராமங்கள் பெயர்மாற்றம் செய்யப்பட்டு பெரும்பான்மையினர் குடியேற்றபட்டுள்ளனர். அத்துடன் வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் கிழக்குப் பகுதியில் மகாவலி 'எல்' வலயம் எனப் பெயரிடப்பட்டு ஆயிரக்கணக்கானோர் குடியேற்றப்பட்டுள்ளனர். அத்தியவசியத் தேவையான நீரை ஆதாரமாகக்கொண்டு அரசு தனது மேலாதிக்கச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. நிலத்தை இழந்துதான் நீரைப் பெறவேண்டும் என்ற பரிதாப நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளமை வேதனையான விடயமே. வடக்கு முழுதும் இனி வரவிருப்பதான மகாவலி நீருடன்கூடிச் சிங்களவர்களும் வந்திறங்கினால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அந்த நீரால் வடக்கில் பயிர் மாத்திரமல்ல சிங்களக் குடியேற்றங்களும் ஆங்காங்கு முளைக்காலம்! என்ன நிகழினும் வடக்கின் வறட்சியைப் போக்குவதே தற்போதுள்ள அவசர தேவை. வடக்குக்குக் கிடைத்த அதிகாரங்களைக் கொண்டு தமிழ்த் தலைவர்கள் முடிந்தவரையில் இதை முழுமை செய்துகொள்ள வேண்டும்.

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான
**திருமதி உமாதேவி யோகநாதன்** அவர்களின் தாயார்
**திருமதி பாக்கியம் கணவதிப்பிள்ளை**
24.07.2018 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**யாழ் கல்வி வலய**
**இசையாசிரியர் கழகம்**

(CS/18598)(10)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜரட்ணம் இராஜேந்திரா (சுது)**
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அன்னை மடியில்
27.02.1944

ஆண்டவன் அடியில்
22.07.2016

திதி:- துதியை

எமது குடும்பத்தின் குல தெய்வமே!
பாசத்தினால் எல்லோரையும் கட்டி வைத்தீர் உம்வசம்
பண்பினால் எல்லோர்க்கும் வழிகாட்டியாய் வாழ்ந்தீர்
என்றும் உம் நினைவில்....

243, பலாலி வீதி, கந்தர்மடம். **குடும்பத்தினர்.**

(ach 00236) (13.)

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி**
**அருந்தவ ஈஸ்வரி இரகுநாதன்**



பூவுலகில்
07.04.1919

சொர்க்கத்தில்
22.07.2005

திதி: ஆடிமாத அபரபக்க துதியை
29.07.2018

இன் சொல் பேசி
எல்லோர்க்கும் இன் முகம்காட்டி
ஈகையில் சிறந்து விளங்கி
உத்தம குணத்துடன்

நான்படும் துன்ப துயரங்களைத் துடைத்து ஆசீர் வதிப்பீராக
உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கான
சங்கரத்தை பத்திரகாளி அம்மனின் பாதம் பணிகின்றோம்.

'உடையார்' வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(in.5427) (13,17)

உங்கள் அன்பு மகள்
செல்வி செந்திற்செல்வம்
இரகுநாதன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## வீடு வாடகைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
**தொடர்பு - 077 833 6848**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது வியாபாரத்தினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன் கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடியாக திறமையும், கல்வித் தகைமையும் கொண்ட அனுபவமுள்ளவர்கள் தேவை.

பதவி : மாவட்ட இணைப்பாளர் (District Coordinator ) - 08 வெற்றிடங்கள்
உதவி மாவட்ட இணைப்பாளர் (Asst. District Coordinator) 08 வெற்றிடங்கள்
கல்வித்தகைமை : G.C.E. (A/L) 3 பாடங்களிலும் சித்தி
அனுபவம் : வியாபார நிறுவனசந்தைப்படுத்தல் (Marketing) தொடர்பான ஒரு வருட அனுபவம்.
வயதெல்லை : 18 - 30 (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
சம்பளம் : தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர் பொருத்தமானவர்கள் தங்கள் முழுமையான சுயவிவரக்கோவையை பின்வரும் முகவரிக்கு தபால் / மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவும்.

K.S.K. Marketing (Pvt) Ltd,
G.P.S. Road, Kalviyankadu, Jaffna.
மின்னஞ்சல் : kskmarket@gmail.com
மேலதிக தொடர்பு - 076 844 6358

*விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ*

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி சதாசிவம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி சதாசிவம் நேற்று (28.07.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மஹாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கெங்காதேவி பாலகிருஸ்ணன் மற்றும் விக்னேஸ்வரன், பரமேஸ்வரி, மகேஸ்வரன் காலஞ்சென்ற ஜெகநாதன்மற்றும்தனலட்சுமி, உதயகுமார்ஆகியோரின்அன்புச்சகோதரியும் சறோயினிதேவி, ராஜினி, நந்தினி, சாந்தினி, கமலினி, அருட்செல்வி (பிரான்ஸ்), மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரன், உதய தேவன், கிருபாகரன், பரமேஸ்வரன், விஜயகுமார், சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவதர்சினி, சிவதர்சன், சிவப்பிரணவன், சிவசங்கர், சிவப்பிரியா, சந்தோஸ், அபிஷா, ஹரிகரன், தனுஸ்காந், சித்தார்த், சகிந், கேமப்பிரியந் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## தேங்காய் மட்டை தேவை

பொச்சுமட்டை (தேங்காய் மட்டை) தேவை.
உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்யப்படும்.
**தொடர்பு - 077 6544 428**

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள 5 ஸ்ரீ கார் மற்றும் Hunk மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 3039 754**

## கார் விற்பனைக்குண்டு

மிகவும் நல்ல நிலையில் வைத்தியரின் பாவனையில் உள்ள Maruti Suzuki ESTILO கார் விற்பனைக்குண்டு.
40 000 km மட்டுமே ஓடியுள்ளது.
**தொடர்பு - 077 715 8327**

## கட்டடம் வாடகைக்குண்டு

கொக்குவில் K.K.S பிரதான வீதியில் 2 கடை மற்றும் வீட்டுடன் சேர்ந்த ஒரு மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு
**தொடர்பு 077 4738 355**

## சாரதிகள் தேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் சென்று வரக்கூடிய கனரக வாகன சாரதிகள் தேவை.
**தொடர்பு 077 4780 062**

## காணிகள் விற்பனைக்கு

01) உரும்பிராய், மருதனார்மடம் வீதியில் அரச பண்ணைக்கு அருகில் பண்டிதர் லேனில் 3 பரப்பு, 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
02) உரும்பிராய், கோப்பாய் வீதியில் பாரதி கடைக்கு அருகில் பிரதான வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
**தொடர்பு - 076 697 2287**

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு பிறந்த 8 இல் செவ்வாய், அர்த்தம் 2 ஆம் பாதம் கிரகபாவம் 55, பிரபல தொழில் அதிபர் கனடா பிரஜா உரிமை உடையவர். மணமகள் தேவை.
1985 ஆம் ஆண்டு பிறந்த கனடா பிரஜா உரிமை உடைய 8 இல் செவ்வாய், கிரகபாவம் 42, கேட்டை 2 ஆம் பாதம் சுப்பர் மார்க்கட் உரிமையாளருக்கு மணமகள் தேவை
தொடர்பு - Vimp - **077 5221 132,**
வாணி - **077 2854 626**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னக்கண்டு கந்தசாமி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.08.1924 | 26.07.2018 |

மயிலியதனை, தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னக்கண்டு கந்தசாமி 26.07.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், நிர்மலானந்தன், சச்சிதானந்தன், அமுதவாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கரத்தினம், சூரியேஸ்வரி, சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, மகாலிங்கம், அன்னலெட்சுமி மற்றும் சிவசாமி, சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, கைலாயசுந்தரம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

**மயிலியதனை, தொண்டமனாறு**

## மரண அறிவித்தல்

### திருமதி கத்தரீன் பிலிப்பையா



மண்ணகத்தில் 24.11.1943 விண்ணகத்தில் 28.07.2018

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கத்தரீன் பிலிப்பையா நேற்று (28.07.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எஸ்தாக்கி - சவிரியாள் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான எலியாஸ் - காணிக்கை தம்பதிகளின் அன்பு மருமகளும், பிலிப்பையாவின் அன்பு மனைவியும், அருட்தந்தை ஜேக்கப் யோகராஜ் (அ.ம.தி), அன்ரன் சகாயராஜ் (பரிசாரகர் - நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை), யோவான் ஸ்ரலிஸ்ரா சாந்தினி (ஆசிரியை - நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி), ஆனந்தராஜ், அருள்ஞானராஜ், அமல்ராஜ், இரட்ணராஜ் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, வேலணை), அன்ரன் ஜெயராஜ் (ஆசிரியர் - புனித ஆசீர்வாதப்பர் பாடசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள்வதனா, மரியதாஸ் குருஸ் (ஆசிரியர் - நெ.ம.வி), மெரினா, சுகந்தினி, யூசியா, விஜிதா ஜெபநாயகி (ஆசிரியர் - யா/ பு.ஜேம்ஸ். மகளிர் வித்தியாலயம்), ஆன்டயானா சுபைதா (ஆசிரியர் - மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2018) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நெடுந்தீவு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக மத்தி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(CS/18596)(11,17)

**தகவல்: கணவர், பிள்ளைகள்.**
**0771396906, 0777582593**

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# மூன்று தசாப்த போரின் பின்னர் மீண்டெழுகிறது ஊறணிப் பங்கு

யாழ். மறைமாவட்டமானது மூன்று தசாப்த கொடிய போரின் பின்னர் வலி வடக்கு பிரதேசத்தில் விசுவாச மீள்குடியேற்ற நல்வாழ்வுக்கான முயற்சிகளில் வேகமாக ஈடு பட்டு வருகிறது. கடந்த வாரம் வலி வடக்கு பிரதே சத்தில் உள்ள வயாவிளான் வடமூலை உத்தரிய மாதா ஆலயம் பற்றிப் பார்த்தோம். இந்த வாரம் வலி வடக்கு பிரதேசத்தில் உள்ள ஊறணிப் பங்குத் திருச்சபை பற்றி நோக் குவோம்.





## இடப்பெயர்வும் மறுவருகையும்

ஊறணி புனித அந்தோனியார் ஆலய பங்கு மக்கள் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இடம்பெயர்ந்து நீண்டகால 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி தமது மண்ணில் மகிழ்வுடனும் கவலையுடனும் மீளவும் கால்பதித்து கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் திருவிழாவைக் கொண்டாடியமை பற்றியும் அதன் பின்னரான வளர்ச்சி பற்றியும் இந்த ஆக்கம் பேசுகிறது. இந்த ஆக்கத்துக்கான தகவல்களை ஊறணி புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மண்ணின் குருமைந்தர் சீ.யே.அன்ரனி பாலா அடிகளார் வழங்கினார்.

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த ஊறணி பங்கு மக்கள் இளவாலை, மானிப்பாய், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பல இடங்களுக்கும் பின்னர் வன்னிக்கும் இடம்பெ யர்ந்து திரும்பவும் மேற் குறிப்பிட்ட இடங்களுக்கும் வந்து சுமார் 26 ஆண்டுகளின் பின்னர் 2016ஆம் ஆண்டு திரும் பவும் சொந்த மண்ணிற்கு வந்து சேர்ந்தனர். ஊறணி புனித அந்தோனியார் ஆலய பங்கின் துணை ஆலயங்களாக வீமன்காமம் புனித யுவானியார் ஆலயம் தெல்லிப்பளை புனிதர்கள் பேதுரு பாவிலு ஆலயம் காங்கேசன்துறை புனித சூசையப்பர் ஆலயம் கட்டுவன் புனித பத்தாம் பத்திநாதர் ஆலயம்; அன்று உள்ளடங்கியிருந்தமையும் இன்று சேதம டைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டு யேசு சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த புனிதர்கள் பேதுரு பாவிலு ஆலயத்தில் மனமாற்றம் பெற்று கர்வாலு சுவாமியால் திருமுழுக்குப் பெற்ற தெல்லிப்பளைப் பேதுருப் புலவரால் 1647 இல் இயற் றப்பட்ட சந்தியோகுமாயோர் அம்மானை அந்த ஆலயத்து டன் இணைந்திருந்த மேடையில் பாடப்பட்டிருக்கலாம் என முன்னாள் யாழ் ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிடுமளவிற்கு இந்த ஆலயம் வரலாற்றுப் புகழ் மிக்கதாகும்.

2016ஆம் ஆண்டு நவம்பரில் ஊறணியில் காலடி வைத்த போது ஆலயம் இருந்த வெறும் வளவும் அதற்கு கிழக்குப் பக்கமாக பருத்தித்துறை பொன்னாலை வீதிக்கு தெற்குப் புறமாக ஒரு சிறிய பகுதியும் விடுவிக்கப்பட்டிருந்தது. இடிக்கப் பட்ட ஊறணி புனித அந்தோனியார் ஆலய அத்திவார மேடையில் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி அன்று (முதல் செவ்வாய் தினத்தன்று) முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜூன் மாதம் 13ஆம் திகதி சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா கொண்டாடப்பட்டது.

> “மண்ணாலும் சீமெந்தாலும் கட்டிய பிரமாண்டமான ஆலயத்தைத் தான் இடித்து அழித்தார்களே தவிர இங்கு வாழ்ந்த இந்தச் சமுதாயத்தை அவர்களால் இடித்தழிக்க முடியவில்லை. இதோ அந்தச் சமுதாயம் மீண்டெழுந்து இயேசுவை மையப்படுத்தி மீண்டுமோர் ஆலயத்தைக் கட்டியெழுப்பத் தயாராகிவிட்டார்கள்

## போரும் போர்க்கால அனுபவங்களும்

30 ஆண்டுகாலப் போர் அதனோடு இணைந்த இழப்புக்கள்; இடம் பெயர்வுகள் இறப்புக்கள் வழி தமிழ் மக்கள் பெற்ற போர்க்கால அனுபவங்கள் தனித்துவமானவை. தனியாக



வம் குடும்பமாகவும் சமூகமாகவும் பிரதேசங்களாகவும் அவர்கள் பெற்ற அனுபவங்கள் மறக்கப்பட முடியாதவை.

தமிழ் மக்களின் போர்க்கால அனுபவத்தில்: 1990ஆம் ஆண்டு தொடங்கிய இடம்பெயர்வு 2009ஆம் ஆண்டு வரை நீடித்து இலங்கைவாழ் தமிழ் மக்களை சோகமான காலத்தில் வாழ வைத்தது என வரலாறு பதித்து வைத்துள்ளது. சீவிய கால சொத்து முழுவதையும் ஓரிரு பைகளில் எடுத்துக் கொண்டு அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்து டனும் பதட்டத்துடனும் ஓடிய அனுபவம் மறக்கப்பட முடியாதது. அடுத்த நேரம் உண்ண உணவு கிடைக்குமோ கிடைக் காதோ என்று இருந்த போது மனம் நின்மதி இன்றி எப்போதும் துடித்துக் கொண்டே இருந்த போது இறைவன்தான் ஒரே துணை அவரிலேதான் முழுமையான பாதுகாப்பு உண்டு என்ற எண்ணமே மேலோங்கியது. முகாம்களிலும் தங்கக் கிடைத்த இடங்களிலும் எல்லோரும் தம் மன துகளில் மௌனமாகவும் சந்தர்ப்பம் கிடைத்தபோது குழுவாக சத்தமாக வும் செபித்துள்ளனர். இந்த அனுப வம் மதபேதமின்றி அனைத்து தமிழ் மக்களுக்கும் பொதுவானது என்றே எடுக்கப்படவேண்டும்.

## தற்காலிக ஆலயத்துக்கு அடிக்கல் நடும் வைபவம்

வலி வடக்கு காங்கேசன்துறை ஊறணியில் இடித்தழிக்கப் பட்ட புனித அந்தோனியார் ஆலய வளவில் தற்காலிக 60 அடிக்கு 30 அடி கொண்ட ஆலயத்திற்கான அடிக் கல் நடும் வைபவத்தை கடந்த வருடம் ஜனவரி 14ஆம் திகதி அன்று முன்னாள் பங்குத்தந்தையும் நீண்டகாலம் லண்டனில் ஆன்மிகப்பணி புரிந்தவரும் புதிய பங்குத் தந்தையாக பொறுப் பேற்றவருமான ரீ.ஈ.தேவராஜன் அடிகளார் மற் றும் ஊறணி குருமைந்தன் சீ.யே.அன்ரனி பாலா அடிகளார் ஆகியோர் இணைந்து நடத்தி வைத்தனர்.



இந்த நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் (தையிட்டி வடக்கு கிராம சேவையாளர்) உட்பட பல பங்கு மக் கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ரீ.ஈ.தேவராஜன் அடிகளார் 'மண்ணாலும் சீமெந்தாலும் கட்டிய பிரமாண்டமான ஆல யத்தைத் தான் இடித்து அழித்தார்களே தவிர இங்கு வாழ்ந்த இந்தச் சமுதாயத்தை அவர் களால் இடித்தழிக்க முடியவில்லை. இதோ அந்தச் சமுதாயம் மீண்டெழுந்து இயே சுவை மையப்படுத்தி மீண்டுமோர் ஆலயத் தைக் கட்டியெழுப்பத் தயாராகிவிட்டார்கள்' எனத் தெரிவித்தார்.

தற்காலிக ஆலயத் திறப்பு விழாத்திருப்பலி 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தத் திருப்பலியை முன்னிட்டு அதற்கு முந்திய தினம் 4ஆம் திகதி சனிக்கிழமை ஊறணியில் சிரமதானமும் ஆயத் தப் பணியும் நடை பெற்றது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி ஊறணி மக்களுக் குச் சொந்தமான நான்கு துறைகளும் விடுவிக்கப்பட்டு மக் கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி வீதிக்கு வடக்காக கடலையண்டிய பிர தேசமும் காங்கேசன்துறை மிசன் பாடசாலை முதல் மயி லிட்டி கச வைத்திய சாலை வரை இதுவரை விடுவிக்கப்படாதிருந்த ஆலயத்தின் எஞ்சிய காணி முழுவ தும் இராணுவத்தினரால் கம்பிக் கட்டைகள் அகற்றப்பட்டு ஆலயத்தின் பாவனைக்காய் திறந்து விடப்பட்டது.

## குருமனையின் அடிக்கல் நடும் வைபவம்

ஊறணி புனித அந்தோனியார் ஆலய குருமனையின் அடிக் கல் நடும் வைபவம் கடந்த ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி அன்று யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. புனித வார வழிபாடுகளையும் நடத்தவும் பொது மக்க ளின் வசதி கருதியும் புதிய பங்குத்தந்தை ரீ.ஈ.தேவராஜன் அடிகளார் புதிய பங்கு மனை கட்டப்படும் வரை ஆர்.டி.எஸ். கட்டி டத்தில் அவசரமாகக் குடியேறினார். புனித வார வழிபாடுகளும் இந்த வருடத்தின் திரு விழாவும் புதிய பங்குத்தந்தை ரீ.ஈ.தேவராஜன் அடிகளார் தலைமையில் நடத்தப்பட்டது.

ஆலய வளவிற்கு மேற்குப் புறமாக பாடசாலைக் காணி தவிர்ந்த பருத்தித்துறை பொன்னாலை வீதிக் குத் தெற்காக ரயில் நிலையம் வரையுள்ள பகுதி இன்றுவரை விடுவிக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். விடுவிக்கப்பட்ட ஊறணி கனிஸ்ட வித்தியாலயக் காணியில் கடந்த ஜனவரி தொடக்கம் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

ஊறணிக் கிராமம் இதுவரை பல குருக்கள் துறவிகளைத் தந்துள்ளது. ஆர்.சீ.எக்ஸ். நேசராஜா அடிகளார், சீ.யே.அன் ரனிபாலா அடிகளார், ரி.ஆர். வசந்தசீலன் அடிகளார், சசிக ரன் அடிகளார் ஆகியோர் குருக்களாகவும் அருட்சகோதரி சிறில் (இறந்துவிட்டார்), அருட்சகோதரி வில்லிறீற்றா, அருட் சகோதரி செலஸ்ரீனா, அருட்சகோதரி நிர்மலா ஆகியோர் திருக்குடும்பச் சபைச் சகோதரிகளாகவும் உள்ளனர். புனித வளனார் சபையில் இணைந்து பணியாற்றி இறந்த அருட்ச கோதரன் றொபேட் வில்லிறீற்றா செலஸ்ரீனா இருவரினதும் சொந்த சகோதரனாவார். இவ்வாறு ஏகப்பட்ட துறவிகளைத் தந்துள்ள ஊறணி என்றும் போற்றுதலுக்கு உரியதே.

# ரொனால்டோ சிறந்த வீரர் இல்லை இப்படித் தெரிவித்தார் கார்வஜெல்



ரொனால்டோ சிறந்த வீரர் இல்லை என்று தெரிவித்தார் அவருடன் ரியல் மட்ரிட் கழகத்தில் ஒன்றாக விளையாடியவரான கார்வஜெல். ரியல் மட்ரிட் கழகத்துக்காக அதிக கோல்களைப் பதிவுசெய்தவராக ரொனால்டோ உள்ள நிலையில் கார்வஜெலின் இந்தக் கருத்து சர்ச்சைகளை உண்டுபண்ணியுள்ளது.

போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடிவந்தார். ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையால் அவர் அண்மையில் மட்ரிட் கழகத்தில் இருந்து பிரிந்து சென்று இத்தாலியின் யுவென்டாஸுடன் ஒப்பந்தமானார். இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் கார்வஜெல்.

(ம)

## 44ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### ஆனந்தசோதி சஞ்சீவன்

ஐ ஒன்பது நாள்கள் ஆனதோ? எம் பாலனை அக்காலன் தன்வசம் ஈர்த்து
நாம் கேட்காமல் எமக்கு கடவுளாய் கிடைத்த வரமடா நீ... தம்பி
உன்னோடு பேசும் வரம் கேட்கிறோம் மடிப்பிச்சையாய்...
நரவைந்து வருடங்கள் ஆனபோதும் எம் கைச்சிறகிற்குள் இருந்தாயடா... தம்பி
எப்படி எம் சிறகை உடைத்து பறந்தாயடா எம் நினைவு சற்றுமில்லாமல்
உன் விருப்பின்றி கட்டி இழுத்தானோ அக் கயவன்?
அவன் கட்டை உடைத்தெறிந்து துணிந்துவா தம்பி இறைவன் கைகோர்த்து... உன் உறவுகளுக்காய்...

எமது மகனின் மறைவுச் செய்தி அறிந்து உடனடியாக நேரில் வந்து ஆறுதல் தெரிவித்து இறுதி நிகழ்வுகளில் பங்குகொண்ட நல்லுள்ளங்களுக்கும் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் தொலைபேசி, முகப்புத்தகம் போன்றவற்றினூடாக அனுதாபத்தினை தெரிவித்த பாசமிகு உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோர்க்கும் மலர் வளையங்கள் மாலைகளினூடாக அஞ்சலி செலுத்திய உறவுகளுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அன்பான உறவுகள் யாவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி. (CS 18604/15/18) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா (ஓய்வுபெற்ற அதிபர் - யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) நேற்று (28.07.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி - வைத்திய ரத்னா, சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வராவின் (சிவசக்தி வைத்திய நிலையம், முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர் - யாழ்.நகர் கிழக்கு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்வமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, விஜயலட்சுமி, சிவபாக்கியம், முத்துக்குமாரசாமி மற்றும் சரோஜினிதேவி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அபிராமி (துறைத்தலைவர் - மெய்யியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மற்றும் Dr. அரவிந்தன் (சிவசக்தி வைத்திய நிலையம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜ்குமார் (குடிவரவு, குடியகல்வு அதிகாரி - கட்டுநாயக்கா விமான நிலையம்) மற்றும் Dr. நளினி ஆகியோரின் அன்பு மாமியாரும் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவர்களான ஆதிஷ், ஆகாஷ், ஆதர்ஷ் மற்றும் அஷ்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10.00 மணியளவில் இல. 10, சின்னக்கிணற்றடி ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலையில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

10, கண்டி வீதி, 2ஆம் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். (CS18590/15/18)

தகவல்:
குடும்பத்தினர்.


## யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல Hotel ஒன்றிற்கு பணியாள்கள் தேவை

- வரவேற்பாளர் (பெண்)
  மூன்று மொழிகளும் பேசக்கூடிய ஒருவர்
  அடிப்படை கணினி அறிவு
- Roomboy
- உழவு இயந்திர வாகன ஓட்டுநர்

இன்று 02.00 மணிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.

தொடர்பு - 021 222 1326, 021 222 1327


## மரண அறிவித்தல்

### கணேஸ்வரன் பாஸ்கரன்



வட்டுவினி, இணுவில் மேற்கு. இணுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ்வரன் பாஸ்கரன் நேற்று (28.07.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேஸ்வரன் - லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, பரிமளகாந்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரபாவதியின் அன்புக் கணவரும் கயூரன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் 2019, கணிதப்பிரிவு), டிலக்சனா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி மாணவி - 2020 கலைப்பிரிவு), தீபிஷா (யாழ். கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், தரம் - 06) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவகேஸ்வரன் (இணுவில்), விக்னேஸ்வரன் (கனடா), வி.இராஜேஸ்வரி (இணுவில்), சோதிஸ்வரன் (கனடா), ஜங்கரன் (இணுவில்), பிரியா (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (நீர்வேலி), ச.மாலினி (வவுனியா), ம.சர்பாலினி (பூநகரி), ந.நிஷாந்தினி (விசுவமடு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (CS 18622/15/18)

தகவல்: குடும்பத்தினர்.
077 456 3723, 077 985 5223

## குளத்திலிருந்து...

புன்னைநீராவி 26ஆம் வாய்க்காலைச் சேர்ந்த சுபாஸ் (வயது-31) என்ற இளைஞனின் சடலமே தர்மபுரம் பொலிஸாரால் நேற்று மாலை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதியிலிருந்து இளைஞனைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடி வந்தனர். இந்த நிலையிலேயே சடலமாக இளைஞன் மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (5,35)

## கத்திவெட்டில்...

இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திவெட்டாக மாறியதிலேயே இவர்கள் காயமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வரணி வடக்கைச் சேர்ந்த கிட்டினன் தங்கலிங்கம் (வயது-45), சவுந்தராஜ் ராஜ்மிலன் (வயது-29), கந்தசாமி சுரேஸ்குமார் (வயது-31), அறிவழகன் கஜன் (வயது-27), கணபதி நவரத்தினம் (வயது-52) ஆகியோரே மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வரணி வடக்கு சிமிழ் கண்ணகைபுரம் கிராமத்தில் நேற்று இறுதிச் சடங்கு நடைபெற்றுள்ளது. அதில் கலந்து கொண்டவர்களிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கைகலப்பாக மாறி கத்தி வெட்டில் முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (5,9,67,159,160)

## நாடு...

ழமை நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர். அரச மருத்துவ சங்கத்தின் செயலர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமது சங்கத்தால் அரசுக்கு கடிதமூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அரசு அது தொடர்பில் சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

சிங்கப்பூருடன் அரசு உத்தேசித்துள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பாதகமான ஒன்றாகும். இந்த ஒப்பந்தம் குறித்து மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்த ஆட்சேபனைகளை பொருட்படுத்தவில்லை. ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசு தீர்மானித்துள்ளது.

சிங்கப்பூருடன் மாத்திரமல்லாமல், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்திருக்கிறது. இத்தகைய தவறான வர்த்தக நடவடிக்கைகள் குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு அரசிடம் கோரியிருந்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மருத்துவர்களின் அரச கொடுப்பனவுகளுக்காகவும் வரி அறவிடும் போக்கை அரசு தற்போது முன்னெடுத்துள்ளது. தொழில்சார் நிபுணர்கள் என்ற வகையில் மருத்துவர்களின் நியாயமான பல அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசு இதுவரையில் தீர்வு தரவில்லை. மாறாக பேச்சு என்று கர்லம் கடத்தி வருகின்றது. இந்த விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கோருகிறோம். இவை உள்பட 10 பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப்பெற்றுதரக் கோரி அரசை வலியுறுத்தி ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம் - என்றார். (5,31)

## உதயனுக்கு...

முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு, சுதந்திரபுரம், கைவேலி, றெட்பானா, மாணிக்கபுரம் பகுதிகளில் வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் தகவல் திரட்டும் படிவம் வழங்கியுள்ளனர். வர்த்தக நிலையங்களின் விவரங்களைத் திரட்டும் வகையிலும் விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த சில வாரங்களாக இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 572ஆவது பிரிவுப் படையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தியை உதயன் நேற்று வெளியிட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், ஊடகவியலாளர்களிடம் இராணுவத்தினரும், புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்தியவர்களும், உதயன் பத்திரிகைக்குச் செய்தியை யார் வழங்கினார்கள்என்றுதுருவித்துருவிவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5,21)

## இலங்கை...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயர்தரமான அம்புல் (புளி வாழைப்பழம்), செவ்வாழைப் பழம், கோழிக்கோடு வாழைப்பழம் ஆகிய ரகங்களே சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இலங்கையில் சுமார் 29 வகையான வாழைப்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் பல இலங்கையைத் தாயகமாகக் கொண்டவை.

ஆண்டு தோறும் 4 லட்சத்து 50 ஆயிரம் மெட்றிக் தொன் வாழைப் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன- என்றார். (ற)

## காயமடைந்த...

மடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவரது சகோதரியும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

சுபாஸ்கரன் தமிழினி (வயது-10) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வத்திராயனுக்கு உந்துருளியில் குடும்பத்தினர் பயணித்துள்ளனர். இயக்கச்சி சாலை வளைவில் உந்துருளியும், ஹையஸ் வாகனமும் மோதிக் கொண்டன. உந்துருளியில் பயணித்த பெற்றோர், இரு பிள்ளைகள் விபத்தில் படுகாயமடைந்தனர். பிள்ளைகள் இருவருக்கும் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தது. உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சுபாஸ்கரன் சுபாசினி (வயது-4) என்ற சிறுமி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போதே உயிரிழந்திருந்தாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. அவரது சகோதரியான தமிழினி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வத்திராயன் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (5,8,9)

## மாகாண சபைத்...

மான இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோரை ரெலோ அமைப்பின் ஆறு பிரதிநிதிகள் திருகோணமலையில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர். அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படவேண்டும் என்று ரெலோ அமைப்புக் கோரியுள்ளது. அதற்கு சம்பந்தன் இணங்கியுள்ளதுடன், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டுமாறு ரெலோ அமைப்புக் கேட்டுக் கொண்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பில் அந்தச் சந்திப்பை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் உள்ளிட்ட வரப்போகின்ற தேர்தல்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துப் பங்காளிக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டவேண்டும் என்று ரெலோ அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் [illegible] கலந்துரையாடிய பின்னரே அறிவிக்கவேண்டும் என்றும் ரெலோ அமைப்பு இந்தச் சந்திப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரெலோ சார்பில், அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலர் ந.சிறீகாந்தா, நிர்வாகச் செயலர் நித்தி மாஸ்ரர், மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வெலிக்கடைச்சிறை படுகொலைகள் நினைவஞ்சலிப் பொதுக் கூட்டம் கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய ரெலோ அமைப்பின் செயலர் ந.சிறீகாந்தா, முன்னாள் தீவிரவாத இயக்கங்கள், முன்னாள் போராட்ட இயக்கங்கள், ஆயுதம் தாங்கி அரசை அசைத்த இயக்கங்கள், ஜனநாயக வழியே ஒரே நிலைப்பாட்டில் நிற்கக் கூடியதாக இருந்ததால் மற்றவர்களும் இணைந்திருப்பார்கள். ஆனால் நாங்கள் பிளவுபட்டு நிற்கின்றோம். முன்னாள் தீவிரவாத இயக்கங்கள் பிளவுபட்டு நிற்கின்றது. எங்கள் சிந்தனைகள் மாறிவிட்டது. எங்கள் இலக்குகள் மாறிவிட்டது. திசை மாறிய பறவைகளாக இன்றைக்கு நாங்கள் நிற்கின்றோம். மிகத் தாழ்மையாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, எதிர்வரும் டிசெம்பர் வரையிலே பொறுத்திருக்கலாம். அதற்குப் பின்னர் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) சுயமாக சில முடிவுகள் எடுக்கத் தள்ளப்படும். அந்த முடிவுகளை நாங்கள் விவாதிப்போம். கூட்டாக எடுப்போம். தமிழ்க் கூட்டமைப்புக்கும் முன்வைப்போம். அதற்கு இடையிலே தமிழ்த் தேசியத்தை முன்நிறுத்துகின்ற முன்னாள் தீவிரவாத அமைப்புக்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்த முடியுமா என்று நாங்கள் சிந்தித்துச் செயற்படுவோம் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,26,105)

## தோற்றது...

வெள்ளிக் கிழமை இரவு மீசாலையிலுள்ள அரச பணியாளரின் வீட்டினுள் திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் சத்தமிட்டுள்ளனர். திருடர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை பகல்வேளை, சரசாலை வடக்குப் பகுதி வீடொன்றில் வசித்தவர்கள் வெளியில் சென்றிருந்தபோது, வளவுக்குள் புகுந்த திருடர்களைக் கண்டு நாய் தொடர்ந்து குரைத்ததால் அதனை வெட்டிச் சாய்த்துவிட்டு கதவை உடைத்து உள்நுழைந்துள்ளனர். அயலவர்கள் கண்டு சத்தமிடவே திருடர்கள் தப்பியோடியுள்ளனர். இந்த இரு திருட்டு முயற்சிகள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5,9)

## அதிகாரப்...

இராஜதந்திர விவகாரங்களைத் தாண்டி மக்கள் நலனை மையப்படுத்தியதாகும். இவ்வாறு மீள்குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இந்தியா - சீனா அதிகாரப் போட்டியால் வடக்கு வீடமைப்புத் திட்டம் கைவிடப்படக் கூடாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே, அமைச்சர் சுவாமிநாதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தினூடாக இரண்டு ஆண்டுகளுக்குள் அந்தப் பகுதி மக்களுக்கு 15 ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன. வேலையாள் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாவை சம்பளமாக வழங்க எதிர்பார்த்துள்ளதோடு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகவே 13.2 பில்லியன் ரூபா நிதிசார் நன்மைகள் கிடைக்கவுள்ளன. இந்தத் திட்டத்துக்கே தற்போது [illegible] ஏற்படுத்தப்படுகின்றன. இ[illegible] ஏற்[illegible]துபவர்கள் [illegible]ள்கள் வேறுபட்ட[illegible] என்ற வகையிலே நாம் மக்களின் நலன்களை மையப்படுத்தியே செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம்.

இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர போட்டிகளை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல. அதற்கான அவசியமும் கிடையாது. கிடைக்கும் வாய்ப்புக்களை தட்டிக்கழிக்கும் செயற்பாடுகள் யாரால் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (5,31)

## போர்த்துக்கீசர்...

வர்த்தகம் இடம்பெற்றமைக்கான ஆதாரங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சிதைவடைந்த கத்தோலிக்க தேவாலயம், சிதைவடைந்த இந்து ஆலயங்களுக்கான ஆதாரங்கள், சோழர் கால கட்டட ஆய்வு சிதைவுகள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கோட்டை அமைந்துள்ள பகுதியில் கடல் மார்க்கமாக வணிகங்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் குடியிருந்து வாழ்ந்தமையையடுத்தே போர்த்துக்கீசர் அங்கு கோட்டை அமைப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது - என்றார். (5)

## தொடருந்துடன்...

சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இவ்வாறு யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலை நெளுக்குளத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த ராஜகோபால் கிரிசாந் (வயது-27), கந்தசாமி சந்திரகுமார் (வயது-29) இருவருமே உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தெரிவித்ததாவது,

நெளுக்குளத்தில் அமைந்துள்ள தொடருந்துக் கடவைக்கு வேலி இல்லை. தொடருந்து பயணித்துக் கொண்டிருப்பதற்கான சமிஞ்சைவிளக்கு ஒளிர்ந்துள்ளது. சமிஞ்சை ஒலியும் ஒலித்துக் கொண்டிருந்தது.

இளைஞர்கள் மூன்று பேரும் ஒரே பல்சர் ரக உந்துருளியில் தலைக்கவசம் இன்றி வேகமாகப் பயணித்துள்ளனர். தொடருந்துக் கடவைக்கு அண்மையாக வேகத்தைக் குறைக்க முற்பட்டபோதும் அவர்களால் அது முடியாமல் போயுள்ளது. தொடருந்துடன் உந்துருளி மோதியது. இளைஞர்கள் இருவர் தூக்கி வீசப்பட்டனர். அவர்கள் இருவரும் உயிரிழந்தனர். உந்துருளி மிக மோசமாகச் சேதமடைந்தது. மற்றைய இளைஞன் மிகமோசமான காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார், என்று பொலிஸார் தெரிவித்தனர். (5,8,106)

## மகிந்தவுடன்...

நினைக்கவில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சீனத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இது தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

'அரசமைப்பு உருவாக்கத்துக்கு முக்கியத்துவம் வழங்கி, அதன் மூலம் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமன்றி இதன் மூலம் தமிழ் மக்களின் நன்மை மட்டுமன்றி, முழு நாட்டின் நமைக்காகவே இதை கேட்கின்றேன். இதை பற்றி தான் சிந்திப்பதாக மகிந்த தெரிவித்தார். இந்தக் கோரிக்கையை அவர் மறுக்கவில்லை. இ[illegible] தொடர்பில் தமிழ் மக்கள் என் மீது அவநம்பிக்கை கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை - என்றார். (5)

# தேசிய கால்பந்தாட்ட அணியில் யாழ். வீராங்கனைகள் ஏழு பேர்






யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கையின் தேசிய 14 வயதுப் பெண்கள் கால்பந்தாட்ட அணியில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனைகள் ஏழு பேர் இடம்பிடித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் படசாலையைச் சேர்ந்த நால்வர், மகாஜனக் கல்லூரி மாணவிகள் மூவர் என்றவாறாக அமைந்துள்ளது அந்தப் பிரதிநிதித்துவம்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ச.கிரிசாந்தினி, பா.சேந்தினி, அ.கொன்சிகா, க.பிருந்தாயினி ஆகியோரும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.ஜெதுன்சிகா, உ.சோபிதா, சி.தவப்பிரியா ஆகியோருமே அவ்வாறு தேசிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இந்த அணி எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி பூட்டானில் ஆரம்பிக்கும் ஆசிய கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ளது. (ம-422-23)

# ஜி.பி.எல். இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

றொகான், சங்கர் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கிறாஸ்கொப்பர் பிறீமியர் லீக் தொடர் இன்று காலை 8 மணிமுதல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிறாஸ்கொப்பர் விளையாட்டுக் கழக தலைவர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பிரிட்டனின் ஏ.பி.சி. நிறுவன இலத்திரனியல் தொடர்பாடல் துறை பணிப்பாளரும் பொறியியலாளருமான சி.அகிலன் கலந்து கொள்கிறார். பிற்பகல் நடைபெறும் இறுதி நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழக கணித புள்ளிவிபர வியல் துறை விரிவுரையாளர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் மணிசேகரன் மதிப்புறு விருந்தினராக யாழ் மாவட்ட முன்னாள் துடுப்பாட்டச் சங்க தலைவர் க.தர்மகுலசிங்கம் மற்றும் கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர் சி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422-23)

# இன்றைய மோதல்கள்

**வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக்**

வடக்கு-கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நோதன் எலைட் அணியை எதிர்த்து வவுனியா வாரியர்ஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்கா கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் கே.எஸ்.எஸ்.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# தனுஸ்க குணதிலகவுக்கு ஆறு ஆட்டங்களில் தடை

நோர்வே பெண்கள் இருவர் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்ட விவகாரத்தில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் குணதிலக ஆறு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

விளையாட்டு வீரருக்கு உரித்தான ஒழுக்க விதிகளை மீறி நடந்தார் என்று தெரிவித்து இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஸ்க குணதிலக மீது, தற்காலிகத் தடை விதித்து அண்மையில் நடவடிக்கை மேற்கொண்டது இலங்கை கிரிக்கெட் சபை. "நோர்வே பெண்கள் இருவர் பாலியல் துர்நடத்தைக்கு உட்பட்டமை தொடர்பில் குணதிலக பொலிஸாரால் விசாரிக்கப்படுகிறார்" என்ற தகவல் பின்னர் வெளிவந்தது. இதையடுத்து இந்த விவகாரத்துக்காக ஆறு ஆட்டங்களில் விளையாட குணதிலகவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவரின் வருட ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் ஏற்கனவே தண்டமாக விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)




# இளைஞர் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 29

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

அரியாலை கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விதுசன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மேனன், விதுலன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொம்பாந்துறை இளைஞர் அணி 3.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது. லவன் 14 ஓட்டங்களையும், மிதுலன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

# லயனல் மெஸ்ஸி தொடர்ந்து களமிறங்குவார் ஆர்ஜென்ரீனா கால்பந்து சம்ளேனம் அறிவிப்பு





"ஆர்ஜென்ரீன அணியின் தலைவர் மெஸ்ஸி ஓய்வை அறிவிக்கவில்லை. அவர் தொடர்ந்து விளையாடுவார்" என்று ஆர்ஜென்ரீன கால்பந்து சம்மேளனம் அறிவித்தது. ஆர்ஜென்ரீன கால்பந்து சமமேளனத்தின் தலைவர் கிளாடியோ இந்த அறிவிப்பை விடுத்தார்.

உலகின் ஆகச்சிறந்த வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் மெஸ்ஸி, ஆர்ஜென்ரீனாஅணிக்காகதொடர்ந்துதடுமாற்றத்தையேவெளிப்படுத்திவருகிறார். மெஸ்ஸியின் தலைமையின் கீழ் ஆர்ஜென்ரீனஅணிஇன்னும்எந்தவொருமுக்கிய கிண்ணத்தையும் வெல்லவில்லை. கடந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்கத்தொடரின்இறுதியாட்டத்தில் சிலியிடம் தோல்வியடைந்தது ஆர்ஜென்ரீனா. இதையடுத்து பன்னாட்டு அரங்கில்இருந்துஓய்வைஅறிவித்தார் மெஸ்ஸி. எனினும்ஆர்ஜென்ரீனரசிகர்களின் கோரிக்கையை அடுத்து அவர் தனது முடிவைத் திரும்பப்பெற்று மீண்டும்கால்பந்தாட்டஅரங்குக்குள்நுழைந்தார். இதனால் ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்தொடர்மெஸ்ஸியின்எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்று கருதப்பட்டது. மெஸ்ஸியும்உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும் முன்னர் "இந்தத் தொடர் எனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், சொல்லிக்கொள்ளும்படியான சிறந்தபெறுபேறுஎதையும்வெளிப்படுத்தாமல் உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியது ஆர்ஜென்ரீன அணி. இதனால்மெஸ்ஸிஓய்வைஅறிவிக்கஅதிகவாய்ப்புள்ளதுஎன்றுகருதப்பட்டநிலையில்"மெஸ்ஸிஆர்ஜென்ரீன அணிக்காகத் தொடர்ந்து விளையாடுவார்"என்றஅறிவிப்புதற்போதுவந்துள்ளது.

"உலகக்கிண்ணத் தொடரில் ஏற்பட்ட தோல்விமெஸ்ஸிக்குவிழுந்தமிகப்பெரியஅடி. இதனால்அவர்ஏமாற்றமடைந்துள்ளார். ஆனால் மெஸ்ஸி ஆர்ஜென்ரீன் அணிக்குத் தொடர்ந்தும் தேவை. அவர் முக்கியமானவர்" என்று கிளாடியோமேலும்தெரிவித்தார். (ம)

## றொனால்டோவின் உடல்தகுதியை வியந்து பார்த்தது யுவன்டாஸ் குழு



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகமான யுவென்டாஸ், றொனால்டோவின் உடல்தகுதியைப் பார்த்து வியந்தது என்ற செய்திதான் விளையாட்டு உலகில் தற்போது 'ட்ரென்ட்'.

ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கால்பந்துக் கழகத்துக்காக விளையாடிவந்த நட்சத்திர வீரர் றொனால்டோ ஊதிய ஒப்பந்தப் பிரச்சினைகளை அடுத்து மட்ரிட்டில் இருந்து விலகி இத்தாலியின் யுவென்டாஸ் கழகத்துக்கர்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஒப்பந்தம் கைச்சாத்தாகுவதற்கு முன்னர் றொனால்டோவுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முடிவுகளை வைத்து திகைத்து நிற்கிறதாம் யுவென்டாஸ் மருத்துவக் குழு.

20 வயதுடைய இளைஞனுக்கு இல்லாத உடல்தகுதி றொனால்டோவுக்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது யுவென்டாஸ் மருத்துவக் குழு. (ம)

## பங்களாதேஷ் செல்கின்றன சிம்பாப்வே மற்றும் தீவுகள்





சிம்பாப்வே மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இந்த வருடம் இறுதிப் பகுதியில் பங்களாதேஷ் சென்று விளையாடவுள்ளன.

பங்களாதேஷ் அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. பதிலுக்கு அடுத்த வருடம் ஆரம்பத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷ் சென்று விளையாடத் திட்ட மிட்டிருந்தது. ஆனால் பங்களாதேஷில் அடுத்த வருடம் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் இந்த வருடத்தில் இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் செல்லவுள்ளது.

அதுபோல் சிம்பாப்வே அணியும் இந்த வருடத்தின் இறுதியில் பங்களாதேஷுக்குச் சென்று விளையாடும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. (ம)

## தேர்வுக் குழுவினது தலைவராக தலைமை பயிற்சியாளர் லாங்கர்



ஆஸ்திரேலிய ரி-20 அணியின் தெரிவுக் குழுத் தலைவராக அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் லாங்கர் நிய மிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடி யபோது ஆஸ்திரேலிய வீரர்கள் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தினர். இதையடுத்து ஏற்பட்ட எதிர்ப்பலையால் முன்னாள் தலைமைப் பயிச்சியாளர் லீமன் பதவி விலக லாங்கர் தலைமைப் பயிற்சியாளராக ஆக்கப்பட்டார். தற்போது அவர் ரி-20 அணியின் தலைமைத் தெரிவாளராகவும் நிய மிக்கப்பட்டுள்ளார். இதனால் எந்தவொரு தலைமைப் பயிற்சியாளருக்கும் இல்லாத அதிகாரம் லாங்கருக்குக் கிடைக்கும். இது அணியின் தன்னிச்சையான போக்குகளை வெளிப்படுத்தவும் ஒருதலைப் பட்சமான முடிவுகளை எடுக்கவும் வழிவகுக்கும் என்று விமர்சனங்களும் எழுந்துள்ளன. (ம)



## இங்கி. அணியை எதிர்க்கத் தயார்

### புஜாரா சொல்கிறார்

"இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காகச் சிறந்த முறையில் தயாராகியுள்ளோம்" என்று இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் புஜாரா தெரிவித்தார். "கடந்த 2014ஆம் ஆண்டு இங்கிலாந்திடம் தொடரை இழந்த பின்னர், ஆசியாவுக்கு வெளியில் ஏராளமான ஆட்டங்களில் விளையாடியுள்ளோம். அந்த அனுபவம் எங்களுக்குக் கைக்கொடுக்கும். இந்தியா விலேயே வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான சில ஆடுகளங்கள் உள்ளன" என்று புஜாரா மேலும் தெரிவித்தார். (ம)

**NALIN** Information Technologies Pvt Ltd.

## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

**Jaffna CCTV Surveillance Camera**

**CCTV**

யாழில் எங்குமில்லா சலுகை

வடமாகாணத்தின் **HCSA** அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

கொள்வனவு செய்யும் அனைத்து கண்காணிப்பு கமரா பக்கேஜ்களுக்கும் Hard Disk இலவசம்

**TWO CAMERA PACKAGE**

- AHD DVR 4 CHANNAL 1080 Lite
- AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
- BNC 4, DC Connector 2
- Power Supply Unit 12VDC
- Power Plus Rg58 Cable 30m
- Warranty 2 Years

500GB Hard Disk 8GB Back up Pendrive & 3U Cabinet FREE

**Rs.23,000/-**

**FOUR CAMERA PACKAGE**

- AHD DVR 4 CHANNAL 1080 Lite
- AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
- BNC 8, DC Connector 4
- Power Supply Unit 12VDC
- Power Plus Rg58 Cable 50m
- Warranty 2 Years

1TB Hard Disk 8GB Back up Pendrive & 3U Cabinet FREE

**Rs.29,990/-**

இச்சலுகை 7 நாட்கள் மட்டும்

நிறுவுதல் கட்டண விபரங்களுக்கு அலுவலகத்திற்கு விஜயம் செய்யவும்.
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு **Billing Staff** ( பெண் ) தேவை.

♦ A/L சித்தி ♦ ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
♦ யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 069 6816, 077 427 5311**

## விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 15 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட 3 கடைகளும், 25 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட தனிக்கடையும், யாழ். பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாக 36 அடி அகலமும், 216 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ்.கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

(CS/18570)(11.17)

## வேலையாள்கள் தேவை

**K.Kapinaya Engineering (pvt) Ltd**

♦ மேசன் ♦ தச்சுத் தொழிலாளர் ♦ கம்பி வேலையாளர்
♦ குழாய் பொருத்துநர் **(Plumber)**
♦ மின்னிணைப்பாளர்கள் ♦ உதவியாளர்கள்

தர்மக்கேணி, பளை. **077 550 1520, 077 712 9690**

(CS/18530)(11)

## காணி விற்பனைக்கு

அரியாலை, திருமகள் வீதியில்
3 பரப்புக் காணி
(வீடு, கடைக்கட்டடம் உட்பட)
விற்பனைக்குண்டு.

**077 518 7526, 077 156 3474**

## பதவி வெற்றிடம்

**இலங்கையில் பிரபலமான முன்னணி நிறுவனத்தில் பதவி வெற்றிடம்**

**அடிப்படைத் தகுதிகள்:**

- O/L இல் 6 பாட சித்தி கணிதம் உட்பட
  18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
- முன்னனுபவம் மற்றும் மேலதிகத் தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பகுதி நேரம் மற்றும் முழு நேர வேலைவாய்ப்பு**

**சலுகைகள்**

- கவர்ச்சிகரமான வருமானம்
- வெளிநாட்டு சுற்றலா வாய்ப்புக்கள்
- நிறுவனத்தின் மருத்துவ வசதி

**விண்ணப்ப முடிவுதிகதி: 07.08.2018 செவ்வாய்க்கிழமை**

தாங்கள் சுய விவரக் கோவைகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
விளம்பர இல. 1008,
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

- UK- 550 /-Kg
- கனடா-900/-Kg
- ஜேர்மனி-700/-Kg
- நெதர்லாந்து-700/-Kg

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை

**0768226240**

**V2 TRAVELS**


## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சி, வவுனியாவில் இயங்கும் **Hotel** இற்கு

♦ சமையலாளர் Cook/ Chef
♦ கணக்குப் பதிவாளர் ( ஆண் ) தேவை.

தொடர்பு **077 210 5286**

**உதயன்** விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.